
AVOID TO DOWNLOAD FROM useruploa.in/net SPAM WEBSITE
ebook by
TAMIL NESAN

கோட்டயம் புஷ்பநாத்



காதல் மந்திரம்

தமிழில்:
சிவன்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

முன்னுரை

'காதல் மந்திரம்' சாவி வார இதழில் நாற்பத்தியொன்பது வாரங்கள் தொடராக வெளிவந்த மாந்திரீக நாவல். கடந்த முப்பது ஆண்டுகளாக மலையாள வாசகர்களின் அபிமான எழுத்தாளராக விளங்கும் கோட்டயம் புஷ்பநாத் 'துர்கா க்ஷேத்ரம்' என்ற பெயரில் மலையாள வார இதழ் ஒன்றில் எழுதிய நாவல் இது.

வாரந்தோறும் சுவாரசியத்துடனும், பரபரப்பாகவும் தொடர்கள் எழுதும் கோட்டயம் புஷ்பநாத் மலையாளத்தில் அறுநூறு நாவல்களுக்கு மேல் எழுதிக் குவித்தவர். பள்ளி ஆசிரியராக இருந்து சமீபத்தில் ஓய்வு பெற்ற இவர், தற்போது விவசாயம் செய்து வருகிறார்.

ஒரே சமயத்தில் தமது பத்திரிகையில் இரண்டு மொழி பெயர்ப்புத் தொடருக்கு வாய்ப்பளித்து, ஆதரித்த ஆசிரியர் திரு. சாவி, துணையாசிரியர் திரு. ரவிபிரகாஷ், மூல ஆசிரியர் கோட்டயம் புஷ்பநாத், அழகான முறையில் வெளியிடும் சபரீஷ் பாரதி. அட்டைப்படத்திற்குப் படம் வரைந்த ஓவியர் திரு. ராமு அவர்களுக்கும் தமிழ் வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி கலந்த வணக்கம்.

அன்புடன்

சிவன்

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

ebook by

TAMIL NESAN

பதிப்புரை

காதல் மந்திரம்....

பிரபல மலையாள எழுத்தாளர் கோட்டயம் புஷ்பநாத் அவர்களின் மிகச்சிறந்த நாவல்களில் ஒன்று.

இந்நாவலை 'சாவி'யில் தொடராக எழுத்தாளர் திரு. சிவன் அவர்கள் எழுதினார்.

இப்பொழுது முழுமையான புத்தக வடிவில் உங்களுக்கு வழங்கி உள்ளோம்.

இந்நாவலை வாசகப் பெருமக்கள் பெரிதும் வரவேற்பார்கள் என நம்புகிறோம்.

சபரீஷ் பாரதி

https://telegram.me/tamilbooksworld

Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

1

அதோ தெரிகிறதே அதுதான் உதயநல்லூர் கிராமம்.

ரகசியங்களின் சேமிப்புக் கிடங்கு உதயநல்லூர். அதையொட்டிய படி ஓடிக்கொண்டிருப்பதுதான் இருவழிஞ்சி ஆறு. மழைக்காலத்தில் வெள்ளம் பாய்ந்து வழியும். காட்டு மரங்களை வேரோடு பறித்து, சீறிப்பாய்ந்து கிராமத்தையே நடுநடுங்க வைத்தபடி மேற்குப்புறமாகப் பாய்ந்து வருவதே இந்த ஆறு. கிழக்குப்பகுதியில் பாண்டவமலை. பஞ்சபாண்டவர்கள் வனவாச காலத்தில் பாஞ்சாலியுடன் கொஞ்ச காலம் வசித்திருந்த மலை. அவர்கள் உபயோகித்த பொருள்களும், வசித்த அந்த இடமும் இன்றும் மலையுச்சியில் உள்ளதாம். அந்த மலையிலிருந்துதான் இந்த ஆறும் உற்பத்தியாகிறது.

ஆற்றைக் கடந்து கிராமத்தை அடைந்தால், மையத்தை நோக்கி நீளும் கிராமப்புறச்சாலை. நாகரிகத்தின் ஆரம்ப காலப் பாடங்களையே அறியாத கிராமத்தினர் அங்கு வசித்திருந்தனர்.

ஒருவிதத்தில் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுவதானால் மேலக்காவு மனையைச் சேர்ந்த பிரம்மதத்தன் நம்பூதிரியின் அடிமைகள் என்றே கூறலாம். அவரது மந்திர தந்திர வித்தைகளில் மதிமயங்கி, கோழைகளாக வாழ்க்கை நடத்திய சாமானிய மக்கள்.

பழங்காலத்தில் இந்த நாடு உதயவர்மன் என்கிற ஒரு சிற்றரசரின் ஆட்சியில் இருந்தது. அதனால்தான் அந்தக் கிராமத்திற்கு இந்தப் பெயரே ஏற்பட்டது. பழங்காலத்தில் - ஊருக்கு ஊர், இனத்திற்கு இனம் அடிக்கடி போர் நிகழ்ந்த காலங்களில் - நூற்றாண்டுகளுக்கு முந்தைய காலகட்டங்களில் மேலக்காவு நம்பூதிரிகள் போர்க் காலங்களில் மன்னர்களுக்கு உதவியாக இருந்தனர். இந்த உதவி என்பது உடல்

Click & Join -> https://t.me/tamilbooksworld

பலத்தினாலோ, ஆயுத பலத்தினாலோ அல்ல; மந்திர வித்தைகளால்! இவ்வாறு கோயில் சார்ந்த பகுதிகளை நிர்வகித்து வந்த நம்பூதிரிகள், பிற்காலத்தில் ராஜ குடும்பத்தினரை அடக்கி அவர்களை ஆளவும், மன்னர்களைத் தங்களது சொற்படி நடக்க வைக்கவும் செய்தனர்.

அரண்மனை அந்தப்புரங்களில் வசித்த பருவமடைந்த பெண்கள், இந்த நம்பூதிரிகளின் படுக்கையறையை அலங்கரித்தனர். அவர்களது முன்னிலையில் பெண்மை தன்னைப் பலியிட்டுக் கொண்டது. இந்த மந்திர வித்தைகள் தெரிந்த நம்பூதிரிகளுக்கு இன்பம் வழங்காதபோது நாட்டையும், அதிகார பதவியையும் இழக்க நேரிடுமென்று மன்னர்கள் உறுதியாக நம்பினர். இந்தப் பழக்கம் தலைமுறைகள் தாண்டியும் அப்படியே தொடர்ந்தது. பின்பு மன்னர்கள் நாடாண்ட பதவியை இழந்து, அதிகாரம் குன்றினர். மேலக்காவு நம்பூதிரிகள் மன்னர்களாகவே மாறினர். கண்களுக்கு அழகான பெண்கள் ஒவ்வொருவரும் நம்பூதிரிகளுக்குப் படுக்கை விரிக்க வேண்டி இருந்தது. இவ்வழக்கம் பிரம்மதத்தன் நம்பூதிரி வரை அறுபடாமல் தொடர்ந்து வந்தது.

பிரம்மதத்தன் பயங்கரமான பேர்வழி. உயரம் ஆறடி மூன்று அங்குலம். அதற்கேற்ற ஆஜானுபாகுத் தோற்றம். நீட்டினால் முழங் காலைத் தொடும் கைகள். உடம்பின் சதைப்பகுதியில் காட்டுக் கொடிகள் படர்ந்து இருப்பது போல் தெரியும் நீல நரம்புகள். கரடித் தோலை ஒட்டவைத்தது போன்ற மார்புப் பகுதி ரோமங்கள். வெளவால்களை ஒட்ட வைத்திருப்பது போன்ற புருவங்கள். கோவைப் பழம் போன்ற சிவந்த கண்கள். கழுகின் அலகு போன்ற வளைந்த மூக்கு. கழுத்தில் செதுக்கியெடுக்காத பாக்குகள் போன்ற உருத்தி ராட்சங்கள் கோத்த மாலை. பெருவிரல் கனத்தில் தோளிலிருந்து தொப்புள் வரை சரிந்து கிடக்கும் பூணூல். அதில் வெள்ளியாலான மூன்று சாவிகள். சதை உருண்டு உயர்ந்து நிற்கும் உறுதியான தொப்பை விழுந்த வயிறு.

பிரம்மதத்தனின் பெயரைக் கேட்டாலே பெண்கள் நடுங்கத் தொடங்கினர். குறிப்பாகப் பதினைந்து வயதைக் கடந்த பெண்கள் மோசமான காரியங்களுக்காக மந்திரத்தைப் பயன்படுத்துபவரான பிரம்மதத்தனை எதிர்த்து நிற்க அந்த ஊரில் யாருக்கும் தைரியம்

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

இல்லை. ஊரில் எந்தப் பெண் வயதுக்கு வந்தாலும் பிரம்மதத்தனுக்குத் தெரிந்துவிடும். இந்த விஷயத்தை அவருக்குத் தெரிவிப்பதற்காக வென்றே பெண் ஒற்றர்கள் இருந்தனர். பிறகு நேரடியாக ஒருத்தி அந்த வீட்டிற்கு வருவாள். அதற்கடுத்த ஐந்தாம் நாள் பிரம்மதத்தன் அந்த வீட்டில்தான் இரவில் தங்குவார்.

தன்னுடைய சொந்தச் சகோதரியை ஐம்பத்தைந்து வயது கடந்த எமன் போன்ற ஒருவன் பலாத்காரம் செய்வதைக் காணச் சகிக்காத, ஒருசில துணிச்சலான இளைஞர்கள் அவனுடன் போராட முயன்றனர்.

பிரம்மதத்தன் இன்று வருகிறார் என்பதைத் தெரிந்துகொண்டு, அவர் வரும் வழியையே பார்த்தபடி ஒருவன் காத்திருந்தான். வெகு தூரத்தில் லாந்தர் விளக்கின் வெளிச்சம் தெரிந்தது. யாரும் துணைக்கு இல்லை. தனியாக வந்தார். 'இன்றுடன் நான் இந்த ஊரின் சாபத்தையே அழிக்கப் போகிறேன்!' என்றபடி, தீட்டி வைத்திருந்த அரிவாளின் கூர்மையை நகத்தால் உரசிப் பார்த்து அந்த இளைஞன் திருப்தி யடைந்திருந்தபொழுது, எங்கிருந்துதான் வந்ததென்று தெரியாமல் பலமாக ஓர் அடி விழுந்தது. ஒன்றுமே நடக்காததுபோல் பிரம்மதத்தன் அவனைக் கடந்து போனார். மறுநாள் காலை தலை தகர்ந்து போய், மூளை சிதறியபடி அங்கு ஒரு பிணம் கிடந்தது.

மேலக்காவு மனை வீட்டில் பிரம்மதத்தன் நம்பூதிரி தவிர மேலும் இரண்டு பேர் இருந்தனர். ஒருத்தி அவரது சகோதரி நாராயணி அந்தர்ஜனம். நாற்பத்தைந்து வயதைக் கடந்தவள். மற்றவள் அவளது மகள் ஊர்மிளா. பதினேழு வயதைக் கடந்த ஊர்மிளா, ஒரு தேவதை மாதிரி இருந்தாள். அவளது அப்பா வடகேரளத்தில் எங்கேயோ வசித்த ஒரு நம்பூதிரி.

ஒரு தடவை அவர் பிரம்மதத்தன் நம்பூதிரியுடன் இணைந்து வீட்டிற்கு வந்தார். அவர்கள் மட்டுமே கலந்து கொண்ட சடங்கில் அவர் நாராயணியின் கழுத்தில் தாலி கட்டினார். திருமணம் முடிந்த நாற்பத் தோராம் நாள் காலையில் அவரது பிணம் ஆற்றங்கரையோரத்தில் கிடந்ததை ஊரார் பார்த்தனர். எதனால் ஏற்பட்ட மரணம் என்பது எவருக்குமே விளங்காத புதிராக இருந்தது. பத்து மாதம் முடிவதற்குள் நாராயணி, ஊர்மிளாவைப் பெற்றெடுத்தாள். விதவையாகிப் போன

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நாராயணி அதற்குப் பிறகு புருஷ வாசனை அறியாமலே வாழத் தொடங்கினாள். ஊர்மிளாவை அவள் தரையில் விடாமலேயே வளர்த்தாள்.

கோயில்களில் வடித்து வைக்கப்பட்டிருந்த கட்டழகுச் சிலைகளின் அழகு. ஊர்மிளாவுக்கு இருந்தது. கையில் அகல் விளக்கு ஏந்தி நிற்கும் கற்சிலை போல் அவளது உடல் வளம் கச்சிதமாக அமைந்து இருந்தது. அழகு அவளில் நிறைந்து வழிந்தது. உலகிலுள்ள எல்லா அழகான பொருள்களுக்கும் அவளே ஆதாரமான அழகாக இருந்தாள்.

இந்திர வில் போன்ற புருவங்கள், சர வதிதேவியின் கண்கள். மாலை நேரத்தின் நிறம் பூண்ட கன்னக்கதுப்புகள். காமனின் மலர்க் கணையேற்ற மார்பகங்கள். கோயிலிலுள்ள நடனமாடும் சிலையின் நூலிடை போன்ற இடுப்பு அமைப்பு. ஆனால், ஆண்களின் முகத்தைக் காணாமலே அவர் வளர்ந்தாள். அவளது கற்பனையில் எந்த ஆணும் இடம்பெறவில்லை!

இந்தக் காலகட்டத்தில்தான் உதயநல்லூர் கிராமத்தில் குறிப்பிட்ட சில இடைவெளிகளில் பத்தொன்பது வயதைத் தாண்டாத, ஆனால், பதினைந்து வயது கடந்த பெண்கள் காணாமல் போய்க் கொண் டிருந்தனர். அவர்களில் இரண்டு பேருடைய உடம்புகள் தலையில் லாமல் ஆற்றில் கிடந்தன. நிர்வாணமாக நீரில் மிதந்தன. யாருக்கும் எதுவும் விளங்கவில்லை.

அந்த ஊர் இளைஞர்களில் கொஞ்சம் தைரியம் வாய்ந்தவன் கேசவன் குட்டி. அவன் அதிகமாகப் பட்டணத்தில் படித்ததால், அந்த ஊர்க்காரர்களில் அதிகம் பேருக்கு அவனைத் தெரியாது. அவனது தாய்மாமன் வித்தை கற்றுக் கொடுக்கும் வாத்தியாராக இருந்ததால், அவரிடம் அவன் பாதுகாப்புக் கலைகளைக் கற்றுக்கொண்டான். அவனது அப்பா கடத்த நாட்டு வீரர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர். எனவே, கடத்த நாட்டுக்கே உரித்தான சிறப்பான வித்தைகளை (சண்டை முறைகள்) அவரிடம் அவன் கற்றிருந்தான்.

எந்தவிதமான சூழ்ச்சியும் இல்லையென்றால், முன்னும் பின்னுமாக இருபத்து நான்கு வீரர்களைப் போரிட்டுச் சமாளிக்கும்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஆற்றல் வாய்ந்த கேசவன் குட்டிக்கு, ஊரில் ஏற்படும் விவரம் தெரியாத மரணங்கள் ஒரு சவாலாகவே இருந்தன. எப்படியும் இதைக் கண்டுபிடித்தே தீருவது என்று அவன் சபதம் பூண்டான்.

ஒரு தடவை அவனது மாமா, அவனிடம், "கேசவா, விஷயம் நீ நினைப்பது போல் அவ்வளவு சுலபமானது அல்ல. மனிதர்கள்தான் இதைச் செய்தனர் என்றால் கண்டுபிடிக்கலாம். ஆனால் இதெல்லாம் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அல்ல!" என்றார்.

"எதனால் மாமா அப்படிச் சொல்கிறீர்கள்?"

"நேற்று நான் சோதிடம் பார்த்தேன். எனக்கும் கொஞ்சம் பயம் உள்ளது!" அவர் சொன்னதும் சரிதான். காரணம், சண்டை கற்றுக் கொடுக்கும் வாத்தியாரான அவருக்கும் ஒரு மகள் இருந்தாள். பதினைந்தைத் தாண்டியவள். பெயர் ஸ்ரீகலா. பெண் குழந்தைகள் காணாமல் போவதும், பின்பு தலையற்று வெளிப்படுவதும் அவர் மனதை மிகவும் கலக்கிவிட்டிருந்தது.

"சொல்லுங்கள் மாமா, நான் எல்லாவற்றையும் விளக்கமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்" கேசவன் தடுக்குப்பாயை இழுத்துப் போட்டு மாமாவை நெருங்கி உட்கார்ந்தபடி கேட்டான்.

ராகவக் குறுப் சாய்வுநாற்காலியில், கால்களைக் கைப்பிடிக் கட்டைகள்மீது போட்டுச் சாய்ந்திருந்தார்.

"ஜோதிடத்தில் தெரிந்த விஷயம் பயங்கரமானது. இந்தக் கிராமத்தில் எங்கோ மனிதக்கொலை நடைபெறுகிறது."

"மனிதக் கொலையா? இந்த ஊரிலா?"

"ஆமாம், ஏதோ ஒரு கோரப்பிசாசுக்காகக் கன்னிப் பெண்களின் கன்னித் தன்மையை அழித்துவிட்டு அதன் பிறகு அவர்களை யாரோ பலியிடுகிறார்கள்."

"நீங்கள் சொல்வது உண்மையா, மாமா? யார் இதையெல்லாம் செய்வது?"

"வேறு யார்? எல்லாம் அந்தத் துரோகியின் வேலைதான். பிசாசாகப் பிறப்பெடுத்துள்ள அந்த மனிதகுல விரோதிதான். அவன்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஒரு மோசமான பூதமும்கூட. அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க யாராலும் முடியவில்லை.''

''அதற்கு எந்த வழியும் இல்லையா, மாமா?''

''ஒரே ஒரு வழி உள்ளது.''

''அது என்ன?''

''பாண்டவ மலையின் உட்பகுதியில் எங்கோ ஒரு கோயில் உள்ளதாம்.''

''அது என்ன கோயில்?''

''துர்காதேவி கோயில்.''

2

துர்கா கோயிலைக் குறித்து ஓர் ஐதீகமுண்டு. நூறு வருடங்களுக்கு மேல் பழைமையேறிய அந்தக் கதை கிட்டு ஆசானுக்கு மட்டுமே தெரியும். அவர் ஒரு ஜோதிடரும்கூட. ஒரு தடவைகூட அவரது ஜோதிடக் கணிப்பில் தவறு ஏற்பட்டதில்லை என்றுதான் எல்லாரும் கூறுகின்றனர்.

பாண்டவன் மலையில் எங்கோ ஒளிந்திருக்கிற துர்காதேவி கோயிலின் இருப்பிடத்தைப் பற்றிக் கிட்டு ஆசானைத் தவிர வேறு யாருக்கும் விவரம் தெரியாது என்று, ராகவக் குறுப் தன்னுடைய மருமகன் கேசவனிடம் கூறினார்.

கிராம எல்லையில், ஆற்றங்கரையோரமாகப் பரவிக் கிடந்த பாறைகளில் ஒன்றின்மீது அமர்ந்தபடி கிட்டு ஆசான் மாலை நேரங்களைக் கழிப்பதுண்டு. அது அவரது வழக்கம். கொஞ்சம் தைரியம் உள்ளே போனால் அவருக்குச் சந்தோஷத்துடன் எல்லாமே ஞாபகத்திற்கு வரும் என்றும், அதிலிருந்து பிரித்தெடுத்து அவர் ஒவ்வொன்றாகக் கூறுவார் என்றும் தெரிந்து கொண்டிருந்த கேசவன், ஒருநாள் அதைச் செய்து பார்த்தான். ஒரு பாட்டில் நாட்டுச் சரக்கையும், கூடவே கொறிப்பதற்கு ஏற்றாற்போல் கொஞ்சம் வேர்க்கடலையும்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

வாங்கினான். மாலையில் அவர் காற்று வாங்கும் இடத்தைக் கண்டறிந்து அவரை அணுகினான்.

அந்தப் பாறைக்கு அருகில் படர்ந்து பந்தல் போட்டது போல் ஒரு புன்னை மரம் இருந்தது. அதன் கீழ்ப்பகுதியில் நல்ல நிழலாக இருக்கும். இதைத் தாண்டி சற்றுத் தொலைவில்தான் ஊருக்குள் போகும் பாதை செல்கிறது.

"என்ன கேசவா, என்ன விசேஷம்? கையில் பை சகிதமாக எங்கே கிளம்பி விட்டாய்?" அவரை நோக்கி வந்த கேசவனிடம் அவர் கேட்டார்.

"உங்களைத் தேடித்தான் வந்தேன்" கொண்டு வந்திருந்த பையை பாறைமேல் வைத்தபடி கூறினான்.

"இதென்ன பை?"

"வேறு ஒன்றுமில்லை; ஒரு பாட்டிலும் கிளாஸும் உள்ளன" பையை அவரிடம் நகர்த்தி வைத்தான்.

கிட்டு ஆசானின் கண்கள் மலர்ந்தன. கேசவன் விரைவாக பாட்டிலை வெளியே எடுத்து கிளாஸில் கொஞ்சம் ஊற்றினான். பிறகு வேர்க்கடலைப் பொட்டலத்தைப் பிரித்து வைத்தான்.

"என்னைப் பார்க்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டமாகவே புறப்பட்டு வந்திருக்கிறாயே, என்ன விஷயம்?"

"எல்லாவற்றையும் சொல்கிறேன். முதலில் இதைச் சாப்பிடுங்கள்" கிளாசில் ஊற்றியதை அவரிடம் நீட்டினான். தண்ணீர் கலக்காத அந்தத் திரவத்தை அவர் அப்படியே தொண்டையில் இறக்கினார்.

"இன்னும் கொஞ்சம் ஊற்றட்டுமா?"

"அதெல்லாம் அப்புறம். முதலில் உனக்கு என்ன தெரிந்து கொள்ள வேண்டுமோ, அதைத் தெரிந்துகொள். என்னுடையது மிகவும் பழைய மனம். சிலபோது சிலவற்றை மறந்து விடலாம்!"

சொல்லியபடியே அவர் வேர்க்கடலைத் தோலை ஊதி ஒதுக்கி விட்டு வாயில் போட்டார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அப்படியானால் கேட்க ஆரம்பிக்கிறேன்" என்றபடி தன்னுடைய பையிலிருந்த ஒரு கட்டு பீடியை எடுத்து அதிலிருந்து ஒன்றை மட்டும் உருவியெடுத்து மீதியை அப்படியே அவரிடம் கொடுத்தான்.

"உங்களைப் பார்த்துவிட்டு வந்தால் நல்லதென்று என் மாமா கூறினார்."

"பெரியவர் அப்படிச் சொல்லியிருந்தாரானால், அதற்கு வலுவான காரணம் ஏதாவது இருக்கும். வேறு என்ன சொன்னார்?"

பாண்டவன் மலையின் ஏதோ ஒரு பகுதியில் ஒரு துர்காதேவி கோயில் உள்ளதாம். ஏதோ பாறைகளுக்கு நடுவில் மறைந்துள்ளதாக அவர் கோடி காட்டினார். நீங்கள் அதைப் பார்த்திருக்கிறீர்களா?" கேசவன் கேட்டான்.

"கேசவா, உண்மையைச் சொல்லி விடுகிறேன். நானும் இதுவரையில் அதைப் பார்த்ததே இல்லை. கேள்விப்பட்டிருக்கிறேன். எப்படிப் பார்ப்பது? அது பாண்டவன் மலையின் உள்ளே அல்லவா இருக்கிறது!" ஆசான் நெற்றியைச் சுளித்தபடியே பேசினார்.

"அந்தக் கோயில் எங்கே இருக்கிறது என்பது தெரிய வேண்டும். அதைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு என்ன வழி ஆசானே?"

"முதலில் அந்தக் கோயிலைப் பற்றி எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். அதற்குப் பிறகு நாம் இரண்டு பேருமே அதைப்பற்றி யோசிப்போம்."

"அதுவும் சரிதான். அந்தக் கோயில் எப்படித் தோன்றியது?"

அணைந்து போகவிருந்த பீடியை ஒருமுறை வலுவாக உள்ளுக்கு இழுத்துவிட்டு ஆசான் கூறத் தொடங்கினார்:

"மிகப்பழைய காலத்தில் இந்த நாட்டை ஒரு ராஜா ஆட்சி செய்தார். அவரது அரண்மனைக்குக் கிழக்குக் கோட்டை என்பது பெயர். அந்த அரண்மனை இன்றும் இந்த மலையடிவாரத்தில் இருப்பதாகத்தான் சொல்கிறார்கள். ஆனால், நான் பார்த்ததில்லை. அந்த அரண்மனையில் பழங்காலத்தில் பா கர ரவிவர்மா என்கிற ஒரு ராஜா இருந்தார். அவர் தீவிர சிவபக்தர். ஒரு தடவை அவர்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

பூஜையை முடித்துக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பியபோது. அவரைப் பார்ப்பதற்காக ஒரு சன்னியாசி வந்திருப்பதை அறிந்தார். அவர் ஒரு முனிவரும்கூட!"

கேசவன் அவரது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவரோ நினைவுகளிலிருந்த பழைய விவரங்களைப் பிரித்தெடுக்க வெகுவாக முயன்று கொண்டிருந்தார்.

"பாண்டவன் மலையின் அடிவாரத்தில் துர்கா தேவியின் பாதங்கள் பதிந்துள்ளன. பாரிகனைக் கொன்ற துர்காதேவி தன்னு டைய இயல்பான வடிவிலேயே இந்தப் பகுதிக்கு வந்திருக்கிறாள். அதனால், இந்த மலையடிவாரத்தில் ஒரு துர்கா கோயிலைக் கட்டினால் அதனால் நாட்டிற்கே சுபிட்சம் ஏற்படும்" என்றார் அந்த முனிவர்.

அதைக்கேட்ட மன்னன் உடனே கோயில் கட்டத் தேவையான பொருள்களுடன் சிற்பியரையும் அழைத்துக்கொண்டு அந்த இடத்தை அடைந்தான். அங்கே ஒரு குகை இருந்தது. ஒரே சமயத்தில் இரண்டு அல்லது மூன்று பேர் ஏறிச் செல்வதற்கு ஏற்ற வகையில் அமைந்த அகலமான குகை. அதற்குள் சென்று பார்த்தபோது உள்ளே ஒரு கோயில் இருப்பதைக் கண்டனர். எங்கிருந்தோ ஒரு கீற்று வெளிச்சம் அந்த இடத்திற்கு வந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் அங்கிருந்த தேவியின் உருவச்சிலை தென்பட்டது. பாரிகனின் உடலை மிதித்தபடி - கொய்தெடுத்த தலையைக் கையில் பிடித்தபடி நிற்கும் சாட்சாத் துர்கா தேவியின் உருவம் கழுத்தில் பாம்பு நெளிந்தது. பயந்து நடுங்கிய மன்னர் அதையே பார்த்தபடி நின்றார்.

அந்தக் கோயிலை தன் கண் முன்பு காண்பதுபோல் கிட்டு ஆசான் சற்று நேரம் வெட்ட வெளியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். வயதான அவரது கண்களுக்கு முன்னால் அந்தத் திவ்யமான வடிவம் தெரிவதாகவே கேசவனுக்கும் தோன்றியது. வளர்ந்து கொண்டிருந்த எதிர்பார்ப்புகளுடன் அவன் அவரையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான்.

சூரியன் மேற்குப்புறமாக மறைந்தான். மேற்கத்திய மேகங்கள் சிவப்புச் சாயம் பூசிக்கொண்டது போல் தெரிந்தன. கிழக்குப் புறமிருந்த

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

மலை முகட்டில் அங்கங்கே தனிமைப்பட்ட கால்நடைகள் தட்டுப் பட்டன.

"பிறகு...?" கேசவன் கேட்டான்.

ஆசான் திடுக்கிட்டு எழுந்ததுபோல் நிமிர்ந்தார்.

"தேவி சிலையின் பாதப்பகுதியைப் பார்த்தபோது அங்கே பூஜைப் பொருள்கள் இருந்தன. பலிக்கல்லில் ரத்தம் தெரிந்தது. மன்னனின் மனம் வெம்பியது."

"பலிபீடத்தில் இருந்தது மனித ரத்தமா, மனிதனையா பலிகொடுத் திருக்கிறார்கள்?"

"மறுபடியும் தேவியின் பாதப்பகுதியைப் பார்த்தபோது செப்புத் தகட்டில் எழுதிய எழுத்துகள் தெரிந்தன. அதைக் கையில் எடுத்துக் கொண்டு அவர் வந்த வழியே திரும்பினார். குகைக்கு வெளியே வந்த பிறகு. கோயில் வேலையை நிறுத்தி வைத்திருப்பதாகக் கூறி வேலைக்காரர்களைத் திருப்பி அனுப்பினார்."

"அந்த ஓலையில் என்ன எழுதியிருந்தது ஆசானே?" கேசவன் குறுக்கிட்டுக் கேட்டான்.

"அவசரப்படாதே. நான் சொல்கிறேன். சாப்பிட்ட சுரக்கின் வலு குறைந்து போய்விட்டது. இன்னும் கொஞ்சத்தை கிளாசில் ஊற்று" சொல்லியபடி அவனை நோக்கி கிளாஸை நகர்த்தினார்.

அவன் ஊற்றினான். முகத்தைச் சுளித்தபடி ஒரே இழுப்பில் தொண்டைக்குள் இறக்கிவிட்டு, உதட்டைத் துடைத்தபடி ஒரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டார். பிறகு கதையைத் தொடர்ந்தார்:

"அதற்குப் பிறகு மன்னன் மிகவும் ரகசியமாக அங்கு பூஜை செய்தான். தான் இறப்பதுவரை அந்தக் கோயிலைப் பற்றி யாரிடமும் கூறியதே இல்லை. மரணம் உறுதி என்று தெரிந்த பிறகு தன்னுடைய வாரிசான மூத்த மருமகனை அழைத்து அந்த விஷயத்தைக் கூறினான். என்ன காரணத்தாலோ அவனுக்குப் பின் வந்த மன்னனால் தொடர்ந்து அந்தத் துர்கா தேவிக்குப் பூஜை நடத்த முடியவில்லை. அத்துடன் அந்த ராஜ வம்சமே நலிவடையத் தொடங்கியது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

முதன்முதலாக அந்தக் கோயிலைக் கண்டுபிடித்த பா கர ரவிவர்மா மன்னருக்கு உதயணன் என்கிற பெயரும் இருந்தது. அப்படித்தான் இந்த ஊருக்கு உதயநல்லூர் என்கிற பெயர் ஏற்பட்டது.”

“ஓகோ, இதுதான் இந்த ஊரின் கதையா?” கேசவன் குட்டி வியப்புடன் கேட்டான்.

“ஆமாம் உனக்கு இன்னும் வேறென்ன தெரியவேண்டி உள்ளது?” ஆசான் கேட்டார்.

“அந்தக் கோயிலை எப்படிக் கண்டுபிடிப்பது ஆசானே?”

“ஒரு பூகம்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மேற்புறமிருந்து பாறைகள் உருண்டு விழுந்து அந்தக் குகையின் வாசல் அடைபட்டு விட்டது. அதனால் அந்தக் கோயில் இப்பொழுது எங்குள்ளது என்பது தெரியாது.”

“கோயில் எங்கு இருக்கிறது என்கிற விவரம் தெரிந்து விட்டது. அதைக் கண்டுபிடிக்க என்ன வழி?”

“கிழக்குக் கோட்டையிலுள்ள கோயிலில் பழங்கால கிரந்தங்கள் இருக்கும். முதலில் அதைக் கண்டுபிடித்தால் எல்லா விவரமும் தெரிந்து விடும்.”

“அதற்கு முதலில் அரண்மனையைக் கண்டுபிடிக்க வேண்டுமே!”

“பழங்காலத்துக் கோட்டையாயிற்றே! அதன் இடிந்த பகுதிகள் இப்பொழுதும் உள்ளன. ஒருவேளை கவனமாகத் தேடினால் கிடைக்கலாம்.”

“அப்படியானால், அந்தக் கோட்டையில் இப்பொழுது யாரும் இருக்க மாட்டார்கள் என்கிறீர்களா?”

“எப்படி இருப்பார்கள்? பூதகணங்கள்கூட அந்தக் கோட்டையை எட்டிப்பார்க்கப் பயப்படும். அந்த ராஜவம்சம் கடைசியாக ஒரு பெண்ணில்தான் முடிவடைந்தது. கார்த்தியாயினி என்பது அவளுடைய பெயர். மாந்திரீக வித்தைகளில் அவள் கெட்டிக்காரியாக இருந்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

துர்க்கா கோயிலிலிருந்து கிடைத்த கிரந்தத்தைப் படித்து உலகிலுள்ள எல்லா நல்ல - கெட்ட மந்திரப் பிரயோகங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தாள். அவள் வெகு நாட்கள் உயிரோடு இருந்தாள் என்று சொல்கிறார்கள். அவளுடைய மந்திர வித்தைகளினால் கால தூதர்கள்கூட அவளை நெருங்கப் பயப்பட்டனர். கடைசியாக அவள் தற்கொலை செய்து கொண்டாள் என்றும் சொல்லப்படுகிறது.

அந்த அரச குடும்பம் அவளுடன் முடிந்துவிட்டது. ஒருவகையில் கூறுவதானால் அரச குடும்பத்தினரை மேலக்காவு குடும்பத்தின் நம்பூதிரிகள்தான் அழித்தனர். அந்த நம்பூதிரிகளுடன் கார்த்தியாயினி கடுமையாகப் போராடியிருக்க வேண்டும். அதற்குப் பிறகு என்ன நடந்ததோ, யாருக்குத் தெரியும்?"

"இதெல்லாம் நடந்து எவ்வளவு காலம் ஆகியிருக்கும் கிட்டு ஆசானே?"

"சரியாகக் கூறுவதானால் நானூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருக்கும்."

"அந்தக் கோட்டை இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்?"

"சுமார் ஐந்து மைல் இருக்கும். அதோ தெரிகிறதே கருமையான பாறைக் கூட்டம். அங்கிருந்து சற்றுத் தள்ளி தெற்குப் புறமாகப் போனால் கோவிலகம் கோட்டை தென்படும்."

"அதன் சுற்று வட்டாரத்தில் ஆட்கள் யாராவது வசிக்கிறார்களா?"

"அந்தக் கோட்டைக்குப் போகும் வழியில் இதேபோல் ஒரு பெரிய புன்னை மரம் உள்ளது. அந்த மரத்தடியுடன் இந்த ஒற்றையடிப் பாதை முடிவடைகிறது. அங்கு ஒரு டீக்கடை உள்ளது. பிறகு ஒரு சலூன். ஒரு வெற்றிலைப்பாக்குக் கடை. இதெல்லாம் சேர்ந்த ஒரு தெரு முனைச் சந்திப்பு உண்டு. அங்கிருந்து இரண்டு மைல் தொலைவு நடந்தால் கோவிலகம் அரண்மனையை அடையலாம். என்ன கேசவா, கோவிலகம் அரண்மனைக்குள் போகப் போகிறாயா?"

"அதெல்லாம் இல்லை. நான் சும்மா உங்களிடம் விவரம் கேட்டு வைத்தேன்."

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஆனால் கேசவன் குட்டியின் மனம் இவ்வாறு மந்திரித்துக் கொண்டது:

'கிழக்குக் கோட்டை - கோவிலகம்! கார்த்தியாயினி இளவரசி யாரே, நான் இதோ உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறேன்!"

3

அந்த நாட்டின் வரலாற்றையும் ஊரின் ஐதீகத்தையும் பற்றி நன்றாகத் தெரிந்த கிட்டு ஆசானின் வார்த்தைகள் கேசவன் குட்டியின் மனத்தில் அப்படியே பதிந்து போயின. சிறு வயதிலிருந்தே பட்டணத்தில் படித்து வந்த கேசவனுக்கு, உள்ளூரில் நண்பர்கள் யாரும் அதிகமாக இல்லை. விடுமுறை நாளில் அப்பாவின் ஊருக்குச் சென்று வருவான். சண்டைப் பயிற்சிகளில் தேர்ச்சி பெற அந்தச் சந்தர்ப்பங்கள் உதவின. பி.ஏ. வரை படித்தாலும் அவனது படிப்பு முழுமையடையவில்லை. கிட்டு ஆசான் சொன்ன விவரங்களை அவன் தனது மாமாவிடம் தெரியப்படுத்தினான்.

அவருக்கும் அதைப்பற்றி ஓரளவெல்லாம் தெரிந்திருந்தாலும் துர்கா கோயிலைப் பற்றிய செய்திகள் அன்றுதான் அவருக்குத் தெளிவாக விளங்கின.

"இதையெல்லாம் பார்த்தால் காரியம் மிகவும் சிக்கலானது என்றல்லவா தோன்றுகிறது?" ராகவக் குறுப்பின் குரலில் ஏமாற்றம் தெரிந்தது.

"அதனால் என்ன பரவாயில்லை! எதற்கும் ஒரு தடவை நான் அங்கு சென்று பார்த்துவிட்டே வருகிறேன்" கேசவன் தைரியத்துடன் மாமாவிடம் பேசினான்.

"அப்படியானால் முதலில் நீ ஒரு காரியம் செய். அந்த மாதிரி இடங்களுக்கெல்லாம் போவதாக இருந்தால் பாதுகாப்புக்கு ஒரு தாயத்து இருப்பது நல்லது. அதனால் நீ நேராகத் தலைச்சேரி நகருக்குப் போ. அங்கு உன் அப்பாவிடம் மந்திரவித்தை கற்றுக்கொண்ட பலர் இருக்கிறார்கள். அவர்களிடம் சென்று உன் உடம்புக்கு ஆபத்து எதுவும் ஏற்படாத மாதிரி ஒரு தாயத்தை வாங்கிக் கொண்டு வா."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அப்படியானால் நான் நாளைக்கே புறப்படுகிறேன் மாமா."

மறுநாள் விடியற்காலையிலேயே கேசவன் தலைச்சேரி நகருக்குப் பயணமானான்.

அன்று வழக்கம்போல் கோயிலுக்குச் சென்று வணங்கிவிட்டு வந்தாள் ஸ்ரீகலா. உடன் வந்த சிநேகிதிகளிடம் பேசியபடியே அவரவர் பாதையில் பிரிந்தபோது மாலை நேரமானது. பகலின் நீளம் குறைவாக இருந்த நாள்கள் அவை. விரைவிலேயே இருட்டிவிடும்.

கோயிலின் வெளிச் சுவரைத் தாண்டி கிராமச்சாலையில் அவள் நடந்து வந்தபோது எதிரில் ஒரு மனிதர் வருவதை அவள் பார்த்தாள். ஆஜானுபாகுவான மனிதர் - அந்த உருவத்தைப் பார்த்தபோதே அவள் மிரண்டு போனாள். உடனே அவள் அவரது பார்வையிலிருந்து மறைந்து ஒதுங்குவதற்காக வலதுபுறத்திலிருந்த புதரை நோக்கித் திரும்பினாள். பின்னாலேயே ஒரு குரல் கேட்டது.

"யாரது, அங்கேயே நில்!"

இடி விழுவது போலிருந்த அந்தக் குரலைக் கேட்டு அவள் நடுங்கியபடி அப்படியே நின்றாள். அந்த உருவம் அவளை நெருங்கியது.

'ஐயோ, பிரம்மதத்தன்!' அவள் மனம் பதறியது. ஒரு தடவை அவள் அவரை ஏற்கெனவே பார்த்திருந்தாள். சிவன் கோயில் திருவிழாவில் அவர் முக்கியமான பூசாரியாக இருந்தார். அந்தக் கோயிலே மேலக்காவு வீட்டினரின் உபயம்தான். விழாவின் முக்கியமான நாளன்று மட்டுமே அவர் பூஜை செய்வது வழக்கம்.

"உன் அப்பாவின் பெயர் என்ன?"

"ராகவக் குறுப்."

"ஓ... நீ அந்தக் குறுப்பின் மகளா? உன்னைப் பார்த்ததும் நல்லதுக்குத்தான். ஆமாம், உடனடியாகத் திரும்ப வேண்டுமா என்ன?"

எதுவுமே புரியாதது போல் ஸ்ரீகலா பயந்து போய் நின்றிருந்தாள்.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஆமாம், நீ தனியாகத்தானே வந்திருக்கிறாய்?" பிரம்மதத்தன் கேட்டார்.

"ஆமாம்."

"அப்படியானால் நாம் புறப்படலாம்" சொல்லிய அவர் தன் வலது கையை முன்புறம் நீட்டி என்னென்னவோ சைகைகளைச் செய்து விட்டுத் திரும்பி நடக்கத் தொடங்கினார். ஸ்ரீகலா அந்த மனிதரின் பின்னாலேயே நடக்கத் தொடங்கினாள்.

"வயிற்றுக்கு ஏதாவது சாப்பிட்டாயா குழந்தை?" வழியில் அவர் கேட்டார்.

"நான் வீட்டிற்குச் சென்றுதான் சாப்பிட வேண்டும்."

"இருந்தாலும் கொஞ்சம் பாலும், பழமும் சாப்பிடலாமே!"

"எனக்கு அதெல்லாம் வேண்டாம்."

"நல்லவேளை, இன்று உன்னைக் கண்டதும் நல்லதற்குத்தான். இன்றைக்கு அமாவாசை."

"நீங்கள் சொல்வது ஒன்றும், எனக்குப் புரியவில்லை; நான் உடனே வீட்டிற்குப் போக வேண்டும்."

"நான் எல்லாவற்றையும் உனக்குப் புரிய வைக்கிறேன்" - சொல்லியபடியே, அந்த மனிதப் பிசாசு பூவிதழ் போலிருந்த அவளைச் சட்டென்று பற்றிக் கொண்டது.

ஒரு பூங்கொத்தை நசுக்கித் தேய்ப்பது போல், அந்த மனித மிருகம் அவளை மானபங்கப்படுத்தியது. அதன் பிறகு பைசாச ரூபமான 'கண்டாகர்ணன்' சிலைக்கு முன்பாக எரிந்து கொண்டிருந்த ஹோம குண்டத்தின் அருகே அவளை அழைத்துச் சென்றது. அங்கிருந்த பலியிடும் கல்லில் அவளது தலையை வெட்டியது. அவளது ரத்தத்தை எடுத்து ஹோம குண்டத்திற்குள் ஊற்றியது.

"இதோ, நான் நாற்பதாவது பெண்ணைப் பலியிட்டிருக்கிறேன். இன்னும் ஒரே ஒரு பலிதானே உன் கணக்கில் மீதமிருப்பது?" அந்தப் பைசாசிக உருவத்தின் முன் நின்றுகொண்டு பிரம்மதத்தன் கேட்டார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

தலையில் கொம்பு முளைத்த, நீண்ட கடைவாய்ப் பற்களையும், பெரிய உருண்டைக் கண்களையும் பெற்றிருந்த அந்த உருவம் கழுத்தில் மனித எலும்புகளையும் மண்டையோடுகளையும் மாலையாகப் போட்டிருந்தது. பார்க்கவே திகிலூட்டும் அந்த உருவம், பிரம்மதத்தனின் கண்களுக்கு ஹோம குண்டத்தில் உயிருடன் தென்பட்டது. அதைச் சுற்றிலும் புகைப்படலம் எழும்பியிருந்தது.

"ஆமாம், இன்னும் ஒரு பலி மீதமுள்ளது!" அந்தப் பைசாசிக உருவம் பதிலளித்தது.

"அதையும் நான் விரைவிலேயே நிறைவேற்றுகிறேன்!" பிரம்மதத்தன் வாக்குறுதியளித்தார்.

"அப்படியானால், நீ மரணத்தை வென்றவனாவாய். உன்னுடைய காலடியில் எந்தக் கன்னிப்பெண்ணும் பணிந்து விழுவாள். நீ நினைப்பதெல்லாம் நடக்கும். உன்னுடைய மந்திரப் பிரயோகங்கள் எந்தக் காலத்திலும் அழியாது!" சொல்லிவிட்டு ஹோம குண்டத்திலிருந்து அந்த உருவம் மறைந்தது.

நள்ளிரவானபோது பிரம்மதத்தன், ஸ்ரீகலாவின் பிணத்தை ஒரு சாக்குப் பையில் போட்டுக் கட்டி ஆற்றில் வீசியெறிந்தார். யாருக்கும் தெரியாமல் இந்தச் சம்பவம் அப்படியே மறைந்து போனது.

கேசவன்குட்டி தலைச்சேரியிலிருந்து திரும்பி வந்தபோது வீடு அமைதியாக இருந்தது. மாமாவும் அம்மாவும் கவலையுடன் கன்னத்தில் கைவைத்து சோகத்துடன் அமர்ந்திருந்தனர். தங்களது மகள் காணாமற்போன விவரத்தை அவர்கள் யாரிடமும் சொல்லவில்லை. எப்படிச் சொல்வது? வயதுக்கு வந்த பெண் காணாமல் போய்விட்டாள் என்று சொன்னால் வெட்கக்கேடல்லவா? தெரிந்தால் ஊரார் என்ன சொல்வார்கள்? 'ராசுவக் குறூப்பின் மகள் எந்தப் பையனுடனோ ஓடிப்போய் விட்டாள்!' இந்த வார்த்தையைச் சொல்லி எதற்காகக் குடும்பத்திற்கு அவமானம் உண்டாக்க வேண்டும்? எனவே, இந்த விவரத்தை யாரிடமும் சொல்லவில்லை. கேசவன் குட்டி திரும்பி வந்த பிறகு, மேற்கொண்டு என்ன செய்வது என்பது பற்றி யோசிக்கலாம் என்று நினைத்தனர்.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஏன் எல்லாரும் மௌனமாக இருக்கிறீர்கள்? என்ன நடந்தது? ஸ்ரீகலா எங்கே?" கேசவன் கேட்டான்.

"எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன். நீ முதலில் சென்று உடை மாற்றி வா" மாமா கூறினார்.

"ஸ்ரீகலா, கொஞ்சம் தண்ணீர் தாம்மா!" என்றான் கேசவன் குட்டி.

அதற்குப் பதிலாக அவளது அம்மா எழுந்து தண்ணீர் எடுக்க வீட்டிற்குள் போனாள்.

அறை வாசலில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த குத்து விளக்கின் ஒளியில் மாமா, அம்மாவின் முகங்களில் ஏதோ வேறுபாடு இருப்பதாகப் புலப்பட்டது. அம்மா தண்ணீர் கொண்டு வந்தாள்.

"ஸ்ரீகலா எங்கே?" கேசவன் கேட்டான்.

"முதலில் நீ தண்ணீர் குடி. நான் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன்" மாமா வருத்தத்துடன் கூறினார்.

கேசவனுக்குச் சந்தேகம் வளர்ந்தது. 'ஒருவேளை ஸ்ரீகலாவிற்கு உடம்பு சரியில்லையோ, அதனால்தான் அம்மா தண்ணீர் கொண்டு வந்திருக்கிறாளோ?' என்று நினைத்தான். ஆனால், மாமாவின் வார்த்தைகளைக் கேட்டபோது சந்தேகம் வலுவடைந்தது. கேசவன் தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டு வராந்தாவில் உட்கார்ந்தான்.

"நீ புறப்பட்டுப் போன அன்று மாலை கோயிலுக்குப் போன ஸ்ரீகலா அதற்குப் பிறகு வீடு திரும்பவில்லை. இந்த விஷயத்தை இதுவரையில் நான் யாரிடமும் சொல்லவுமில்லை" குரலைத் தாழ்த்தியபடி மாமா பேசினார்.

"என்ன, என்னால் இதை நம்பவே முடியவில்லை. அவளுக்கு என்ன ஆயிற்று?" யாரிடம் கேட்கிறோம் என்றில்லாமல் பொதுவாகக் கேட்டு வைத்தான்.

"என்னுடைய பயமெல்லாம் அந்தச் சண்டாளனைப் பற்றித்தான். ஆனால் யாரிடம் சொல்வது? சொன்னால்தான் யாராவது நம்புவார்களா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இதோ வந்து விடுகிறேன் மாமா" சொல்லியபடியே கேசவன் வாசல் தாண்டி எங்கோ ஓடினான். நேராகக் கிட்டு ஆசானின் வீட்டிற்குச் சென்றான்.

ஆசான் தன்னுடைய வீட்டிற்குள் நில விளக்கைக் கொளுத்தி வைத்துக்கொண்டு, அதன் முன்னால் உட்கார்ந்து தன்னுடைய பழைய கண்ணாடியைக் காதில் செருகியபடி 'பாகவதம்' படிப்பதில் ஈடுபட்டிருந்தார். அவனைப் பார்த்ததும் நிமிர்ந்தார்.

"என்ன கேசவா, இந்த நேரத்தில்?" கிட்டு ஆசான் கேட்டார்.

கேசவன் எல்லா விவரத்தையும் விளக்கினான்.

"அவள் என்ன ஆனாள் என்பதையும், எங்கே இருக்கிறாள் என்பதையும் ஜோதிடம் பார்த்துச் சொல்லுங்களேன்!"

"இருட்டிவிட்டால் ஜோதிடம் பார்க்கக் கூடாது."

"நீங்கள் மனம் வைத்தால், இதிலெல்லாம் ஏதாவது விதி விலக்குகள் தென்படும். காரியம் மிகவும் அவசரம் ஆசானே!"

கடைசியில் ஆசான் தன்னுடைய பழைய பையிலிருந்த சோழிகளை வெளியில் எடுத்தார். சோழி போட்டுச் சிறிது நேரம் கணக்கிட்டார். மறுபடியும் சோழி போட்டார். பிறகு கூறினார். "பெண் தென்கிழக்குப் பகுதியில் இருக்கிறாள். ஜோதிடத்தில் இதற்கு மேல் தெளிவாகக் கூற முடியாதே!"

"தென்கிழக்காகப் போனால் அது எந்த இடத்தை அடைகிறது?"

"அது மேலக்காவு வீட்டின் கிழக்குப் புறமாகச் செல்லும்."

'மேலக்காவுமனை' கேசவன் அதை ஒரு மந்திரம் போல் உச்சரித்தான். ஒருவேளை பிரம்மதத்தனாக இருக்குமோ? கேசவனின் மனதில் சந்தேகம் உதித்தது.

"நன்றி ஆசானே, நான் வரட்டுமா?" விடைபெற்ற கேசவன் மேலக்காவு மனையை நோக்கி நடக்கத் தொடங்கினான்... இல்லை. ஓடினான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அதை நெருங்கியவுடன் வாசலைத் தள்ளித் திறந்து கொண்டு வெளிவாசலைக் கடந்தான். திண்ணையில் ஒரு பெரிய நிலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. பக்கத்திலேயே ஒரு சாய்வு நாற்காலியில் பிரம்மதத்தன் ஓய்வாகப் படுத்திருந்தார்.

"யாரது, கேட்காமல் கொள்ளாமல் வீட்டிற்குள் நுழைந்திருப்பது?" அதிகாரத்துடன் கேட்டார்.

"என்னைத் தடுப்பதற்குத் தைரியம் இருப்பவர்கள் முடிந்தால் தடுத்துக் கொள்ளட்டும்."

"குழந்தை, உன்னுடைய இடுப்பிலிருக்கும் தாயத்தின் தைரியத் தால் என்னோடு விளையாடாதே! அதெல்லாம் விட்டில் பூச்சிகளைத் தான் பயப்படுத்தும். நான் யாரென்று உனக்குத் தெரிந்திருக்காது."

"இல்லை, உங்களை எனக்குத் தெரியும். நீங்கள் ஒரு பிசாசு. பிரம்மராட்சசன்."

"என்னைக் கேட்காமலேயே என் வீட்டு வாசலை நீ மிதித்ததை நான் மன்னித்து விட்டேன். போகட்டும், நீ யார்?"

"ராகவக் குறுப்பின் மருமகன் கேசவன்" சொல்லியபடியே திண்ணையில் ஏறி அங்கு எரிந்து கொண்டிருந்த நிலவிளக்கைக் கையில் எடுத்தான். நேராக பிரம்மதத்தன் நம்பூதிரியை நெருங்கினான்.

சட்டென்று துள்ளி எழுந்த பிரம்மதத்தன் அந்த விளக்கைப் பிடித்தார். வந்திருக்கும் இளைஞன் பலசாலி என்பதை அந்தப் பிடியிலிருந்தே உணர்ந்தார். சட்டென்று தன் இடுப்பில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துக் கேசவனின் முன் போட்டார்.

அந்த அரைஞாண் கயிறு ஒரு பெரிய தாம்புக்கயிறு போல் தன் உடம்பில் சுற்றுவதைக் கேசவன் உணர்ந்தான்.

"என்னை எதிர்க்க ஆசையிருந்தால் சரியாகப் பாடம் படித்து விட்டு வா. பிழைத்துப் போ. இனி இந்தப் பக்கம் வராதே!" சொல்லிவிட்டு அவர் வீட்டுக்குள் நுழைந்து கொண்டார்.

நிலவிளக்கு அணைந்துபோயிருந்தது. எங்கும் கும்மிருட்டாக இருந்தது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

கேசவன் குட்டி தடுமாறி நின்றிருந்தான். அவ்வேளையில், "வாருங்கள். நான் வழி காட்டுகிறேன்" ஒரு பெண்ணின் குரல் தெளிவாக அவனுக்குக் கேட்டது.

4

தனக்குப் பின்புறமாகத் தெளிவற்றுத் தெரிந்த பெண் உருவம் யாரென்று கேசவனுக்குப் புரியவில்லை. அது மனிதப் பெண்தானா அல்லது மோகினியா என்றுகூடத் தெரியவில்லை. ஆனால், தான் வந்துள்ள இடம் கற்பனைக் கதைகளில் மட்டுமே இடம்பெறுவது போன்ற ஒரு மந்திரவாதியின் வீடு என்பது மட்டும் விளங்கியது.

ஏதோ ஒரு மோசமான தேவதைக்காக நரபலி கொடுத்துக் கொண்டு, அமானுஷ்யமான வல்லமைகளைப் பெறுவதற்காக வெகு காலமாக முயன்று வரும் மேலக்காவு பிரம்மதத்தன் நம்பூதிரியுடன் சற்று நேரத்திற்கு முன்புதான் பேசிக் கொண்டிருந்தோம் என்ற நினைவு வந்தது. அவர் தன்மீது வீசியெறிந்த அரைஞாண் கயிறு அவிழாமல் உடம்பின் மீது முறுக்கிப் பிடித்திருக்கிற பாம்பு போல் சுற்றியிருந்தது. இரண்டு கைகளும் உடம்போடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன.

"அப்படியே நடந்து வாருங்கள். நான் முன்புறமாகவே உள்ளேன்" ஒரு மெல்லிய சல்லாத் துணி போல் அந்த உருவம் முன்புறமாக நடந்தது.

மூச்சை அடக்கிக்கொண்டு தன்னுடைய கட்டுகளை அவிழ்க்கக் கேசவன் முயன்றும் முடியவில்லை. அந்த வீட்டு வாசலைக் கடந்தவுடன் ஓர் அற்புதம் போல் அந்தக் கயிறு அவனது உடலிலிருந்து உதிர்ந்து விழுந்தது.

"கேசவன் குட்டிதானே உங்கள் பெயர்?" அந்த உருவம் கேட்டது.

"ஆமாம்."

"நீங்களும் மாமாவைப் போல் மாறினால்தான் எதிர்க்க முடியும். கற்றுக்கொண்டு வாருங்கள். நானும் உங்களுக்கு உதவுகிறேன். என் பெயர் ஊர்மிளா."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"என்னால் உங்களைச் சரியாகப் பார்க்க முடியவில்லையே!" இருளில் நடந்தபடி கேசவன் கூறினான்.

"இருட்டு நேரமல்லவா? பிறகு சந்திக்க நேரலாம். இப்போது சென்று வாருங்கள்."

மல்லிகைப்பூவின் மணம் மெதுவாக அகன்று சென்றபிறகு, கேசவன் அங்கிருந்து திரும்பி நடந்தான். வீட்டிற்கு வந்தபிறகு தாய் மாமனிடம் எல்லா விவரங்களையும் கூறினான்.

"கேசவன், அந்தத் துரோகியை எதிர்க்க வேண்டுமானால் அது மந்திரத்தால் மட்டுமே முடியும். அதற்கு இப்பொழுது நாம் என்ன செய்வது?" ராகவக் குறுப் கேட்டார்.

"எப்படி இருந்தாலும் நான் அதற்கு முயற்சி செய்வேன். அவருடன் மோதி நிச்சயம் அவரை வீழ்த்துவேன். இது உறுதி" கேசவன் சபதம் செய்தான்.

"ஸ்ரீகலாவைப் பற்றி ஏதாவது விவரம் தெரிந்ததா?" மாமா கேட்டார்.

கேசவன் கிட்டு ஆசானிடமிருந்து தெரிந்துகொண்ட விஷயத்தை எப்படி அவரிடம் சொல்வதென்று யோசித்தான். தங்கள் மகள் அந்த மனிதப் பிசாசின் பசிக்கு இரையாகி விட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டாலே குடும்பத்திலுள்ள எல்லாரும் ஒட்டுமொத்த மாகத் தற்கொலை செய்து கொள்வார்கள். அதனால் அந்த விஷ யத்தைச் சொல்லாமல் இருப்பதே நல்லது என்று நினைத்தான்.

"மாமா, நான் ஒரு இடத்திற்குச் செல்கிறேன். ஆகவே கொஞ்ச நாள் இந்தப் பக்கம் வரமாட்டேன்" கேசவன் கூறினான்.

"எங்கே போகிறாய் கேசவா?" அம்மா கேட்டாள்.

"என்னால் இப்பொழுது எதையும் திட்டவட்டமாகக் கூறமுடியாது அம்மா. எனக்கு ஒரு லட்சியம் உள்ளது. அது நிறைவேறிய பிறகே நான் திரும்பி வருவேன்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இறுதியில் அவர்கள் எல்லாரும் ஒப்புக் கொண்டனர். நிச்சயமாக ஏதோ ஒரு நல்ல காரியத்திற்குத்தான் அவன் புறப்படுகிறான் என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஒரு தோள் பையில் மிகவும் முக்கியமாகத் தேவைப்பட்ட சில பொருள்களை மட்டும் எடுத்துக்கொண்டு. ஒருநாள் மாலையில் கேசவன் தனது பயணத்தைத் தொடங்கினான்.

கிட்டு ஆசான் சொல்லிக் கொடுத்த வழி நினைவிலேயே இருந்தது.

அது ஓர் ஒற்றையடிப் பாதை. இருபுறமும் புதர் மண்டியிருந்தது, வர வர வழி மேற்புறமாக உயர்ந்து கொண்டே சென்றது. அந்த வழியில் எங்குமே மரங்கள் தென்படவில்லை.

சற்று தூரம் நடந்தபிறகு வெளிச்சம் குறைந்தது. ஆனால், அதற்குப் பதிலாக நிலவு உதித்து உயர்ந்தது. நல்ல நிலவொளி. நிழலும் வெளிச்சமும் மாறி மாறித் தென்பட்டதால் பாதை தெளிவாகவே தெரிந்தது. இந்த வழி முடிகிற இடம் கோவிலகம் கோட்டையாக இருக்கும் என்று கேசவன் கணக்கிட்டான். அரண்மனையை நெருங்கினான்.

நேர் எதிரில் ஒரு வாசல் தெரிந்தது. அங்கு நின்றபடி ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தான் கேசவன். அங்கங்கே இடிந்துபோய் சிதிலமாகத் தெரிந்த பழைய காலத்து பெரிய பங்களா. பங்களாவின் சுற்றுப்புறத்தில் நான்கு புறமும் மேடுகள். அரண்மனையைக் கட்டுவதற் காகவே அந்த இடத்தை அப்படிச் சீர் செய்திருந்தார்கள் போலும். ஒழுங்கு செய்த அடையாளம் தெரிந்தது. ஒரு கோயில் போன்ற அமைப்பு. கேசவன் குட்டி அதை ஏற்கெனவே பார்த்திருக்கிறான்.

வெளி வாசலிலிருந்து படிகள் கீழ்ப்புறமாக இறங்கின. படிகளை மிதித்து இறங்கினான். கீழே சமதளம் தட்டுப்பட்டது. தாயத்து இடுப்பில் இருந்தது. அந்தத் தாயத்து, இந்த இடத்திற்குப் போதுமா என்பது சந்தேகம்தான். தான் இங்கு வந்திருப்பது யாரையும் தொல்லைப் படுத்துவதற்கு அல்லவே என்ற நினைவு மேலெழும்பிய தால் பயமும் சுத்தமாக மனதை விட்டு அகன்றது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

திண்ணையில் நிலவிளக்கு ஒன்று இருந்தது. ஒரு தீக்குச்சியை உரசினான். விளக்கில் எண்ணெயும் திரியும் தயாராக இருந்தன. விள்க்கைக் கொளுத்தினான். நல்ல வெளிச்சம்.

'இதெல்லாம் இங்கே தயாராக இருப்பதென்றால் இங்கு அடிக்கடி யாரோ வருகிறார்கள் என்றுதானே அர்த்தம்! ஒருவேளை காவற் காரனாக இருப்பானோ?'

கோட்டை வாசல் கிழக்குப்புறமாக இருந்தது. நிலவொளி திண்ணையில் நன்றாகப் படர்ந்திருந்தது. டார்ச் லைட்டைப் பயன் படுத்திப் பார்த்தபோது, வாசல் கதவு திறந்திருப்பதாகத் தெரிந்தது. நெருங்கிச் சென்ற போதுதான் கதவே இல்லை என்கிற உண்மை தெரிந்தது.

கேசவன் உள்ளே நுழைந்தான். சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு பழங்காலக் கட்டில் அங்கே கிடந்தது. பக்கத்திலேயே மேஜையும், நாற்காலியும் இருந்தன. தூசி படியாமல் அப்பொழுதுதான் யாரோ துடைத்து வைத்தாற்போல் அவை பளிச்சென்று இருந்தன. பையைக் கட்டிலின் மீது வைத்துவிட்டு மீண்டும் திண்ணைக்கு வந்து நிலவிளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு நுழைந்தான். அறை இப்பொழுது தெளிவாகத் தெரிந்தது. பழங்காலத்து வாளும், கேடயமும் சுவரில் மாட்டியிருந்தன. ஒரு வாளைக் கையில் எடுத்துப் பார்த்தான். அதில் ஏதோ பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. கேசவன் அதைப் படிக்க முயன்றான். "கிழக்குக் கோட்டை ஆயில்யம் திருநாள் உதயவர்மன்" உடம்பு சிலிர்த்தது. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டை அரசாண்ட உதயவர்மனின் வாள்! மறுபடியும் அதை அங்கேயே வைத்தான். கட்டிலில் உட்கார்ந்தான்.

காற்று சலனமற்று அந்தப் பகுதியிலேயே நின்றிருப்பதாகத் தோன்றியது. பூமி மட்டத்தைவிடச் சற்றுத் தாழ்ந்திருந்ததால் காற்று இதற்குள் வரவில்லை போலும். கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டு. எவ்வளவு சீக்கிரம் நேரம் கடந்திருக்கிறது. அன்றைய இரவை அங்கேயே கழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ரொட்டியும், தண்ணீரையும் எடுத்து வந்திருந்தான். அவற்றைச் சாப்பிட்ட பிறகு போர்வையை விரித்துக் கட்டிலில் படுத்தான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

சட்டென்று யாரோ நடந்து வரும் ஓசை. அத்துடன் உடுத்திருந்த துணிகள் கலைந்து விலகும் சத்தம். யாரது? கேசவன் சட்டென்று துள்ளியெழுந்தான். அந்த உருவம் நெருங்கி வந்து வாசலுக்கருகே வெளியே நின்றது. நிலவிளக்கின் வெளிச்சத்தில் கேசவன் அந்த உருவத்தைக் கவனித்தான்.

அவள் ஒரு யௌவனப்பெண். பிரபு குலத்தின் மேன்மையுடன் வெகு அழகாக இருந்தாள் அவள். கந்தர்வக்கன்னி போன்று களை பொருந்திய முகம். சரிகை வைத்த உடை. அதேபோன்று சரிகைக் கரை வைத்த துண்டால் தாவணி போட்டிருந்தாள். கழுத்தில் வைரக்கற்கள் பதித்த மாலை. கைகளில் தங்க வளையல்கள். பழங்காலத்து அரச குடும்பங்களில் மட்டுமே காண முடிந்த ஒரு பெண்.

அவள் அருகே நெருங்கியபோது மனோரஞ்சிதம் போன்ற பாலைப் பூவின் நறுமணம் அங்கு பரவியது.

ஒரு கை தேர்ந்த ஓவியன் வரைந்தது போன்ற புருவங்கள்; நட்சத்திரங்கள் பிறப்பெடுக்கும் அழகான கண்கள் கவிதை வழியும் கன்னக் கதுப்புகள். கனவுகளின் கிடங்காகத் தெரிந்த சிவந்த உதடுகள். தங்கம் போன்ற நிறம். மேலாடையற்ற தோள் பரப்பு. சிற்பி வடித்தெடுத்தது போன்ற கைகள்...

'இவள் யார்? அதுவும் இந்த அகால நேரத்தில் தனியாக வேறு வந்திருக்கிறாளே' - ஒரு கணம் யோசித்தான்.

பின்பு கேட்டான்: "யாரென்று தெரியவில்லையே!"

"அதை நானல்லவா உங்களிடம் கேட்டிருக்க வேண்டும்!" அவளது குரல் மிகவும் இனிமையாக இருந்தது.

"என் பெயர் கேசவன் குட்டி. இந்த ஊர்க்காரன்தான். என்னுடைய மாமா ராகவக் குறூப்."

"இங்கு வந்திருப்பதன் நோக்கம்?"

"கடைசியாக இங்கு வர நேர்ந்து விட்டது. ஊருக்குள் வாழ முடியாமல் வெளியேறும்படி ஒரு நிர்ப்பந்தம்!"

"காரணம் கேட்கலாமா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"காரணம் பிரம்மதத்தன் நம்பூதிரி. அவன் ஒரு பெரிய மந்திரவாதியும்கூட. இப்பொழுது சில நாட்களாக வயதுக்கு வந்த பெண்கள் ஊரிலிருந்து காணாமல் போக ஆரம்பித்திருக்கிறார்கள்."

"ஓஹோ... அந்தப் பிரம்மதத்தனா? சரிதான்! ஆனால், உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதரால் அவரை எப்படி எதிர்க்க முடியும்?"

"இங்கு வந்தால் அது முடியும் என்று எனக்குத் தெரியும்."

"அது தவறு. இதையே சொல்லிக் கொண்டுதான் ஒரு நாள் பிரம்மதத்தனும் இங்கு வந்தார். அப்பொழுது அவர் மிகவும் நல்லவராகக்கூட இருந்தார். அவர் குடும்பத்திலேயே, அவருக்கு முந்தைய தலைமுறையினரை விட நல்லவராகத்தான் அவர் வந்தார். ஆனால், அவர் இங்கிருந்து திருடிச் சென்றது ஒரு பெரிய மாந்திரீக கிரந்தத்தை. அதனால் இங்கிருப்பவர்கள் புதியதாக வரும் யாரையுமே இனிமேல் நம்ப மாட்டார்கள்!"

"அப்படி என்றால்..." கேசவன் சந்தேகத்துடன் கேட்டான்.

"அதாவது, அவருக்குப் பிறகு இந்த இடத்திற்கு வந்த எந்த மனிதனுமே உயிருடன் திரும்பியதில்லை என்று அர்த்தம்."

கேசவன் ஒரு விநாடி திடுக்கிட்டான். ஒருவேளை முட்டாள் தனமான காரியம் செய்து விட்டோமோ என்றுகூட நினைத்தான். இருப்பினும் தைரியமாய்ப் பேசினான்.

"நான் யாருக்கும் துரோகம் செய்வதற்காக இங்கு வரவில்லை."

"இதையே சொல்லிக்கொண்டு வந்த மற்றொரு மனிதரை நான் உங்களுக்குக் காட்டுகிறேன். என்னுடன் வாருங்கள்" அவள் கேசவனை அழைத்தாள்.

அந்தப் பெரிய கோட்டையின் பின்புறத்திற்கு அவனை அழைத்துச் சென்றாள்.

எதிரே ஒரு பெரிய குளம் தெரிந்தது. அதுவும் சற்று ஆழத்தில் எத்தனையோ படிக்கட்டுகளைத் தாண்டினால்தான் நீர்ப்பரப்பே தட்டுப்படும்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அவருக்குப் பிறகு வந்தவர்கள் எல்லாரும் இந்தக் குளத்திற்குள் தான் இருக்கிறார்கள். இனிமேல் உங்களுக்கும் அதுதான் இடம்" என்றபடி அந்தப் பெண் உருவம் தனது வலக்கையை உயர்த்தியது.

5

"**வே**ண்டாம். நீங்கள் அந்தக் கையை உயர்த்தக் கூடாது. நான் இங்கு வந்திருப்பது கிழக்குக் கோட்டை கோவிலகத்தைச் சேர்ந்த கார்த்தியாயினி இளவரசியைச் சந்திப்பதற்காகத்தான். வேறு எதற்காகவும் இல்லை!" கேசவன் தைரியத்துடன் அவளைப் பார்த்துப் பேசினான்.

அந்தப் பெண்ணின் கை மெதுவாகத் தாழ்ந்தது.

"நீங்கள் சொல்வது உண்மையா?"

"சத்தியமாக. இங்கிருந்து எதையும் எடுத்துச் செல்வதற்காக நான் வரவில்லை. தயவு செய்து என்னை நம்புங்கள்."

"அப்படியானால் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் சந்திக்க வந்துள்ள இளவரசி கார்த்தியாயினி நான்தான்."

"என்ன!" கேசவன் வியப்பில் வாயைப் பிளந்தான். தான் நினைத்தது சரியாகப் போய்விட்டது. நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டை அரசாண்ட கார்த்தியாயினி, இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். கிட்டு ஆசான் கூறியது உண்மைதானா?

"என்னுடன் வாருங்கள்" அவள் அழைத்தாள். பாலைப்பூவின் மணம் கமழும் அவளைப் பின்தொடர்ந்தான் கேசவன்.

மீண்டும் திண்ணையில் ஏறி, இடது புறமிருந்த கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள். அதற்குள் மின்சார விளக்கு போட்டாற் போன்ற வெளிச்சமிருந்தது. ஆனால் அங்கு ஒரே ஒரு நிலவிளக்கு மட்டுமே எரிந்து கொண்டிருந்தது. அதுவும் ஒரு திரி மட்டுமே எரிந்து கொண்டிருந்தது. இந்த விளக்கிற்கா இவ்வளவு வெளிச்சம்? கேசவன் யோசித்தான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"உட்காருங்கள்" அங்கிருந்த கட்டிலைச் சுட்டிக் காட்டினாள் அவள்.

அறுபத்து நான்கு மூலிகை மரங்களின் மரத்துண்டுகளை இணைத்து உருவாக்கியிருந்த அந்த மரக்கட்டில் ஒரு சிற்பக்கூடம் என்றே கூறலாம். முழுவதும் வகை வகையான சிற்பங்கள். பஞ்ச லோகம், யானைத்தந்தம் போன்றவை நடுநடுவே அழகூட்டியிருந்தன. மென்மையான பஞ்சு நிறைந்த வெல்வெட் மெத்தைகள், தலை யணைகள், திண்டுகள்.

கண்ணைக் கவரும் அழகான இரண்டு நாற்காலிகள். எல்லாமே கைவேலைப்பாட்டின் திறனை வெளிப்படுத்தின. அந்த அறையின் சுவர்களும், தளமும்கூட மிக அழகாக இருந்தன. தாமரைப் பூக்கள் மலர்ந்திருப்பது போன்ற ஓவியத்தில் பித்தளைக் குமிழ்கள் பொருத்தப்பட்டிருந்தன.

"இந்தச் சிறிய விளக்கிலிருந்து எப்படி இவ்வளவு வெளிச்சம் வருகிறது என்றுதானே யோசிக்கிறீர்கள்?"

"ஆமாம்" என்றபடி சுற்றுமுற்றும் பார்த்தான் கேசவன்.

"அந்தச் சிறிய திரியின் தீப ஒளி. இங்குள்ள பித்தளைக் குமிழ்களில் பட்டுப் பிரதிபலிப்பதால்தான் இவ்வளவு வெளிச்சமும். இதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை."

"என்னுடைய வியப்பு அதைப்பற்றியது அல்ல" அவளது அழகான உடம்பைப் பார்வையிட்டபடியே கேசவன் கூறினான்.

"வேறு எதைப் பற்றி?"

"உங்களுடைய அழகுதான்!"

"அதை விட்டுத் தள்ளுங்கள். இப்பொழுது அது ஒன்றும் முக்கியமான விஷயமல்ல. நீங்கள் எதற்காக வந்திருக்கிறீர்கள் என்பதை விவரமாகக் கூறுங்கள்."

"நான் சொன்னதை நீங்கள் நம்பவில்லையா? உங்களையும் இந்தக் கோட்டையையும் பார்ப்பதற்காகத்தான் வந்திருக்கிறேன்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அது மட்டும்தான் நோக்கமா?"

"இன்னொன்றும் உண்டு."

"என்ன?"

"நான் மந்திரம் கற்க வேண்டும்."

"நல்லதற்குப் பயன்படுத்தவா. கெட்ட காரியத்திற்கா என்பதை முதலில் கூறுங்கள்."

"நிச்சயமாக நல்லதற்குத்தான்."

"அதன் மூலம் யாரையாவது எதிர்க்க நினைக்கிறீர்களா?"

உண்மையைச் சொல்கிறேனே. ஒரு மனிதனை எதிர்ப்பதற்குத் தான் மந்திரமே கற்க விரும்புகிறேன்."

"இங்கு எப்படி நீங்கள் வசிக்க முடியும்? உங்களிடம் அதற்கான தைரியம் உள்ளதா?"

"நான் எதற்காகப் பயப்பட வேண்டும்?"

"பயமில்லையென்றால் சரி. நான் ஓர் ஓலை தருகிறேன். சம் கிருதம் தெரியுமா?"

"தெரியும். படித்திருக்கிறேன்."

"அப்படியானால் கற்றுக்கொள்வதில் அதிகக் கஷ்டமிருக்காது."

"எவ்வளவு கஷ்டமிருந்தாலும் அதை ஏற்றுக் கொள்வதென்று தீர்மானித்து விட்டேன்."

"ஒரு விஷயத்தை முன்கூட்டியே சொல்லிவிடுகிறேன். இந்தக் கோட்டைப் பகுதி முழுவதும் இறந்து போன பழைய மன்னர்களின் ஆவிகள் உலவிக் கொண்டிருக்கின்றன. அவை இரத்த தாகத்துடன் இருப்பவை. எனவே முதலில் அவற்றின் தாக்குதலுக்கு ஆளாகா மலிருப்பதற்காக ஒரு பொருளைத் தருகிறேன். இதோ, இந்த மோதிரத்தை விரலில் அணிந்து கொள்ளுங்கள். இது என்னுடைய முத்திரை மோதிரம். இதை ஒருபோதும் கழற்றக்கூடாது. குறிப்பாக இரவு நேரங்களில்" தம்புராட்டி தனது வலது கை மோதிர விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றித் தந்தாள். "இதில் எல்லா வகையான கற்களும்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இருக்கின்றன. நடுப்பகுதியில் இருப்பது வைடூரியக் கல். உம்... போட்டுக் கொள்ளுங்கள்."

கேசவன் அதை வாங்கித் தன் விரலில் அணிந்து கொண்டான். மோதிரம் விரலை இறுக்கிப் பிடித்தது.

"நான் வருகிறேன்; படுத்துக் கொள்ளுங்கள்."

அவள் திரும்பி நடந்தபோது, அவளது இடுப்புப் பகுதியையும் தாண்டி வளர்ந்திருந்த தலைமுடி கண்ணுக்குத் தெரிந்தது. அடர்த்தி யாக இருந்த அதன் கருமையில், அவளது உருவமே புதையுண்டு போயிருந்தது.

பாலைப் பூவின் வாசனை முற்றிலும் மறைந்த பிறகு கேசவன் வாசலை அடைத்தான். விளக்கை அணைத்துப் படுத்தான். சுற்றிலும் நிசப்தம். கெட்ட கனவுகள் எதுவு மில்லாமல் கேசவன் நன்றாக உறங்கினான்.

விடியற்காலையில் எழுந்தான். கோட்டை வாசலைத் தாண்டி, தெற்குப் புறமாக நடந்தான். அந்த வழி ஆற்றங்கரையில் சென்று முடிவடைந்தது. கிழக்குப் புறமிருந்த மலையிலிருந்து பாய்ந்து வந்தது ஆறு. வெகு வேகமாய் ஆற்று வெள்ளம் அலையடித்தபடி ஓடிக் கொண்டிருந்தது.

நெருங்கிப் பார்த்தபோது தண்ணீர் மிகத் தெளிவாக இருந்தது. அடிப் பரப்பில் கிடந்த உருண்டை வடிவமான பலவண்ணக் கூழாங்கற்கள் கண்ணுக்குத் தெரிந்தன. கேசவன் சற்று நேரம் வேடிக்கை பார்த்தபடியே நின்றான். மறு கரைக்குச் செல்லத்தக்க விதமாக ஆற்றின் நடுவே அங்கங்கே பாறைகளும் புடைத்து நின்றிருந்தன. யாரோ கொண்டு வந்து கணக்கிட்டுப் பதித்தது போல் இருந்தன, அந்தப் பாறைகளின் அமைப்பு.

ஆற்றில் மூழ்கி எழுந்தான். குளிர்ந்த தண்ணீர் உடம்புக்கு இதமாக இருந்தது. மறுமுறை மூழ்கி எழுந்தபோது மறு கரையில் யாரோ நிற்பது தெரிந்தது. உற்றுக் கவனித்தான். பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதிருக்கலாம் அந்தப் பெண்ணுக்கு. குளிக்கும் அவனை ஒரு வேடிக்கைப் பொருளைப் போல் பார்த்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"யாரம்மா நீ. இப்படிப் பார்க்கிறாய்?"

"ஒன்றுமில்லை."

"உங்கள் வீடு எங்கே இருக்கிறது?"

"இங்கு பக்கத்தில்தான்."

"பெரியவர்கள் யாராவது இருக்கிறார்களா?"

"என் அம்மா இருக்கிறார் வீட்டில்."

"அப்பா எங்கே?"

"எனக்கு அப்பா இல்லை."

"நான் உங்கள் வீட்டிற்கு வருவதாக உன் அம்மாவிடம் சென்று சொல்."

"நான் என்று சொன்னால், அம்மாவுக்கு யார் என்று எப்படிப் புரியும்?"

"அதுவும் சரிதான். கோவிலகம் அரண்மனையிலிருந்து வருவதாகச் சொல்."

"கோவிலகம் அரண்மனை என்றால் வருபவர்கள் மனிதர்களாக இருக்க முடியாதே" அவள் சிரித்தபடியே பேசினாள்.

"சரி, எதை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்."

ஓடி மறைந்தாள். கேசவன் குளியலை முடித்துக்கொண்டு கரை ஏறினான். ஒற்றையடியப் பாதை தென்பட்டதும் அதில் நடையைத் தொடர்ந்தான். ஒரு பழங்கால வீடு தென்பட்டது. பழையகால மாளிகையின் சிதைந்த பகுதி. வீட்டின் பின்புறம் தரையோடு சேர்ந்து தாழ்ந்திருந்தது. முன்புறம் மட்டும் அவ்வளவாகப் பாதிப்படையாமல் இருந்தது. பாழடைந்த வெளிவாசலைக் கடந்து உட்புறம் சென்றான். துளசி மாடத்தை நெருங்கியபோது அவளது குரல் கேட்டது.

"இங்கு யாரும் இல்லையா?"

கேசவன் குரல் கொடுத்தான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

வெளியே வந்தாள் அவள். அவனைக் கண்டதுமே வியப்படைந்தாள். தன்னுடைய வீட்டைப் பற்றிக் கூறியிருந்தாலும் அவன் அவ்வளவு விரைவில் அங்கு வந்து சேருவான் என அவள் எதிர்பார்க்கவில்லை.

"யாரம்மா வந்திருப்பது?" உள்ளிருந்து அவள் அம்மாவின் குரலும் கேட்டது.

"தெரியவில்லையம்மா."

அம்மா வெளியே வந்தாள். அவளது அம்மாவும் அவளை அப்படியே உருவத்தில் ஒத்திருந்தாள். நாற்பத்தைந்து வயதிருக்கலாம். நரைக்காத தலைமுடி. முகம் களையாக இருந்தது.

"தடுக்கைக் கொண்டு வந்து போடம்மா!"

அவள் கொண்டு வந்து போட்ட தடுக்கில் கேசவன் உட்கார்ந்தான்.

"ஆமாம், உங்களை எனக்குத் தெரியவில்லை. எங்கிருந்து வருகிறீர்கள்? என்ன விஷயம்?" அம்மா விசாரித்தாள்.

கேசவன் அங்கு வந்ததிலிருந்து அவள் அவனை ஆராய்ந்த படியே இருந்தாள். அவள் மனதில் ஏதோ ஒருவிதமான சந்தேகம் இருந்தது. இந்தப் பகுதியில் மனிதர்கள் யாரும் அதிகமாகப் புழங்காமல் இருந்ததால், அவனது வருகை அவளுக்குப் புதிராக இருந்தது. முதல் தடவையாகத் தன்னுடைய வாழ்க்கையில் ஓர் இளைஞனைப் பார்ப்பது போல் அவனைப் பார்த்தாள்.

"நான் கிழக்குக் கோட்டையிலிருந்து வருகிறேன்."

"ஐயோ, அங்கு எதற்காகப் போனீர்கள்?"

"காரணம் எதுவுமில்லை. சும்மா அங்கு தங்கலாமே என்றுதான்."

"என்ன தம்பி, வேடிக்கையா இது! அங்கு மனிதர்கள் வசிக்க முடியுமா என்ன?"

"ஏன், அங்கு தங்கினால் என்ன?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"மகளே, கேட்டாயா? இவர் ஒரு வேடிக்கைக்காரர். என்ன சொல்கிறார் பார்த்தாயா? சரி, நீங்கள் எப்பொழுது கோட்டைக்கு வந்தீர்கள்?"

"நேற்று இரவு வந்தேன். இரவெல்லாம் அங்குதான் படுத் திருந்தேன்."

"என்னால் நம்ப முடியவில்லை."

வியப்புடன் பேசினாள் அந்த அம்மாள்.

"உண்மையிலேயே நான் அங்கே குடியிருப்பதற்காகவே வந்திருக்கிறேன். இன்னும் சில நாள் அங்கு தங்க வேண்டி உள்ளது. பக்கத்திலேயே இப்படி ஒரு வீடு இருப்பதும் நல்லதாகப் போயிற்று. சாப்பாட்டிற்கு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். உங்களால் உதவ முடியுமோ என்னவோ! எதற்கும் கேட்டுப் பார்க்கலாமே என்றுதான் வந்தேன்."

அம்மா, மகளைப் பார்த்தாள்; மகள் அம்மாவைப் பார்த்தாள்.

"உங்களது பெயரைச் சொல்லவில்லையே!"

"என் பெயர் கேசவன் குட்டி. என்னுடைய வீடு சற்றுத் தூரத் திலுள்ளது. இந்த அரண்மனையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இதை நன்றாகப் பார்க்க வேண்டும். இதைப்பற்றி ஆராய வேண்டும். இதுதான் எனது லட்சியம்" கேசவன் கூறினான்.

"உன்னைப் பார்த்த பிறகு எனக்கு ஒருவிதப் பாசம் தோன்று கிறது. உண்மையைச் சொல்லி விடுகிறேன். இந்த ஆற்றங்கரையில் எவ்வளவோ பேர் குளிப்பதற்காக வந்திருக்கிறார்கள். அவர்களை ஒரே ஒரு தடவைதான் பார்ப்போம். அதன்பிறகு பார்த்ததில்லை" அம்மா பேசினாள்.

"ஆனால், என்னைப் பொறுத்தவரை அப்படி நடக்காது என்பதுதான் என்னுடைய நம்பிக்கை. இங்கு உங்களுடன் வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள்? அதைப்பற்றி ஒன்றும் சொல்ல வில்லையே?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"காலையில் குளித்துவிட்டு வந்திருக்கிறீர்கள். முதலில் கொஞ்சம் காபி சாப்பிடுங்கள். பிறகு பேசிக் கொள்ளலாம்."

"சரி, உங்கள் விருப்பம்."

"மாலதி, இவருக்குக் காபி எடுத்துக்கொண்டு வாம்மா."

"சரி, அம்மா" வீட்டிற்குள்ளிருந்து பதில் குரல் கேட்டது.

அவளது அம்மா கேசவனிடம் பேசத் தொடங்கினாள்:

"நாங்கள் வெகு நாட்களாக இங்கே வசித்து வருகிறோம். எங்களுடையது ஒரு பெரிய குடும்பம். இப்பொழுது நாங்கள் மட்டும்தான் மீதமாக உள்ளோம். இவளது அப்பா பட்டாளத்தில் இருந்தார். சண்டையில் இறந்து போனார். அவரது பென்ஷன் பணம் வருகிறது. ஒருவிதமாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருக் கிறோம். எங்களுக்கு வேறு சொந்தக்காரர்கள் யாருமே இந்தப் பகுதியில் இல்லை."

மாலதி காபி கொண்டு வந்தாள். கேசவன் காபியை வாங்கிக் குடித்தபடி கூறினான்:

"நான் கோவிலகம் அரண்மனையில் தங்க வேண்டி உள்ளது. சாப்பாடுதான் இதுவரை ஒரு பிரச்சினையாக இருந்தது. என்னுடைய அதிர்ஷ்டம் என்று சொல்லலாம். உங்கள் வீடும் பக்கத்திலேயே இருக்கிறது. எனக்காக நீங்கள் எதுவும் தனியாகச் சமைக்க வேண்டிய தில்லை. நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்களோ, அதுவே எனக்கும் போதும். அதற்கான பணத்தைத் தந்து விடுகிறேன்."

"பணம் ஒரு பிரச்சினையே இல்லை தம்பி. தினமும் ஒருவருக்குச் சாப்பாடு தருவது எங்களால் முடியாத விஷயமல்ல."

"நீங்கள் பணம் வாங்கவில்லையென்றால் விஷயம் சிக்கலாகி விடும். சாப்பாட்டிற்கு நான் பணம் செலவு செய்யத்தான் வேண்டும். யாருக்கோ கொடுப்பதை உங்களிடம் தருகிறேன். முடிந்தால் காலை வேளையில் காபியும் கிடைத்தால் நல்லது. சரி, அப்புறம் வருகிறேன்" என்றபடி கேசவன் விடைபெற்றான்.

அம்மாவும் மகளும் அவன் போவதையே பார்த்தபடி இருந்தனர்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஹூம்... இவர் எத்தனை நாள் உயிருடன் இருக்கப் போகி றாரோ?" என்றாள் அம்மா பெருமூச்சுடன்.

6

கேசவன் மாலதியின் வீட்டிலிருந்து புறப்பட்டு நேராக கிழக்குக் கோட்டையை வந்தடைந்தான். வெளிவாசலைக் கடந்து, முற்றத்தை நெருங்கிய போதுதான் துளசி மாடத்தைக் கவனித்தான். செழித்து வளர்ந்திருந்த ஒரு துளசிச் செடி அதில் இருந்தது. பழைய காலச் செடியாக இருந்தாலும் 'இன்றும்' எந்தவிதமான சேதமும் இல்லாமல் பசுமையாக நின்றிருந்தது.

அரண்மனைக்குள் நுழையும் முதல் அறையிலேயே ஒரு பெரிய நிலவிளக்கு இருந்தது. மனிதர்கள் யாரும் இதற்குள் வருவதற்குப் பயப்படுவதால்தான் இந்தப் பொருள்கள் இன்னமும் அங்கேயே உள்ளன.

கேசவன் அறைக்குள் நுழைந்து இளவரசி கார்த்தியாயினி தந்த ஓலையைக் கையில் எடுத்தான்.

வெகுநாள் பட்ட ஓலை. ஆரம்ப வாக்கியம் அழிந்து போயி ருந்தது. அதிலிருந்த மந்திரம் 'மலைக்குறத்தி' என்கிற ஒரு தேவதையே வழிபடுவதற்குரியது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அருகிலுள்ள மலையடிவாரம் சென்று அந்தக் கோயிலில் ஒரு சேவலைப் பலியிட வேண்டுமென்ற விவரமும், அதற்குரிய மந்திரமும் அதில் இருந்தது.

"ஆம் க்ரோம் ஃபட் வாஹா..." என்று தொடங்கும் இந்த மந்திரத்தைப் பூர்த்தியாக்கும் யாரும், காட்டு மிருகங்களைக் கண்டு அஞ்ச வேண்டியிருக்காது. எந்தப் பயங்கரமான காட்டு விலங்கும் சாதுவாக, நண்பனாக உங்கள் சொற்படி கேட்கும்.

மற்றுமொரு பகுதியில் சாமுண்டி மந்திரம் இருந்தது. அதைத் தொடர்ந்து இன்னொரு மந்திரமும். கேசவன் அவற்றை இரண்டு முறை உச்சரித்துப் பார்த்தான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஆண்களோ, பெண்களோ தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்ட ஒரு மரத்தடியில் இருந்துதான் இந்த மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். நிலவு வெளிச்சமுள்ள இரவுகளில் 'காளராத்ரி' என்கிற துர்த்தேவதையை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவே இந்த மந்திரத்தை ஜபிக்க வேண்டும் என்கிற குறிப்பும் இருந்தது.

"ஆம் க்ரோம் காளாத்ரைய நம வாஹோ."

இந்த மந்திரத்தை ஜபித்தபடி சித்தி பெற்று மேற்குறிப்பிட்ட மரத்தடியில் சிறிய கற்களை எடுத்து ஒவ்வொரு கல்லையும் கையில் வைத்துக்கொண்டு ஆயிரம் முறை ஜபித்த பிறகு அந்தக் கற்களை நாம் யாரை நோக்கி எறிகிறோமோ, அந்த எதிரி இறந்து விடுவான் என்றிருந்தது.

கேசவன் ஓலைகளைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

'இதெல்லாம் நமக்குப் பயன்படாது' கேசவன் முணுமுணுத்தான். தன்னுடைய எதிராளி எவ்வளவோ பலம் வாய்ந்தவன். அவனுக்குத் தெரியாத மந்திரங்கள் இல்லை. அவன் தலையிலிருந்து ஒரு முடியை எடுத்துக் கீழே போட்டால் அதுவும் கருநாகப் பாம்பாக மாறும்.

தனக்குத் தேவைப்பட்டவை இதில் இல்லையென்று கேசவனுக்குத் தோன்றியது. தன்னை உடனடியாகத் திருப்திப்படுத்துவதற்காக இளவரசி கார்த்தியாயினி, சட்டென்று சில ஓலைகளைத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறாள். தன்னுடைய உண்மையான தேவை துர்காதேவி கோயிலில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள அந்த மாந்திரீகச் சுவடிதான். அது கிடைத்தால் மட்டுமே பிரம்மதத்தன் நம்பூதிரியை எதிர்ப்பதற்கான மனோவலிமை கிடைக்கும்.

மறுநாள் காலை. சிற்றுண்டிக்காக மாலதியின் வீட்டிற்குச் சென்றான் கேசவன். அவனை எதிர்பார்த்து அவளும் வாசலில் நின்றிருந்தாள்.

கூடான தோசைகளை வழக்கமாகச் சாப்பிடுவதை விட அதிகமாகச் சாப்பிட்டான். முதல் நாளிரவு எதுவும் சாப்பிடாமலிருந்ததால் பசியும் தளர்ச்சியும் அதிகமாக இருந்தன.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அவனது அன்றைய உணவு முழுக்க அங்கேயேதான். இரவு உணவிற்குப் பின் வெகு நேரம் வரை அவன் மாலதியின் அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தான். ஒரு சாட்சி போல் மாலதியும் அவர்களின் அருகிலேயே இருந்தாள்.

"என்ன இன்றைக்கு இன்னும் நிலவைக் காணோமே!" கேசவன் கிழக்குத் திசையைப் பார்த்தவாறு கூறினான்.

"இன்று அமாவாசையாயிற்றே, ஞாபகமில்லையா?" மாலதியின் அம்மா ஞாபகப்படுத்தினாள்.

"இங்கு வந்த பிறகு நாளும், கிழமையுமெல்லாம் மறந்தே போய் விட்டதே."

"அப்படியானால் இன்று இரவும் அரண்மனைக்கே செல்லப் போகிறீர்களா?"

"நிச்சயமாக, இரவு அங்குதான் தங்க வேண்டும் என்பது என்னுடைய நோக்கம். இல்லாவிட்டால் எனது எண்ணம் ஈடேறாது."

"வழியைப் பார்த்துப் போங்கள். இந்த இடமெல்லாம் அவ்வளவு நல்ல இடம் என்று கூற முடியாது."

தலையாட்டியபடியே அவன் நடக்கத் தொடங்கினான்.

ஆற்றை நெருங்கியபோது வெள்ளம் பாயும் ஓசை தெளிவாக, இரைச்சலாகக் கேட்டது. நீர்மட்டம் உயர்ந்திருப்பது போலத் தெரிந்தது. டார்ச் லைட்டை அணைத்ததுமே இருள் கனமேறித் தெரிந்தது. விரலால் கண்ணைக் குத்தினால் கூட தெரிந்துகொள்ள முடியாத இருட்டு.

டார்ச் லைட்டை அடித்து வழிப்பாறைகளைப் பார்த்தான். நல்ல வேளை, பாறைகள் எதுவும் நீருக்குள் மூழ்கியிருக்கவில்லை. ஆற்றைக் கடந்து ஒற்றையடிப் பாதையின் வழியாக நடந்தான். ஆற்றின் சலசலப்பு காதுக்குள் மறைந்து விட்டது.

பயமேற்படுத்தக்கூடிய அமைதியும், இருட்டும் பரவிக் கிடந்தன. தூரத்தில் எங்கேயோ நரிகள் ஊளையிட்டன. உடம்பிலுள்ள

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நரம்புகளை அந்த ஊளை ஒலி ஊடுருவுவதாக அவனுக்குத் தோன்றியது.

இவ்வளவு இருட்டில் புறப்பட்டிருக்க வேண்டாமோ என்றுகூட நினைத்தான். 'சாதாரணமாக யாரும் மேற்கொள்ளாத ஒரு சாகசத்தை நாம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறோமோ?' இன்னும் சற்று தூரம் நடக்க வேண்டியிருந்தது.

"யாரது?" ஒரு பெண் குரல் அவனது பின்புறத்தில் இருட்டி லிருந்து கேட்டது.

கேசவனுக்கு மெய்சிலிர்த்தது. சட்டென்று திரும்பி டார்ச் லைட்டை அந்தப் பக்கமாகத் திருப்பினான்.

ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். வெள்ளை உடை. பனி படிந்தாற் போன்ற ஓர் உடை. அது என்ன உடை என்றே தெரிய வில்லை. அத்துடன் அங்கு சட்டென்று இலஞ்சிப்பூவின் மணம் கமழ்ந்தது.

"யார் நீ?" கேசவன் அதட்டலுடன் கேட்டான்.

"கோவிலகத்து வீட்டில் வேலை செய்கிற பெண் நான். யாராவது அந்தப் பக்கம் போகிறவர்கள் வருவார்களா என்று காத்துக் கொண்டிருக்கிறேன்."

"அந்தப் பக்கமாகப் போகிறவர் யார்?"

"நீங்கள்தான்."

"நான் இந்தப் பக்கமாக வருவேன் என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"நான் இரண்டு நாளாக இங்கு இல்லாமலிருந்தேன். வந்த பிறகு தெரிந்து கொண்டேன்."

இதெல்லாமே நம்மைச் சோதிக்கும் சோதனைகள் என்று மனதிற்குள் கூறியபடி, அவளைத் தனக்கு முன்பாக நடக்கும்படி கூறினான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஐயோ. அப்படி நடக்கக்கூடாது. ஆண்களுக்கு முன்புறம் பெண்கள் நடப்பது முறையல்லவே!"

"அதெல்லாம் பகல் நேரத்தில். இரவு நேரங்களில் இப்படி நடப்பதுதான் நல்லது....ம். நட!" சொல்லியபடியே கேசவன் ஒருபுறமாக ஒதுங்கி நின்றான். அவள் அவன் சொற்படியே முன்புறம் நடந்தாள்.

கேசவன் டார்ச் லைட்டை எரிய விட்டான். அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு நீண்ட தலைமுடி! முந்தின நாள் இரவு இளவரசி கார்த்தியாயினிதேவியிடம் கண்டது போலவே இதுவும் நீளமான கூந்தல்!

டார்ச் அடித்தபோது கேசவனுக்கு மற்றொரு சந்தேகமும் தோன்றியது. இந்தப் பெண்ணின் நிழல் மண்ணில் விழுகிறதா? வெளிவாசற்படி தாண்டிய பிறகுதான் இப்படி ஒரு சந்தேகமே ஏற்பட்டது. ஒருவேளை தன்னுடைய மனதிற்குத்தான் அப்படித் தோன்றியதோ என்னவோ? அவள் படிக்கட்டுகளில் இறங்கினாள். கேசவன் பின்தொடர்ந்தான்.

வரவேற்பறையில் நிலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

"நீ இங்கு வேலைக்காரியாக வேலை செய்யத் தொடங்கி எவ்வளவு நாளாகிறது?" கேசவன் அவளிடம் கேட்டான்.

"சின்ன வயதிலிருந்தே நான் இங்குதான் இருக்கிறேன்."

"அப்படியானால் உனக்கு இந்த இடத்தைப் பற்றிய எல்லா விவரங்களும் தெரியும் என்று சொல்."

"தெரியும்."

"பேர் என்ன?"

"உங்களுக்கு விருப்பமான எந்தப் பெயரையும் பயன்படுத்திக் கூப்பிடலாம். எல்லாப் பேரும் எனக்குப் பிடிக்கும்?"

"இருக்கலாம். ஆனால். அப்பா அம்மா வைத்த பெயர் என்று ஒன்று இருக்குமல்லவா?"

"எனக்கு அப்பா-அம்மா இல்லை."

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"பிறகு நீ எப்படிப் பிறந்து வளர்ந்தாய்?"

"அம்மா, அப்பா இல்லாவிட்டால் யாரும் வளரவே முடியாதா என்ன? நான் பாட்டுக்கு வளர்ந்தேன்."

"நீ இங்கே தனியாகத்தான் படுக்கிறாயா?"

நிலவிளக்கில் ஒரு திரி மட்டுமே எரிந்து கொண்டிருந்தது. ஆனால், அந்த வெளிச்சம் துளசி மாடத்தையும் தாண்டித் தெரிந்தது. அப்பொழுதும் அவளது நிழல் தரையில் தெரியவில்லை. ஒருவேளை அது தன்னுடைய மனப்பிரமையாக இருக்குமோ என்றுகூட நினைத்தான்.

"நீ இங்கே வேலை செய்வதற்காகச் சாப்பாட்டையும் சம்பளத்தையும் யாரிடமிருந்து வாங்குகிறாய்?"

"அதெல்லாம் எப்படியாவது கிடைத்து விடும்."

"அப்படியானால் உன்னுடைய வருமானத்திற்கு வேறு ஏதாவது வழி உள்ளதா?"

"இருக்கிறது. எல்லாமே அரண்மனையைச் சேர்ந்தது தான். எனக்குத் தேவைப்பட்டதை நான் எடுத்துக் கொள்வேன்."

"நீ இந்த இடத்துத் தம்புராட்டியைப் (இளவரசியை) பார்த்திருக் கிறாயா?"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நான் அவரைப் பார்ப்பதா? அது எப்படி முடியும்?"

"நல்ல கேள்வி. நீ இந்த அரண்மனை வேலைக்காரி என்கிறாய். ஆனால் இளவரசியைப் பார்க்கவில்லை என்கிறாய். அப்படித்தானே?"

"இளவரசி இறந்து நானூறு வருடமாகி விட்டது. அவர் ஒரு மனிதப் பிறவியல்லவா? அவர் எப்படி மரணமடையாமல் இருக்க முடியும்?"

"என்ன, நீ இப்படிச் சொல்கிறாய்?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் சொன்னதுதான் உண்மை. இறந்து போனவர்களை எப்படி நாம் மறுபடி பார்க்க முடியும்? மரணமில்லாதவர்களைத்தான் நாம் பார்க்கலாம்."

"அப்படியானால் நான் நேற்று இளவரசியைப் பார்த்தேன்; பேசினேன்; இன்றும் பார்த்துப் பேசுவேன்."

"இன்று அமாவாசை அல்லவா, பார்க்கலாம். குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் பேய்கள் நடமாடும்."

"உண்மையாகவா? அது உனக்கு எப்படித் தெரியும்?"

"என்னை நன்றாகப் பாருங்கள். நான் யாரென்பது தெரியும்."

முற்றிலும் பைசாசிகமான ஒரு குரலைக் கேசவன் கேட்டான். அதே சமயம் நிலவிளக்கும் அணைந்தது.

https://telegram.me/tamilbooksworld

7

தன்னைத் தொல்லைப்படுத்துவதற்காக ஏதோ ஒரு பைசாசிகப் படைப்பு அங்கே வந்துள்ளது என்பதை உணர்ந்துகொண்ட கேசவன், இளவரசி கார்த்தியாயினி தந்திருந்த ஓலைகளில் படித்த ஒரு மந்திரத்தை உச்சரித்தான். சக்தி வாய்ந்த அந்தக் காளி மந்திரத்தைத் தியானித்த பிறகு தீக்குச்சி உரசி நிலவிளக்கைக் கொளுத்தினான். அப்பொழுது அவனுக்கு எதிரே தெரிந்த காட்சி பயப்படுத்தும்படியாக இருந்தது.

அரக்கத்தனமான உருவத்துடன் ஒரு பெண், எதிரில் நின்றிருந்தாள். கடைவாய் வழியே வளர்ந்து நீண்டிருக்கும் கோரைப் பற்கள். நெருப்புக் கோளங்கள் போன்ற விழிகள். கழுகின் அலகு போன்ற மூக்கு. மனித எலும்புகள் மாலையாக அவளது கழுத்தில் தொங்கின. அவளது கையில் ஒரு மனித எலும்பு இருந்தது.

"நீ யார்?" மிகுந்த தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேசவன் கேட்டான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் யாரென்று தெரியவில்லையா? நான்... நான்தான்!" உடைந்த கண்ணாடிச் சிதறல்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டாற்போல் பேசினாள்.

"உன்னை ஏவியது யார்?"

"திருவாளர் பிரம்மதத்தன் நம்பூதிரி."

"ஓஹோ, நீயும் அந்தத் துரோகியின் அடிமைதானா?"

"என் முன்னால் அவரை அப்படிக் குறிப்பிடுவதை நான் விரும்ப மாட்டேன்."

"உன்னைப் போல் அவனும் ஒரு பிசாசுதான். ஒருநாள் நான் அவனை இல்லாமலாக்கப் போகிறேன்."

"அதற்கு இப்பொழுது நீ உயிருடன் இருந்தால்தானே? இன்று நீதான் என்னுடைய உணவு."

"நான் இப்பொழுது உச்சரித்த மந்திரத்தின் சக்தி உனக்குத் தெரியாது. சாட்சாத் துர்கையின் பெயரை உச்சரித்தவுடன் நீ பின்வாங்கி விலகினாயே, ஏன்?"

"உண்மைதான். ஆனால் இன்று இரவு எப்பொழுதாவது நீங்கள் அந்த மந்திர வளையத்தை விட்டு நழுவி வராமல் இருக்க முடியாது" பல்லைக் கடித்தபடியே பேசினாள்.

"அந்த அளவுக்கு உன்னை விட்டுவைத்தால்தானே" கேசவன் ஆத்திரத்துடன் பதில் கூறினான்.

"பார்த்து விடலாம்."

கேசவன் நிலவிளக்கைக் கையில் எடுத்தான்.

"க்ரீம், க்ரீம், க்ரீம் ஹூம்... ஹூம் ஹ்ரீம் தக்ஷிண காளிகே க்ரீம் க்ரீம், ஹ்ரீம் ஹ்ரீம் வாஹ" என்று உச்சரித்தபடியே நிலவிளக்கி லிருந்த எண்ணெயில் தனது சுண்டு விரலைத் தொட்டு. அதைப் பெருவிரலுடன் இணைத்துப் பின்பு சுண்டினான். பலன். அவன் எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருந்தது. அவனது கை விரலிலிருந்து தெறித்து விழுந்த எண்ணெய்த் துளியின் அணுத்துகள்கள்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஒவ்வொன்றும் நெருப்பு அம்புகள் போல் அதன் உடலில் பாய்ந்தன. அடுத்த விநாடியே தீ ஜுவாலைகள் படர்ந்து கொழுந்து விட்டெரிந்தது. நின்ற இடத்தில் நின்றபடியே அசையக்கூட முடியாமல் அந்த உருவம் நெளிந்தது. ஒரு பெரிய அக்னி குண்டத்திலிருந்து நெருப்பு ஜுவாலைகள் எழும்புவது போல் எழும்பியதில், அந்த உருவம் முழுவதுமாக எரிந்தே போனது.

கேசவன் அங்கிருந்து எழுந்து அறைக்குள் போனான். உள்ளே மீண்டும் விளக்கைக் கொளுத்தி வைத்தபடி கிரந்தங்களைப் படிக்கத் தொடங்கினான். இந்த மந்திரங்களின் வல்லமை அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது. ஒவ்வொரு மந்திரத்தையும் படித்து மனப்பாடம் செய்ய முயன்றான்.

சாமக்கோழி கூவியபோது கிரந்தத்தை மூடி வைத்தான்.

"படிக்கும் வேலையெல்லாம் தீர்ந்து விட்டதா?" குரலைக் கேட்டு நிமிர்ந்தான். இளவரசி நின்று கொண்டிருந்தான்.

"ஒவ்வொன்றாகப் படித்துக் கொண்டிருக்கிறேன்."

"கொஞ்ச நேரத்திற்கு முன்னால் மந்திரம் பிரயோகித்ததைப் பார்த்தேனே."

"அந்தப் பிசாசிற்கு முன்னால் செய்ததைக் கூறுகிறீர்களா?"

"ஆமாம். அதைத்தான் சொல்கிறேன்."

"நீங்கள் எப்படிப் பார்த்தீர்கள்?"

"நான் இங்கேயேதான் இருக்கிறேன்."

"என்னைக் கொல்வதற்காக பிரம்மதத்தன் ஏவி விட்டிருந்தாராம்."

"அதுவும் எனக்குத் தெரியும்."

"நீங்களும் அவருக்குப் பயப்படுவதாகத் தெரிகிறது."

"அதற்குக் காரணம் இருக்கிறது. பெண்களைப் பார்த்து பிரம்மதத்தன் ஒருபோதும் பயப்பட மாட்டார். எவ்வளவுதான் திறமையாகப் பெண்கள் மந்திரத்தில் தேர்ந்து வந்தாலும், அவரிடம் தோற்று

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

விடுவார்கள். ஒரு ஆண் இதையெல்லாம் பயின்று விட்டு போவதுகூட அவ்வளவு சுலபமல்லை."

"தேவி, நீங்கள் எனக்குத் தந்த செப்புப் புத்தகத்தில் இன்னும் இரண்டு பக்கங்கள்தான் உள்ளன. அதுவும் முழுமையாக இல்லையே."

"உண்மைதான். அப்படித்தான் அது எனக்குக் கிடைத்தது. ஆனால், அதன் மீதிப்பகுதி இந்த அரண்மனைக்குள்ளே எங்காவது இருக்கும். ஒரு தங்கக் குடத்தில் தங்க நகைகளுடன், நாணயங்களும் இருக்கும். அத்துடன் பனையோலைச் சுவடி ஒன்றும் இருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். என்னுடைய அப்பாவும் மந்திரவாதியாகத் தான் இருந்தார். அவரது மாமனாரிடமிருந்து அந்த வித்தைகளை அவர் கற்றுக் கொண்டாராம். அவரும் அப்பாவுடன் இங்கேயே தங்கி யிருந்தாராம். அவர் சமாதியடைவதற்கு முன்னால் அதையெல்லாம் ஒரு தங்கக் குடத்திற்குள் போட்டு எங்கேயோ ஒளித்து வைத்து விட்டாராம். அதற்குள் பாண்டவ மலையில் துர்காதேவி கோயில் பற்றிய ரகசியமும் இருக்குமென்று நான் நினைக்கிறேன்."

"எனக்கு அது கிடைப்பதற்கு நீங்கள்தான் எப்படியும் உதவ வேண்டும்."

"நான் உதவுவதா? நல்ல வேடிக்கை!"

"ஏன், நீங்கள் உதவக்கூடாதா? உங்களது அரச குலத்தை அழித்த மேலக்காவு நம்பூதிரிகளுடன்தான் நானும் போராட்டம் நடத்துகிறேன். எதிராளியின் கடைசி வாரிசுடன் நான் போராடுகிறேன். அதற்கு நீங்களும் உதவ வேண்டாமா?"

"நான் உங்களுக்குத் துணையாக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் ஒரு நிபந்தனை."

"என்ன அது?"

"நூற்றாண்டுகளாக நான் அனுபவித்தறியாத ஒன்றுக்காக எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறேன்."

"எனக்குப் புரியவில்லை."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இளவரசி அறைக்குள் வந்தாள். அதன் பிறகு அவள் கையில் வைத்திருந்த திரித்த நூல் திரிகளை ஒவ்வொன்றாக எண்ணெயில் நனைத்து எடுத்துக் கொளுத்தினாள். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பகுதியில் குறிப்பிட்ட இடைவெளியில் வைத்தாள். அறையின் வெளிச்சம் மிகவும் அதிகமானது. இந்த வெளிச்ச உயர்வில், இளவரசி கார்த்தியாயினியின் அழகும் விநாடிக்கு விநாடி உயர்ந்து கொண்டிருந்தது. கந்தர்வப் பெண்கள்கூட இந்த அழகுக்கு முன்னால் ஒன்றுமில்லாமல் போவார்கள் என்று தோன்றியது.

நிலவை அரைத்தெடுத்துத் தேய்த்துக்கொண்டது போல், அவளது முகம் அழகால் மலர்ந்தது. இளவரசியின் மார்பகங்கள் விம்மிப் புடைத்தன. அவளது தொப்பூழ்க்கூட மிகத் தெளிவாகத் தெரிந்தது. எப்படிப்பட்டவரையும் கவரும் கந்தர்வப் பாடல்கள் உறங்கிக் கொண் டிருக்கும் கண்கள். காமன் கணையிலிருந்து விசையுடன் விடுபட்ட மலரம்பு போல் இளவரசி கேசவனுக்கு முன்னால் நின்றிருந்தாள்.

"நான் என்ன கேட்டேன் என்பது இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்குமென்று நினைக்கிறேன்."

அவளது பார்வை கேசவனின் இதயத்தைத் துளைத்துக் கொண்டு மறுபுறம் பாய்ந்தது. காம வேட்கை நிறைந்த கண்களுடன் இளவரசி கார்த்தியாயினி அவன் எதிரில் நின்றிருந்தாள்.

மனம் அலைபாயாமல் இருப்பதற்காக கேசவன் மனதிற்குள் துர்காதேவியைத் தியானித்துக் கொண்டான்.

"இன்று அமாவாசை நாள். எந்த உயிரினத்துக்கும் உட்துடிப்பு ஏற்படும் சமயம் இது. ஒரு பெண் தன்னை முழுமைப்படுத்துவதற்காக, திடகாத்திரமான ஒரு இளைஞனிடம் யாசிப்பது இது. மறுப்பது நல்லதல்ல" இளவரசி கூறினாள்:

கேவன் தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொண்டு ஒரு விநாடி யோசித்தான். இளவரசியின் வேண்டுகோளைத் தட்டிக் கழித்தால் தனது லட்சியங்களே தகர்ந்து விடும். அதுவுமில்லாமல் இளவரசியின் வேண்டுகோளைப் புறக்கணித்தால், அவள் என்ன எதிர் நடவடிக்கை எடுப்பாளோ தெரியாது. இப்பொழுதைய நிலையில் இளவரசியை எந்த மகாமுனிவன் பார்த்தாலும் கண்டிப்பாகக் கமண்டலத்தை ஒதுக்கி

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

விடுவான். அதில் சந்தேகமே இல்லை. அந்த அளவுக்கு இளவரசி கார்த்தியாயினி கவர்ச்சிகரமாக விளங்கினாள்.

"இந்த இரவை வீணாக்கக்கூடாது. நான் உங்களிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்..." அவளது குரல் மிகவும் நயத்துடன் கனிந்திருந்தது.

சட்டென்று தன்னுடைய லட்சியம் நிறைவேறுவதற்காகவே ஒரு தீர்மானத்திற்கு வந்தான் கேசவன்.

8

'தான் இந்த அரண்மனைக்கு வந்திருப்பதே பாண்டவ மலையின் ஏதோ ஒரு பகுதியில் மறைந்திருக்கிற துர்கா கோயிலைக் கண்டுபிடிப்பதற்காக. அங்கிருந்து கிடைக்கும் ஓலையின் உதவியால் விரைவில் மந்திரத்தைக் கற்க வேண்டும். மேலக்காவு மனை பிரம்மதத்தன் நம்பூதிரி நாற்பத்தொன்றாவதாக மற்றொரு கன்னிப் பெண்ணைப் பலியிடுவதற்கு முன்பாக அவருடன் மோதி அழிக்க வேண்டும்; பழிக்குப் பழி வாங்க வேண்டும்.'

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இளவரசி அப்படி ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறாள். ஒருவகையில் பார்த்தால் இளவரசியின் கோணத்தில் இது நியாயமானதாகக்கூட இருக்கலாம். ஒரே ஓர் இரவு மட்டும்தானே!

என்ன செய்வது? கேசவன் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டான்.

"இளவரசி, என்னை மன்னிக்க வேண்டும். துர்காதேவியின் கையிலுள்ள ஓலைச்சுவடி என் கையில் கிடைக்கும் வரை நீங்கள் என்னை இதற்காக வற்புறுத்தக் கூடாது."

"நல்லதுதான். மிகவும் நன்றாக இருக்கிறது உங்களது வாதம். உங்களைப் போன்ற ஒரு ஆண் மகன் இதுவரை பிறந்ததே இல்லை. இனிமேல் இந்த உலகத்தில் பிறக்கவும் போவதில்லை. கடவுளர்களும் மயங்கக்கூடிய என்னுடைய இந்த அழகைப் பார்த்தபிறகும் நீங்கள் ஒரு மரக்கட்டை மாதிரி இருக்கிறீர்களா? உண்மையில் இது வியப்பான காரியம்தான்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அப்படி இல்லை இளவரசி. உண்மையில் உங்களது அழகு என்னை வியப்படைய வைக்கிறது. அதை ஆராதனை செய்கிறேன். ஒரு பெண்ணை இத்தனை அழகுடன் நான் இதுவரை பார்த்ததே இல்லை."

"பிறகு ஏன் மறுக்கிறீர்கள்?"

"எனக்குச் சற்று கால இடைவெளி தேவைப்படுகிறது. என்னுடைய முறைப் பெண்ணையும் காவு கொடுத்த பிறகு, பலி வாங்கிய அந்தப் பிசாசைப் பழிவாங்குவதற்காக நான் புறப்பட்டு வந்திருக்கிறேன். என்னுடைய லட்சியத்தில் வெற்றி பெற முடியும் என்கிற நம்பிக்கை கொஞ்சம் கூட எனக்கு ஏற்படாத பட்சத்தில், நான் எந்தவிதமான இன்பகர நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறேன்."

"கேசவா, என்னை நன்றாகப் பார். என்னை முழுவதுமாக உனக்கு அர்ப்பணம் செய்துகொண்டு நான் உன் முன்பாக நின்று கொண்டிருக்கிறேன்."

இளவரசியின் கைகள் அவளது மார்பில் அணிந்திருந்த கச்சையின் முடிச்சை அவிழ்க்க முனைந்தபோது கேசவன் கண்களை மூடிக்கொண்டான். துணி கீழே விழுந்த சரசரப்பு காதில் கேட்டது. அவளது மிருதுவான கைகள் கேசவனை அணைப்பதற்காக நீண்டு வந்தன.

சட்டென்று கேசவன் மனதில் காளி மந்திரம் ஜபித்தபடி எரிந்து கொண்டிருந்த நிலவிளக்கைக் கையிலெடுத்து இளவரசியைத் தடுக்கும் நோக்கத்துடன் அதை இருவருக்கும் இடையில் பிடித்தான். அக்னி பகவானுக்குப் பயப்பட்டவள் மாதிரி இளவரசி சற்றுப் பின்வாங்கினாள்.

"கேசவா, என்னை உனக்குப் பிடிக்கவில்லையா?" இளவரசி கெஞ்சுவதுபோல் கேட்டாள்.

"ஒருபோதும் அப்படிச் சொல்லாதீர்கள் இளவரசி. உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நான் இங்கு வருவதற்கு முன்பே உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். இன்று முதல்

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஏழு நாட்கள் நான் துர்கா பூஜை செய்யப் போகிறேன். அதனால் நீங்கள் என்னைப் பொறுத்தருள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

''அப்படியானால் இன்றிலிருந்து எட்டாம் நாள் நான் உங்களை நெருங்குவேன். அப்பொழுது வார்த்தை மாறக்கூடாது.''

''சத்தியமாக மாறமாட்டேன்.''

இளவரசி திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

கார் மேகம் போல் பின்புறம் விரிந்து படர்ந்திருந்த இளவரசியின் அலை பாயும் கூந்தலைப் பார்த்தபடியே கேசவன் நின்றிருந்தான்.

ஆனால், அப்பொழுது இளவரசியின் முன்புறத் தோற்றத்தை கேசவன் மட்டுமல்ல; யார் பார்த்திருந்தாலும் பயந்து நடுங்கிப் போயிருப்பார்கள். அந்த அளவுக்கு அந்த உடலும், முகமும் வடிவம் மாறியிருந்தது.

மிக மிக வயதான ஒரு மூதாட்டியின் முகமாக அது மாறி யிருந்தது. மார்பகங்கள் தாழ்ந்து சுருங்கிப் போயிருந்தன. எலும்புக் கூட்டின் மீது தோல் போர்த்தியது போல் இருந்தது. கை, கால்களில் செதில்கள்போல் தோல் நிறம் மங்கி வெடிப்பு ஏற்பட்டிருந்தது. அந்த உருவம் மெல்ல நடந்து இருளில் மறைந்தது.

''நல்லவேளை, நீங்கள் அதிர்ஷ்டக்காரர்தான்! மிகவும் மென்மையான, ரகசியமான குரல் ஒன்று தடித்த சுவர் அருகிலிருந்து கேட்டது.

குரல் வந்த திசையை நோக்கிக் கேசவன் திரும்பினான். அப்பொழுதும் அவன் கையில் விளக்கு இருந்தது. அதை மேஜை மீது வைத்துவிட்டு மீண்டும் அந்த மரச்சுவரை நெருங்கினான்.

''என்னோடு பேசியது யார்?'' என்று கேட்டான்.

''நான் இதற்குள் இருக்கிறேன்'' சுவருக்குள்ளிருந்து அதே பெண் குரல் சொன்னது.

''என் கண்களுக்கு யாரும் தென்படவில்லையே!'' என்றான் கேசவன், மீண்டும் விளக்கைக் கையிலெடுத்துக் கொண்டு.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இந்தச் சுவரை நன்றாக உற்றுப் பாருங்கள். ஒரு சாவித் துவாரம் தெரியும். அதைத் திறத்தால் சுவருக்குள் ஒரு ரகசிய அறை தென்படும். அதற்குள் ஒரே மாதிரியான இரண்டு சங்குகள் தென்படும். ஒன்று வலம்புரிச்சங்கு; அதற்குள்தான் நான் இருக்கிறேன்."

கேசவன் சுவரை உற்றுப் பார்த்தான். ஒரு சாவித் துவாரம் தெரிந்தது. ஆனால், அதை எப்படித் திறப்பது? அது ரகசிய அறையாக இருந்தால் அதற்கான வேறு சாவி போட்டும் திறக்க முடியாது. உண்மையான அதன் சாவி கிடைக்க வேண்டும்.

"இதற்கான சாவி எங்கே இருக்கிறது? கிடைத்தால் திறக்கிறேன்."

"இந்த அறையின் தெற்குபுறச் சுவரில் ஒரு ஸ்ரீராம பட்டா பிஷேகப் படம் பித்தளைத் தகட்டில் செதுக்கப்பட்டுள்ளது. அந்தப் படத்தில் அனுமானின் கதாயுதமாகத் தோற்றமளிப்பதுதான் இந்த ரகசிய அறையின் சாவி."

கேசவன் விளக்குடன் படத்தை நெருங்கினான். மிகவும் நுட்பமாக யாராலும் கண்டுபிடிக்க முடியாதபடி அதில் சாவியைப் பொருத்தி யிருந்தனர். சாவியை வெளியில் எடுத்தான். ஆனால் அதற்குப் பிறகும் படத்தில் அனுமானின் கையில் கதாயுதம் தெரிந்தது.

சாவியைத் துவாரத்தில் நுழைத்துத் திருப்பினான். முதல் முறை திருகியபோது ஒரு மணியோசை கேட்டது. சாவி வெளிப்புறமாக நகர்ந்து வந்தது.

அதைத் திறப்பதிலும் ஏதோ மர்மம் இருக்க வேண்டுமென்று கேசவனுக்குத் தெரிந்தது. மறுமுறை கவனமாகச் சாவியைப் பொருத்தி இடதுபுறமாகத் திருப்பினான். மீண்டும் மணியோசை கேட்டது. சாவியை சற்று முன்புறமாகத் தள்ளி மீண்டும் வலதுபுறமாகத் திருப்பிய போது பூட்டு திறந்து கொண்டது. சுமார் ஒன்றரையடி நீளமும், ஓர் அடி அகலமும் கொண்ட பலகை ஒன்று வெளியே வந்தது. அதற்குள் இரண்டு சங்குகள் இருந்தன. நிலவிளக்கின் ஒளியில் வலம்புரிச் சங்கு எது என்று பார்த்தான். பிறகு கேட்டான். "இனி நான் என்ன செய்ய வேண்டும்?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"சங்கைக் கையிலெடுத்துப் பலம் கொண்ட மட்டும் வீசியெறி யுங்கள்!" என்றது பெண் குரல்.

கேசவன் அதேபோல் சங்கை முழு வேகத்துடன் வீசியெறிந்தான். தொடர்ந்து தோன்றிய காட்சி அவனை வியப்படைய வைத்தது. சங்கு விழுந்த இடத்தில் பேரழகுடன் ஒரு பெண் நின்றிருந்தாள். இந்தப் பேரழகி யாரென்று புரியாமல் கேசவன் மலைத்து நின்றான்.

"பயப்படாதீர்கள். நான் விமோசனத்துக்காகக் காலங்காலமாய் காத்திருந்தேன். என்றாவது ஒருநாள் உங்களைப் போன்ற ஒருவர் வந்து என்னைக் காப்பாற்றுவார் என்று எனக்குத் தெரியும்" அவள் கூறினாள்.

"நீங்கள் யாரென்று தெரியவில்லையே?" கேசவன் விளக்கை மேஜை மீது வைத்தபடி கட்டிலில் உட்கார்ந்தான்.

"என் பெயர் வசந்தசேனை. நான் ஒரு மோகினி. முந்நூறு வருடங்களுக்கு முன்பு, இப்பொழுது உங்களை வசீகரிக்க முயன்ற இளவரசி கார்த்தியாயினிதான் என்னை அவருடைய மந்திர சக்தியால், இந்தச் சங்கிற்குள் அடைத்து வைத்தாள்!"

"அப்படியென்றால் இதற்கு முன்பு இங்கு எத்தனையோ பேர் வசித்திருக்கிறார்களே, அவர்கள் ஏன் உங்களுக்கு விமோசனம் கொடுத்திருக்கக் கூடாது?"

"அதன் காரணம் உங்களுக்கு இப்பொழுது தெளிவாகியிருக்க வேண்டும்."

"நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை."

"எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறுகிறேன். இனி நான் சுதந்திரமானவள். என்னுடைய முழுச் சக்தியையும் உங்களுக்காகவே செலவழிக்கப் போகிறேன். உங்களுக்காக நான் எதுவும் செய்யத் தயாராக உள்ளேன். நானும், என்னுடைய அழகும் இனிமேல் உங்களுக்கே சொந்தம்" சொல்லியபடியே கேசவனின் கால்களைப் பற்றிக் கொண்டாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

மோகினிகளைப் பற்றியும் கந்தர்வர்களைப் பற்றியும் அவன் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால், இப்பொழுது நேரிலேயே அப்படிப்பட்ட ஒருத்தியைக் காண்கிறான்.

அழகை அதன் எல்லாவிதப் பொருளையும் விளக்குமாறு, ஏழு வண்ணங்களையும் குழைத்து வடிவமைத்த சிலைபோல் இருந்தாள் அவள். தாமரை இதழ் போன்ற நீண்ட கண்கள். அழகாக வளைந்த மூக்கு. கன்னித்தன்மை தவழும் தொப்பூழ். சுருக்கமாகக் கூறினால் ஒரு மதனோற்சவ விழா போல் விளங்கினாள்.

"இப்பொழுது சொல்லுங்கள். எனக்கு முன்பு இங்கு வந்தவர் களால், ஏன் உங்களைக் காப்பாற்ற முடியவில்லை?"

"நீங்கள் மட்டுமே அந்தப் பைசாசிக சக்தி வாய்ந்த இளவரசியிடம் மயங்கி வசப்படாமல் இருந்தீர்கள். இவருடன் தொடர்பு கொள்ளும் எந்த ஆணும் அன்று இரவே படுக்கையில் கொல்லப்படுவார். சாதாரண மனிதர்களால் அவரைத் திருப்திப்படுத்த முடியாது. அப்படி மரணமடைந்தவர்களை, இந்த வீட்டின் பின்புறமுள்ள குளத்திற்குள் எறிந்து விடுவது அவர் வழக்கம். அந்த இளவரசியின் மோக வலைக்குள் அகப்படாமல் தப்பித்த ஒருவர் நீங்கள் மட்டும்தான்."

வசந்தசேனையின் வார்த்தைகளைக் கேட்டபோது, கேசவனின் உடம்பு குப்பென்று வியர்த்தது. உடலின் ரோமக் கால்கள் குத்திட்டு நின்றன. ஒருவேளை தான் இளவரசியின் அழகில் மயங்கி, மோக வலையில் வீழ்ந்திருந்தால்...? ஒரு கணம் யோசித்தான்.

பிரம்மதத்தன் நம்பூதிரி தமது நாற்பத்தொன்றாம் பலியையும் முடித்திருப்பார்; வெற்றியும் பெற்றிருப்பார்.

"வசந்தசேனை, நீங்கள் இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டது எப்படி?" கேசவன் கேட்டான்.

"அது ஒரு கதை."

"நான் தெரிந்து கொள்ளலாம் என்றால் சொல்லுங்களேன்."

"சொல்கிறேன்" வசந்தசேனை தொடர்ந்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"முந்நூறு வருடங்களுக்கு முன்பு பாண்டவ மலையில் துர்கா தேவி கோயில் ஒன்று இருந்தது. அங்கு ஒரு பூசாரியும் இருந்தார். மிக அழகான பிராமணப் பூசாரி. விஷ்ணு பிறந்த நாளில் பிறந்த அவரது பெயர் விஷ்ணு நம்பூதிரி. ஒவ்வொரு இரவிலும் மூன்றாம் யாமத்தில் தேவி கோயிலை விட்டு வெளியேறும்போது, நானும் பாதுகாவலாகச் செல்வேன்."

"தேவிக்குப் பாதுகாவலாகவா?"

"ஆமாம், ஏனெனில் துர்காதேவி அழகான வடிவத்தில் வெளியேறுவார். அரண்மனைக்கு அடுத்துள்ள ஆற்றுப் பகுதியில் அவர் குளிப்பது வழக்கம். குளிக்கும்போது அவர் ஒரு சாதாரணப் பெண்ணாகத்தான் இருப்பார். நான் அதுபோன்ற சமயங்களில் அவருக்குக் காவலாக இருப்பேன். மந்திரம் கற்ற இளவரசி கார்த்தியாயினி இந்த ரகசியத்தைக் கண்டுபிடித்து விட்டார். என்னை மந்திர சக்தியால் வசீகரணம் செய்தார்."

"எதற்காக அவர் அப்படிச் செய்தார்?"

"துர்காதேவி கோயிலுக்குள் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு மந்திர ஏடு இருக்கிறது. அதை வைத்திருப்பவர்கள் என்ன நினைத்தாலும் அது நடக்கும். அப்படிப்பட்ட மந்திரங்கள்தான் அதில் இடம்பெற்றுள்ளன. நான் தேவிக்குப் பாதுகாப்பாக வரும்போது, என்னைப் பிடித்து அடைத்து வைத்துவிட்டு என்னுடைய உருவத்தில் தேவியுடன் சென்று இளவரசி அந்த மந்திர சுவடியை அபகரிக்க வேண்டுமென்பது அவரது திட்டம்."

"பிறகு என்ன நடந்தது?"

"என்னை இந்தச் சங்கிற்குள் அடைத்து வைத்தபிறகு என்னுடைய உருவத்தில் அவர் தேவியுடன் கோயிலுக்குப் போனார். கோயிலை நெருங்கியபோது தேவிக்கு விஷயம் விளங்கிவிட்டது. உடனே அவர் இளவரசியை வெளியிலேயே விட்டுவிட்டு கோயிலுக்குள் சென்றார். உடனே மலைப்பாறைகள் உருண்டு விழுந்து கோயில் வாசலை அடைத்துக் கொண்டன. அத்துடன் தன்னை ஏமாற்றியதற்காக நரை, திரை மூப்புடன் காலங்காலமாக வாழும்படி அவர் இளவரசியைச் சபித்தார்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அது போகட்டும். தேவி ஏன் உங்களைக் காப்பாற்றவில்லை?"

"தேவி ஒரு சாதாரண மானிடப் பெண்ணாக வடிவம் எடுத்திருந்த போதுதான் நான் சிறைப்பட்டேன். எனவே அந்தச் சமயம் என்ன நடந்தது என்பது தேவிக்குத் தெரியாது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எனது காவல் தேவிக்குத் தேவைப்படாமல் போயிருக்கலாம். என்னை அவர் மறந்தும் போயிருக்கலாம்."

"நீங்கள் இப்பொழுது குறிப்பிட்ட மந்திர ஓலையைப் பார்த்திருக்கிறீர்களா?"

"ஒரே ஒரு முறை பார்த்திருக்கிறேன்."

"அது இப்பொழுது எங்கிருக்கிறது?"

"கோயிலுக்குள்ளேயே எங்கோ ஓரிடத்தில், கொடிய விஷமுள்ள பாம்புகளுக்கு மத்தியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்."

"எதனால் அந்த மந்திரச் சுவடியை அவ்வளவு பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள்?"

"அதில் நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தும் மந்திரங்களும், கெட்ட காரியங்களுக்கான மந்திரங்களும் உண்டு. மிகவும் வலிமை வாய்ந்த மந்திரங்கள் அவை. இதிகாசம் மற்றும் புராணங்களில் யுத்த நேரங்களில் பயன்படுத்திய மகாமந்திரங்களும் கூட அதில் இடம்பெற்றுள்ளன. எத்தனையோ கல் தொலைவிலிருந்த படியே அந்த மந்திரங்களை உச்சரித்தாலும் எதிரி மனம் மாறி நாம் என்ன சொன்னாலும் செய்கின்ற நிலைக்கு வந்துவிடுவான். தான் விரும்புகின்ற எந்தப் பெண்ணையும் வசியப்படுத்தித் தன்னிடம் வரவழைக்கவும் அதை வைத்திருப்பவரால் முடியும்!"

"அந்தச் சுவடி சரியாக எந்த இடத்தில் இருக்கிறதென்று உங்களுக்குத் தெரியாதா?"

"அவ்வளவு தெளிவாகத் தெரியாது."

"அந்தக் கோயில் இப்பொழுது எங்கே இருக்கிறதென்றாவது தெரியுமா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அதையும் குறிப்பிடுவது கடினம்தான். நான்தான் ஏறத்தாழ 300 வருடங்களாக அஞ்ஞாத வாசம் அனுபவித்திருக்கிறேனே."

"அதை மறந்து விட்டேன். சரி. அந்தக் கோயிலைத் தேடிக் கண்டுபிடித்துவிட முடியுமென்று நினைக்கிறீர்களா?"

"முயன்று பார்க்கலாம்."

"சரி. இனிமேல் உங்களைப் பார்க்க வேண்டுமென்றால் அதற்கு என்ன வழி?"

"இந்த அரண்மனைக்கு இரண்டு கல் தொலைவில் ஒரு மோகினி கோயில் உள்ளது. இனிமேல் அங்குதான் இருப்பேன். நான் போய் வரட்டுமா?"

"இன்னும் ஒரு விஷயத்தைக் கேட்க மறந்து விட்டேன். அங்குள்ள மற்றொரு சங்கை என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லையே!"

"எனக்கும் அதைப்பற்றி அதிகமான விவரம் தெரியாது. எதற்கும் அது அங்கேயே இருக்கட்டும். அதிலும் ஏதாவது மர்மம் இருக்கலாம்" வசந்தசேனை விடைபெற்றுக் கொண்டாள்.

அவள் அந்த அறையிலிருந்து வெளியேறியவுடன் ஏதோ ஒன்று இறக்கையை விரித்துப் பறப்பதுபோல் கேசவனுக்குத் தோன்றியது. கேசவன் மறுபடியும் அந்தச் சுவரை முன்போலவே பூட்டி சாவியைப் பழைய இடத்திலேயே வைத்தான்.

இளவரசி கார்த்தியாயினியிடம் கூறியதுபோல் அன்றிலிருந்து துர்காதேவியைப் பூஜை செய்ய நினைத்தான். பகல் நேரத்தில் மாலதியின் வீட்டிற்குச் சென்று உணவருந்தினான். சொன்னபடியே எட்டாவது நாளன்று இளவரசி 'டாண்' என்று வந்து நிற்பார் என்பதில் கேசவனுக்குச் சந்தேகமே இல்லை.

அன்று நள்ளிரவில் 'சாமக்கோழி கூவுவதற்கு முன்பே விழித்தெழுந்த கேசவன்' அரண்மனையிலிருந்து வெளியேறி கிழக்குப் பக்கமாக நடந்தான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

வசந்தசேனை குறிப்பிட்ட மோகினி கோயில் எங்கே உள்ளது என்று கேசவனுக்குத் தெரியும். அந்த இடத்திற்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் நடந்தான். பாதை முடியும் இடத்தில் கோயில் இருந்தது.

"வந்து விட்டீர்களே!" வசந்த சேனையின் குரல் கேட்டது. "நீங்கள் என்னைத் தேடி வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்."

பாண்டவ மலையின் உச்சியில் சந்திரன் எழும்பியிருந்தான். அந்தப் பகுதி முழுவதும் நிலவொளி படர்ந்திருந்தது. பழங்காலத்தில் யாரோ ஒரு பாறையைக் குடைந்து வடித்த மோகினி கோயிலின் நிழலும் மேற்குப்புறமாக நீண்டிருந்தது.

பாலை மரம் பூக்களால் நிறைந்திருந்தது. அதன் பரிமளமான வாசனை அந்தப்பகுதி முழுவதும் பரவியிருந்தது.

"இன்று எட்டாம் நாள். இளவரசி என்னைத் தேடி வருவார் என்றுதான் இப்படிப் புறப்பட்டு வந்து விட்டேன்."

"நல்ல வேலை செய்தீர்கள். அவர் வந்தால் நிச்சயம் உங்களை விடமாட்டார்."

"நான் இங்கு வந்ததற்கு வேறொரு நோக்கமும் உண்டு."

"சொல்லுங்கள்."

"பாண்டவ மலையின் உட்புறத்தில் எங்கோ ஒளிந்துள்ள துர்காதேவி கோயிலின் இருப்பிடத்தையும் கண்டுபிடிக்க வேண்டும்."

"என்னால் முடிந்த அளவு உங்களுக்கு உதவத் தயாராக உள்ளேன்."

இந்தச் சமயத்தில் மோகினி கோயிலுக்குப் பின்புறத்தில் இருட்டு போன்ற கருமையான ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. அதை இருவரும் கவனிக்கவில்லை.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

9

கேசவன் குட்டியும் வசந்தசேனையும் பேசிக் கொண்டிருந்ததை எல்லாம் அந்த உருவம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. மூன்றாம் யாமம் முடியப்போகும் நேரத்தில், கேசவன் கிழக்குக் கோட்டைக்குத் திரும்பினான். அங்கிருந்து ஒரு வெளவாலின் வடிவத்தில் பறக்கத் தொடங்கிய அந்தக் கருமையான உருவம், நேராக மேலக்காவு மனைக்குள் புகுந்தது.

அங்கு தன்னுடைய பூஜை அறையில் பிரம்மதத்தன் உட்கார்ந்திருந்தார். உக்கிர மூர்த்தியான கண்டா கர்ணனின் முன்பாக எரிந்து கொண்டிருந்தது ஹோம குண்டம். அதில் ஒரு கரும்பூனையின் கழுத்தை அறுத்து அதன் ரத்தத்தைச் சொரிந்தார். அதிலிருந்து ரத்தம் சொட்டுவது நின்றவுடன் அந்தப் பூனையை அப்படியே குண்டத்தில் தூக்கி எறிந்தார். உடனே சதை எரியும் நாற்றம் காற்றில் கலந்து பரவியது. ஆனால், மாந்திரீகரான பிரம்மதத்தனுக்கு இதெல்லாம் ஒரு பொருட்டாகவே இருக்கவில்லை.

தனக்கு முன்பாகப் பறந்து வந்து விழுந்த வெளவால் ஒரு பைசாசிகமான பெண் வடிவம் எடுப்பதைப் பிரம்மதத்தன் பார்த்துக்கொண்டே இருந்தார். பிறகு கேட்டார் "சண்டாலிகையே என்ன விசேஷம்?"

"அங்கே மோகினி கோயிலுக்கு முன்பாக ஒரு மோகினியுடன் அந்த ஆள் பேசிக் கொண்டிருந்தான்."

"என்னது, மோகினியுடனா?" வியப்புடன் கேட்டார்.

"ஆமாம், அவள் பார்வைக்கு மிகவும் அழகாக இருந்தாள்."

"எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அந்தக் கோயில் சூன்யமாகத்தானே இருந்தது."

உடனே அந்தக் கறுப்பு உருவம் சொல்லியது: "உண்மையாக இருக்கலாம். ஆனால், நான் என் கண்களால் கண்டேன். அவள் ஒரு மோகினியேதான்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

சரி போகட்டும். அவர்கள் எதைப்பற்றிப் பேசிக் கொண்டார்கள்?"

"துர்காதேவி கோயிலைப் பற்றி."

"நன்றாக யோசித்துச் சொல். துர்கா கோயிலைப் பற்றியா? அப்படி ஒரு கோயிலைப் பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அது எங்கே உள்ளது?"

அந்த உருவம் பதில் பேசாமல் நின்றது.

"சரி, நீ போகலாம். உன்னிடம் ஒப்படைத்திருக்கிற வேலையைச் செய்."

அந்த உருவம் மீண்டும் வெள்வாலாக மாறியது. கேசவன் குட்டியின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகக் கிழக்குக் கோட்டைக் கோவிலகம் அரண்மனையை நோக்கி அது பறந்து சென்றது.

பிரம்மதத்தன் தன்னுடைய குடுமியிலிருந்து ஒரு முடியைப் பிடுங்கி எடுத்தார். அதை ஹோம குண்டத்தில் போட்டார். அத்துடன் பக்கத்திலிருந்த விக்கிரகத்தின் கையிலிருந்து வாளை எடுத்து அதன் கூரான முனையைத் தனது பெரு விரலில் வைத்து அழுத்தினார். ரத்தம் உருண்டு வந்தது. அதையும் அக்கினியில் சொட்டினார்.

கண்டா கர்ணனை அழைக்கும் மந்திரத்தை உருவிடத் தொடங்கினார். அந்தப் பைசாசிக உருவத்தைச் சுற்றிலும் ஒருவிதமான சிவப்பு நிறம் படர்ந்தது. அந்த விக்கிரகத்தின் பக்கவாட்டுப் பகுதிகள் நடுங்கத் தொடங்கின.

"உனக்கு என்ன வேண்டும்?" கண்டா கர்ணன் கேட்டார்.

பிரம்மதத்தன் தன்னுடைய உக்கிரமூர்த்தியை நேரிட்டுப் பார்த்தபடியே கூறினார்: "அடுத்ததாக நான் உங்களுக்குத் தரப்போவது நாற்பத்து ஒன்றாம் பலி. ஆனால் அப்பொழுது நீங்கள் எனக்குத் தரும் அருளுடன் அவை என்றைக்குமாக என்னிடமிருந்து அழிந்து போகாமலிருக்கவும் வழி சொல்லித்தர வேண்டும்."

"நீ எதை விரும்புகிறாய் என்பதைத் தெளிவாகக் கூறு."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"பாண்டவ மலையில் உதயவர்மன்கட்டிய கோயில் ஒன்று உள்ளது. சுயம்புவான ஒரு சிலை அதற்குள் உள்ளது என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். அதைக் கண்டுபிடித்து என்னை அழிப்பதற்கான முயற்சி நடைபெறுகிறது. ஒருவன் அதற்காகப் புறப்பட்டுச் சென்றுள்ளான். அந்தக் கோயிலுக்குள் ஏதாவது உள்ளதா?"

"கோயிலுக்குள் துர்கா தேவியின் கைவசம் பஞ்சலோகத்தால் உருவான கிரந்தம் ஒன்றில் மகத்தான மந்திரங்கள் பொறித்து வைக்கப்பட்டுள்ளன."

"அதன் உள்ளடக்கம் என்ன?"

"யாருக்குமே தெரியாது."

"உன்னால் ஊகிக்கக்கூட முடியாதா?"

"மடையா, என்ன கேள்வி கேட்கிறாய்? பிசாசு வர்க்கத்திலேயே மிகப் பெரியவனான நான், அதைப்பற்றியெல்லாம் யோசிக்க முடியுமா? என்னால் அந்தப் படியை மிதிக்க முடியுமா முட்டாளே, யோசித்துப் பார்!"

"அப்படியானால் நான் உன்னைப் பூஜை செய்வது வீணா? உனக்கு முன்பாக நீயாகவே மாறி, பெண்களின் கன்னித் தன்மையைக் கவர்ந்து பலி கொடுப்பதெல்லாம் வீணா?"

"நீ அப்படிச் செய்வதற்குத் தக்கபடிதான் நானும் அவ்வப்போது உனக்கு அருளிக் கொண்டிருக்கிறேனே."

"இருக்கலாம். ஆனால் துர்கா தேவியின் கிரந்தத்தைப் பெறுபவன்தானே மகாமாந்திரீகனாக விளங்க முடியும்?"

"உண்மைதான். அப்படி முயற்சிப்பவனை நீ தடுக்க வேண்டாமா?"

"சரி, அதற்காவது எனக்கு ஒரு வழி சொல்லித் தரக்கூடாதா?" பிரம்மதத்தன் நயந்து கேட்டார்.

"நாற்பத்தொன்றாவது பெண்ணைப் பலி கொடுத்த பிறகுதான் இனிமேல் இதைப்பற்றிய எந்தக் கேள்விக்கும் பதிலளிக்க முடியும்" என்று கண்டா கர்ணன் கூறியது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

கடந்த பதினைந்து வருடங்களாக மிகவும் கஷ்டப்பட்டே பலிக்குத் தேவைப்பட்ட பெண்களைத் தேடிப் பிடிக்க முடிந்தது. அதற்காக எவ்வளவோ பணம் இதுவரையில் செலவழித்தாகி விட்டது.

மேலக்காவு மனைக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலமும். தென்னந்தோப்புகளையும் கிடைத்த விலைக்கு விற்றுத்தான் இதெல்லாம் நடைபெற்றது. காரிய தனாக இருந்த ராவுண்ணி நாயர்தான் இதற்கான ஏற்பாட்டைச் செய்வது வழக்கம்.

இந்த மாதிரி விஷயங்களில் ராவுண்ணியார் மிகவும் கெட்டிக்காரர். அவர் மிகவும் ரகசியமாகவே இளம் பெண்களைக் கூட்டிக்கொண்டு வருவார். ஆனால் சமீப காலமாக அவருடன் பலருக்கும் மனக்கசப்பு தோன்றியுள்ளது. இந்த விஷயத்தில் ஊரிலுள்ள எல்லாருமே தன்னைச் சந்தேகிக்கிறார்கள் என்பதும் அவருக்கும் புரிந்து விட்டது.

"அப்படியானால் இதில் எந்தவித மாற்றமும் இல்லை அல்லவா?" நம்பூதிரி தன்னுடைய உக்கிரமூர்த்தியை நேராகப் பார்த்தபடி கேட்டார்.

"நிச்சயமாக இல்லை. அந்தப் பலியை முடித்த பிறகுதான் இனிமேல் எதுவுமே."

"அப்படியானால் ஒரு கேள்வி."

"சீக்கிரம் கேள்."

"உனக்கு பலி கொடுப்பதற்கான இளம் பெண் எங்கிருக்கிறாள் என்பதையாவது கூற முடியுமா?"

"கிழக்குக் கோட்டையின் தென்புறமாக ஒரு ஆறு ஓடுகிற தல்லவா? அதன் மறு கரையில் கோட்டைக்கு நேர் எதிர்ப்புறமாக ஒரு வீடு உள்ளது. அங்கு ஒரு அம்மாவும் மகளும் மட்டுமே உள்ளனர். அந்தப் பெண் எனது நாற்பத்தொன்றாவது இரையாகட்டும்."

பிரம்மதத்தன் யோசித்தார்.

அங்கு யார் வசிக்கிறார்கள்?

ஆமாம். இப்பொழுது நினைவுக்கு வந்துவிட்டது. அங்கு வெகு நாளைக்கு முன்பு ஒரு நாயர் குடும்பம் இருந்தது. அதில் மிச்சமான

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

வர்களாகத்தான் இருக்க வேண்டும் இப்பொழுது அங்கு வசிப்பவர்கள். ஆனால், ராவுண்ணி நாயர் அதைப்பற்றி இதுவரை ஒன்றுமே சொல்லவில்லையே. இன்று வந்தவுடன் அவரிடம் இதைப்பற்றிப் பேச வேண்டும்.

"தாமதமின்றி நான் என்னுடைய நாற்பத்து ஒன்றாவது பலியையும் நடத்தி விடுகிறேன்" நம்பூதிரி தமது மூர்த்தியைப் பார்த்துக் கூறினார்.

அத்துடன் கண்டார கர்ணனை சுற்றிலும் எழுந்த ஒளி மறைந்தது. மறுநாள் காலையில் நம்பூதிரி தமது காரிய தன் ராவுண்ணியாரை அழைத்தார்.

மெலிந்த உடலுடன் சற்று முன்புறமாக வளைந்த ராவுண்ணி நாயரைப் பார்த்தால் சட்டென்று கடினமான இதயம் படைத்தவர் என்பது தெரியும். இடுங்கிய நெற்றி. நடு நடுவே நரைத்த தாடி. மேற்புறம் கட்டிய குடுமி. முழங்காலுக்குச் சற்றுக் கீழாக நின்றிருக்கும் வேட்டி. மேல்புறம் துண்டு ஒன்று. இதுதான் ராவுண்ணியார்.

"நாயரே, ஏதாவது விசேஷம் உண்டா?"

"என்ன விசேஷம் இருக்கிறது. ஒருவிதமாக நாட்கள் நகர்ந்து போகிறது எஜமானே."

"நீங்கள் ஒரு பெரிய வீடு கட்டிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேனே!" திருமேனி கேட்டார்.

இந்த மனை வகைச் சொத்துகளை நம்பூதிரியின் கொடும் பாதகச் செயல்களுக்காக விற்ற வகையில் ஒரு நல்ல பங்கு அவருக்கு இதுவரை கிடைத்துள்ளது. அதை வைத்துக்கொண்டு ஒரு சிறிய தென்னந்தோப்பையும் கொஞ்சம் நிலத்தையும் வாங்கினார். சமீப காலத்தில் மனைவியின் நச்சரிப்பு தாங்காமல் வீடு ஒன்றையும் கட்டும் வேலை துவக்கினார். பெரிய விடுதான் அது.

"அது ஒரு சின்னக் குடிசை எஜமான். கிட்டத்தட்ட ஐந்து அல்லது ஆறு அறைகள் இருக்கும். வெகுநாள் ஆசை."

"இதற்கெல்லாம் உங்களுக்கு ஏது பணம்?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"பட்டணத்திலிருந்து பையன் பணம் அனுப்பித் தருகிறான்."

மோசமான நம்பூதிரியின் வேலைகளுக்கு உடந்தையாக அப்பாவும் செயல்படுகிறார் என்பதைப் புரிந்துகொண்ட அவரது ஒரே ஒரு பையன், மனம் வெறுத்து ஊரை விட்டு ஓடிப்போயிருந்தான். அவனுக்குக் கீழே அவருக்கு நான்கு பெண் குழந்தைகள் இருந்தனர்.

"ஒரு முக்கியமான விஷயத்திற்காகத்தான் கூப்பிட்டு அனுப்பினேன்."

"சொல்லுங்கள் எஜமான், காத்திருக்கிறேன்."

"என்னுடைய லட்சியம் நிறைவேற வேண்டுமானால் இன்னும் ஒரு நரபலி தேவைப்படுகிறது. ஒன்றே ஒன்றுதான். அதுவும் பூர்த்தியடைந்தால், உங்களது வேலை தீர்ந்து விடும்."

"எஜமான் என்னை மன்னிக்க வேண்டும். சமீப காலமாக ஊரிலுள்ள இளைஞர்கள் என்னைக் கண்காணிக்கிறார்கள். குறிப்பாகச் சொல்வதானால் அந்தக் குறூப்பின் மருமகன் கேசவன் என்னை கவனமாகக் கண்காணிக்கிறான்" ராவுண்ணி யார் கூறினார்.

"இப்போது அந்தப் பையன் ஊருக்குள் இல்லையே."

"இல்லைதான். ஆனால், நான் என்ன செய்கிறேன் என்பதைக் கண்காணிக்க என்னைச் சுற்றியும் ஆட்களைத் தயார் செய்து வைத்திருக்கிறான்."

"அப்படியானால் நான் ஒரு வழி சொல்லித் தருகிறேன். நீங்கள் அதிகமாகக் கஷ்டப்பட வேண்டியதில்லை. கிழக்குக் கோட்டையின் தென்புறத்தில் ஆற்றங்கரை ஓரமாக ஒரு பெண் குழந்தை இருப்பதாகத் தெரிகிறது. நமது வீட்டிற்கு ஒரு வேலைக்காரப் பெண் தேவையென்று கூறி அவளை அழைத்துக்கொண்டு வாருங்களேன்."

"அப்படிச் சொன்னால் சரிப்படுமா? படித்த பெண்ணாக இருந்தால் வராதே?" ராவுண்ணியார் சந்தேகம் தெரிவித்தார்.

"அப்படியானால் உங்கள் விருப்பம் போலச் செய்து கொள்ளுங்கள். எப்படியாவது விஷயம் நடந்தால் சரி."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் முயற்சி செய்கிறேன்" ராவுண்ணியார் விழுந்து வணங்கிக் கொண்டு வெளியேறினார். படி தாண்டிச் சற்று தூரம் நடப்பதற்குள் எதிரே கிட்டு ஆசான் நின்றிருந்தார்.

"எங்கோ அவசரமாகப் போவதுபோல் தெரிகிறது" கிட்டு ஆசான் கேட்டார்.

"தம்புரான் வீடு வரை சென்று வருகிறேன். கூப்பிட்டு அனுப்பியிருந்தார்."

"நம்பூதிரி எப்படி இருக்கிறார்? நாங்கள் எல்லாம் அவரைப் பார்த்து வெகு நாட்களாகிறதே."

"அவர் இப்பொழுதும் பழைய ஆசாரப்படியேதான் இருந்து வருகிறார். உங்களை இப்பொழுது பார்த்ததும் நல்லதற்குத்தான். வாருங்கள், டீ சாப்பிடலாம்" பக்கத்திலிருந்த டீக்கடையை நோக்கி நடந்தனர்.

டீ சாப்பிடும்போது ராவுண்ணியார் கேட்டார். "கிட்டு ஆசானே, கிழக்குக் கோட்டை அரண்மனைக்கு எதிர்ப்புறத்தில் ஆற்றின் மறு கரையில் ஒரு வீடு இருக்கிறதே. உங்களுக்கு அவர்களைப் பற்றி ஏதாவது தெரியுமா?"

"என்ன திடீரென்று அந்த வீட்டைப் பற்றிக் கேட்கிறீர்கள்?"

"அங்கு யாரெல்லாம் இருக்கிறார்கள்?"

"ஒரு அம்மாவும் பெண்ணும்தான். அந்த வீட்டுக்காரர் பட்டாளத்திற்குப் போய் யுத்தத்தில் இறந்து போய்விட்டார்."

"பார்வைக்கு அந்தப் பெண் எப்படி? அவளை என் பையனுக்குக் கட்டி வைக்கலாமா என்று பார்க்கிறேன்."

"நல்ல பெண். அழகானவளும்கூட. வேண்டுமானால் நாம் அங்கேயே ஒரு தடவை போய்விட்டு வரலாமே."

"டீ சாப்பிடுங்கள். வேறு ஏதாவது சாப்பிடுவதானாலும் சாப்பிடுங்கள். கொஞ்சம் தூரம் நடக்க வேண்டுமே!"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இருவரும் கிழக்குக் கோட்டைப் பக்கமாக நடந்தனர். ஒற்றையடிப் பாதையைக் கடந்து கிழக்குக் கோட்டையின் வாசலைக் கடந்து தெற்குப் புறமாகத் திரும்பினர்.

"இந்த ஆற்றைத் தாண்டினால் நீங்கள் குறிப்பிட்ட வீடுதான், பாவம் ஏழைகள். உங்களது பையன் அவர்கள் பெண்ணைக் கல்யாணம் செய்வதானால் அது அவர்களுக்கும் ஒரு விடிவு காலமாக இருக்கும்" ஆற்றை நீந்திக் கடந்தபோது கிட்டு ஆசான் கூறினார்.

முன்பின் தெரியாத இரண்டு பேர் நடந்து வருவதைப் பார்த்தவுடன் மாலதி உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தாள்.

ராவுண்ணியார் மாலதியை உற்றுக் கவனித்தார்.

"அம்மா வீட்டில் இருக்கிறார்களா குழந்தை?"

"இருக்கிறார்கள், உட்காருங்கள். கூப்பிடுகிறேன்" என்றபடி வீட்டுக்குள் போனாள் மாலதி.

சற்றுப் பொறுத்து பவானியம்மா வெளியே வந்தாள்.

"நீங்கள் யாரென்று தெரியவில்லையே?" புன்னகைத்தபடியே அவர்களிடம் கேட்டாள்.

"எல்லாவற்றையும் சொல்கிறோம். முதலில் எங்களுக்குக் குடிப்பதற்கு ஏதாவது தாருங்கள். மோர் இருந்தால் நல்லது. இப்பொழுது உள்ளே போனது உங்கள் பெண்தானே?"

"ஆமாம், மாலதி. என்னுடைய ஒரே பெண்" சொல்லியபடியே உட்புறம் நோக்கி தடுக்குப் பாயை எடுத்து வரும்படி கூறினாள். மாலதி தடுக்கைக் கொண்டு வந்தாள். இருவரும் உட்கார்ந்தார்கள். பிறகு பவானியம்மா தந்த மோரைக் குடித்தனர்.

"இவர் பெயர் கிட்டு ஆசான். ஜோசியர். என் பெயர் ராவுண்ணியார். நாங்கள் ஒரு நல்ல விஷயத்திற்காக வந்திருக்கிறோம். உங்கள் மகளின் கல்யாண விஷயம் என்றே நினைத்துக் கொள்ளுங்கள்" ராவுண்ணியார் நமுட்டுச் சிரிப்புடன் பேசினார்.

பவானியம்மாவின் முகத்தில் ஒருவித இருள் படர்ந்தது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

10

ராவுண்ணி நாயரின் பேச்சு மாலதிக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்பது புரிந்தது. சட்டென்று வீட்டிற்குள் போனாள்.

கொஞ்ச நாட்களே பழகியிருந்தாலும் கேசவனது உருவம் அவள் மனதில் அழியாத விதமாகப் பதிந்துவிட்டது. பழகுவதற்கு இனிமையானவனாகத் தெரிந்த கேசவன், அவளது வாழ்க்கையில் குறுக்கிட்ட முதல் இளைஞனாக இருந்தான். அதனால் வேறு ஒருவனைத் தன்னுடைய வாழ்க்கையில் இணைத்துப் பார்க்கவே அவளால் முடியவில்லை.

"விஷயங்களைத் தெளிவாகச் சொல்லி விடுங்கள் கிட்டு ஆசானே" என்றபடி ராவுண்ணி அவரைப் பார்த்தார்.

"எதற்குச் சுற்றி வளைத்துப் பேசுவது? நேரடியாகவே விஷயத்தைச் சொல்லி விடுகிறோம். இவருடைய மகனுக்கு உங்கள் பெண்ணைத் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார். அவ்வளவு தான். உங்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் நான் இவரிடம் கூறியிருக்கிறேன். அதாவது நீங்கள் இவருக்கு உங்களது பெண்ணை மட்டும் கொடுத்தால் போதும்" கிட்டு ஆசான் கூறினார்.

"நான் இதைப்பற்றி யோசிக்க வேண்டும். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்களேன்" பவானியம்மாள் உட்புறமாகப் பார்த்தபடியே பேசினாள்.

"அதுவும் எங்களுக்குப் புரிகிறது. பையனைப் பார்க்க விரும்புகிறீர்கள், அப்படித்தானே?" கிட்டு ஆசான் கேட்டார்.

"அதுதானே முறையும்கூட" என்று பவானியம்மாள் பேசிக் கொண்டிருக்கும்போது மாலதி அவரை உள்ளே அழைத்தாள்.

பவானியம்மாள் உள்ளே சென்றவுடன் மாலதி கூறினாள். "முன்பின் தெரியாதவர்களிடம் நீங்கள் இப்படி வாக்கு கொடுக்கலாமா? அவர்கள் யார் என்ன என்பது உங்களுக்கே தெரியவில்லை. பிறகு எதற்கம்மா அவசரப்படுகிறீர்கள்?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இல்லை மாலதி. நம்முடைய இன்றைய நிலையை மனதில் வைத்துதான் அப்படிப் பேசினேன்.

"நான் உங்களுக்குப் பாரமாக இருக்கிறேனா அம்மா?"

"என்றைக்கு இருந்தாலும் நீ கல்யாணமாகிப் போக வேண்டியவள்தானே!"

"அவர்கள் வந்தார்கள், பேசினார்கள். நீங்களும் ஒப்புக்கொண்டு விட்டீர்கள். கல்யாணம் செய்துகொள்ளப் போவது நானல்லவா? இது என்ன கால்நடை வியாபாரமா?"

"அப்படியென்றால் பையனைப் பார்த்த பிறகு அதைப்பற்றிப் பேசலாம் என்று சொல்லி வைக்கிறேனே!"

"அப்படியே சொல்லுங்கள்."

'சரி' என்று தலையாட்டியபடி அவர் வெளியே போனார்.

"மாப்பிள்ளையை அவள் ஒரு தடவை நேரில் பார்க்க வேண்டும் என்கிறாள். ஒரு வகையில் அவள் சொல்வதும் நியாயம்தானே!"

"அதற்கென்ன? அப்படியே செய்து விட்டால் போகிறது நாளைக்கோ, நாளை மறுநாளோ நான் அவனை அழைத்துக்கொண்டு வருகிறேன்" ராவுண்ணியார் உறுதியளித்தார். பின்பு இருவரும் விடை பெற்றார்கள்.

எப்படியாவது அந்தப் பெண்ணை பிரம்மதத்தன் நம்பூதிரியிடம் ஒப்படைக்க வேண்டுமே என்கிற எண்ணத்தில் ராவுண்ணியாரின் மனம் அதைப்பற்றி யோசிக்கத் தொடங்கியது. தன் மகன் கோபாலனிடம் கூறினால் ஒருவேளை சம்மதித்தாலும் சம்மதிப்பான். அதிலும் பணம் கிடைக்கிறது என்றால் கண்டிப்பாகச் செய்வான். திருமணம் என்கிற ஒரு சடங்கைப் பெயரளவிற்கு நடத்திய பிறகு அவன் பாட்டுக்குப் போய்விடலாம். இதற்காக அவனுக்கு நம்பூதிரியிடமிருந்து ஆயிரமோ, இரண்டாயிரமோ வாங்கிக் கொடுத்து விடலாம். இப்படியெல்லாம் ராவுண்ணியாரின் மனம் கணக்கிட்டது.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"பெண் அம்சமும், அழகும் நிறைந்தவள். இந்தப் பகுதியில் எங்கும் இவளைப் போல் ஒருத்தி கிடையாது" கிட்டு ஆசான் அவளைப் புகழ்ந்தார்.

வீட்டை அடைந்த ராவுண்ணி எப்படியும் பட்டணத்திலிருக்கிற தன் மகனைக் கண்டுபிடித்து விஷயத்தை விளக்க வேண்டுமென்று நினைத்தார். ஒருவகையில் அது கஷ்டமான வேலை. நகரத்தில் எங்கேயென்று அவனைத் தேடுவது? அதுமட்டுமா, அவன் சொன்னபடி கேட்பவனும் இல்லை. ஒருவேளை கல்யாணம் வரை நடந்தாலும், கல்யாணத்திற்குப் பிறகு இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்றால் என்ன செய்வது? இப்படியெல்லாம் அவர் மனம் பலவாறு யோசித்தது. சரி, இதற்கு வேறு என்னதான் வழி? ராவுண்ணி யோசித்தார்.

பின்பு வீட்டிலிருந்து வெளியே வந்தார். பக்கத்திலேயே சாராயம் விற்கும் குஞ்சு உண்ணியின் வீடு இருந்தது. ஒரு கிளாஸை உள்ளே அனுப்பிய பிறகு யோசிக்கலாமே என்று அதற்குள் நுழைந்தார். உள்ளே ராகவன் உட்கார்ந்திருந்தான்.

சதா சீட்டு விளையாடுவதும், சின்னச் சின்னதாகத் திருடுவதும் அவனது தொழில். நன்றாக இருந்து நொடித்துப் போன ஒரு குடும்பத்துப் பிள்ளை. பார்வைக்குக் கெட்டிக்காரனாக இருந்தான்.

"என்ன ராகவன், சௌகரியம்தானே?" ராவுண்ணி கேட்டார்.

"என்ன சௌக்கியம்? எல்லாமே தொலைந்துபோய் உட்கார்ந் திருக்கிறேன் மாமா" ஒரு துண்டு பீடியைப் பற்றவைத்தபடி பேசினான்.

ராவுண்ணி இரண்டு பேருக்குமாக இரண்டு கிளா சாராயம் வாங்கினார். அவனிடம் ஒரு கிளாஸைக் கொடுத்தபடி கேட்டார். "ராகவா, உனக்கு நாடகத்தில் நடித்துப் பழக்கமிருக்கிறதா?"

"அங்கேயும் தான் கொஞ்ச நாள் சுற்றியலைந்தேனே. ஏன் உங்கள் பங்குக்கு நான் ஏதாவது நடிக்க வேண்டுமா?"

"உண்மைதான். என் மகனாக நீ வேடம் போட வேண்டும்."

"கொஞ்சம் புரியும்படியாகச் சொல்லுங்கள் மாமா."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"சரி வெளியே வா. நாம் விவரமாகப் பேசலாம்."

இரையொன்று அகப்பட்ட மகிழ்ச்சியில் ராகவன் அவரைப் பின்தொடர்ந்தான்.

"நீ செய்ய வேண்டிய விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். என் பையனாக நடித்து ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். இந்தக் கல்யாணத்தின் போது நாங்கள் நாலு அல்லது ஐந்து பேர் உன்னுடன் இருப்போம். எல்லாமே வெகு ரகசியமாக நடக்கும். வேலை முடிந்தவுடன் உன் கையில் ஆயிரம் ரூபாய் தருவேன். சம்மதமா?"

"அப்படியானால் நாளைக்கே பெண் பார்க்கப் போகலாமே."

அவர்கள் இருவரும் மறுபடியும் சாராயக் கடைக்குள் புகுந்து ஆளுக்கு ஒரு கிளா வீதம் போட்டுப் பிரிந்தனர்.

பவானியம்மாவின் வீட்டிற்குக் கேசவன் போனபோது கல்யாண விஷயத்தைப் பற்றிக் கூறினார்.

"எனக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமே இல்லை பெண் பார்க்க வந்தவர்களையே நான் இப்பொழுதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறேன்" மாலதி கூறினாள்.

"உங்களுக்கு அவர்களைத் தெரியுமா?" கேசவன் கேட்டான்.

"அவருடன் வந்திருந்தவர் கிட்டு ஆசான் என்கிற ஜோசியர். அவரை எனக்குப் பழக்கம் உண்டு" பவானியம்மாள் கூறினாள்.

"மாலதியைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவது யார்?" கேசவன் கேட்டான்.

"கிட்டு ஆசானுடன் வந்திருந்தவர் ராவுண்ணியார் என்கிற பெரியவர். அவருடைய பையனுக்காம். நாளைக்கே பையனை அழைத்துக்கொண்டு வருவதாகச் சொல்லிப் போயிருக்கிறார்கள்."

"சரி. அவர்கள் வந்தபிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அன்று இரவு வழக்கம்போல் கேசவன் அங்கிருந்து உணவை முடித்துக்கொண்டு கிளம்பினான்.

இளவரசி கார்த்தியாயினியிடம் சொல்லியிருந்த கெடு முடிந்து மூன்று நாட்களாகி விட்டது. ஏனோ மூன்று நாட்களாக அவள் வரவே யில்லை. அன்று நான்காம் நாள். மாலை நேரத்திலேயே மேகங்கள் கருமையாக திரளத் தொடங்கி இருந்தன. இருட்டு பயங்கரமாக இருந்தது. கேசவன் மாலதியின் வீட்டில் இருந்தான்.

"இன்று மழை பெய்யும் போலிருக்கிறது" பவானியம்மாள் கூறினாள்.

"ஆமாம், நல்ல மழை பெய்யும் போல்தான் இருக்கிறது."

'பெண் பார்க்க வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனவர் களை இதுவரையில் காணோமே' பவானி கவலைப்பட்டாள்.

"சொல்லிவிட்டுப் போய் மூன்று நாட்களாகிவிட்டன. ஒருவேளை நாளையோ மறுநாளோ வரலாம். கிட்டு ஆசானை அதன்பிறகு என்னால் சந்திக்க முடியவில்லை. சந்தித்திருந்தால் விஷயம் என்னவென்று தெரிந்திருக்கும்."

"அவர்கள் வரும்போது நீயும் இங்கிருந்தால் நல்லது என்று நினைக்கிறேன்" பவானியம்மாள் கேசவனிடம் கூறினாள்.

"அதற்காகத்தான் நான் பகலில் அதிக நேரம் இங்கு தங்கி யிருக்கிறேன்."

மழை மெதுவாகப் பெய்யத் தொடங்கியது. மின்னலும் இடியும் பலமாக இருந்தன.

"இந்த மழையில் எப்படி அரண்மனைக்குப் போக முடியும்?" மாலதி கேட்டாள்.

"எப்படி இருந்தாலும் நான் போய்த்தான் ஆக வேண்டும்."

"இந்த ராத்திரியிலா போகப் போகிறீர்கள்? கிழக்குப் பக்கம் மழை பெய்தால் ஆற்றில் வெள்ளம் உயர்ந்துவிடும். அக்கரைக்குச் செல்வது சுலபமாக இருக்காது."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"பரவாயில்லை. நான் போய்த்தான் ஆகவேண்டும்."

மழை வலுத்துக் கொண்டிருந்தது.

"இன்று மட்டும் இங்கேயே தங்கி விடுங்களேன்."

"இன்று அமாவாசை. அதனால் நான் கண்டிப்பாக அரண் மனையில் இருந்தே ஆகவேண்டும்."

"ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் தங்கியிருக்கிற அரண்மனையில் ஏராளமான பூத பிசாசுகளும், ஆவிகளும் உலவுகின்றன."

"நான் வந்திருப்பதே அவற்றைச் சந்திக்கத்தான்."

கேசவன் சொன்ன பதில் அவர்களுக்கு விளங்கவில்லை. கேசவன் துண்டை எடுத்து தலையில் கட்டிக்கொண்டு விரைவாக நடக்கத் தொடங்கினான்.

ஆற்றில் நீர் மட்டம் உயர்ந்திருந்தது. வெள்ளம் பெருத்த ஓசையுடன் பாய்ந்து கொண்டிருந்தது. கரையில் நின்றபடியே என்ன செய்வது என்று யோசித்தான். திரும்ப மாலதியின் வீட்டிற்கே போய்விடலாமா? இல்லை, ஆற்றைக் கடந்து விடலாமா?

"நீங்கள் மறுகரை செல்ல வேண்டுமென்பது அவசியமென்றால் நான் உங்களுக்கு உதவுகிறேன்."

கேசவன் திரும்பினான். வசந்தசேனை ஆற்றின் மையத்தில் நின்றிருந்தாள். மோகினி கோயிலில் அன்றொரு நாள் பார்த்தபிறகு இன்றுதான் மீண்டும் அவளைப் பார்க்கிறான். இரைச்சலுடன் பாய்ந்து வந்த ஆற்று வெள்ளம் அவள் காலைத் தொடாமல், காலின் கீழ்ப்புறமாய் பாய்ந்தோடியது. அவள் அசையாமல் நின்று கொண்டிருந்தாள்.

சட்டென்று ஆகாயத்தில் வேர்கள் மாதிரி மின்னல்கள் பரவிப் படர்ந்தன. அதன் வெளிச்சத்தில் வசந்தசேனையை கேசவன் தெளிவாகப் பார்த்தான்.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள். பயப்படாதீர்கள். என்னைக் காப்பாற்றிய உங்களுக்கு நான் ஒருபோதும் துரோகம் செய்ய மாட்டேன்."

கேசவன் அவளது கையைப் பிடித்தான். அவள் கை மிகவும் மென்மையாக இருந்தது. கேசவன் காலை ஊன்றியபோது மறுகரையை அடைந்திருந்தான்.

"இந்த இரவில் எங்கே போகிறீர்கள்?" அவள் கேட்டாள்.

"வேறு எங்கே? அரண்மனைக்குத்தான்."

"எல்லா வகையான பிசாசுகளும் வெளியே வருகிற இந்த நேரத்திலா அங்கு போகிறீர்கள்?"

"அதுதானே என்னுடைய லட்சியம்."

"அப்படியானால் ஒரு விஷயம். இளவரசி கார்த்தியாயினியிடமிருந்து உங்களைக் காப்பாற்றுவது என்பது என்னால் முடியாத விஷயம். காரணம் அவருடைய மந்திர சக்தியில் மோகினி, பிசாசு போன்றவை அடிபணிந்து விடும்."

"ஆனால் அவரைப் பிடித்து வைக்க வேறு ஏதாவது சக்தி இல்லாமல் இருக்குமா, என்ன?"

"நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். பிறகு உங்கள் விருப்பம்."

கோயிலை நெருங்கியபோது மோகினி அவனிடமிருந்து பிரிந்தாள். கேசவன் அரண்மனையை நோக்கி நடந்தான். அறை வாசலில் நிலவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. எந்த நேரமும் இளவரசி வரலாம் என்று கேசவனுக்கும் தோன்றியது. இன்றைக்கு இளவரசியிடம் என்ன காரணம் சொல்வது என்று யோசித்தான். பின்பு ஒரு மாந்திரீகச் சுவடியை எடுத்து வைத்துக்கொண்டு படிக்கத் தொடங்கினான்.

மழை பெய்து கொண்டிருந்தது. நடுவே மின்னல் ஒன்று வெட்டியபோது வெள்ளி நூல்கள் போன்ற மழை கீழ்நோக்கிப் பாய்வது தெரிந்தது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

எங்கோ தூரத்தில் சாமக்கோழி கூவியது. நடுநடுவே மழையின் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. இந்த நேரத்தில் அந்த அரண்மனைக்குள் என்ன நடந்தாலும் யாருக்குமே தெரியாது என்று கேசவன்குட்டி நினைத்தான்.

அதே நேரம். இளவரசி கேசவனுக்கு முன்பாக வந்து நின்றாள். அவளிடமிருந்து மல்லிகைப்பூவின் வாசனை வீசியது. காமம் கொப்பளிக்கும் அவளது விழிகள் கேசவனையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தன.

11

இளவரசி கார்த்தியாயினியின் மதோன்மத்தம் நிறைந்த விழிகள் கேசவனின் இளமையான உடலைப் பார்வையாலேயே வருடின. கேசவனோ மனதிற்குள் துர்காதேவியை நினைத்தபடி காளி மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்தான்.

"நான் வந்திருப்பது தெரியவில்லையா?" இளவரசி கேட்டாள்.

கேசவன் அப்பொழுதும் தியானத்தில் இருப்பது போலவே அசையாமல் இருந்தான்.

இளவரசி முன்புறமாக நகர்ந்து கையை நீட்டிக் கேசவனைப் பிடிக்க முயன்றாள். அடுத்த விநாடி நிலவிளக்கில் எரிந்து கொண்டிருந்த ஜ்வாலை அவளைத் தடுப்பது போல் கொழுந்து விட்டு எரிந்து உயர்ந்தது. இளவரசி திடுக்கிட்டுப் பின்னுக்கு நகர்ந்தாள்.

'என்னுடைய விளக்கே என்னை நெருங்க விடாமல் தடுப்பதா?' யோசித்தபடியே இளவரசி விளக்கை எடுக்க நெருங்கினாள். உடனே விளக்கின் ஜ்வாலை வளைந்து அவளது கைக்கு நேராக வந்தது. எதனால் இப்படி என்று இளவரசிக்குப் புரியவில்லை. பின்வாங்கி நின்றபடி சற்று நேரம் எதையோ யோசித்துவிட்டு இருளில் மறைந்தாள்.

கேசவன் கண் திறந்து பார்த்தபோது அங்கு இளவரசி இல்லை.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"என்ன, பயந்து விட்டீர்களா?" வசந்தசேனை பின்னாலிருந்து கேட்டாள்.

"நீ எப்படி இதற்குள் வந்தாய்?"

"நான் எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும். ஆனால், இளவரசி கார்த்தியாயினியை எதிர்க்க முடியாது என்பது மட்டும்தான் எனக்குள்ள ஒரே குறை."

"இளவரசி எப்படிப் போனார்?"

"நான் இங்கு வந்தபோது நீங்கள் தியானத்தில் இருந்தீர்கள். இளவரசி உங்களைப் பிடிக்க நெருங்கினார். அப்பொழுது நான் ஒரு சிறிய வித்தை காட்டினேன். விளக்கின் ஜ்வாலையைக் கொஞ்சம் படர்ந்து எரிய வைத்தேன். இதுபோன்ற சின்ன வித்தைகள் எனக்கும் தெரியும்."

"அதனால்தான் இளவரசி திரும்பிப் போனாரா?"

"ஆமாம்."

"நான் காளி மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்தேன். இந்த அரண்மனையில் துர்கா கோயிலின் அமைப்பையும், அது அமைந்துள்ள இடத்தையும் காட்டும் படம் ஒன்று உள்ளது. அதை எப்படிக் கண்டுபிடிப்பது?

"அதற்கான மந்திரத்தை நான் உபதேசிக்கிறேன்."

"என்ன மந்திரம் அது?"

"யக்ஷிணீ மந்திரம்."

"வி ரவா: க்ருக்ஷி பங்க்திச் சந்த யக்ஷிணீ தேவதா. இதுதான் மந்திரம். பிறகு தியானம். கவனமாகக் கேளுங்கள்."

அவள் மீண்டும் தொடர்ந்தாள். " வர்ணப் ப்ரபாம் ரத்ன பூஷாபிராமம். ஜபா புஷ்ப ச்சாயவா ஸோயு காட்யம் சதுஸுத்திக்ஷு. தாஸீகணை சேவிதாம் ஹ்ரிம். பஜே சர்வஸ ஸௌக்யப்ரதயம் யக்ஷிணீம்தாம்."

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

(ஒளி பொருந்திய தோற்றத்தில் ரத்தின ஆபரணங்களுடன், கடுஞ்சிவப்பான செம்பருத்திப் பூவின் நிறமார்ந்த இரண்டு பட்டு உடைகளுடன், நான்கு புறமும் தோழியர் புடை சூழ விளங்குகிற எல்லாவிதமான ஐ வர்யங்களையும் தருகின்ற மோகினீ!)

தியானித்த பிறகு - ஸ்ரீம் ஸ்ரீம் யக்ஷிணீ

ஹும் ஹும் வாஹா

ஓம் க்ரௌம் மதமேகலே நறு வாஹா

ஓம் ஐம் விசாலே ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம்

வாஹா!

"இந்த மந்திரங்களை ஒரு லட்சம் தடவை ஜபித்து, பத்தாயிரம் செம்பருத்திப் பூக்களை ஹோமிக்க வேண்டும். இயந்திரத்தின் மீது தேவியை மனதில் கருதி பூஜை செய்ய வேண்டும். பின்பு ஒவ்வொரு நாளும் ஆயிரம் தடவை ஜபித்து ஆயிரம் இலுப்பைப் பூக்களைத் தேனில் நனைத்து இலுப்பை மரப்பட்டைகளால் ஆன ஹோம குண்டத்தில் ஹோமிக்க வேண்டும். இதையெல்லாம் இலுப்பை மரத்தடியிலேயே செய்ய வேண்டும். இவ்வளவும் செய்தால் தேவி அருளுவாள். ஒரு மையைத் தருவாள். அதைப் பயன்படுத்திப் பார்த்தால் நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதை உங்களால் பார்க்க முடியும்."

"நீ சொல்வது போலவே நான் செய்கிறேன். இந்த முறையில் துர்காதேவி கோயிலைக் கண்டுபிடிப்பது சுலபமாகத் தெரிகிறதே!"

"இந்த விஷயத்தில் எனக்கு உறுதி தர முடியாது."

"பிறகு ஏன் இதைச் சொன்னாய்?"

"துர்காதேவி கோயிலைக் கண்டுபிடிப்பது கடினம் என்று சொல்லக் காரணம். அதைத் துர்காதேவியே அடைத்ததனால்தான்."

"பிறகு நான் எதற்காக அந்த முறையில் கஷ்டப்பட வேண்டும்."

"அப்படியானால், இங்கு ஒரு மாந்திரீகச் சுவடி இருப்பதாகச் சொன்னீர்களே. அதைக் கண்டுபிடிக்கலாம்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அதற்கு அவ்வளவு இலுப்பைப் பூக்களுக்கு நான் எங்கே போவது? இதற்கெல்லாம் யார் எனக்கு உதவுவார்கள்?"

"நான் உதவுகிறேன். நான் நின்றிருந்த இடத்திற்குப் பின்புறம் ஒரு கந்தர்வன் கோயில் உள்ளது. அதைத் தாண்டினால் ஒரு சுடுகாடு. அங்கு ஒரு இலுப்பை மரம் உண்டு. அதில் பூக்களும் ஏராளமாக உள்ளன."

"நீ செய்யும் உதவிகளை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்."

"மற்றொரு முக்கியமான விஷயம். அந்த ரகசிய அறைக்குள் வைத்துள்ள மற்றொரு சங்கைப் பாதுகாக்க வேண்டும். அதற்குள்தான் எனது சக்திகளைத் திரட்டி வைத்திருப்பதை இப்பொழுதுதான் அறிந்து கொண்டேன்."

"அதை என் உயிரைப்போல் பத்திரமாக வைத்துக் கொள்கிறேன்."

"அப்படியானால் புதன்கிழமை இந்தப் பூஜையைத் துவக்குவோம். அன்றுதான் சரியான நாள். அன்றிலிருந்து பத்தாம் நாள் வெள்ளிக் கிழமை வருகிறது. அன்று நிச்சயமாக மோகினி தேவி உங்களுக்கு அனுக்கிரஹம் செய்வாள்."

"தொடர்ந்து பத்து நாட்களும் நான் அங்கேயே இருக்க வேண்டுமா?"

"அது ஒரு நிபந்தனையல்ல. ஆனால், இந்தப் பத்து நாட்களும் பெண்கள் உள்ள இடங்களுக்கு நீங்கள் செல்லக்கூடாது. அதாவது இந்த விரதம் முடிவதுவரை அசுத்தமான பெண்கள் வசிக்கும் வீட்டிலிருந்து எதையும் சாப்பிடக்கூடாது."

"அப்படியானால் நான் மாலதியின் வீட்டில் சாப்பிட முடியாதா?"

"இந்த விரதம் முடிவதுவரை போகாதிருப்பதே நல்லது."

கேசவன் குட்டியின் மனதில் உணவு தயாரித்துத் தனக்காகக் காத்திருக்கும் பவானியம்மாளும், மாலதியும் ஒரு கணம் தோன்றினர். அவர்களிடம் என்னவென்று காரணம் சொல்வது? 'சரி. கொஞ்ச நாள் நான் இங்கே இருக்க மாட்டேன் என்று அவர்களிடம் கூறிவிடலாம்.'

"நான் சென்று வரட்டுமா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அவள் சென்றபிறகு அவள் சொல்லிக் கொடுத்த யக்ஷிணீ மந்திரத்தை ஒரு காகிதத்தில் குறித்து வைத்துக் கொண்டான்.

மறுநாள் காலை கேசவன், பவானியம்மா வீட்டிற்குச் சென்றான். அன்று அவர்களும் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனதை பவானியம்மா தெரிவித்தாள்.

"நீங்கள் என்ன சொன்னாலும் எனக்கு இந்தக் கல்யாணத்தில் கொஞ்சம்கூட விருப்பமே இல்லை" என்றாள் மாலதி.

"ஒரு வீட்டில் வயதுக்கு வந்த பெண்ணிருந்தால், கல்யாணத்திற் காகப் பார்க்க வரத்தான் செய்வார்கள். அது அவர்களது தேவை. நமக்கு விருப்பமிருந்தால் ஒப்புக்கொள்வோம். இல்லாவிட்டால் வேண்டாம் என்று சொல்லிவிடலாம்" கேசவன், மாலதிக்கு ஆறுதல் கூறினான்.

"எனக்கு இந்தக் கல்யாணம் கொஞ்சம் கூடப் பிடிக்கவே யில்லை."

"அதோ அவர்கள் வந்துவிட்டார்கள்" பவானியம்மா கூறினார்.

கிட்டு ஆசானும், ராவுண்ணியார்ரும் ஓர் இளைஞுடன் வந்து கொண்டிருந்தார்கள். அங்கு கேசவனைச் சட்டென்று பார்த்ததும் கிட்டு ஆசான் ஒரு விநாடி தயங்கினார். பின்னர் சுதாரித்துக் கொண்டு நடந்து வந்தார். ராவுண்ணியாரைப் பார்த்தவுடன் கேசவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. எங்கோ அவரைப் பார்த்துப் பழக்கமுள்ளதாகத் தோன்றியது. அவர்களுடன் வந்த இளைஞன் புதியவனாக இருந்தான்.

கிட்டு ஆசான் கேசவனிடம் எதையோ பேச முயன்றபோது கேசவன் கண்ணால் ஏதோ ஜாடை காட்டினான். அதன்பிறகு கிட்டு ஆசான் எதுவும் பேசவே இல்லை.

கேசவனுக்கும், இந்த வீட்டிற்கும் என்ன தொடர்பு என்று ராவுண்ணியார் பவானியம்மாவிடம் கேட்டார். புத்திசாலியான பவானியம்மாள் சற்றும் யோசிக்காமல் கூறினாள்: "இது, என் அண்ணன் மகன். நீங்கள் இன்று வருவீர்கள் என்று தெரிந்தவுடன் நான்தான் வரச்சொல்லியிருந்தேன்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ராவுண்ணியாரும் இளைஞனும் கேசவனைச் சந்தேகத்துடன் பார்த்தனர். இளைஞனைவிட கேசவன் எல்லா விதத்திலும் மேலானவனாக இருந்தான். பவானியம்மா சொன்னபடி பார்த்தால் அவளுக்கு முறைப்பையனாகிறானே என்று ஒரு விநாடி யோசித்தார்.

"சரி, நாங்கள் சொன்ன விஷயத்தைப் பற்றி நீங்கள் என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்?"

"எல்லாவற்றையும் விவரமாக நான் இந்தத் தம்பியிடம் சொல்லி அனுப்புகிறேன்."

"சரி, அப்படியானால் நாங்கள் விடைபெற்றுக் கொள்கிறோம். தாமதப்படுத்தாமல் சீக்கிரம் அனுப்பி வையுங்கள்."

எல்லோரும் விடைபெற்றார்கள். சற்று நேரத்தில் கிட்டு ஆசான் மட்டும் திரும்பி வந்தார்.

"என்ன ஆசானே, திரும்பி விட்டீர்கள்?"

"குடையை மறந்து வைத்து விட்டேன்."

"இங்கு குடை எதுவும் இல்லையே."

"அப்படிச் சொல்லித்தான் அவர்களிடமிருந்து கழன்று வந்தேன்."

அவரது வருகைக்கு ஏதோ ஒரு முக்கிய நோக்கம் இருப்பதைக் கேசவன் உணர்ந்து கொண்டான். அவருடன் வெளியே புறப்பட்டான்.

"வந்தவர்கள் யார் ஆசானே?"

"அவரை உங்களுக்குத் தெரியாதா? ராவுண்ணியார். மேலக்காவு மனையின் காரியதரிசி."

"கூட வந்தது அவருடைய மகன்தானா?"

"அப்படித்தான் அவர் சொன்னார்."

"ஆனால், அது அவருடைய மகன் இல்லை. எனக்கு அவனைத் தெரியும். அது ஒரு சரியான தண்ணி கே."

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அப்படியானால் இதில் ஏதோ மர்மம் இருக்கிறது?"

"மர்மம் ஒன்றுமில்லை. முழுக்கவும் சதித்திட்டம். ஒருவேளை இந்தப் பெண்ணை நம்பூதிரிக்காக வலைவீசிப் பிடிக்கிறார்களோ?" கேசவன் கேட்டான்.

"பிறகு, வேறு எதற்காக இந்த நாடகம் நடத்தப் போகிறார்கள்?"

"அந்த நம்பூதிரி ஏதோ ஒரு பிசாசுக்காகக் கன்னிப் பெண்களைப் பலி கொடுக்கிறார்."

"ஐயோ, இதைத் தட்டிக்கேட்க ஒருத்தருமே இல்லையா?"

"யார் தட்டிக்கேட்க? கொஞ்சம் பேர் இதற்காக முயன்றார்கள். வீணாக அடிபட்டதுதான் மிச்சம்."

"அப்படியானால் இதற்கு என்னதான் வழி?"

"அதற்காகத்தான் நான் உங்களிடம் துர்கா கோயிலைப் பற்றி விசாரித்தேன். ஞாபகமிருக்கிறதா ஆசானே."

"ஓ, அதற்காகத்தான் நீ இந்தப் பகுதியில் சுற்றிக் கொண்டிருக்கிறாயா?"

"ஆமாம் நான் இந்த இடத்தைத் துருவித் துருவி ஆராய்கிறேன்."

"கோயில் எங்கே இருக்கிறதென்று தெரிந்து விட்டதா?"

"நீங்கள் சொன்னதுபோல் இந்தப் பாண்டவன் மலையின் ஏதோ ஒரு பகுதியில் மறைந்துள்ளது. அந்த முயற்சியில்தான் நான் இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டுள்ளேன்."

"அந்தத் துர்காதேவி உன்னை ஆசீர்வதிக்கட்டும், ஆமாம், நீ இப்பொழுது எங்கே தங்கியிருக்கிறாய்?"

"கிட்டு ஆசானே, இதை நீங்கள் உங்கள் மனதிலேயே வைத்துக் கொள்ளுங்கள். கிழக்குக் கோட்டை அரண்மனைக்குள்தான்."

"அதற்கு உள்ளேயா? அங்கே நீ எப்படி வசிக்கிறாய்?"

"அதற்கென்ன எனக்கு அங்கு வசிப்பதற்கு எந்தப் பயமும் கிடையாது."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"சரி. நான் வருகிறேன்."

"என்னைப் பார்க்க வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றினால் அரண்மனைக்கு வாருங்கள்."

"வந்தால் பகல் நேரத்தில்தான் வருவேன்" கிட்டு ஆசான் விடைபெற்றார்.

கேசவனும் வசந்தசேனையும் பேசிக்கொண்டிருந்த விஷயங்களை நிசாசரி என்கிற பூதம் பிரம்மதத்தனிடம் வந்து அப்படியே ஒப்பித்தது.

"அப்படியானால் நீ அந்தச் சங்கை எடுத்து வந்திருக்க வேண்டாமா? அதில்தானே அவளது சக்தி இருக்கிறது?"

"நான் சங்கைத் தொடக்கூடாது என்பது உங்களுக்குத் தெரியாதா?"

"தொடக்கூடாதா? ஏன்?"

"சங்கு பகவானின் முத்திரையல்லவா? நாங்கள் அதைத் தொட முடியாது."

"பிறகு எப்படி அவளை அழிப்பது?"

"எல்லாம் தெரிந்த உங்களுக்கு இதற்குத்தானா வழி தெரியாது."

"விவரமாகச் சொல்" நம்பூதிரி அதட்டினார்.

"அவளை ஹோமித்து விடலாமே."

"உண்மைதான். ஹோமாக்னியில் யக்ஷிணீ ஹோம மந்திரம் ஜபித்து அவளை அழித்து விடுகிறேன். அத்துடன் அவனுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் உதவிகள் எல்லாம் நின்று போகும்" பிரம்மதத்தன் வசந்தசேனை என்கிற மோகினியை ஹோமத்தில் போட்டு எரித்து விடுவது என்று மனதிற்குள் தீர்மானித்தார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

12

பிரம்மதத்தன் நம்பூதிரி வசந்தசேனையை அக்னி குண்டத்தில் எரிப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக இருந்தார். தன்னிட மிருக்கும் பல ஓலைச்சுவடிகளைத் தேடிப் பார்த்தும் அவருக்கு இதற்கான வழி ஒன்றும் அகப்படவில்லை. கடைசியாகத் தன்னுடைய பிரதம தேவதையாகிய கண்டாகர்ணனையே நாடும்படி நேர்ந்தது.

பயங்கரமான அந்தச் சிலையின் முன்பாக ஹோமத்திற்கு வேண்டிய பொருள்கள் வந்து குவிந்தன. அந்தப் பொருள்கள் எல்லாம் தீக்கொழுந்துகளாக மாறி உயர்ந்தபோது, பிரம்மதத்தன் தன்னுடைய சுட்டுவிரலைக் காயப்படுத்தி ரத்தம் சொரிந்தார். அந்த உருவச் சிலையைச் சுற்றிலும் ஓர் ஒளி எழுந்து, அது அசையவும் செய்தது.

"உனக்கு என்ன வேண்டும்?" சிலையிலிருந்து குரல் உயர்ந்தது.

"எனக்கு எதிராக வசந்தசேனை என்னும் மோகினி செயல்படு கிறாள். அவளை அடக்குவதற்காக மோகினி ஹோம மந்திரம் எனக்குத் தேவைப்படுகிறது" என்று பிரம்மதத்தன் வேண்டுகோள் விடுத்தார்.

"இந்த விஷயத்தில் நான் உனக்கு உதவுகிறேன். ஆனால், ஒரு நிபந்தனை. இன்றிலிருந்து நாற்பத்தொன்றாம் நாள் நீ என்னுடைய பலியைத் தரவேண்டும். முடியுமா உன்னால்."

"முயற்சி செய்கிறேன்."

"இம்முறை நீ பலியிடும் பெண்ணை எதுவும் செய்யக்கூடாது. அவள் முற்றிலும் புனிதமானவளாகவே பலியாக வேண்டும்."

"ஒப்புக் கொள்கிறேன்."

"அப்படியானால் இந்தா மோகினி ஹோம மந்திரம்!" கண்டா கர்ணனின் பயங்கரமான கை நீண்டு வந்தது. அதில் பளபளப்பான ஒரு பித்தளைத் தகடு இருந்தது. பிரம்மதத்தன் அதைப் பெற்றுக்கொண்டார்.

"உனது தேவை முடிந்து போனால் இந்த மந்திரத் தகட்டை நெருப்பில் போட்டு எரித்துவிட வேண்டும். அத்துடன் இந்த

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

மந்திரத்தையும் மறந்துவிட வேண்டும். காரணம், ஒரு மந்திரவாதி தனது வாழ்நாளில் ஒரு முறைதான் இந்த மந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும்."

"அப்படியே செய்கிறேன்."

கண்டாகர்ணன் மறைந்தான். பிரம்மதத்தன் அந்தத் தகட்டிலிருந்த மந்திரத்தை முதல் தடவையிலேயே மனப்பாடம் செய்து விட்டார். பிறகு அதை ஹோமத்தீயில் போட்டு விட்டார். பச்சை நிறமான ஒளியுடன் அந்தத் தகடு எரிந்து தீர்ந்தது.

இம்முறை வசந்தசேனையை ஹோமிக்கத் தேவையான பொருள்கள் குவிந்தன. பன்னிரண்டு நாள் ஹோமம் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. ஹோமத்திற்கான இயந்திரம் வரைந்தார். தெச்சிப் பூக்களும், பூஜைக்கான உதிரிப்பூக்களும் ஹோம குண்டத்தில் விழுந்தன. பன்னிரண்டு நாட்களுக்குள் லட்சத்து ஒரு தடவை மந்திரம் உருவிட வேண்டும். குறையவோ கூடவோ கூடாது.

இந்த ஹோமம் தொடங்கி ஐந்து நாட்கள் சென்ற பிறகு வசந்தசேனை, கேசவனிடம் கூறினாள்.

"எனக்கென்னவோ மிகவும் அசதியாக உள்ளது. இன்று உங்களுக்காக இலுப்பைப் பூக்களை மரத்திலிருந்து பறித்துக் கொண்டிருந்தபோது மயங்கித் தரையில் விழுந்து விட்டேன்."

கேசவன் அவளையே பார்த்தான். அவளில் ஏதோ மாற்றம் தெரிந்தது. பத்தரை மாற்றுத் தங்கத்தின் வண்ணத்திலிருந்த அவள் மேனி வண்ணம் வெளுத்திருந்தது. கருமையான கண்மணிகளின் பளபளப்பு குறைந்து விட்டிருந்தன. மாலை நேரத்து வானம் போல் சிவந்திருந்த அவளின் கன்னக் கதுப்புகளில் நிழல் தட்டியதைப் போலிருந்தது.

"உனக்கு என்ன ஆகி விட்டது?" என்று கேசவன் அவளிடம் கேட்டான்.

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. எனக்கு என்னவோ ஆகிவிட்டது. ஆனால், அது என்னவென்று தெரியவில்லை.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

என்னுடைய வாழ்நாளில் ஒரு தடவைதான் எனக்கு இப்படி ஒரு தளர்ச்சி தோன்றியுள்ளது" வசந்தசேனை அங்கிருந்த ஒரு கருங்கல்லில் உட்கார்ந்தாள்.

சுடுகாட்டின் மையத்திலிருந்த ஒரு பெரிய இலுப்பை மரத்தடியில் அவர்கள் உட்கார்ந்திருந்தனர். நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. ஏறத்தாழ மூன்று ஏக்கர் பரப்பளவுடனிருந்த அந்தச் சுடுகாடு பழைமையானது. அங்கிருந்த மரங்களில் பட்டைகள் முதிர்ந்து உதிர்ந்து தரைப் பகுதியில் குவிந்து கிடந்தன. பகலில்கூட அந்தப் பகுதியில் யாரும் எட்டிப் பார்ப்பதில்லை. எப்பொழுதும் இருண்டு கிடக்கும் ஒரு மரத்தோப்புதான் அந்தச் சுடுகாடு.

இப்பொழுது அந்தச் சுடுகாட்டில் பிணங்களை எரிப்பது இல்லை. என்றாலும் சில நேரங்களில் அங்கு அடிக்கடி தீ எரிவதைப் பலரும் பார்த்துள்ளனர். பிணம் எரிவது போலவே, தீ கொழுந்து விட்டெரியும். இதனால்தான் மோகினி மந்திரம் ஜபித்து மை பெறுவதற்காக கேசவன் அங்கே ஹோமம் நடத்தினான். இதை யாராவது பார்த்திருந்தால்கூட அதைப் பொருட்படுத்தியிருக்க மாட்டார்கள்.

"முதலில் எப்பொழுது இந்தத் தளர்ச்சி தோன்றியது."

"முதல் தடவையாக இளவரசி கார்த்தியாயினி என்னைப் பிடித்து சங்கிற்குள் அடைக்கும்போது இப்படிப்பட்ட தளர்ச்சி தோன்றியது."

"இம்முறை அப்படி நிகழ்வதற்கு வாய்ப்பில்லை. காரணம் நீ விடுதலையடைந்த விஷயம் இன்னும் இளவரசிக்குத் தெரிந்திருக்காது."

"நீங்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம். ஆனால் என் உடம்பு தகிப்பது போல் உள்ளதே."

கேசவன் யோசித்தான். 'விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணம். வசந்தசேனைக்கு ஏதோ ஆபத்து நிகழப் போகிறது. தன் எதிராளியான பிரம்மதத்தன் பயங்கரமான பேர்வழி. தன்னுடைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் அவர் கவனிப்பதைக் கேசவன் அறிந்திருந்தான். வசந்தசேனை தனக்கு

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

உதவுவதையும் அவர் தெரிந்து வைத்திருப்பார். ஒருவேளை அதனால் வசந்தசேனையை அழிக்கப் போகிறாரோ?'

"இப்பொழுது எனக்குப் புரிகிறது. அவர் என்னை ஹோமிக்கத் தொடங்கியிருக்கிறார்" வசந்தசேனை அலறினாள்.

"உண்மையாகவா?"

சட்டென்று துள்ளியெழுந்த கேசவன்குட்டி அவளுக்குச் சுற்றிலும் ஒரு வட்டம் வரைந்தான். பின்பு அதற்குள் தெச்சிப் பூக்களை அடுக்கி, காளி மந்திரம் ஜபித்தான்.

"பைரவி க்ருஷி. உஷ்ணிக்ச் சந்த காளிதேவி" என்கிற மந்திரம் ஜபித்த பிறகு தியானித்தான்.

தியானம் முடிந்து கேசவன் மந்திரம் ஓதினான். எட்டு மந்திரங் களில் கடைசி மந்திரத்தை நூற்று ஒன்றாவது தடவை உருவிட்டான்.

"க்ரீம் ஹூ ஹ்ரீம் ஹூம் ஃபட் வாஹா."

மந்திரங்கள் ஒவ்வொன்றையும் சொல்லி முடிக்கும்போதும் வசந்தசேனையின் நிலையில் படிப்படியான மாற்றம் நிகழ்ந்தது. அவள் கண்கள் அதிகமாகப் பிரகாசித்தன. கன்னங்களில் மறுபடியும் செந்நிறம் வந்து புகுந்து கொண்டது. அவளது நெற்றியிலும் மூக்கிலும் வியர்வை படிந்தது. அவள் உடம்பிலிருந்து தாழம்பூவின் மணம் எழுந்து பரவியது.

"இப்பொழுது எப்படி இருக்கிறது?" கேசவன் கேட்டான்.

"என் உடம்பிலிருந்து ஏதோ வழிந்து இறங்கியது போல் உள்ளது. பெரிய ஆறுதலாக உள்ளது."

"அப்படியானால் நினைத்தது சரிதான். உன்னை ஒழித்துக் கட்ட பிரம்மதத்தன் என்னவோ செய்கிறார். ஒருவேளை அது ஹோமமாகவே இருந்தாலும் இந்தக் கட்டத்தில் அவரால் தொடர முடியாது. இடையில் தடைபட்டதால் மறுபடியும் ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்டும்."

"அதையும் செய்ய அவர் தயங்கமாட்டார். என்னை அழிப்பது தானே அவர் நோக்கம்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அதிலிருந்து நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். ஆனால், அதற்கு முன்பாக பிரம்மதத்தன் என்ன செய்கிறார் என்பதை நான் தெரிந்து கொண்டாக வேண்டும். எப்படித் தெரிந்து கொள்வது?

"இப்பொழுது நீங்கள் என்னைச் சுற்றிலும் வரைந்திருக்கிற வட்டத்தைவிட்டு நான் வெளியே வந்தால் எனக்கு என்ன நேருமென்று கூறமுடியாது."

"அப்படியானால் நான் என்ன செய்வது? வேறு யார் இந்த விவரத்தைத் தெரிந்து வருவது?"

"விவரம் தெரிந்துகொள்ள நீங்கள்தான் செல்லவேண்டும்."

"நான் சென்றால் இந்த மோகினி மந்திரத்தை எப்படிப் பூர்த்தி செய்வது?"

"இப்பொழுது நம்முடைய முயற்சிகளும் அவருடைய முயற்சிகளும் தடைபட்டுவிட்டன. மந்திர உச்சரிப்பில் இடைவேளை ஏற்பட்டால் பிறகு பலன் தராது. மறுபடியும் முதலிலிருந்து தொடங்க வேண்டும். அவர் என்னை அழிப்பதற்காக ஹோமம் நடத்துவதானால், அதையும் மறுபடி தொடங்க வேண்டும். மோகினி ஹோம மந்திரத்தைப் பன்னிரண்டு நாட்கள் இடைவெளியின்றிச் சொல்ல வேண்டும். சாப்பிடும் பொழுதுகூட மனதில் மந்திரம் உச்சரித்தபடியே இருக்க வேண்டும். ருசியில் மனம் செல்லக்கூடாது."

"அப்படியானால் நானே போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்."

"நான் ஒருவழி சொல்லித் தருகிறேன். இந்தச் சுடுகாட்டின் தென்பாகத்தில் ஒரு வனதுர்காதேவி சிலை இருக்கிறது. படர்ந்து வளர்ந்திருக்கும் ஒரு எட்டி மரத்தின் அடியில் அது உள்ளது. அந்தச் சிலைக்குச் சுற்றிலும் நெருஞ்சி முட்கள் அடர்ந்து வளர்ந் துள்ளன. எனவே சிலையை நெருங்குவது கடினம்தான். இருந்தாலும் எப்படியாவது அதன் அருகே சென்று அந்தச் சிலையின் கழுத்தில் கிடக்கும் ருத்ராக்ஷ மாலையை எடுக்க வேண்டும். அந்த மாலை உங்கள் கழுத்தில் இருந்தால் உங்களை எதுவும் நெருங்க முடியாது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஆனால் ஒளிந்திருந்து யாராவது ஆயுதம் எறிந்தால் ஆபத்து; மற்றபடி எதுவும் நேராது.''

''அது பரவாயில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன். நான் சென்று திரும்புவது வரை நீ எங்கும் நகர வேண்டாம்.''

''சரி, நீங்கள் சென்று வாருங்கள்.''

கேசவன் அந்தச் சுடுகாட்டின் தெற்குப் பாகத்திற்கு நடந்தான். கையில் டார்ச் விளக்கு இருந்தது. கனத்த கூர் இருட்டில், கேசவன் அந்த வனதுர்கா சிலையை லட்சியமாக்கி நடந்தான். அந்தப் பகுதியில் அமைதி சூழ்ந்திருந்தது. சுவர்க்கோழியின் சத்தம்கூடக் கேட்கவில்லை. இரவு நேரத்தில் பறந்து திரியும் பறவைகளும்கூட வெளியே தென்பட வில்லை. ஆந்தைகள்கூட அந்த இடத்தை நெருங்கப் பயப்பட்டன போல் தோன்றின.

தனது காலடி ஓசையைத் தவிர வேறு எந்த விதமான ஓசையும் கேட்கிறதா என்று கவனித்தபடியே, கேசவன் கவனத்துடன் நடந்தான். நடக்க நடக்க அந்த இடம் மனித நடமாட்டத்தை இழந்து எத்தனையோ நூற்றாண்டுகள் ஆகிவிட்டன என்பது புரிந்தது. ஒவ்வொரு எட்டி மரமாக டார்ச் லைட் அடித்துப் பார்த்தான். அதோ தேடி வந்த எட்டி மரம். கீழே பிரம்மாண்டமான வனதுர்காவின் சிலை தெரிந்தது. வழி நெடுக நெருஞ்சி. என்ன செய்வது என்று யோசித்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். வலது புறத்தில் ஒரு மரம் வேரோடு சாய்ந்து கிடந்தது. கிளைகள் ஏதும் இல்லாத மெலிந்த மரம்.

கேசவன் மறுபடியும் டார்ச்சை எரியவிட்டு அந்த மரத்தின் நீளத்தைக் கவனித்தான். தான் நின்றிருக்கிற இடத்திலிருந்து சிலைக்கு உள்ள தூரத்தைக் கணித்தான். பிறகு அந்த மரத்தை உருட்டிக்கொண்டு வந்து அதன் மேற்புறத்தை உயர்த்திச் சிலைக்கு நேராக அதை விழ வைத்தான். நெருஞ்சி முட்களின்மீது அந்த மரம் ஒரு பாலம் போல் விழுந்தது. அந்த மரம் உருண்டு விடாமல் இருப்பதற்காக இருபுறமும் இரண்டு கற்களை வைத்தான். பிறகு அதன்மீது ஏறி நடந்தான்.

சிலையை நெருங்கியவுடன் மறுபடியும் டார்ச் லைட்டை எரிய விட்டான். எவ்வளவோ காலமான சிலை அது. மிகவும் பயங்கரமாகத் தோற்றமளித்தது. அதன் மேல் ஏராளமாகப் பூசணம் பிடித்திருந்தது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஏறத்தாழ பூசணம் அந்தச் சிலைக்கு ஓர் உடை மாதிரியே இருந்தது. கேசவன் உற்றுக் கவனித்தான். அதன் கழுத்தில் ருத்திராக்ஷ மாலை போல் தோன்றுகிற ஏதோ ஒன்று தென்பட்டது.

கேசவன் பூசணத்தைக் கைகளால் தட்டி ஒதுக்கி அந்த மாலையைச் சிலையின் கழுத்திலிருந்து உருவி எடுத்தான். ஒரு பெரும் புதையலைப் போல் அதை எடுத்தபடி அவன் வசந்த சேனையை நெருங்கினான்.

"இதோ நீ கூறிய ருத்ராக்ஷ மாலை."

"நீங்கள் உண்மையிலேயே தைரியசாலிதான். உங்களைத் தவிர வேறு யாரும் இந்த மாலையை எடுக்கத் துணிய மாட்டார்கள்."

"ஏன்?"

"இதற்கு முன்னால் கிழக்குக் கோட்டை அரண்மனையிலிருந்த ஒரு ராஜா ஒரு தடவை இந்த மாலையை எடுப்பதற்காக அந்தச் சிலையை நெருங்கினார். அவர் அங்கே சென்றபோது, மாலைக்குப் பதிலாக ஒரு பயங்கரமான பாம்புதான் கழுத்தில் நெளிந்து கொண்டிருந்தது."

"நீ ஏன் இதை என்னிடம் முன்பே கூறவில்லை?"

"நான் சொல்லியிருந்தால் நீங்கள் அங்கே போயிருக்கவே மாட்டீர்கள். நீங்கள் இதற்குத் தகுதியானவர் என்றால், இது உங்களுக்குக் கிடைக்கும். வெற்றி பெறுவீர்கள் என்கிற உறுதி இருந்தது."

"இரவின் மூன்றாம் யாமம் தொடங்கியிருக்கிறது. நான் மேலக் காவு மனைக்குச் செல்கிறேன்" அந்த மாலையைக் கழுத்தில் அணிந்தபடி அவன் புறப்பட்டான். மெதுவாக வெளிக்கதவின் தாழைத் திறந்து மேலக்காவு மனையின் உட்புறம் நுழைந்து நின்றான். உட்புறம் எங்கோ மோகினிஹோம மந்திரங்கள் உச்சரிப்பதை அவனால் உணர முடிந்தது. அந்தப் பெரிய வீட்டின் தென்புறமாக நடக்கத் தொடங்கினான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

13

கேசவன் மேலக்காவு மனையின் தென்புறமாக, அந்தக் குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, இறந்து போனவர்களது அ திக் கலசங்கள் வைக்கப்பட்டிருந்த சமாதிகளின் சமீபமாக நடந்தான். தனக்குப் பின்னால் ஏதோ சலசலப்புக் கேட்டது. கேசவனது உடம்பில் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. ஒரு விநாடி திடுக்கிட்ட கேசவன் பின்னால் திரும்பினான்.

"பயப்படாதீர்கள், நான்தான்" மென்மையான ஒரு பெண் குரல். கேசவனின் காதருகே கிசுகிசுத்தது.

"யார் நீ?" குரலை உயர்த்திக் கேட்டான் கேசவன்.

"நான்தான் ஊர்மிளா" பதில் வந்தது.

அந்தக் கூரிருட்டில் அவளைத் தெளிவாகப் பார்க்க முடியா விட்டாலும்கூட, அன்றொரு நாள் உடல் கட்டப்பட்ட நிலையில் வாயிற்படியைக் கடக்க உதவிய அவளது நினைவு வந்தது.

"சந்தேகப்படாதீர்கள். நானேதான். என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்."

"வேண்டாம், நான் இப்படியே நடக்கிறேன்."

"இந்த இடத்தில் சத்ருமாரண (எதிரி அழிப்பு) மந்திரம் எழுதிய தகடுகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன. அதைத் தாண்டினீர்களானால் ஆபத்துதான்."

இந்த வார்த்தையைக் கேட்டதுமே கேசவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டான். அவளது கை மிகவும் மென்மையாக இருந்தது. அவள் அவனை நெருங்கி நடந்தாள்.

"நாம் இந்த வீட்டின் மேற்குப் பகுதிக்குச் செல்கிறோம். முற்றத்தைத் தாண்டினால், ஒரு பெரிய பள்ளம் இருக்கிறது. என் தோளைப் பிடித்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் கால் தவறி விழுந்து விடுவீர்கள்!" என்றாள் ஊர்மிளா.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

கேசவன் அவளது வலது தோளைப் பிடித்துக் கொண்டான். அந்தத் தோள் பகுதியில் துணி எதுவும் இல்லாமல் வழுவழுவென்று இருந்தது. கேசவனுக்கு மேனி சிலிர்த்தது.

"பயப்படாதீர்கள். என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். நான் மேலாடை போட்டிருந்தால் மாமா என்னை அடையாளம் தெரிந்து கொள்வார். அதனால்தான் அதைக் கழற்றி வைத்திருக்கிறேன்" சொல்லியபடியே அவனோடு மிகவும் நெருங்கி நடந்தாள்.

இருவரும் அந்த வீட்டின் கிழக்குப் பகுதியை அடைந்தார்கள். திறந்திருந்த கதவு வழியாக உள்ளே புகுந்து தானிய அறைக்குள் நுழைந்தனர். அங்கு ஒரு சிறிய மண்ணெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் மஞ்சள் நிற வெளிச்சத்தில் ஆடை குறைந்து இருந்த ஊர்மிளாவின் தசைப் பகுதிகள் கேசவனைப் பதற வைத்தன.

"என்ன பார்க்கிறீர்கள்?" ஊர்மிளா கேட்டாள்.

கேசவன் அவளது மார்புப் பகுதிகளைப் பார்த்தான். 'அப்ரசஸுகள் இப்பொழுது இவளைப் பார்க்க நேர்ந்தால் தாங்கள் வைத்துள்ள அமுதக் கலசங்களைப் போட்டு உடைத்து விடுவார்கள்' என்று அவனுக்குத் தோன்றியது. ஊர்மிளா சட்டென்று கொடியில் கிடந்த துண்டு ஒன்றை எடுத்து மேற்புறத்தை மறைத்துக் கொண்டாள்.

தனது முறைப்பெண்ணைப் பலாத்காரமாகக் கற்பழித்து, ஏதோ ஒரு துர்த்தேவதைக்குப் பலிகொடுத்த ஒரு தீயவனின் மருமகள்தான் இப்பொழுது தனக்கு முன்னால் நிற்கிறாள் என்று அவன் மனம் எடுத்துரைத்தது.

'ஆனால் இவள் ஆம்பல் பூப்போன்றவள் - இவள் மனம் ஒரு பட்டாம்பூச்சி போன்றது. மாமன் செய்த தவறுக்கு இவள் என்ன செய்வாள் பாவம்' கேசவன் யோசித்தான்.

"என்ன பார்த்துக்கொண்டே இருக்கிறீர்கள்?" அவள் கேட்டாள்.

"யார் பார்த்தாலும் பிரமிக்கும் இந்த அழகை நான் பார்க்காமல் இருக்க முடியுமா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"என் உடம்பை முதன் முதலாகத் தொட்ட ஆண் நீங்கள்தான். நான் இவ்வளவு அருகில் நெருங்கி நின்று பார்க்கும் முதல் நபரும் நீங்கள்தான். இனிமேல் நான் வேறு எவரையும் பார்க்கக்கூட முடியாது" கேசவனை நெருங்கி நின்று கூறினாள்.

வாழ்க்கையில் இதுவரை ஆண்களின் முகம் பார்க்காமல் வளர்ந்த ஊர்மிளாவின் மனதில் உறங்கிக் கிடந்த உணர்வுகளின் தீப்பொறி.. கேசவனின் வெப்பமான மூச்சுக்காற்று பட்டவுடன் மெதுவாக ஜ்வாலிக்கத் தொடங்கிக் கொழுந்து விட்டெரிந்தது.

அந்தப் பிராமணக் கன்னிகையின் ஒவ்வொரு உயிரணுவிலும் காமாக்னியின் தீப்பொறிகள் மின்னின. அப்படியாக அன்றுவரை அவள் அனுபவித்தறியாத ஒரு புதிய உணர்வின் வசப்பட்டு, ஒருவித மயக்கத்தில் ஆழ்ந்ததுபோல் கேசவனின் நெஞ்சில் சாய்ந்தாள்.

அவனும் இளைஞன்தானே! கேசவன் அவளைத் தழுவினான். சட்டென்று யாரோ காதில் எதையோ சொன்னதுபோல் தோன்றவே திடுக்கிட்டு விழித்தான். வசந்தசேனையின் விசும்பலை கேசவன் உணர்ந்தான்.

அருகிலேயே பிரம்மதத்தன் நம்பூதிரி மோகினி ஹோம மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்தார். அது முழுமையடைந்தால், வசந்தசேனை ஹோமாக்னியில் விழுந்து இறப்பாள். பிறகு கேசவன் குட்டிக்கு உதவ யாருமே இருக்க மாட்டார்கள்.

"என்ன ஆகிவிட்டது? ஏன் என்னவோ போல் இருக்கிறீர்கள்?" ஊர்மிளா கேட்டாள்.

"என்னை மன்னித்துவிடு ஊர்மிளா. உன் மாமா நடத்தும் ஹோமம் முழுமையடைந்தால் பிறகு நானே இருக்க முடியாது. அதனால் முதலில் அந்த ஹோமத்தை எப்படியும் தடுக்க வேண்டும்" கேசவன் கூறினான்.

"அவ்வளவுதானே விஷயம்? அதை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றபடி அங்கிருந்த ஒரு வலைக்கூண்டை இழுத்தாள். அதற்குள் ஒரு கரும் பூனை இருந்தது.

"இது எதற்கு?" கேசவன் கேட்டான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இது மாமாவின் செல்லப்பிராணி. இதை ஏதோ மாந்திரீக வித்தைக்காக வளர்க்கிறார் என்று நினைக்கிறேன். எப்படியோ இந்த எலிப் பொறிக்குள் சிக்கிக் கொண்டது. தொல்லை தாங்க முடியாமல் போனதால் நான் இதையெடுத்து மேலே வைத்தேன். திறந்து விட்டால் இது நேராக மாமாவிடம் ஓடிவிடும்."

"சரி. இப்பொழுது இது எதற்கு?"

"எப்படியிருந்தாலும் மந்திரம் ஜபித்த பிறகு இதன் கழுத்தை மாமா அறுப்பார். உங்களால் முடியுமானால் இந்தப் பூனையை அந்த ஹோம குண்டத்தில் எறிந்து விடுங்கள். அத்துடன் ஹோமம் முடிந்து விடும்!"

"அது சரி, நான் எப்படி அங்கு செல்வது?"

"நான் வழி காட்டுகிறேன். அந்த எலிப்பொறியை எடுத்துக் கொண்டு என்னுடன் வாருங்கள்."

கேசவன் அவள் சொன்னபடியே நடந்தான். இரண்டு மூன்று அறைகளைக் கடந்து மேற்புறம் படிகள் உள்ள ஓர் அறையை அடைந்தனர் அவர்கள்.

"இந்தப் படியில் ஏறுங்கள். இது நேராக ஹோமகுண்டம் உள்ள அறையின் மேற்பகுதிக்குச் செல்கிறது."

கேசவன் ஏறினான். ஊர்மிளா கையில் மண்ணெண்ணெய் விளக்குடன் அவனைத் தொடர்ந்தாள். விளக்கு உயர்ந்து கொண்டே வரவர, ஆங்காங்கு படர்ந்திருந்த சிலந்தி வலைகள் அறுபட்டன. இருவரும் பூஜையறையின் மேற்பகுதியை அடைந்தனர்.

"நான் மெதுவாக அங்குள்ள பலகையைத் தூக்கிப் பிடிக்கிறேன். நீங்கள் அதன்வழியாக பூனையை அக்னி குண்டத்திற்குள் போட வேண்டும். அவர் சந்தேகப்பட மாட்டார்" ஊர்மிளா கூறினாள்.

அதேபோல் எல்லாமே நடந்தன. பூனை ஹோம குண்டத்தில் விழுந்தபோது சாம்பலும் தீயும் சுற்றிலும் சிதறின. பிரம்மதத்தன் நம்பூதிரியின் மந்திர உச்சாடனம் பாதியிலேயே நின்று போனது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"சீ, அசட்டுப் பூனையே!" என்றபடி அருகிலிருந்த சூலத்தால் அதைக் குத்தினார். அப்படியும் கோபம் தீராத அவர் சூலத்தையும், பூனையையும் அக்னி குண்டத்திற்குள் எறிந்தார். அவை நெருப்பில் கருகும் நாற்றம் பரவியது. உடனே ஊர்மிளா கேசவனை அழைத்துக்கொண்டு வந்த வழியே திரும்பினாள்.

"இப்பொழுது மகிழ்ச்சிதானே?" ஊர்மிளா கேட்டாள்.

"மிக்க நன்றியும் கூட!" கேசவன் கூறினான்.

"இப்படிச் சொன்னால் போதுமா?"

"வேறு என்ன சொல்ல வேண்டும்?"

"நீங்கள் இன்றைக்குப் போகக்கூடாது" பேசியபடியே அவள், அவன் உடலில் சாய்ந்தாள்.

"இப்படியும் இருப்பாளா ஒரு பெண்? நான் யாரென்று தெரியுமில்லையா?" அவன், அவளது தலைமுடியைக் கோதியபடி கேட்டான்.

அவளது கதகதப்பான மூச்சுக்காற்று அவன் மார்பில் பதிந்தது. அவளது தலையிலிருந்து காய்ச்சிய தேங்காய் எண்ணெயின் நறுமணம் வீசியது. உடலோ தாமரைப்பூ போல் வாசம் வீசியது.

"மாமாவை எதிர்க்க வருபவர் சாதாரணமானவராக இருக்க முடியாதல்லவா?" அவள், அவனது கழுத்து, மார்பு போன்ற பகுதிகளில் விரல்களை ஓட்டியபடியே கூறினாள்.

அந்த விரல்களின் பரிசம் ஆம்பல் பூ தொடுவது போல் இருந்தது. விரல் முனைகள் செம்பருத்திப் பூவின் மகரந்தத் தண்டுகள் போல இருந்தன. அதில் தேன்கூட இருந்திருக்குமோ என்னவோ?

"அது உனக்கெப்படித் தெரியும்?" தனது இதழ்களை அவளது காதோரம் சேர்த்து வைத்தபடி கேசவன் கேட்டான்.

"சிங்கத்துடன் போராட எலியா வரும்?"

"அப்படியானால் நான் சிங்கம் என்கிறாய். இல்லையா?"

"ஆமாம்."

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"சிங்கம் இந்தப் பெண் மானை என்ன செய்ய வேண்டும்?"

"மானை அடித்துத் தின்றுவிட வேண்டும்!"

"அப்படியே செய்கிறேன்" என்றபடி அவளை இறுக்கி அணைத்தான்.

அவர்களின் மார்புப் பகுதிகள் உரசிக் கொண்டன.

அப்பொழுது வாசற்படியருகே ஏதோ சத்தம் கேட்டது. இருவரும் திடுக்கிட்டு நிமிர்ந்து சட்டென்று பிரிந்தனர். கேசவன் வெளியே பார்த்தான். யாரையும் காணவில்லை. ஆனால், அந்த இருட்டிற்குள் யாரோ ஒளிந்திருப்பது போல் கேசவனுக்குத் தோன்றியது.

"யாரோ இருக்கிறார்கள்" என்று கிசுகிசுத்தான் கேசவன்.

"உண்மைதான். மாமா யாரையாவது அனுப்பி வைத்திருக்கலாம்" ஊர்மிளா கூறினாள்.

"நான் யாரென்று பார்த்துவிட்டு வருகிறேன்" கேசவன் எழுந் திருக்க முயன்றான்.

"நில்லுங்கள். நீங்கள் வெளியே போகக்கூடாது. இன்று இரவு முடிவடையும்போது நான் உங்களைப் பத்திரமாகக் கொண்டு போய் விட்டு விடுகிறேன்."

கேசவன் யோசித்தான். 'இன்றிரவு ஊர்மிளாவுடன் படுத்திருந்து, தன்னுடைய பிரம்மச்சரியம் இழந்து போகுமானால், தான் இனிமேல் செய்ய வேண்டிய காரியங்களுக்கு ஏதாவது தடை ஏற்படுமோ?'

எனவே அவன் கூறினான்: "ஊர்மிளா, உன்னை நான் மறக்க முடியாது. ஆனால் இன்று நான் எப்படியும் போயே தீரவேண்டும். உன் மாமாவை எதிர்க்க வேண்டுமென்றால், நான் மேலும் சிலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். பெண்ணுடன் தங்கியிருப்பது அதற்கு விக்கினம் ஏற்படுத்தும்."

"அப்படியல்ல, பிராமணப் பெண்களுடன் தங்கினால் பிரம்மச்சரியம் பழுதுபடாது என்று கேள்விப்பட்டேன்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். இப்போது நான் கிளம்புகிறேன். என்னை நம்பு!" சொல்லியபடி ஊர்மிளாவைக் கைகளில் தாங்கி, அவள் நெற்றியில் முத்தமிட்டான். "நான் மறுபடி வருவேன்" என்றபடி வெளியேறினான்.

கேசவனது கைக்கங்கணத்தில் மிருதசஞ்சீவினி யந்திரம் வரைந்த தாயத்து ஒன்று இருந்தது. இளவரசி கார்த்தியாயினி தேவியின் அரண்மனையிலிருந்து கிடைத்த ஒரு கிரந்தத்தில் அதற்கான மந்திரமும் இருந்தது.

கேசவனுக்கு பின்னாலேயே ஊர்மிளாவும் புறப்பட்டாள். ஆனால், அந்த இருளிலிருந்து யாரோ ஒருவர் சட்டென்று கேசவன் குட்டியின் கையைப் பிடித்து மேற்புறமாக உயர்த்தி வானமார்க்கமாகக் கொண்டு சென்றார்.

தான் மரங்களுக்கு மேலாகப் பறந்து கொண்டிருக்கிறோம் என்பது கேசவனுக்கு விளங்கியது. கண்ணுக்குத் தெரியாத வலிமையான ஒரு கரம் தன்னைப் பிடித்துக் கொண்டிருப்பதையும் கேசவன் உணர்ந்தான்.

வனதுர்காவின் கழுத்தில் கிடந்த ருத்ராக்ஷ மாலை காணாமல் போனதைச் சட்டென்று உணர்ந்தான். அன்றொரு நாள் கிட்டு ஆசான் தந்திருந்த தாயத்து - மிருத சஞ்சீவினித்தகடு பொருத்தியது தன்னிடம் இருப்பது ஞாபகம் வந்தது. சற்று நேரத்திற்குப் பிறகு கால் தரையில் பதிந்தது. முன்னால் மோகினி கோயில் தென்பட்டது. வசந்தசேனை கண்ணுக்குத் தெரிந்தாள்.

"என்ன செய்து கொண்டிருந்தீர்கள் அங்கு?" என்று கேட்டாள் அவள்.

"எங்கே என்ன செய்து கொண்டிருந்தேன் என்கிறாய்?"

"தானிய அறையில் அந்த நம்பூதிரிப் பெண்ணை நீங்கள் கட்டிப் பிடித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவள் எப்படிப்பட்டவள் என்பது தெரியுமில்லையா?"

"ஆனால், அவள்தான் உன்னைக் காப்பாற்றினாள் என்பது உனக்குத் தெரியுமா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அவள் எதற்காக என்னைக் காப்பாற்ற வேண்டும்? நீங்கள் தானே என்னைக் காப்பாற்றினீர்கள்?"

"நான் காப்பாற்றச் சென்றாலும் சரியான சமயத்தில் எனக்கு உதவியது அவள்தான்."

"அதற்காக அவளை சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமா என்ன?"

"உயிரைக் காப்பாற்றியவளுக்கு உடம்பையாவது தரலாம் என்றுதான்..." கேசவன் மென்று விழுங்கினான்.

"நான் ஒன்று சொல்லட்டுமா? நீங்கள் இப்பொழுது ஒரு மகத்தான விஷயத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். எங்கேயோ மறைந்திருக்கிற துர்காதேவி கோயிலைக் கண்டுபிடித்து அதற்குள் இருக்கும் மகத்தான மாந்திரீக ஓலையை எடுக்க வேண்டும். பிறகு அதில் உள்ள மந்திரங்களைப் படிக்க வேண்டும். அந்தத் துஷ்டனை எதிர்த்து வெல்ல வேண்டும். அவரது மருமகளை நீங்கள் தொட்டால், உங்களுடன் அவளையும் சேர்த்து அவர் கொன்று விடுவார்."

வசந்தசேனை கூறுவது அவ்வளவும் உண்மை என்பது கேசவனுக்குப் புரிந்தது. ஆனால் உயிரைக் காப்பாற்றிய ஊர்மிளாவை எப்படி மறக்க முடியும் என்று யோசித்தான்.

"கழுத்தில் கிடந்த ருத்ராக்ஷ மாலை எங்கே?"

"அது காணாமல் போய்விட்டது."

"இனிமேல் என்ன செய்வது? அந்த மாலைதானே உங்களுக்கு உதவி செய்தது - அதாவது ஒரு எல்லை வரையில். ஒருவேளை அவள் அதை எடுத்து வைத்துக் கொண்டாளோ?"

"அப்படியெல்லாம் இருக்காது" கேசவன் கூறினான்.

"பிறகு, எங்கு போயிருக்கும்?"

"ஒருவேளை அந்த அறையிலேயே கிடக்கிறதோ என்னவோ?"

If You Want More Free E-books
https://t.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இனி எப்பொழுது பூஜையைத் தொடங்குவது? மோகினி மந்திரம் ஜபித்து மையைப் பெற வேண்டமா?" வசந்தசேனை கேட்டாள்.

"நிச்சயமாக. நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை, பௌர்ணமியும் கூட. அன்றே ஆரம்பிக்கலாம்."

"நான் இங்கேயே காத்திருப்பேன்."

கேசவன் அரண்மனையை நோக்கி நடந்தான். வாசலைக் கடந்து உட்புறம் நோக்கியபோது, யாரோ வராந்தாவில் நிலவிளக்கின் அருகில் சப்பணமிட்டு உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

14

கேசவன் படிக்கட்டில் இறங்கி முற்றத்தில் கால் வைத்தான். துளசி மாடத்தை நெருங்கியபோதே உள்ளே இருப்பது யார் என்பது தெரிந்து விட்டது. இளவரசி கார்த்தியாயினி அங்கு உட்கார்ந்து எதையோ புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். கேசவன் அவளை நெருங்கிய பிறகும் அவள் தலை உயர்த்திப் பார்க்கவில்லை.

கேசவன் அவளை மிகவும் நெருங்கியபோதுதான் தலை நிமிர்த்தி, "யாரது? நீங்கள்தானா? எங்கே போயிருந்தீர்கள்?" என்றாள்.

"நான் மேலக்காவு மனைக்குச் சென்றிருந்தேன்."

"உண்மையாகவா? நீங்கள் அங்கே போயிருந்தீர்களா? பிறகு எப்படித் திரும்பி வந்தீர்கள்? அங்கே அந்த நம்பூதிரி இருப்பாரே!" இளவரசி கேட்டாள்.

"இருந்தார். ஆனால், நான் அவரைக் கவனிக்கவில்லை. அந்த வீட்டை மட்டும் சுற்றிப் பார்த்தேன். அவ்வளவுதான்."

"நான் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எதற்காகத் தெரியுமா? இந்த ஓலைச்சுவடியை உங்களிடம் தருவதற்காக. இதில் ஏராளமான மந்திரங்கள் உள்ளன. அதற்குத் தேவையான இயந்திரப் படங்களும் உள்ளன. வேண்டுமானால் இவற்றை நீங்கள் பரிசோதித்துப்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

பார்க்கலாம்" சொல்லியபடியே அவள் அந்த ஓலைச்சுவடியை அவனை நோக்கி நகர்த்தி வைத்தாள்.

மிகவும் பழையதான, புகை படிந்தது போன்ற ஓலைகள். நிலவிளக்கின் வெளிச்சத்தில் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. இருப்பினும் வட்டம், சதுர வடிவங்களில் பல இயந்திரங்கள் (தகட்டில் எழுதும் மந்திர வடிவங்கள்) தெரிந்தன.

"துர்காதேவி கோயிலைப் பற்றித்தான் நான் தெரிந்துகொள்ள வேண்டும்" கேசவன் கூறினான்.

"நீங்கள் இன்னும் அதைத்தான் தேடுகிறீர்களா? எத்தனையோ பேர் அதற்காக அலைந்தார்கள். ஆனால் தேடிச் சென்ற எவரும் இதுவரை திரும்பவே இல்லை."

"எதனால் அப்படி?"

"அந்தக் கோயில் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்தால்கூட, அதற்குள் செல்வது அவ்வளவு சுலபமல்ல. எவ்வளவோ தடைகளைத் தாண்ட வேண்டும். அதுமட்டுமல்ல; எந்த ஒரு மனிதனாலும் அங்கு போய்ச் சேரவே முடியாது."

"என்ன ஆனாலும் சரி, நான் அதைக் கண்டுபிடித்தே தீர வேண்டும். அதற்காக என்னுடைய ஜன்மம் முழுவதுமே போனாலும் பாதகமில்லை."

"கேசவன், நீங்கள் வைராக்கியமுள்ள, திடசித்தமுள்ள இளைஞர் என்பது எனக்குத் தெரியும். ஆனால், பாண்டவ மலையில் எங்கோ ஒளிந்துள்ள கோயிலுக்குள் நீங்கள் எப்படிச் செல்ல முடியும்? எப்படிப்பட்ட மந்திரங்களைக் கற்று அதற்குள் நுழைய வேண்டும் தெரியுமா?"

இளவரசி பேசிய வார்த்தையின் பொருள் கேசவனுக்கு விளங்கவில்லை. மோகினி மந்திரம் ஜபித்து, மை கிடைத்தால் கோயில் எங்கே இருக்கிறது என்கிற விவரம் தெரியும். அதற்குப் பிறகு சிக்கல் எதுவும் இருக்காதென்றுதான் அதுவரை நினைத்திருந்தான். ஆனால் நிலைமை அப்படி அல்ல என்கிறாள் இளவரசி.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அந்தக் கோயிலுக்குள் சுயம்புவான துர்காதேவியின் சிலை ஒன்று உள்ளது. அதன் கையில் இன்றுவரை யாருக்கும் கிடைக்காத வலிமை மிக்க மந்திரங்கள் அடங்கிய கிரந்தம் உள்ளது. அதைக் கைப்பற்றுபவர் இந்த உலகத்தில் எதையும் பெறலாம்; எவரையும் வெற்றி கொள்ளலாம்" என்றாள் இளவரசி.

"அப்படியானால் இதெல்லாம் உங்களுக்கும் தெரியுமா?" கேசவன் கேட்டான்.

"ஆமாம், நான் ஒரு ஆணாக இருந்தால், அதற்கான முயற்சியைக் கடுமையாக மேற்கொண்டிருப்பேன்."

"ஏன் அப்படி?"

"பெண்கள் அந்தக் கோயிலுக்குள் நுழைய முடியாது. ஆனால், ஒரு பெண்ணின் துணை அதற்குத் தேவை."

"புரியவில்லையே."

"பெண் கன்னிகையாக இருக்க வேண்டும். விரதத்தை மேற் கொண்டிருக்க வேண்டும். பிராமண குலத்தில் பிறந்தவளாக இருக்க வேண்டும்."

"ஓகோ, அப்படியா?" கேசவனின் மனம் உடனே ஊர்மிளாவை நினைத்துப் பார்த்தது. "வேறு என்ன நிபந்தனைகள் உள்ளன?" கேட்டான்.

"எல்லாவற்றையும் நான் உங்களுக்குச் சொல்லித் தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. உங்களுடைய ஒரு இரவை நீங்கள் எனக் காக ஒதுக்க வேண்டும்!" இதைக் கூறும்போது இளவரசி கார்த்தியாயினி யின் கண்களில் காமாக்னி ஜொலிப்பதை கேசவன் கவனித்தான்.

'தனக்கு முன்பாக நிற்கும் இவள் ஏதோ மந்திர தந்திரங்களின் உதவியால் மரணத்தையும், வயதையும் வென்று வாழ்கிறாள். தனது தணியாத தாகத்திற்கு எந்த ஆடவரையும் வலைவீசிப் பிடிப்பதில் இளவரசி கெட்டிக்காரி' என்பதையும் கேசவன் அறிந்திருந்தான்.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

'தான் இப்பொழுது இருக்கும் இந்தக் கிழக்குக் கோட்டை அரண்மனையின் மேற்குப்புறத்திலுள்ள ஆழமான குளத்திற்குள் எத்தனை எலும்புக் கூடுகள் இருக்கும் என்பதை உறுதியாகக் கூற முடியாது. அத்தனை பேரின் உயிரையும் கவர்ந்தவள் இந்த இளவரசி! அப்படிப்பட்ட ஒரு பெண்ணுக்கு முன்பாகத்தான் வந்து அகப்பட்டிருக் கிறோம்' என்று கேசவன் ஒரு கணம் நினைத்தான்.

"எனக்காக ஒரு இரவை நீங்கள் ஒதுக்க முடிந்தால், உங்களுக்கு நான் மிகவும் பயங்கரமான அந்த ரகசியத்தை சொல்லித் தருவேன். இல்லாவிட்டால், அந்தக் கோயிலுக்குள் கற்சிலைகளாய் நின்றுவிட்ட நாலைந்து மனிதர்களைப் போல் நீங்களும் மாறிவிட வேண்டியது தான்."

"என்ன? என்ன... சொன்னீர்கள்?" கேசவன் திடுக்கிட்டுக் கேட்டான்.

தான் இதுவரை தெரிந்து கொள்ளாத ஏதோ சில ரகசியங்களும், ஆபத்துகளும் அந்தக் கோயிலில் மறைந்துள்ளன என்பது அப்பொழுதுதான் அவனுக்கு விளங்கியது.

"இதற்கு முன்பும் சில வழிகளில் அதற்குள் சிலர் சென்றுள்ளனர். ஆனால், அந்தக் கிரந்தத்தைத் தொட்டு விட்டால், உயிருள்ள மனிதர்கள் அப்படியே கல்லாகச் சமைந்துபோய் விடுவார்கள். அந்தக் கிரந்தத்தை எடுப்பதற்கான சரியான மாற்று வழியை நீங்கள் தெரிந்துகொள்ள விரும்பினால் நான் சொன்ன நிபந்தனைக்கு நீங்கள் உட்பட வேண்டும்!" என்றாள் இளவரசி.

"யோசிப்பதற்கு எனக்குச் சில நாள் அவகாசம் தேவை."

"உங்கள் விருப்பம் போல் செய்து கொள்ளலாம். ஒரு நொடி என்னைப் பாருங்கள். என்னைப் போன்ற அழகான ஒரு பெண்ணை நீங்கள் வேறு எங்காவது பார்த்திருக்கிறீர்களா? ஒருவேளை மோகினிப் பெண்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அல்லது ஏதாவது கோயில்களில் சிற்ப வடிவங்களில் பார்த்திருக்கலாம். இயற்கையிலுள்ள எல்லாப் பொருள்களையும் குழைத்தெடுத்துத்தான் நான் பிறந்தேன் என்று என் அம்மா அடிக்கடி சொல்வார்கள்!" இளவரசி கூறினாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அவள் கூறியது அவ்வளவும் உண்மைதான். கடைந்தெடுத்தது போன்ற கைகால்கள், பளிங்கில் சிற்பி செதுக்கியது போன்ற மார்புப் பகுதிகள். அவளின் கண்கள், மூக்கு, உதடுகள் எல்லாமே இலக்கிய வர்ணனையில் உள்ளது போன்றவைதான். அவளது உடம்பிற்கே ஒரு பிரத்தியேகமான பூ வாசனை இருந்தது.

"உண்மையில் நீங்கள் அழகிதான். சந்தன மரத்தில் கடைந்தது போன்ற சிலை நீங்கள். ஆனால் என்னுடைய பிரமசரியம் நஷ்டமடைந்தால், லட்சியம் தடைப்படுமோ என்கிற பயம்தான் எனக்கு."

"கேசவன், நீங்கள் இந்த அளவு முட்டாளாக இருக்கிறீர்களே, நீங்கள் கைப்பற்ற விரும்பும் கிரந்தம் யாருக்கும் புண்ணியம் செய்வதற்கோ, நன்மை செய்வதற்கோ உள்ளதல்ல. அதில் இருப்பதெல்லாம் சக்தி வாய்ந்த மந்திரங்கள். எல்லாமே பைசாசிகமான தன்மை கொண்டவை. மிருகங்களையும், மனிதர்களையும் பலி கொடுத்து, இந்தப் பூமியிலுள்ள செல்வங்களை அடைவதற்கான மந்திர-தந்திரங்களே அதில் உள்ளன."

இளவரசி பேசுவதையே கவனித்துக் கொண்டிருந்தான் கேசவன். இதெல்லாம் அவனுக்குப் புதிய செய்திகளாக இருந்தன.

"இன்னுமொரு விஷயம் தெரியுமா உங்களுக்கு? வடமோகினி மந்திரத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? காலையில் மலரும் அலரிப்பூவை ஹோமித்து வடமோகினி யந்திரத்தில் ஆவாஹித்து பூஜை செய்தால், நள்ளிரவில் காட்சியளிக்கிற மோகினி கேட்பது என்ன? அவளுடன் ரதி கிரீடை நடத்த வேண்டுமென்பதுதான். அவ்வாறு செய்து அதில் அவள் மகிழ்ச்சியடைந்தால், அவள் அருளுவது செல்வங்களையும், சொத்துகளையும்தான். இப்படிச் செய்வதால் பூசிப்பவனுக்கு ஏதாவது நஷ்டம் நேருகிறதா என்ன?"

"இல்லை..." கேசவன் பதிலளித்தான்.

"அப்படியானால் உங்களது லட்சியத்துக்காக எனது ஆசைகளை நிறைவேற்றித் தந்தால் என்ன? இதோ. இந்த ஓலையில் என்ன சொல்லியிருக்கிறது தெரியுமா? தான் விரும்பும் லட்சியத்திற்காக எது செய்தாலும் அது தவறே இல்லை என்கிறது."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"என்னைக் கொஞ்சம் யோசிக்க விடுங்கள்."

"தாராளமாக யோசியுங்கள். நீங்கள் முழு மனதுடன் செய்ய வேண்டும். நான் ஒருபோதும் வற்புறுத்த மாட்டேன்!" இளவரசி சொல்லிவிட்டு எழுந்து போனாள். அவளது உடலிலிருந்த ஆபரணங்களின் சத்தம் மெதுவாகக் குறைந்து, மறைந்தது.

மறுநாள் இரவு கேசவன் மோகினி கோயிலை அடைந்தான். வசந்தசேனையை சந்தித்தான். எல்லா விவரங்களையும் அவளிடம் கூறினான்.

"இளவரசி கூறியதெல்லாம் சரிதான். இருப்பினும் மோகினி தேவதையை வரவழைத்து, அவளிடமிருந்து மை பெறுவது வரையில் உங்களுக்குப் பெண் தொடர்பு இல்லாமல் இருப்பதே நல்லது. எனவே, நாளை முதல் மோகினி ஹோமம் தொடங்க வேண்டியதுதான்."

"அப்படியே செய்து விடலாம். இதில் எந்தவித மாற்றமும் இல்லை" கேசவன் பதிலளித்தான்.

வசந்தசேனையின் உதவியுடன் காட்டின் மத்தியிலுள்ள இலுப்பை மரத்தின் கீழ், இலுப்பை மரப்பட்டைகளால் கூட்டப்பட்ட ஹோம குண்டத்தில், இலுப்பைப் பூவைத் தேனில் முக்கி கேசவன் ஹோமித்தான்.

"ஷ்ரீம் ஷ்ரீம் யக்ஷிணி ஹும் ஹும் ஹும் வாஹா..."

தங்கம் போன்ற ஒளியுடனும், ரத்தின ஆபரணங்கள் அணிந்து சிவந்த செம்பருத்திப்பூ நிறத்திலுள்ள பட்டாடைகளுடன், நாற்புறமும் காவல் நிற்கும் தோழியருடன் விளங்கும் மோகினி தேவியை வணங்குகிறேன்.

ஏழாம் நாள் நள்ளிரவு தாண்டியது. மோகினி தேவி காட்சியளித்தாள். தேவியின் வலது கை கேசவனுக்கு நேராக நீண்டது. அவன் தன் இரண்டு கைகளையும் நீட்டினான்.

தேவியின் கையிலிருந்து ஒரு தங்கச்சிமிழ் அவன் கையில் விழுந்தது.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நீ கேட்ட மை இதற்குள் உள்ளது. ஒரே ஒரு முறைதான் இதை உபயோகிக்க முடியும். மிகவும் முக்கியமான ஏதாவது ஒரு காரியத்திற்கு மட்டும் இதை உபயோகப்படுத்தவும். இதை ஒரு முறைக்கு மேல் ஒருவருக்கு நான் வழங்க முடியாது!" சொல்லிவிட்டுத் தேவியின் வடிவம் மறைந்தது.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வசந்தசேனை கேசவனை நெருங்கினாள்.

"தேவி அருள் செய்து விட்டாள் இல்லையா?"

"ஆமாம். இதை இப்போதே சோதித்துப் பார்த்து விடலாமே."

"செய்யுங்கள்."

கேசவன் தன் வலது உள்ளங்கையில் அந்த மையைக் கவிழ்த்தான். சரியாக அதில் ஒரே ஒரு துளி மட்டுமே இருந்தது. விழுந்த வேகத்தில் மை வட்ட வடிவில் பரவியது. கேசவன் மனதிற்குள் மந்திரித்தான். 'தேவி மஹாமாயே! நீங்கள் குடியிருக்கும் பாண்டவ மலைக்கோயிலை எனக்குக் காட்டுங்கள்."

கேசவன் உள்ளங்கை மையையே பார்த்துக் கொண்டிருந்தான். அதன் நிறம் மாறிக்கொண்டே வந்தது. அதற்குள் மின்னும் ஒரு துளி தெரிந்தது. அது விரைவில் பெரிதாகியது. அந்த வட்டப் பரப்பிற்குள் பாண்டவன் மலை தெளிவாகத் தெரிந்தது. அதன் சிகரங்கள் தென்பட்டன. படிப்படியாக அந்தக் காட்சி இறங்கி வந்தது. மத்தியப் பகுதிக்கு வந்ததும் அப்படியே நின்றுவிட்டது. அங்கு சதுர வடிவிலிருந்த பாறை ஒன்று நகர்ந்து விலகியது. அதற்குள் சுருங்கல் தூண்களை தாங்கிய பகுதியில். பூத கணங்கள் காவல் நின்றபடி தங்கப் பாம்புகள் இழைந்து கொண்டிருந்த குகைக் கோயிலில். சாட்சாத் துர்காதேவியின் சிலை தெரிந்தது. தேவியின் ஒரு கையில் தனக்குத் தேவையான கிரந்தமிருப்பதைக் கேசவன் கண்டான்.

தேவியின் சிலை மீது பாம்புகள் இழைந்து கொண்டிருந்தன. கொடிய விஷமுள்ள பாம்புகள். அந்த மாந்திரீகக் கிரந்தத்தையும் பாம்புகள் சுற்றிப் பிடித்திருந்தன.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

'எப்படி அதை எடுப்பது?' கேசவன் யோசித்தான். தொடர்ந்து மற்றொரு காட்சியும் தெரிந்தது. அந்த விக்கிரகத்தின் கீழே ஐந்து கருங்கல் சிலைகள். அவையெல்லாம் மனித வடிவில் இருந்தன.

இளவரசி கார்த்தியாயினி கூறியது உண்மைதான். அதில் எந்தவிதமான தவறும் இல்லை. தன்னைப்போலவே துர்காதேவியின் கோயிலைக் கண்டுபிடித்து கிரந்தத்தை எடுக்கச் சென்றவர்கள்தான் அவர்கள். ஆனால், அதைக் கைப்பற்றுவதற்கு முன்பு அவர்கள் கற்சிலைகளாகி விட்டனர்.

மலையின் அடிப்பகுதியில் பயங்கரமாக நீர் விழுந்து சிதறும் ஓர் நீர்வீழ்ச்சி தெரிந்தது. அத்துடன் உள்ளங்கையில் தெரிந்த காட்சி மறைந்தது. மையின் அடையாளமும் மறைந்தது.

"எல்லாவற்றையும் பார்த்து விட்டீர்களா?" வசந்தசேனை கேட்டாள்.

"வரவிருக்கும் ஆபத்தையும் பார்த்தேன்."

"என்ன ஆபத்து?"

"அந்த கிரந்தத்தை எடுக்கச் சென்று சிலையாக மாறிய ஐந்து பேர்... இப்பொழுது என்ன செய்யலாம்?" கேசவன் கேட்டான்.

"இளவரசியின் நிபந்தனைக்குக் கட்டுப்பட வேண்டியதுதான். அதில் தவறில்லை. ஒரு பெண்ணின் வேண்டுகோளை நீங்கள் ஒதுக்கித் தள்ளக்கூடாது. அத்துடன் ஆபத்தில் சிக்காதிருக்கவும் வேண்டும்."

"கவனமாக இருக்கிறேன்" என்றபடி கேசவன் விடைபெற்றான்.

கிழக்குக் கோட்டை அரண்மனையின் படுக்கை அறையில் இரவின் மூன்றாம் ஜாமத்தில் கேசவன் படுத்திருந்த போது, அவனது நெஞ்சில் மிருதுவான கை ஒன்று தவழ்வது தெரிந்தது.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

15

மென்மையான கைவிரல்கள் கேசவனது அகன்ற மார்பில் அளைந்து கொண்டிருந்தன.

இளவரசிக்கு இளமை திரும்பியிருந்தது. அவளது மூச்சுக்காற்று கேசவனின் கன்னங்களிலும். கழுத்துப் பகுதிகளிலும் பட்டுப் படர்ந்தது. உணர்வுகளின் மூச்சுத் திணறலில் காலத்தைப் பின்தள்ளியபடி விரைந்து கொண்டிருந்த அந்த க்ஷத்திரியப் பெண், கேசவன் மீது தன்னுடைய பாரத்தைச் சுமத்தினாள்.

இதற்கு முன்பெல்லாம் இளவரசியை நெருங்கிய ஆண்கள் அவளது மதர்ப்பேறிய உடலழகுக்கு முன்பாக அடிபணிந்து நிலைகுலைந்து தோல்வியடைந்தனர். அவளது உணர்வுகளை வெல்ல அவர்களால் முடியாமலிருந்தது. அந்த ஒரு காரணத்தினாலேயே அவர்கள் அனைவரும் இளவரசியின் வாளுக்கு இரையாகினர். அவர்களின் உயிரற்ற உடம்புகள் கிழக்குக் கோட்டை அரண் மனையின் மேற்குப் பகுதியிலுள்ள பாசி பிடித்த குளத்திற்குள் அமிழ்ந்துள்ளன.

ஆனால், முறையான போர்ப் பயிற்சி பெற்றுள்ள, பஞ்ச இந்திரியங் களையும் தனது கட்டுக்குள் அடக்கி வைத்திருந்த கேசவனுக்கு முன்பாக இளவரசி தோல்வியடைந்துதான் போனாள்!

அறை விளக்கைக் கொளுத்தியபோது கட்டிலில் மல்லாந்த படியே உடையற்ற உடம்புடன் படுத்துக் கிடக்கும் ஒரு சிலைபோல் இளவரசி கிடந்தாள். அவளது கழுத்தில் வைரக்கற்கள் பதித்த தங்கப்பதக்கமிருந்தது. ஏராளமான சவரன்கள் கொண்ட காசு மாலை, இடுப்பில் தங்கப்பாம்பு சுற்றியிருப்பது போன்ற அரைஞாண் கொடி. கையின் மணிக்கட்டுகளில் தங்கக்காப்புகள். கேசவன் அருகில் கிடந்த துணியை எடுத்து அவள் உடம்பை மூடினான். உடனே இளவரசியின் கண்கள் திறந்து கொண்டன.

"இனி அந்த ரகசியத்தைக் கூறலாம் அல்லவா?" கேசவன் கேட்டான்.

"சொல்லித் தருகிறேன்."

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

எழுந்து உடையைச் சரிப்படுத்திக் கொண்டாள் இளவரசி. கேசவன் எழுந்து, அருகிலிருந்த சிற்ப வேலைப்பாடமைந்த நாற்காலியில் அமர்ந்தான்.

"உங்களுக்கு அந்தத் துர்கா கோயிலைப் பற்றி ஏதாவது தெரியுமா?" இளவரசி அவனிடம் கேட்டாள்.

"நீங்கள் மையில் பார்த்தற்கும் நான் கூறிய விவரங்களுக்கும் ஏதாவது வேறுபாடு இருந்ததா?"

"துளிக்கூட வித்தியாசமில்லை. ஆமாம், இவ்வளவு விவரங்களையும் நீங்கள் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?"

"அந்தக் கோயிலைக் கட்டிய உதயவர்மனின் ஒரு ஓலையை நான் வெகு நாட்களுக்கு முன்பே பார்த்திருக்கிறேன். அதில் நான் படித்துத் தெரிந்து கொண்டதை வைத்துச் சிலவற்றை நானாக ஊகித்தேன். அது சரியாக இருக்கிறது."

"அந்தக் கிரந்தத்தை எடுக்கச் செல்கிறவர்கள் கல்லாகி விடுவார்கள் என்பதுகூட அதில் எழுதப்பட்டுள்ளதா?"

"ஆமாம்."

"அப்படியானால் அதை எப்படி எடுப்பது?"

"கர்ப்பிணியான - ஆனால் திருமணமாகாத ஒரு பிராமணப் பெண்ணால் மட்டுமே தேவியின் கையிலிருந்து அந்தக் கிரந்தத்தை எடுக்க முடியும். அதற்கும் ஒரு காரணம் உள்ளது. கர்ப்பிணியான ஒரு பிராமணப் பெண்ணைச் சபித்துக் கல்லாக்க தேவியால் முடியாது. சடங்கு முறைப்படி அவள் திருமணமாகியிருந்தால், கன்னி அல்ல என்றாகிவிடும். இப்படிப்பட்ட ஒரு பெண் ஒருபோதும் கிடைக்க மாட்டாள் என்பதுதான் மற்றொரு உண்மை."

"ஒரு சந்தேகம் கேட்கலாமா?"

"கேளுங்கள்."

"அப்படி ஒரு பெண் இதற்கெல்லாம் உடன்பட்டு கர்ப்பிணியானால், அவளுடன் ஒரு ஆணும் செல்ல முடியுமா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அதற்கு ஏதேனும் விதிவிலக்கு இருக்கலாம்."

"இந்த ரகசியத்தை வெளிப்படுத்தியமைக்கு நன்றி. இந்த விவரத்தைத் தெரிந்து கொள்ளவே நான் இங்கு வந்தேன்."

"நீங்கள் இந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் ஒரு வெற்றி வீரன். போகப் பிரியையான வட மோகினி தேவிகூட உங்களது ஆண்மையின் முன்பாக அடிபணிந்து விடுவாள்" இளவரசி சொல்லிவிட்டு அந்த அறையிலிருந்து வெளி யேறினாள்.

மிகவும் பயங்கரமான அந்த ரகசியம் வெளிப்பட்டதில் கேசவன் குட்டி ஓரளவு நிம்மதியடைந்தான். அடுத்த தேவை ஒரு பிராமணக் கன்னி. இப்பொழுதைய நிலையில் அதற்கு எந்தவிதமான தடையும் இருக்கப் போவதில்லை.

தனது சக்தி வாய்ந்த எதிராளியான பிரம்மதத்தன் நம்பூதிரியின் மருமகள் ஊர்மிளா இருக்கவே இருக்கிறாள். கேசவனது லட்சிய ஸித்திக்காகவே அவர் அவளை வளர்த்து வருகிறார்.

மறுநாள் கேசவன் ஆற்றோரமாக நடந்து சென்றபோது கிட்டு ஆசானை சந்தித்தான். அவனைப் பார்த்துவிட்டு அவர் வேகமாக நடந்து வந்தார்.

"என்ன விசேஷம், ஓடி வருகிறீர்கள்?" கேசவன் கேட்டான்.

"எல்லாவற்றையும் சொல்கிறேன். முதலில் என்னுடன் புறப்படு. உன்னைத் தேடிக் கொண்டுதான் வருகிறேன். நல்லவேளை, உன்னை இங்கேயே பார்த்து விட்டேன்."

விஷயம் என்னவென்று விளங்காவிட்டாலும் கிட்டு ஆசான் தேவையில்லாத விஷயத்திற்குத் தன்னை அழைக்க மாட்டார் என்று தெரிந்ததால், மேற்கொண்டு எதுவும் பேசாமல் அவருடன் நடந்தான். நாற்சந்தியை அடைந்தபோது கிட்டு ஆசான் "டீக்கடையில் உட்கார்ந்து பேசலாமே" என்றார். "சரி" என்றபடி கேசவனும் அவரைப் பின் தொடர்ந்தான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

டீக்கடைக்குள் உட்கார்ந்து டீ குடிக்கும்போது கிட்டு ஆசான் கூறினார்: "உனக்கு இதுவரை விஷயம் தெரியாமல் இருப்பதே வியப்பு தான். அந்தப் பவானியம்மாவின் மகள் மாலதியை ராவுண்ணியாரின் பையனுக்கு கல்யாணம் செய்து கொடுப்பது என்று தீர்மானமாகி விட்டது."

"உண்மையாகவா? அது மோசமான விஷயமாயிற்றே."

"கேசவன், இப்பொழுதெல்லாம் நீ பவானியம்மா வீட்டுப்பக்கம் போவதில்லையா?"

"உண்மைதான் ஆசானே! நான் அந்த வீட்டிற்குச் சென்று எத்தனையோ வாரங்களாகி விட்டன. ஒரு வகையில் பார்த்தால் இது நன்றியற்ற செய்கையாகவே தோன்றுகிறது. இதற்கு என்ன செய்வது?" கேசவன் கேட்டான்.

"செய்வதற்கு ஒன்றுமில்லை. அந்தப் பெண்ணைக் காப்பாற்ற வேண்டுமென்று நீ விரும்பினால், எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிட வேண்டியதுதான்."

"எப்படி நிறுத்துவது? ஒருவேளை பவானியம்மாவிடம் உண்மையைச் சொல்லி விடலாமா?"

"அதையெல்லாம் நீயே தீர்மானித்துக் கொள். நீ சொன்னால் ஒருவேளை அவர்கள் கேட்கலாம்"

"அப்படியானால் நீங்களும் என்னுடன் வாருங்கள். நாம் இருவருமாகச் சென்று பேசிப் பார்ப்போம்."

இருவரும் பவானியம்மாவின் வீட்டிற்குச் சென்றார்கள். அம்மாவும் பெண்ணும் நல்லவேளையாக வீட்டில் இருந்தனர்.

"நல்ல ஆளப்பா! இந்தப் பக்கம் உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாகிறது? எங்களையெல்லாம் மறந்து விட்டாய் என்றல்லவா நினைத்தோம்" பவானியம்மாள் ஆர்வத்துடன் விசாரித்தாள்.

"நான் இங்கு வந்ததே ஒரு முக்கியமான விஷயத்திற்காகத்தான். சொன்னால் அது உங்களுக்குப் புரியுமோ என்னவோ? அதெல்லாம்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இருக்கட்டும். மாலதியின் கல்யாணம் நிச்சயம் ஆகிவிட்டதாமே..." கேசவன் கேட்டான்.

இவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது மாலதி துளசி மாடத்தில் மண்ணைக் கொத்திவிட்டுக் கொண்டிருந்தாள். நடுநடுவே அவள் கேசவனைக் கவனித்துக் கொண்டுமிருந்தாள். குறைந்த நாட்களே பழகியிருந்தாலும் அவள் கேசவனை விரும்பினாள். ராவுண்ணியார் மகனைத் திருமணம் செய்ய அவள் ஒப்புக்கொண்டது அம்மாவின் வற்புறுத்தலுக்காகவே.

"இந்தக் கல்யாணத்தை இவ்வளவு விரைவில் நடத்த நினைப்பது நல்லதாகத் தெரியவில்லை" கேசவன் கூறினான்.

"நாங்கள் எந்தவிதமான ஆதரவும் இல்லாமல் இருந்த பொழுதுதான் நீ வந்து சேர்ந்தாய். உண்மையைச் சொல்வதானால் நாங்கள் என்னவெல்லாமோ ஆசைப்பட்டோம். ஆனால் அதற்குப் பிறகு நீ வராமற் போகவே என் மனதிலிருந்த ஆசைகளும் அடங்கிப் போனது. சரி, என்னவானாலும் ஆகட்டும் என்றுதான் இந்தக் கல்யாணத்திற்கு ஒப்புக் கொண்டேன். அவளுக்கும் காலா காலத்தில் ஒரு கல்யாணம் நடக்க வேண்டியதுதானே?" பவானியம்மாள் கூறினாள்.

"நீங்கள் சொல்வது சரிதான். ஆனால், நான் வந்திருப்பது வேறொரு முக்கியமான விஷயத்திற்காக. அதைப்பற்றி இப்பொழுது உங்களிடம் எதுவும் சொல்ல முடியாது."

"சரி, அது முடிய எவ்வளவு நாட்களாகும்?"

"அதையும் சொல்ல முடியாது. அதெல்லாம் இருக்கட்டும். எப்படி இருந்தாலும் இந்தக் கல்யாணம் நல்லதற்கல்ல."

பவானியம்மாள் இதற்குப் பதில் தராமல் சற்று நேரம் மௌனமாக நின்றாள்.

பிறகு, "நான் எதற்காக சுற்றி வளைத்துப் பேசவேண்டும்? நேரடியாகவே கூறுகிறேன். நீங்கள் இவள் விஷயத்திற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்வதாக இருந்தால், இந்த நிமிடமே இந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடுகிறேன்" என்றாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நல்லது. மாலதியின் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்" கேசவன் எழுந்தான்.

"கல்யாணத்திற்குத் தேதி குறித்துவிட்டுப் போயிருக்கிறார்கள். ஒருவேளை, ஏதாவது விஷமம் செய்தாலும் செய்வார்கள். அதற்கு நான் என்ன செய்வது?" பவானியம்மாள் கேட்டாள்.

"என்றைக்குக் கல்யாணம்?"

"அடுத்த திங்கட்கிழமை."

"எங்கே நடக்கிறது?"

"மேலக்காவு மனையைச் சேர்ந்த ஒரு கோயிலில்!"

கேசவனுக்குச் சட்டென்று விவரம் புரிந்தது. எல்லாவற்றுக்கும் பின்னணியாக இருப்பது பிரம்மதத்தன் நம்பூதிரிதான். கல்யாணம் என்கிற ஒரு சடங்கு பெயரளவில் நடந்துவிட்டால், பிறகு தனது விருப்பப்படி அவளைப் பயன்படுத்திக் கொள்ள பிரம்மதத்தன் நினைத்திருக்கலாம்.

"அப்படியானால் கிட்டு ஆசானே! நீங்கள் அந்த ராவுண்ணி யாரைப் பார்த்து இந்தக் கல்யாணம் சரிப்படாது என்று சொல்லி விடுங்கள். யார் சொல்லியனுப்பியது என்று கேட்டால் நான் சொன்ன தாகச் சொல்லுங்கள். அதற்குப்பிறகு நடப்பதை அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்" கேசவன் கூறினான்.

சொன்னபடியே கிட்டு ஆசான், ராவுண்ணியாரிடம் விவரத்தைத் தெரியப்படுத்தினார். 'ஓகோ அப்படியா விஷயம்?' என்றபடி ராவுண்ணியாரும் நெற்றியைச் சுளித்தார்.

செய்தியைக் கேள்விப்பட்டவுடன் அவர் நேராக பிரம்மதத்தன் நம்பூதிரியிடம் ஓடினார்.

பிரம்மதத்தன் அவர் வீட்டுத் திண்ணையில் சாய்வு நாற்காலி போட்டு அமர்ந்திருந்தார். அவரது காலின் அருகே வெற்றிலைப் பெட்டி இருந்தது. மற்றொரு புறத்தில் எச்சில் துப்பும் கோளாம்பிப் பாத்திரம் இருந்தது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

மிகவும் அழகான. முப்பது வயது மதிக்கக்கூடிய பெண் ஒருத்தி அவரது காலை அமுக்கிவிட்டுக் கொண்டிருந்தாள். முதல் பார்வையி லேயே எப்படிப்பட்ட துறவியையும் மனம் தடுமாறச் செய்யும் அழகு அவளுக்கு இருந்தது.

நம்பூதிரியைப் பற்றி ராவுண்ணியாருக்கு நன்றாகத் தெரியுமாத லால் அவர் வேறு எதைப் பற்றியும் நினைக்கவில்லை. ராவுண்ணி யாரைப் பார்த்ததும் அந்தப் பெண் எழுந்து செல்லாமல் காலைப் பிடித்துவிட்டுக் கொண்டே இருந்தாள்.

"என்ன ராவுண்ணியாரே, என்ன விசேஷம்? உம் முகத்தைப் பார்த்தால் என்னவோபோல் இருக்கிறதே..." அவர் படுத்திருந்த நிலையிலேயே தலையை ஒருபுறமாகச் சாய்த்துப் பார்த்தபடி கேட்டார்.

"நமது திட்டமெல்லாம் பாழாகி விட்டது என்று தோன்றுகிறது. யாரோ ஒருத்தன் வந்து இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதிக்க முடியாது என்கிறானாம்."

"ஏன்? என்ன ஆகிவிட்டதாம்?" நம்பூதிரி சட்டென்று துள்ளி எழுந்தார்.

"யாரோ ஒரு கேசவன் குட்டி ஆள் கொஞ்சம் முரடன் போல் தெரிகிறதாம். கிட்டு ஆசான்தான் என்னிடம் விஷயத்தைக் கூறினார்."

"ஓஹோ அப்படியா விஷயம்? சிங்கத்தோடு சிறு நரி மோதப் பார்க்கிறதா? அவன் எங்கே வசிக்கிறானாம்?"

"அந்தக் கிழக்குக் கோட்டை அரண்மனையில்தான்."

"என்ன அந்தப் பிசாசிடமா? இளவரசி கார்த்தியாயினி உள்ள பொழுது அங்கு வேறு யாராவது வசிக்க முடியுமா? அவள் அவனைப் பச்சையாகவே தின்று விடுவாளே!"

"என்னவோ தெரியவில்லை. அவனையும் நான் நேரில் பார்த்திருக்கிறேன். வித்தைகள் கற்றவன் மாதிரி தெரிகிறான்."

"அப்படியானால் இளவரசி அவனுக்கு முன்னால் அடிபணிந்து விட்டாள் என்று அர்த்தம். ஒன்று செய். நாளை இரவு நம்முடைய ஆட்களில் பத்துப் பேரை அழைத்துக்கொண்டு அந்த இடத்திற்குச்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

செல். இளவரசியை மகிழ்ச்சிப்படுத்தியபடி அவனும் அங்கே படுத்திருப்பான். நீங்கள் திரும்பி வரும்பொழுது ரத்தம் ஒழுகும் அவனது தலை உங்களது கையில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் உங்களில் ஒருவனைக் காளிக்கு பலி கொடுத்துவிடுவேன். புரிகிறதா?" எச்சரித்தார் நம்பூதிரி.

தலையாட்டியபடி ராவுண்ணியார் விடைபெற்றார்.

அடிதடிகளில் தேர்ந்த ஒரு படையே அவருடைய மனக் கண்ணில் தட்டுப்பட்டது. அதில் பன்னிரண்டு பேரை ராவுண்ணியார் மனதிற்குள் தேர்ந்தெடுத்தார்.

அன்று இரவு நம்பூதிரி தென்கிழக்கு மூலைக்குச் சென்று, எட்டி மரத்திற்குக் கீழிருந்து ஒரு சிறிய பொம்மையை எடுத்து மந்திரம் ஜபித்து நகர்த்தி வைத்தார்.

கண்மூடித் திறப்பதற்குள் மேனகை போல் ஒரு பெண் அங்கிருந்து எழுந்தாள்.

"ஆளைக்கொன்று ரத்தம் குடித்த பிறகுதான் வரவேண்டும். தெரியுமா? ம்... புறப்படு!" நம்பூதிரி ஆணையிட்டார்.

அந்த உருவம் பைசாசிகமாகச் சிரித்தது.

16

அவள் புறப்படுவதற்கு முன்பாக, நம்பூதிரி அவளுக்கு ஒரு பெயரையும் வழங்கினார், சௌபர்ணிகா.

"உனக்கு நான் இந்தப் பெயரைத் தருவது அவனைக் கவர்வதற்காக! பேரழகும் நளினமும் கொண்ட ஒரு பெண்ணாக நீ நடிக்க வேண்டும். புரிகிறதா?" நம்பூதிரி மறுபடியும் எச்சரித்தார்.

மனம் மயக்கும் ஒரு தேவகன்னிகை போல் அவள் நின்றிருந்தாள். அந்த நிலையில் அவனைப் பார்த்த பிரம்மதத்தன் நம்பூதிரிக்கே உணர்வுகள் கூர்மையடைந்தன. வெகுநாட்களாகப் பெண்களின் தொடர்பற்றிருந்த நம்பூதிரி முதலில் அவளைத் தனது படுக்கை

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அறைக்கு அழைத்துச் சென்றார். அதன்பிறகு அரை மணி நேரம் கழித்து அவள் கேசவன் குட்டியை நோக்கித் தனது பயணத்தைத் தொடர்ந்தாள்.

கிழக்குக் கோட்டையின் பிரதான வாசலைக் கடந்து சௌபர்ணிகா வேகமாக உள்ளே நுழைந்தாள். நேரம் நள்ளிரவின் மூன்றாம் யாமம் முடியும் தருணம். அங்கிருந்த ஒரு பாலை மரத்தடியில் சற்று நேரம் ஓய்வாக அமர்ந்தாள்.

மறுநாள் கேசவன் பவானியம்மாவின் வீட்டிற்குச் சென்றான். அவனைப் பார்த்ததும் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

"உங்களைத்தான் எதிர்பார்த்துக் காத்திருந்தோம்" பவானியம் மாள் கூறினாள்.

"ஏதாவது விசேஷம் உண்டா?"

"இன்று விடியற்காலை திரும்பவும் ராவுண்ணியார் வந்திருந்தார்."

"மறுபடியும் கல்யாணத்தைப் பற்றிப் பேசுவதற்காகவா?"

"அதுமட்டுமல்ல. அவர் வேறு பல விஷயங்களையும் கூறினார்."

"சொல்லுங்கள்."

"மாலதியைக் கல்யாணம் செய்து கொடுத்தால் அவள் பெயரில் ஐந்து ஏக்கர் தென்னந்தோப்பையும், ஐந்து ஏக்கர் நெல் வயலையும் எழுதித் தருகிறார்களாம். எதற்காக என்று கேட்டேன். கல்யாணத் திற்குப் பிறகு மாப்பிள்ளைக்கு ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால், எனக்கும் மாலதிக்கும் அது உதவுமாம். காசும், நகையும் கேட்காமல் இப்படி யாராவது ஒரு கல்யாணம் செய்து கொண்டு போவார்களா?"

உக்கிர மூர்த்தியான கண்டாகர்ணன் என்கிற தேவதைக்கு நரபலி கொடுத்தால் கிடைக்கும் பலன்களைப் பற்றி இளவரசியிடமிருந்து கேசவன் பெற்றுக்கொண்ட ஓலையில் குறிப்பு இருந்தது. கேசவன் அதை நினைவுபடுத்திக் கொண்டான்.

அப்படியொன்று நிகழ்ந்து விட்டால், அதன் பிறகு யாராலும் அவரை வெல்ல முடியாது. தன்னுடைய ஆவியைக் கூடுவிட்டுக் கூடு

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

மாற்றி காலா காலத்திற்கும் மரணமில்லாதவராக விளங்கலாம். என்றென்றும் இளைஞனாகவே இருந்து, நம்பூதிரி தனது செயல்களைத் தொடரலாம். அவரை அப்படிப் போக விட்டுவிடக் கூடாது. இந்த நிலைக்குப் பிறகு அவர் துர்கா கோயிலுக்குள் நுழைந்து அங்கிருந்து அந்தக் கிரந்தத்தையும் கைப்பற்ற முயலலாம். அதுவும் நடந்துவிட்டால் அதன்பிறகு யாருமே அவரை வெல்ல முடியாது. ஏற்கெனவே மிக மோசமான மனிதரான அவர், அதன்பிறகு ஊரில் கன்னிப் பெண்களே இல்லாமல் செய்து விடுவார். இப்படியெல்லாம் யோசனையில் ஈடுபட்ட கேசவன் பவானியம்மாவிடம் கேட்டான். "நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"கேசவா. இதுபோன்ற ஒரு கல்யாணம் வேறு எங்காவது அமையுமா? யோசித்துப் பார்த்து நாளைக்கு முடிவு சொல்கிறேன் என்று சொல்லியனுப்பியிருக்கிறேன்."

"என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?"

"எனக்கு இவளுடைய எதிர்காலம்தானே முக்கியம்?"

'இருக்கிற உண்மையை நேரடியாகக் கூறிவிடலாமா? அல்லது வேறு ஏதாவது ஒருவகையில் அவர்களைப் பின்வாங்க வைக்கலாமா?' என்று கேசவன் யோசித்தான்.

'உங்கள் மகளைக் கொண்டு போய் நரபலி கொடுக்கப் போகிறார்கள்' என்று கூறினால் ஒருவேளை நம்பாமலும் போகலாம். இப்பொழுது அவர்களது நோக்கம் மகளது திருமணம் மட்டுமே. நானே உங்கள் மகளைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொன்னால்கூட நம்ப மாட்டார்கள். ஆனால், நமது தேவை, இவள் எப்படியும் பிரம்மதத்தன் கையில் சிக்காமல் இருப்பதுதான். அவளைக் காப்பாற்றுவதுடன், நம்பூதிரியின் பைசாசிகமான ஆசையையும் ஒழித்துவிட வேண்டும்.

"நாளைக்கு அவர் இங்கே வருவதாகத்தானே சொல்லியிருக்கிறார்" கேசவன் குட்டி கேட்டான்.

"ஆமாம்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அப்படியென்றால் அவர்கள் தருவதாகச் சொன்ன தென்னந் தோப்பையும், வயலையும் முதலில் எழுதித் தரச்சொல்லுங்கள். நானும் உங்களுடன் வருகிறேன். அதன்பிறகு கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று கூறுங்கள்."

'இதுவும் நல்ல யோசனைதான்!' என்று பவானியம்மாவுக்குத் தோன்றியது. "அப்படியே சொல்கிறேன்" என்றாள்.

கேசவன் விடைபெற்றான்.

அன்று இரவு உணவுக்குப் பிறகு வராந்தாவில் உட்கார்ந்தபடி நிலவிளக்கின் ஒளியில் இளவரசி தந்துவிட்டுச் சென்ற ஓலைச் சுவடிகளைப் புரட்டிக் கொண்டிருந்தான் கேசவன்.

சட்டென்று வாசல் பக்கமாக யாரெல்லாமோ வருவது தெரிந்தது. அவர்களைப் பார்த்தவுடன் எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதும் விளங்கியது. தன்னுடைய படுக்கை அறையின் சுவரில் ஒரு வாள் தொங்குவது நினைவுக்கு வந்தது. அதை உருவி எடுத்துக்கொண்டு கேசவன் வெளியே வந்தான்.

அடுத்த நிமிடம் ஒரு கடுமையான சண்டை அங்கு நிகழ்ந்தது. கேசவன் எல்லாரையும் காயப்படுத்தினான். ராவுண்ணியார் ஓடித் தப்பித்தார். கடைசியாகக் கேசவன் சொன்னான். "அந்த நம்பூதிரியிடம் போய்ச் சொல்லுங்கள். ஆயுதங்களால் என்னை வெல்ல முடியா தென்று. அவருக்குத் தெரிந்த மந்திர வித்தையிலும் நான் மோசமான வனில்லை. போய்ச் சொல்லுங்கள்."

எல்லாரும் காயப்பட்டுத் திரும்பியபோது கேசவன் வராந்தாவில் நின்றுகொண்டிருந்தான். சட்டென்று அந்தப் பகுதி முழுவதும் மல்லிகையின் மணம் நிறைந்தது. வாசலைத் தாண்டி யாரோ வருவதுபோல் தெரிந்தது.

பக்கத்தில் வந்தபோது தெரிந்தது. ஏறத்தாழ இளவரசி மாதிரியான உடலமைப்பில், இளமை ததும்பும் பதினேழு வயதுப் பெண்.

"என்ன வேண்டும் உனக்கு?" கேசவன் கேட்டான்.

"இந்த அரண்மனையின் கடைசி வாரிசு நான். பெயர் கார்த்திகா. என் அப்பாவும் பின்னால் வருகிறார்." வாசலைத் தாண்டி ஒரு நடு

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

வயதுக்காரர் வந்தார். நல்ல உயரமும், ஆரோக்கியமும் நிறைந்த உடல்.

"இந்த நேரத்தில் நீங்கள் இங்கு வரக் காரணம்?"

"நாங்கள் வருடம் தோறும் இதே நாளில் இங்கு வருவதுண்டு. நாளைக் காலை துர்கா கோயிலில் எங்களுக்குப் பூஜை உள்ளது. ஒவ்வொரு வருடமும் கார்த்திகை நட்சத்திரத்தின்போது நாங்கள் வருவோம். அந்தத் தேவியின் பெயரைத்தான் எனக்கும் வைத்திருக்கிறார்கள். கார்த்திகா."

"சரி. பிரயாணக் களைப்பு இருக்கும், ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" கேசவன் கூறினான்.

"நீங்கள் யாரென்று தெரியவில்லையே..." கார்த்திகா கேட்டாள்.

"என் பெயர் கேசவன். நான் இங்கு வசிக்கிறேன்."

"தனியாகவா இருக்கிறீர்கள்?"

"சில நேரம் இளவரசியும் இங்கு இருப்பார்கள்."

"யார்? கார்த்தியாயினி இளவரசியாரா?"

"ஆமாம். தெரியாதா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் இப்பொழுதும் உயிருடன் இருக்கிறாரா?"

"நீங்கள் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கூறிவிட்டு அவரைப் பற்றித் தெரியாமல் இருக்கிறீர்களே."

பெரியவர் வராந்தாவில் ஓர் ஓரமாக சுவரில் சாய்ந்து உட்கார்ந்தார். கார்த்திகாவும் திண்ணையில் உட்கார்ந்தாள். முற்றத்தில் நிலவொளி படர்ந்திருந்தது.

துர்கா கோயில் என்ற பெயரைக் கேள்விப்பட்டதும் கேசவனுக்கு ஆர்வம் தோன்றியது. நாமும் அதைத்தானே தேடுகிறோம் என்பது நினைவுக்கு வந்தது. இப்பொழுது அதன் வாரிசுதாரர்கள் பூஜை செய்வதற்கும் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"துர்கா கோயில் எங்கே இருக்கிறது?"

"மலை இடிந்து அதை மூடியபிறகு அது எங்கே இருக்கிறதென்று யாருக்கும் தெரியவில்லை. ஒரு அடையாளத்தை வைத்துக் கொண்டு நாங்கள் பூஜை செய்கிறோம்."

"அப்படியானால் கோயிலின் சரியான இருப்பிடம் உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாது" என்றாள் கார்த்திகா. பிறகு பெரியவரைப் பார்த்து, "அப்பா நீங்கள் வேண்டுமானால் உள்ளே சென்று படுத்துக் கொள்வது தானே! நான் கொஞ்ச நேரம் இங்கு நிலா ஒளியில் காற்றாட இருந்து விட்டு வருகிறேன்."

அவர் எதுவும் பேசாமல் வீட்டுக்குள் நுழைந்தார்.

"இங்கு தனிமையில் இருப்பதற்குப் பயமில்லையா?" கார்த்திகா கேட்டாள்.

"இங்கு நான் மட்டுமில்லையே!"

"வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள்?'

"இளவரசி இருக்கிறார்கள் என்றேனே"

"ஆமாம், நான் அதை மறந்தே போனேன்."

"களைத்திருப்பீர்கள். போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்."

"நான் எப்பொழுதுமே நேரம் கழித்துத்தான் உறங்கச் செல்வது வழக்கம்."

"உங்களுக்குப் பசிக்கவில்லையா?"

"இல்லை."

"சரி, நான் போய்ப் படுத்துக் கொள்கிறேன். எனக்கு மிகவும் களைப்பாக உள்ளது" கேசவன் கூறினான்.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

கேசவன் எழுந்து சென்று தனது அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினான். மறுநாள் பவானியம்மாவிடம் என்ன சொல்லலாம் என்று யோசித்தபடியே படுத்திருந்தபோது, கதவின் தாழ் நகரும் சத்தம் கேட்டது. கதவு திறந்து, முற்றத்தின் நிலவொளியும் உள்ளே பிரதிபலித்தது. கார்த்திகா கதவருகே நின்றிருந்தாள்.

கேசவன் சட்டென்று எழுந்து விளக்கை ஏற்றினான்.

"விளக்கை எதற்கு ஏற்றினீர்கள்?" கார்த்திகா கேட்டாள்.

"யாரென்று தெரிந்து கொள்ளத்தான்."

"நான்தான் படுத்திருந்தேன். தூக்கம் வரவில்லை. களைப்பும் தெரியவில்லை."

"ஏன், தனியாகப் படுக்கப் பயமாக உள்ளதா?"

"ஆமாம்."

"அப்பாதான் உள்ளே படுத்திருக்கிறாரே. அவருடன் படுத்துக் கொள்ள வேண்டியதுதானே!"

"அப்பா தூங்கத் தொடங்கிவிட்டால் பிறகு விடியற் காலையில் தான் கண்விழிப்பார்."

"அப்படியானால் இங்கேயே படுத்துக் கொள்ளலாம். அதோ, அந்த மூலையில் சுருட்டி வைத்துள்ள பாயை எடுத்துக் கொள்ளுங்கள். விளக்கு எரியலாம். இல்லையா?"

"வெளிச்சமிருந்தால் எனக்குத் தூக்கம் வராது."

கேசவன் விளக்கை அணைத்தான். மெதுவாகக் கண்ணை மூடி மயங்கினான். சட்டென்று தன் முகத்தில் வெப்பமான மூச்சுக்காற்று படுவதை உணர்ந்தான். தன் உடல் மீது ஒரு பெண்ணுடல் படுவதை உணர்ந்தான். கேசவன் திடுக்கிட்டு விழித்தான்.

"கார்த்திகா, நான்தான்" அவள் மந்திரித்தாள்.

"என்ன கார்த்திகா இது. நாளைக்கு துர்கா கோயில் பூஜைக்குப் போய் போகிறாய்..." கேசவன் அவளை ஒதுக்கியபடி பேசினான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஆனால், அவளோ தன்னுடைய முழு பலத்துடன் அவனைக் கட்டிப்பிடிக்க முயன்றாள். கேசவனது உணர்ச்சிகள் கொந்தளிக்கும் விதமாக அவள் அவனுக்கு முத்தங்களை வழங்கினாள்.

"சௌபர்ணிகா" சட்டென்று ஒரு பெண் குரல் கேட்டது.

உடனே கேசவன் எழுந்திருக்க முயன்றான். ஆனால், எவ்வளவு தான் முயன்றும், அவனால் எழுந்திருக்க முடியவில்லை.

17

உடைகள் ஏதுமற்ற தனது மார்பில் அழுந்தியுள்ள கார்த்திகாவின் உடலை உயர்த்தி வீசி எறிவதற்காகக் கேசவன் முயன்றான். அதுவும் அவனால் முடியவில்லை.

'சௌபர்ணிகா' என்கிற அழைப்பு வசந்தசேனையின் குரல் என்பது புரிந்தபோது தன் உடலின் மீது இருப்பவள் கார்த்திகா என்கிற பெண்ணல்ல என்கிற உண்மை புரிந்தது. அதுமட்டுமல்ல; அவள் மனித ஜாதிப்பெண்ணே அல்ல என்பதும் உறுதியானது.

ஆயுதம் எதுவுமின்றி ஒரே நேரத்தில் நாலைந்து மனிதர்களுடன் போராட முடிந்த ஒருவன், ஒரு பெண்ணிடம் எப்படி வலுவிழக்க முடியும்? அவளிடம் ஏதோ ஒரு அமானுஷ்யமான சக்தி இருக்க வேண்டும் என்று நினைத்தான் கேசவன்.

ஆனால், எதிர்பாராத விதமாக ஓர் அலறலுடன் அவள் கேசவனது உடலிலிருந்து பிடுங்கி எறியப்பட்டவள்போல் உயரே எழும்பினாள். அந்தக் கண் இமைக்கும் நேரத்தில் கேசவன் சட்டென்று எழுந்து விளக்கைக் கொளுத்தினான்.

அவனுக்கு முன்பாக பயங்கரமான ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. சிதறிக் கிடக்கும் பனங்குலை போன்ற தலைமுடி. தடித்த புருவங்கள், அகன்ற மூக்கு, இருபுறக் கடைவாய் பற்கள் இரண்டும் உதடுகளின் கடைசியிலிருந்து நீண்டிருந்தன. கறுப்பு நிறம். நிர்வாணமான உடல். தேங்காய் நார் போன்ற முடிக்கற்றைகள் அவளது

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இடை மார்புப் பகுதிகளை மறைத்திருந்தன. வனதுர்காவிடமிருந்து கேசவன் எடுத்து வந்த ருத்ராக்ஷ மாலை அவளது கழுத்தில் கிடந்தது.

அந்த ருத்ராக்ஷ மாலை சட்டென்று தங்க நிறப் பாம்பாக மாறியது. அது அவள் கழுத்தைச் சுற்றி நெரிக்கத் தொடங்கியது. ஏற்கெனவே சிவந்த அவளது கண்கள் வெளியில் தெறித்து விழுந்துவிடுவனபோல் பிதுங்கின. கடைசியில் ஒரு கருங்கல் பாறை அடி பெயர்ந்து விழுவது போல் பொத்தென்று அவள் தரையில் விழுந்தாள். பின்பு அந்த உருவம் மிகவும் சிறியதாகி, ஒரு கற்சிலையாக மாறியது.

"அந்த ருத்ராக்ஷ மாலையை எடுத்துக் கொள்ளுங்கள். அதை வீணாக்கக் கூடாது!" பின்புறம் நின்றிருந்த வசந்தசேனை கூறினாள்.

கேசவன் அதை எடுத்துக் கழுத்தில் போட்டுக் கொண்டான்.

"இது எங்கிருந்து கிடைத்தது?"

"எங்கிருந்து என்பதை நான் சொல்ல முடியுமா?"

"நான் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

"அன்று இரவு மேலக்காவு மனையில் அது எங்கே இருந்ததோ, அங்கேயேதான் கிடந்தது" வசந்தசேனை சிரித்தபடியே கூறினாள்.

"தானிய அறையிலிருந்தா?"

"ஆமாம்."

"எனக்கு இதைக் கழற்றி வைத்த ஞாபகமே வரவில்லையே."

"நான் அதை எடுக்கும்போது ஒரு கண்ணி விட்டுப் போயிருந்தது."

கேசவனுக்கு வெட்கமாக இருந்தது. மிகவும் பவித்ரமான இந்த மாலை தன் கழுத்திலிருந்து கழன்று போனது தனக்குத் தெரியாமல் போய்விட்டதே என்பதில் வருத்தமும் தோன்றியது. 'எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த மாலையை எடுத்தோம். இருந்தும் கவனமில்லாமல் அதைத் தொலைத்துவிட இருந்தோமே.'

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் அந்த அறையிலிருந்தேன் என்பது உனக்கு எப்படித் தெரிந்தது?"

"பிரம்மதத்தன் மோகினி ஹோமம் நடத்தியபோது அதைத் தடுப்பதற்காக நீங்களும் ஊர்மிளாவும் திட்டமிட்டதாகக் கூறினீர்களே. அதை வைத்துத்தான்!"

"இப்பொழுது எப்படி நீ இங்கு வந்து சேர்ந்தாய்?"

"இந்த மாலையை உங்களிடம் தருவதற்காகவே உண்மையில் வந்தேன். ஆனால், இங்கு வந்தபோது கண்ட காட்சி பயங்கரமாக இருந்தது. நான் மாலையை எடுத்தபோது சௌபர்ணிகா என்கிற பெயரை நம்பூதிரி கூறுவதைக் கேட்டேன். எங்களுக்கே உள்ள இயல்பான குணத்தால் நான் மற்றவற்றை ஊகித்துக் கொண் டேன். அதனால்தான் சௌபர்ணிகா என்கிற பெயரால் நான் அவளை அழைத்தேன். சட்டென்று அவள் திரும்பிப் பார்க்கவும் செய்தாள்."

"ருத்ராக்ஷம் எப்படி அவள் கழுத்தில் விழுந்தது?"

"எனக்கு அப்பொழுது சட்டென்று அப்படி ஒரு யுக்தி தோன்றியது. அதை அவள் கழுத்தில் போட்டேன்."

"அதுவும் நல்லதற்குத்தான். ஆமாம், அவளுடன் அவளது அப்பா என்று வேறொருவர் வந்திருந்தாரே."

"அது அவள் தனது துணைக்காக அழைத்து வந்த ஏதாவது ஒரு பூதமாக இருக்கும். விருப்பப்பட்ட வடிவங்களை எடுக்க எங்களைப் போன்றவர்களால் முடியுமே."

கேசவன் மெதுவாக அந்தக் கற்சிலையைக் கையில் எடுத்தான். அது பைசாசிகமான ஓர் உருவத்தில் இருந்தது அவனுக்கு முன்பாகத் தோற்றமளித்த பெரிய உருவத்தின் சிறிய மாதிரிபோல் அது இருந்தது.

"இப்படிப்பட்ட பிசாசுகளுக்கு வடிவம் கொடுத்து அவர்களை ஒவ்வொரு காரியத்திற்காகவும் நியமித்து அனுப்புவது யார் செய்யும் வேலை?" கேசவன் கேட்டான்.

"பிரம்மதத்தனைப் போன்று மாந்திரீகத்தில் தேர்ந்தவர்களால் மட்டுமே இதெல்லாம் சாத்தியம்!"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"பிரம்மதத்தன் பயங்கரமான மனிதர்தான்."

"அதில் சந்தேகமே வேண்டாம். இப்பொழுது அவர் வேறு எதற்கோ முயற்சி செய்கிறார். ஒருவேளை அந்த முயற்சியில் அவர் வெற்றி பெற்றால் அதன்பிறகு அவரை வெல்வது உலகத்தில் எவராலும் முடியாத காரியமாக இருக்கும்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் கேசவனுக்குச் சட்டென்று துர்கா கோயில் நினைவுக்கு வந்தது. எப்படியும் துர்கா கோயிலி லிருந்து அந்தக் கிரந்தத்தை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர் தன்னை அழித்து விடுவார் என்பதும் தெரிந்தது.

"இனியும் தாமதிக்கக் கூடாது. நாளை இரவு நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிற நேரத்தில் புறப்பட வேண்டும். வசந்தசேனை பூஜைக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தால், விநாயகர் பூஜை முடிந்தவுடன் நாம் புறப்பட்டுவிட வேண்டியதுதான். பாண்டவ மலையின் அடிவாரத்தை அடைய வேண்டும். சரியான இடம் எதுவென்று தெரிந்தபிறகு நாம் திரும்பிவிடலாம்."

"இப்பொழுது அது தேவையா?" வசந்தசேனை கேட்டாள்.

"ஆமாம். ஒன்று சொல்ல மறந்து விட்டேனே. ஒரு ஆண் அதை எடுக்க முடியாதாம். இளவரசி கூறினார். கர்ப்பிணியான, ஆனால் திருமணமாகாத ஒரு கன்னிப்பெண்ணால் அதை எடுக்க முடியுமாம்."

"ஏன் அப்படி?"

"அப்படிப்பட்டவளை தேவி சபிக்க மாட்டாராம்."

"அப்படி யார் இருக்கிறார்கள்?'

"என் மனதில் சட்டென்று நினைவுக்கு வந்த பொருத்தமான நபர் பிரம்மதத்தனின் மருமகள் ஊர்மிளாதான்."

"அப்படியானால் தகுந்த ஏற்பாட்டைச் செய்த பிறகு நாம் அங்கு போனால் போதாதா?"

"அதற்கு முன்பாக ஊர்மிளாவின் துணையுடன் அவள் அங்கு செல்ல முடியுமா என்று பார்க்க வேண்டும்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஏன், நீங்களே அழைத்துக் கொண்டு போகக் கூடாதா?"

"தேவியின் கையிலிருக்கும் அந்தக் கிரந்தம் சாதாரணமானதல்ல. அது ஒரு மனிதனுக்குக் கிடைத்தால் அவன் மோசமானவனாக இருந்தாலும் நல்ல மக்களுக்கு அது கெடுதல் விளைவிக்கும். யார் நல்லவர்? யார் கெட்டவர் என்பதை யாரால் தெரிந்துகொள்ள முடியும்?"

"அப்படியானால் நான் மூன்றாம் யாமத்தில் மோகினி கோயிலில் காத்திருக்கிறேன்" அவள் விடைபெற்றாள்.

கேசவன், சௌபர்ணிகாவின் சிறிய கற்சிலையை அரண்மனைக்குப் பின்புறமிருந்த குளத்திற்குள் வீசியெறிந்தான். கோட்டையைச் சுற்றியபடி முன்புறமாக வந்தபோது வராந்தாவில், நிலவிளக்கினருகே இளவரசி உட்கார்ந்திருந்தாள். அவள் உட்கார்ந்திருக்கும் தோரணையிலேயே, இன்றைய இரவையும் அவனுடன் கழிக்கத் திட்டமிட்டிருக்கிறாள் என்பது புரிந்தது. எத்தனையோ வருடங்களாக முழுமையடையாத அவளது வேட்கைக்கு முழுமை கிடைத்தது கேசவன் குட்டியிடமிருந்ததுதான்.

இப்பொழுது அவளுக்குள் உறங்கிக் கிடந்த உணர்வுகள் விழித்துக்கொள்ளத் தொடங்கி விட்டன. அதை ஈடுகட்டித் தணிப்பதற்குரிய ஒரு நபர், அவளது அரண்மனையிலேயே இருந்தான். இனிமேல் எதற்காக இரவுகளைப் பாழாக்க வேண்டும் என்பது இளவரசியின் எண்ணம். அதனால்தான் அவள் வந்திருந்தாள்.

ஆனால், கேசவனைப் பொறுத்தவரையில் அவன் அறிந்து கொள்ள வேண்டியதை அறிந்துகொண்டாயிற்று. அதற்காக மட்டுமே அந்த உறவும் தேவைப்பட்டது.

"எங்கே போயிருந்தீர்கள்?" இளவரசி கேட்டாள்.

"பின்புறம் சென்று வந்தேன்."

"குளத்தின் அருகே போனீர்களா?"

"போயிருந்தேன்."

"குளத்தில் எதையோ வீசியெறிந்தீர்கள் போலிருக்கிறதே."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஆமாம், ஒரு சிலையை."

"நான் பார்த்தேன். அது குளத்தில் விழுந்தவுடன் தண்ணீர் பெருமளவு அலையடித்து வீசியது. அப்பொழுதே அது ஏதோ அசாதாரணமான பொருள் என்று தெரிந்தது. உடனேயே தண்ணீர் அடங்கவும் செய்தது."

"நேரம் அதிகமாகி விட்டதே."

"இன்னும் இரண்டு நாழிகை நேரம் இருக்கிறதே."

"உங்களுக்குத் தூக்கம் வரவில்லையா?"

"என் உறக்கத்தைக் கெடுத்தது நீங்கள்தான்."

"நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. ஆனால், நமக்குள் இப்படிப்பட்ட ஓர் உறவு இருக்கக்கூடாத ஒன்று. ஒருபோதும் ஒரு பெண்ணின் ஆசையை ஒதுக்கி விடக்கூடாதே என்பதற்காகவே நான் முதலில் ஒப்புக் கொண்டேன். ஆனால், அதையே தொடர்வது நல்லதல்ல!" கேசவன் கூறினான்.

இளவரசியின் முகம் வாட்டமடைந்தது. கேசவன் கூறுவதும் நியாயமே என்று அவளுக்கும் தோன்றியது. தான் ஒருமுறை மட்டுமே இதைக் கோரியிருந்தோம். அதை அவர் நிறைவேற்றவும் செய்தார். அதில் கேசவனைக் குற்றம் கூறவும் முடியாது. ஆனால், அந்த ஒரே நிகழ்ச்சியின் மூலம் கேசவன் இளவரசியின் ஒவ்வோர் உயிரணுவையும் விழிப்படையச் செய்து விட்டானே!

"உண்மைதான். ஆனால் நீங்கள் கிளறிவிட்ட, என் உடம்பில் அணைந்து போயிருந்த நெருப்பு இப்பொழுது கொழுந்துவிட்டு எரிகிறது. இங்கேயே இருந்தால் ஒருவேளை எனக்கு வெறி பிடித்துவிடும். எனவே நான் இங்கிருந்து கிளம்புகிறேன்" இளவரசி எழுந்து அந்த அரண்மனையின் இருளடைந்த ஏதோ ஒரு பகுதிக்குச் சென்று மறைந்தாள்.

மறுநாள் வசந்தசேனையிடம் கூறியிருந்தபடி கேசவன் மோகினி கோயிலுக்குச் சென்றான். அவனை எதிர்பார்த்தபடி அவள் அங்கு காத்திருந்தாள். இருவரும் புறப்பட்டனர்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

பாண்டவ மலையின் நேராக, புதர்களின் ஊடாகச் செல்லும் ஒற்றையடிப் பாதை வழியே அவர்கள் நடந்தனர். கடைசியாக அவர்கள் ஒரு நீர்வீழ்ச்சியை அடைந்தனர்.

"நாம் சரியான வழியில்தான் வந்திருக்கிறோம்" என்று கேசவன் கூறினான்.

"சரி திரும்பி விடலாமா?" வசந்தசேனை கேட்டாள்.

இருவரும் திரும்பி நடக்கத் தொடங்கினர்.

"இனி நமக்குத் தேவை ஊர்மிளாவின் உதவி. அதாவது கர்ப்பிணியான ஊர்மிளா" கேசவன் அழுத்தமாகக் கூறினான்.

வசந்தசேனை பதில் கூறவில்லை.

"இந்த நேரம் மேலக்காவு மனையில் நம்பூதிரி நல்ல உறக்கத்திலிருப்பார். நான் அங்கே போகிறேன்" கேசவன் கூறினான்.

"எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் சந்திப்பது ஊர்மிளாதானா என்று கவனிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து ஏற்படலாம்" வசந்தசேனை எச்சரித்தாள்.

18

கேசவன் இருட்டில் நடந்து கொண்டிருந்தான்.

ஐந்து மைல் தூரமாவது நடந்தால்தான் மேலக்காவு மனையை அடைய முடியும். நிலவில்லாத இரவு. நட்சத்திரங்களின் மிகவும் சன்ன மான ஒளி, பாதையில் மிகவும் பலவீனமாக விழுந்து கொண்டிருந்தது.

பாதையின் இருபுறமும் புதர்கள் மண்டியிருந்தன. உயரம் குறைவான மரங்களும் ஆங்காங்கே இருந்தன. பாதையில் நீண்டிருந்த சில செடிகொடிகள் அவ்வப்போது காலில் பட்டன. கேசவன் ஒரு கறுப்பு நிற வேட்டியும், சிவப்பு நிறச் சட்டையும் அணிந்திருந்தான். இருட்டுக்குத் தகுந்த வேஷம். சட்டென்று யாருக்கும் தெரியாது!

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

நடக்கும்போதே இருபுறமும் கேசவன் எச்சரிக்கையாகக் கவனித் தான். அந்த வழி ஒரு நாற்சந்தியில் சென்று முடிவடைந்தது. அங்கிருந்துதான் மலைக்குப் போகும் வழி பிரிந்து செல்கிறது.

இப்பொழுது கேசவனுக்கு மனையைப் பற்றி மிக நன்றாகத் தெரிந்திருந்தது. முன்புறம் கிழக்குப்புறமாக உள்ளது. தானிய அறை உட்புறமாகத் தாழ் போட்டிருக்கும். நல்ல கெட்டியான மதில். ஆனால், தெற்குப்புறமிருந்த மதில் மட்டும் ஒரு பக்கம் சற்று இடிந்திருக்கும். இந்தப் பகுதி வழியாகத் தாண்டினால் நேராகத் தானிய அறைக்குச் சென்றுவிடலாம். அதுதான் ஊர்மிளா தன்னை எதிர்பார்த்துக் காத்திருக்குமிடம்.

ஆனால் இன்று தான் வரப்போவதாக அவளிடம் சொல்ல வில்லை. அதனால் காத்திருக்கிறாளோ என்னவோ? இதற்குமுன் இரண்டு முறை சென்றபோதும் அவள் அங்கே தன்னைக் காப்பாற்றி னாள் என்பதுதான் இன்றும் அவனுக்கு நம்பிக்கை தருகிறது.

ஊர்மிளாவும் எதையெல்லாமோ தெரிந்து கொண்டிருக்கிறாள் என்பதில் கேசவனுக்குச் சந்தேகமில்லை. இல்லாவிட்டால், எப்படி தான் அங்கே வரும் ஒவ்வொரு முறையும், தனது வருகையை அவள் தெரிந்து கொள்கிறாள்?

நடுநடுவே மேகங்கள் மேற்புறமாக நகர்ந்து கொண்டிருந்ததால் இருளின் கனமும் அவ்வப்போது கூடிக் குறைந்தது. வழியில் ஒரு சிறிய காட்டுக்கோயில் ஒன்று இருந்தது. பழைய காலக் கோயில். இப்பொழுது அங்கு பூஜையோ வழிபாடோ எதுவும் நடப்பதில்லை. செடியும், புதரும் மண்டி வளர்ந்து அந்தக் கோயிலும் ஒரு புதர் மாதிரியே தெரிந்தது.

இந்தக் கோயிலைத் தூரத்திலேயே கண்டுவிட்ட கேசவன், நடையைச் சற்று மந்தப்படுத்தினான். சற்றுத் தூரத்தில் வழியை மறித்தபடி, இருபுறமும் வளர்ந்திருந்த தென்னை மரங்கள் ஒன்றாக இணைவது போல் தெரிந்தன. அதன் ஊடாகவே பாதையைக் கடக்க வேண்டும். கேசவனுக்குச் சந்தேகம் தோன்றியது. அந்தப் பகுதியில் தென்னை மரம் எதுவும் இல்லையே? இது எப்படித் திடுமென்று முளைத்தது?

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

உற்றுக் கவனித்தபோது அந்தத் தென்னைகள் அசைவது போல் தெரிந்தன. அதுமட்டுமல்ல, தன்னை நோக்கி நகர்ந்து வந்து கொண்டுமிருந்தன. சட்டென்று ஒன்று தரையிலிருந்து உயர்ந்தபோது மற்றொன்று தரையில் பதிந்தது. இரண்டுமே மிகப்பெரிய கால்கள். தான் அந்தக் கால்களுக்கு இடையில் சிக்கி நசுக்கப்படுவோம் என்பது அவனுக்குப் புரிந்தது.

'பெரியன்' என்கிற பிசாசைக் குறித்து அப்பொழுதுதான் கேசவனுக்கு நினைவு வந்தது. நடைபாதையின் இருபுறமும் காலூன்றி நிற்பதும், மனிதர்கள் நடந்து செல்லும்போது. இரண்டு கால் களுக்குமிடையில் அவர்களை நெருக்கி நசுக்குவதும்தான் அந்தப் பிசாசின் வேலை.

கேசவன் ஓரளவுக்கு இதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் புறப்பட்டான். உடனே தன் இடுப்பிலிருந்த விபூதியை எடுத்து மந்திரம் ஜபித்து அதை நோக்கி ஊதினான். அந்த விபூதி தீ ஜ்வாலைகள் மாதிரி காற்றில் உயர்ந்து எழுந்தன. ஒரு விநாடிக்குள் அந்த உருவம் மறைந்தது. அது பிரம்மதத்தன் ஏவியது அல்ல என்பது கேசவனுக்குத் தெரிந்தது. இவ்வளவு தொலைவுக்கு முன்னதாகவே தன்னை எதிர்க்க இப்படிப்பட்டவற்றை அனுப்பி வைக்க வேண்டிய தேவை பிரம்மதத்தனுக்கு இல்லை. அவரது கோணத்தில் கேசவன் ஒரு பெரிய மந்திரவாதியுமல்ல.

அதன் பிறகு கேசவன் மிகவும் எச்சரிக்கையுடன் நடக்கத் தொடங்கினான். எந்த நேரத்திலும் எந்தவிதமான தாக்குதலோ, ஆபத்தோ நேரிடலாம். மேலக்காவு மனைக்குத் திரும்பும் பாதை வந்தவுடன் ஒரு கணம் நின்றான். அந்தப் பகுதி முழுவதும் பெரிய பெரிய மரங்கள் வளர்ந்திருந்தன. அதனால் இருள் மண்டிக் கிடந்தது. கழுத்தில் வனதுர்காவின் ருத்ராக்ஷ மாலை கிடந்ததால் தைரியமாக நடக்கத் தொடங்கினான். மனையின் மதிலைத் தாண்டி மேற்குப்புறமாக நடந்தான்.

மிகவும் அமைதியாக இருந்தது வீட்டின் சுற்றுப்புறம். மூச்சைப் பிடித்தபடி வெகு கவனமாக அடிமேல் அடி வைத்து நடந்தான். சட்டென்று அவனை யாரோ பிடித்தார்கள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இன்று வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்" ஊர்மிளாவின் குரல் கேட்டது.

வசந்தசேனையின் எச்சரிக்கை நினைவிற்கு வரவே கையைச் சட்டென்று உதறி, "யார் நீ?" என்று கேட்டான் கேசவன்.

"நிஜமாகவே என்னை உங்களுக்குத் தெரியவில்லையா? அவ்வளவு சீக்கிரமாகவா மறந்து விட்டீர்கள்?" அவள் கேட்டாள்.

"நீ ஊர்மிளா இல்லையென்று எனக்குத் தெரியும். அதனால்தான் என் கையை விடச் சொன்னேன்."

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? உங்களுக்காக நான் கதவைத் திறந்து வைத்துக் காத்திருக்கிறேன்."

'சரி, என்ன வேண்டுமானாலும் ஆகட்டும்' என்று கேசவன் அவளுடன் நடந்தான். தானிய அறையில் சிறிய சிமினி விளக்கொன்று திரி தாழ்த்தியபடி எரிந்து கொண்டிருந்தது. வெளிச்சம் வெளியே தெரியாமலிருந்தது. கேசவன் விளக்கின் திரியை உயர்த்தி, அந்த வெளிச்சத்தில் அவளைப் பார்த்தான். 'இவள் ஊர்மிளாவேதான்' என்று தோன்றியது.

"நான் ஒரு மடையன். சந்தேகத்திலேயே வந்ததால் ஊர்மிளா வைக்கூட உண்மையல்ல என்று நினைத்து விட்டேன்."

"பரவாயில்லை. இந்த எச்சரிக்கையும் நல்லதற்குத்தான். திரியைக் குறைக்கலாமா?" ஊர்மிளா கேட்டாள்.

"இன்று என்ன இவ்வளவு அவசரம்? உன்னை நான் ஒரு தடவை நன்றாகப் பார்த்துக் கொள்கிறேனே!"

"இதுவன்ர என்னைப் பார்க்காதவர் போல் பேசு கிறீர்களே?"

"உன்னுடைய இந்த அழகை எத்தனை தடவை பார்த்தாலும் போதுமென்று தோன்றுவதில்லை. இந்த விளக்கின் வெளிச்சமும், நீயும் ஒரே மாதிரியானவர்கள்."

அவள் கேசவனை நெருங்கி நின்றாள். பக்கத்தில் எங்கேயோ பாலை மரம் பூத்தது போல் அறை முழுவதும் மணம் நிரம்பியது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அவளின் மென்மையான கைகள் கேசவனது நெஞ்சில் பரவி விளையாடின. வேட்கை நிரம்பிய அவள் உதடுகள் கேசவனின் கன்னங்களில் பதிந்தன. அவள் அவனைக் கட்டிலில் வீழ்த்த முயன்றாள்.

"கூடாது. அவள் ஊர்மிளா அல்ல!" கதவைத் திறந்துகொண்டு மற்றொரு ஊர்மிளா கூறினாள். "நான் சரியான நேரத்திற்கு வரவில்லையென்றால் அவள் உங்களைக் கொன்று ரத்தம் குடித்திருப்பாள்."

கேசவன் திரும்பிப் பார்த்தான். இரண்டு பேரும் ஒரே மாதிரி இருந்தார்கள். வசந்தசேனை கூறியது உண்மைதான். அவள் சொன்னது போலவே நடந்துவிட்டது.

"அவள் ஒரு பிசாசு. அவள் கழுத்தை நெரித்துக் கொல்லுங்கள்" புதிதாக வந்த ஊர்மிளா கூறினாள்.

கேகவன் குட்டியின் கைகள் தன்னைப் பிடித்திருந்த பெண்ணின் கழுத்தின் மேல் ஊர்ந்தன.

"ஐயோ, என்னைக் கொல்லாதீர்கள். நான் உங்களுடைய ஊர்மிளாதான்" நெருங்கியிருந்தவள் இறைஞ்சினாள்.

"அவளை விடாதீர்கள். திருடி. அந்தப் பிசாசைக் கொல்லுங்கள். நான் வருவதற்குமுன் அவள் வந்து விட்டிருக்கிறாள்" வந்தவள் கூறினாள்.

"என்னைக் கொல்லாதீர்கள். நான்தான் உண்மையான ஊர்மிளா. உங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். சந்தேகமிருந்தால் உங்களுக்குத் தெரிந்த முறை ஒன்றினால் என்னைச் சோதித்துப் பாருங்கள்" அவள் கூறினாள்.

கேசவனின் கண்கள் சட்டென்று தன் கழுத்தில் கிடந்த ருத்ராக்ஷத்தில் பதிந்தன. தன்னைப் பிடித்திருப்பவளின் கைவிரல் அதைத் தொட்டுக்கொண்டு இருந்தது. அதிலிருந்து ஓர் உண்மை புரிந்தது.

'தன்னை நெருங்கியிருப்பவள் உண்மையான ஊர்மிளா. தன்னிடம் நிற்பவள் ஒரு பிசாசாக இருந்தால். இந்த மாலையைத்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

தொடவே முடியாது. அப்படியானால் எதிரில் நிற்பவள் யார்?' கேசவன் சட்டென்று தன் கழுத்தில் கிடந்த மாலையை எடுத்து அவளுக்கு நேராக எறிந்தான். அவளது உடம்பைத் தொட்ட மாத்திரத்தில் அந்த ருத்திராக்ஷங்கள் நெருப்புக் கங்குகள் போல ஜொலித்தன. குரலெழுப்பக்கூட முடியாமல் அவள் நெளிந்தாள். அது அவளை எரித்துத் தீர்த்தது!

ருத்திராக்ஷம் கீழே விழுவதற்குள் அதைக் கையில் பிடித்துக் கொண்ட கேசவன், அதைத் தன் கழுத்திலும் அணிந்து கொண்டான்.

"இன்று நான் வருவேன் என்பது உனக்கு எப்படித் தெரியும்?" தன்னை நெருங்கி நின்றிருந்த ஊர்மிளாவிடம் கேசவன் கேட்டான்.

"சேதி சொல்வதற்காக எனக்கு ஒருவர் இருக்கிறார்."

"யாரது?" கேசவன் வியப்புடன் கேட்டான்.

"கிணற்றருகே இருக்கிற மரத்தில் ஒரு குயில் உள்ளது. எனக்கு ஏதாவது தோன்றினால் அதனிடம் சென்று கேட்பேன். அது உடனே பதில் சொல்லிவிடும். இன்றும் கேட்டேன்; அது பதில் சொல்லியது."

பாலைப்பூவின் மணம் அந்த அறையிலிருந்து மறைந்து விட்டிருந்தது. அதற்கு பதிலாக ஊர்மிளா தலையில் தேய்த்திருந்த காய்ச்சிய எண்ணெயின் வாசனை பரவியது. அதற்குச் சந்தனத்தின் மணமுமிருந்தது.

"இப்பொழுது உனக்கு என்னைப் பிடிக்கும்தானே?" கேசவன் கேட்டான்.

"இந்த உலகத்தில் உள்ள எல்லாவற்றையும்விட உங்களைத்தான் மிகவும் பிடிக்கிறது. எனக்குத் தெரிந்து எனது மாமாவை எதிர்க்கத் துணிந்த முதல் மனிதர் நீங்கள்தான்."

"உன் மாமா வீட்டிலிருந்தபடிதான் மந்திர வித்தைகளைப் பிரயோகிக்கிறாரா?"

"இல்லை. அதற்கென்றே வேறு இடம் வைத்திருக்கிறார்."

"அது எங்கே இருக்கிறது?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

"எனக்குத் தெரியாது."

"இப்பொழுது உன் மாமா இங்கு இருக்கிறாரா?"

"நல்ல தூக்கத்தில் இருக்கிறார்."

"உன்மீது அவருக்குச் சந்தேகம் உண்டா?"

"இருக்கும் என்று தோன்றுகிறது. அதன் அடையாளத்தைத் தான் நீங்கள் இப்போது பார்த்தீர்களே."

"அப்படியானால் தான் அனுப்பிய நபர் திரும்பி வரவில்லையே என்று அவருக்குத் தெரிந்து விடாதா?"

"ஆனால் என்னிடம் எதையும் கேட்க மாட்டார்."

"ஏன் அப்படி?"

"எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் மாமாவுக்குத்தான் ஆபத்து."

"இது என்ன புதுக்கதை?"

"இந்த வீட்டில் இருக்கும்போது எனக்கு எது நேர்ந்தாலும் மாமாவால் எதுவும் செய்ய முடியாது. அவர் என்ன செய்தாலும் அதனால் அவருக்குப் பலன் கிடைக்க வேண்டுமென்றால், நான் அவருக்கு உதவ வேண்டும்."

"இதை எப்படி நீ தெரிந்து கொண்டாய்?"

"ஒரு தடவை அவர் ராவுண்ணியாரிடம் பேசியதைக் கேட்டிருக்கிறேன்."

"அப்படியானால் உன் மாமாவிடமிருந்து உனக்கு எந்தவிதமான ஆபத்தும் வராது. அப்படித்தானே?"

"அதனால்தான் நான் இவ்வளவு தைரியமாகச் செயல்பட முடிகிறது" பேசியபடியே அவளது இடது கை விளக்கின் திரியைத் தாழ்த்தியது. இருள் கவிந்தது. இரண்டு உருவங்களும் ஒன்றாகின.

கேசவன் விளக்குத் திரியைத் தூண்டி விட்டபோது ஊர்மிளாவின் முகம் தாழ்ந்திருந்தது.

Click & Join -> https://t.me/tamilbooksworld

"பயப்படாதே. நான் என்றும் உனக்குத் துணையாக இருப்பேன்; நாளைக்கும் வருகிறேன்" கேசவன் அவளிடமிருந்து விடைபெற்றுச் சென்றான். வழக்கம்போல் பழக்கமான வழிகளில் நடந்து கிழக்குக் கோட்டைக்குச் செல்லும் பாதையை அடைந்தபோது, அங்கு ஒரு ராட்சதப் பெண் உருவம் நின்றுகொண்டிருந்தது.

பிரம்மாண்டமான அந்தப் பெண் உருவத்தின் கைகள் கேசவனை நோக்கி மீண்டன. அவை அவனது கழுத்தைக் குறி வைத்து வந்தன. உடனே கேசவன் தனது கழுத்திலிருந்த ருத்திராக்ஷ மாலையை எடுத்து அதன் கழுத்தை நோக்கி வீசியெறிந்தான்.

ஆனால் அதனால் எதுவும் தடைபடவில்லை. அந்த மாலையும் ஜொலிக்கவில்லை.

ஓகோ. அந்த மாலை அசுத்தமாகி விட்டதோ?

ஊர்மிளாவுடன் தனித்திருந்த போதும் அந்த மாலை தன் கழுத்திலேயே இருந்ததை நினைத்துத் திடுக்கிட்டான் கேசவன்.

இப்போது என்ன செய்வது?

19

புரியாமல் கேசவன் செயலிழந்து நின்றபோது, எங்கிருந்தோ வந்த ஓர் அமானுஷ்யமான அசுர பலத்தினால் தாக்கப்பட்டது போல் அந்த உருவம் அசைவற்று நின்றது.

கேசவன் சுற்றுமுற்றும் பார்த்தான். யாரும் தென்படவில்லை. ஆனால், அவனைத் தாக்க வந்த உருவம் சிறிது சிறிதாகக் குறுகி, கடைசியில் பார்வையிலிருந்து மறைந்தே போனது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தன்னைக் காப்பாற்றியது யார் என்று தெரிந்துகொள்ள கேசவன் அங்கேயே நின்று கொண்டிருந்தான். இனி அவன் பயப்படுவதற்கு எதுவுமில்லை யென்று தோன்றியது. தன்னைக் காப்பாற்றும் நோக்கமுள்ள யாரோ பக்கத்திலேயே இருக்கிறார்கள். அது யார்?

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அப்பொழுது கேசவனுக்குப் பழக்கமே இல்லாத ஒரு புதிய மனிதர் அவனுக்கு முன்பாக எதிர்ப்பட்டார்.

உயரமான தோற்றத்துடன் இருந்த அந்த மனிதர் ஒரு தவ முனிவர் என்பது தெரிந்தது. கணுக்கால் வரையிலான நீண்ட காவி அங்கி அணிந்திருந்தார். கழுத்தில் ஜப மாலைகள் இருந்தன. நீண்ட தாடி, மீசையின் முனைகளை ஒன்றாகச் சேர்த்துத் தலைமுடியுடன் பிணைத்துக் கட்டியிருந்தார். அவரது கையில் ஒரு நீண்ட தடி இருந்தது. நல்ல கருமையான தலைமுடி. நாற்பது வயதைத் தாண்டாத ஒரு முனிவர். கேசவன் ஒரு கணத்தில் அவரை எடை போட்டான்.

"அந்தப் பிசாசு ஏன் உங்களைத் தொல்லைக்குள்ளாக்கியது?" முனிவர் கேட்டார்.

"என்னை ஒழிக்க முயற்சி செய்யும் ஒரு மந்திரவாதி இதை ஏவி விட்டிருக்கலாம்."

"யார் அந்த மந்திரவாதி?"

"இன்னார்தான் என்று உறுதியாகச் சொல்ல முடியா விட்டாலும், மேலக்காவு மனையைச் சேர்ந்த நம்பூதிரியாகத்தான் இருக்க வேண்டுமென்பது எனது சந்தேகம்."

"யார் பிரம்மதத்தனையா சொல்கிறீர்கள்?"

"ஆமாம், அவரை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்."

"நீங்கள் இந்த இடத்திற்குப் புதியவரா?"

"நான் இந்தப் பகுதிக்கு வந்து ஒரு வாரம் ஆகிறது."

"எங்கே தங்கியிருக்கிறீர்கள்?"

"அதோ தெரிகிறதே, அந்த மலையடிவாரத்தில் ஒரு பழைய மண்டபம் உள்ளது. ஆறு கருங்கல் தூண்களின் மீது ஒரு பெரிய பாறையைப் பொருத்தி வைத்திருக்கிற மண்டபம். அங்குதான் நான் தங்கியிருக்கிறேன்."

"அங்கு காட்டு விலங்குகளின் தொல்லை இருக்குமே?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் ஏன் அவற்றுக்குப் பயப்பட வேண்டும்? சற்று முன்பு நீங்களே பார்த்தீர்களே; அந்தப் பிசாசு என்னிடம் எப்படி அடங்கி விட்டதென்று?"

இதைக் கேட்டவுடன் கேசவன் குட்டியின் மனம் ஒரு கணம் திடுக்கிட்டது. 'தனக்கு முன்பாக நிற்பவர் சாதாரண மனிதரல்ல; ஒரு பெரிய மந்திரவாதி. இவர் எதற்காக இந்தப் பகுதிக்கு வந்திருப்பார்? இவரிடம் அதைக் கேட்பது முறையல்ல' கேசவன் நினைத்தான்.

"நீங்கள் எங்கே போக வேண்டும்?" முனிவர், அவனிடம் கேட்டார்.

"சற்றுத் தூரத்தில் கிழக்குக் கோட்டை என்கிற அரண்மனை ஒன்று இருக்கிறது. அங்குதான் போக வேண்டும்."

"கேள்விப்பட்டிருக்கிறேன். வாருங்கள், போகலாம்" அவர் கேசவனைப் பின்தொடர்ந்தார்.

"இன்று நீங்கள் இங்கேயே தங்கலாம் அல்லவா?"

"நான் இங்கேயே திண்ணையில் படுத்துக் கொள்கிறேன். நீங்கள் வேண்டுமானால் உள்ளே படுத்துக் கொள்ளுங்கள்."

"ஏன் வெளியே படுக்கிறீர்கள்? உள்ளேயே வந்து படுத்துக் கொள்ளலாமே."

"வேண்டாம். இங்கு நல்ல குளிர்ந்த காற்று வீசுகிறது. பொதுவாக அறைக்குள் படுத்தால் எனக்குத் தூக்கம் வராது."

அவர் வெளியில் படுத்துக்கொண்டார். கேசவன் வழக்கமான அறையில் போய் படுத்தான்.

வழக்கம்போலக் காலையில் கேசவன் எழுந்தான். நேற்று தன்னைக் காப்பாற்றிய மனிதரைப் பார்ப்பதற்காக வராந்தாவிற்கு வந்தான். ஆனால், அவரை அங்கு காணவில்லை. சுற்றுமுற்றும் தேடிப்பார்த்தான். அந்தப் பகுதியிலேயே அவர் இல்லை.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அவர் மலையடிவாரத்தில் எங்கேயோ ஒரு மண்டபத்தில் வசிப்பதாகக் கூறினார். எனவே, அந்தப் பகுதியில் சென்று அவரைப் பார்க்கலாம் என்று நினைத்தான்.

அன்று மதியம் கேசவன் மாலதியின் வீட்டிற்குச் சென்றான். அவளது கல்யாணத்தைப் பற்றிப் பேசுவதற்கு யாரும் அங்கு வரவில்லை என்பதை அறிந்தான். அப்படியானால் வேறு ஏதாவது ஒரு வழியில் அவளைக் கடத்திச் செல்லப் பிரம்மதத்தன் முயற்சி செய்வார் என்று அவன் நினைத்தான்.

கல்யாண விஷயமாக யாரும் வராததால், பவானியம்மாவிற்குக் கேசவன் மீது பிடிப்புக் குறைந்தது போல் தோன்றியது. தன் மகளின் கல்யாண விஷயம் தட்டிப் போவதில் எந்தத் தாய்க்குத்தான் வருத்தம் தோன்றாது?

கேசவன் மாலதியைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று உறுதி கூறவில்லை. வேறு ஒருவருக்குத் திருமணம் செய்து வைக்க முயலும்போது தடுக்கவும் செய்கிறான்.

"என்னவோ போல் இருக்கிறீர்களே?" கேசவன் கேட்டான்.

"நீ வந்த பிறகு உன்னிடம் நிறைய விஷயங்களைப் பேச வேண்டும் என்று நினைத்தேன். நீ வந்ததும் நல்லதற்குத்தான்" பவானியம்மாள் கூறினாள்.

அவள் எத்தப்பற்றிக் கேட்கப் போகிறாள் என்று கேசவனுக்கும் தெரியவே செய்தது. தன் மகளின் எதிர்காலத்தைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் ஒரு தாய்க்கு இருப்பது இயல்புதானே!

"மாலதியின் கல்யாண விஷயம்தான். வேறு எதைப்பற்றி நான் பேசப் போகிறேன்? உன்னால்தான் அந்தக் கல்யாணமே நின்று போனது?"

"மாலதியை அவர்கள் திருமணம் செய்து கொள்கிறோம் என்று அவசரப்பட்டது எதற்காக என்று தெரிந்தால் நீங்கள் நடுங்கிப் போவீர்கள். உண்மையைச் சொன்னால் இந்தக் கல்யாணமே மேலக்காவு மனை நம்பூதிரிக்காகத்தான் நடக்கவிருந்தது."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அதை ஏன் அவர்கள் என்னிடம் சொல்லவில்லை."

"நம்பூதிரிக்கு அவளை மனைவியாக்குவதல்ல அவர்களது திட்டம். அவர் ஒரு பெரிய மந்திரவாதி. கொடுமையான சில மந்திரப் பிரயோகங்களையும், ஹோமங்களையும் அவர் செய்து கொண்டிருக் கிறார். மிருகங்களை மட்டுமல்ல, அவர் இப்பொழுது மனித உயிரையும் பலி வழங்கி வருகிறார்."

"கடவுளே, நான் கேள்விப்படுவது உண்மையா?" நெஞ்சில் கைவைத்துத் திகிலடைந்தபடி கேட்டாள் பவானியம்மாள்.

"உண்மைதான். ராவுண்ணியாருடன் வந்திருந்த கிட்டு ஆசானை எனக்குத் தெரியும். அவர்தான் இந்த விஷயத்தை என்னிடம் சொன்னார்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பவானியம்மாள் ஓடிவந்து கேசவனின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். பிறகு, "நான் உங்களைத் தவறாக நினைத்ததற்கு என்னை மன்னித்துக் கொள் ளுங்கள். ஏதோ ஓர் ஆசையில் இந்த மாதிரிப் பேசிவிட்டேன். இப்பொழுதிலிருந்து நீங்கள் எங்களுக்கு ஒரு தெய்வம் மாதிரி. நீங்கள் சொல்வதை மீறி நான் எதையும் செய்ய மாட்டேன்" என்று கேசவனிடம் மன்னிப்பு கேட்டாள்.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு கேசவன் அங்கிருந்து புறப்பட் டான். நேராகப் பாண்டவ மலையின் அடிவாரத்தை அடைந்தான். அந்த முனிவர் கூறிய அடையாளங்களை மனதில் நினைவு வைத்தபடியே நடந்தான். வழியெல்லாம் உருண்டை வடிவமான பாறைகளும். முட்செடிப் புதர்களுமாக அந்தப் பகுதியே வித்தியாசமாக இருந்தது. கேசவன் அந்த வழியில் நடந்தான். எங்கும் மனித நடமாட்டமே தென்படவில்லை.

எதிரே பாண்டவ மலையின் உச்சிப் பகுதிகள் தெரிந்தன. மேகத் துணுக்குகள் மலை உச்சியை உரசிக் கொண்டிருந்தன. ஆங்காங்கு வளர்ந்திருந்த பாறைகள், மரங்களின் அடிப்பகுதிகளில் நிழல்கள் தேங்கியிருந்தன. ஏறத்தாழ அந்த மண்டபம் எங்கே இருக்கும் என்கிற ஊகத்தில் அந்த திசை நோக்கி நடந்தான். சற்றுத் தூரத்திலேயே அந்த மண்டபம் தெரிந்தது. அதில் ஒருவர் உட்கார்ந்திருப்பதும் தெரிந்தது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இந்தக் காட்சி கண்களுக்குத் தெரிந்ததும் கேசவனது களைப்பே காணாமல் போனது.

"நீங்கள் வந்துவிட்டீர்களா? ஒருவேளை நீங்கள் இங்கு வந்தாலும் வருவீர்கள் என்று நினைத்தேன்" சன்னியாசி வரவேற்றார்.

கேசவன் அந்த மண்டபத்தில் உட்கார்ந்தான். மண்டபம் குளுமையாக இருந்தது. அதன் ஆறு தூண்களிலும் ஒரே மாதிரியான சிற்பங்கள் செதுக்கப்பட்டு ஓர் ஒழுங்குடன் இருந்தன. ஒரு நீள் சதுர வடிவத்திலிருந்த அந்த மண்டபத்தின் ஒருபுறத்தில் கற்களை அடுக்கி ஒரு சுவர் மாதிரி பட்டியிருந்தனர்.

மறுபடியும் அவரைப் பார்த்தபோது அவரது வடிவம் அவரது மந்திர வல்லமையை வெளிப்படுத்துவதுபோல் தோன்றியது கேசவனுக்கு.

" வாமி நீங்கள் இந்தப் பகுதிக்கு வந்திருப்பதற்குக் குறிப்பாக ஏதாவது காரணம் உண்டா?" கேசவன் கேட்டான்.

"சொல்கிறேன். உங்களிடம் இதைப்பற்றிப் பேச வேண்டுமென்று நான் ஏற்கெனவே நினைத்திருந்தேன்."

அவர் சொல்வதைக் கேட்கும் ஆர்வத்துடன் கேசவன் அவரையே பார்த்தான். அவர் தொடர்ந்தார்:

"சில வருடங்களுக்கு முன்பு எனக்குத் தெரிந்த ஒருவர் - அவரை என்னுடைய குரு என்றே கூறலாம். அவர் இந்தப் பகுதிக்கு வந்தார். அதற்குப் பிறகு அவரைப் பற்றிய எந்த விவரமும் தெரியவில்லை. அவரைப் பற்றித் தெரிந்து கொள்ளவே நான் இங்கு வந்தேன்."

"இது நடந்து எத்தனை வருடங்கள் இருக்கும்?"

"சுமார் பதினைந்து வருடங்கள் இருக்கலாம். அப்போது அவர் இங்கு வந்தார்."

"அவர் எதற்காக இந்தப் பகுதிக்கு வந்தார்?"

இந்தக் கேள்விக்கு அவர் உடனடியாகப் பதில் அளிக்காமல் சற்று நேரம் மௌனமாக இருந்தார். பிறகு தொடர்ந்தார். "இந்தப் பாண்டவன்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

மலையை லட்சியமாகக் கொண்டுதான் அவர் புறப்பட்டார். அவர் எதற்காக வந்தார் என்பது எனக்குத் திட்டவட்டமாகத் தெரியாது. ஆனால், ஒரு குறிப்பு மட்டும் எனக்குக் கிடைத்தது. இங்கு எங்கோ ஒரு துர்கா கோயில் இருப்பதாகவும், ஒரு காலத்தில் அந்தக் கோயிலில் என்னென்னவோ அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும் கேள்விப் பட்டிருக்கிறேன். அந்தக் கோயிலில் நரபலிகூட நடந்திருக்கிறதாம்."

"இதையெல்லாம் அவரே உங்களிடம் சொன்னாரா?"

"ஆமாம். அவர் எப்பொழுதும் அந்தக் கோயிலைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருப்பார்."

"அவருக்கு எப்படி இந்த இடத்தைப் பற்றித் தெரியுமாம்?" கேசவன் கேட்டான்.

"ஏதோ ஒரு புராதன ஓலைச்சுவடியில் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருந்ததாம். சக்தி வாய்ந்த கோயில் என்று அதைப்பற்றிப் பெருமையாகவே பேசியிருக்கிறார். மிகவும் சக்தி வாய்ந்த, செப்புத் தகட்டில் பொறிக்கப்பட்ட மந்திரங்கள் அடங்கிய கிரந்தம் ஒன்று அந்தக் கோயிலுக்குள் இருக்கிறதாம். திவ்யமான மூலிகை மற்றும் ஔஷதங்களைப் பற்றியும், உலோகங்களைத் தங்கமாக மாற்றும் உபாயங்களும், ரகசியமாக எந்த இடத்திலும் ஒளித்து வைக்கப் பட்டுள்ள புதையல்களை நமது கண்களுக்கு வெகு சுலபத்தில் காட்டித் தரக்கூடிய மந்திரங்களும் அதில் உள்ளதாம்."

கேசவன் திடுக்கிட்டபடி அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"நீங்கள் ஒரு மந்திரவாதி என்று எனக்குத் தெரியும். இருந்தும் உங்களால் அந்தக் கோயிலின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையா?" கேசவன் கேட்டான்.

"நான் உபாசனை செய்யும் மூர்த்தி மகாதுர்கையின் எதிராளி அதனால் துர்காதேவியின் சன்னிதானத்தைக் காட்டித்தர அவரால் முடியவில்லை. ஒருவேளை நான் துர்காதேவியை வணங்கிப் பூஜை செய்ய ஆரம்பித்தால் என்னுடைய மூர்த்தியை மறந்து விடுவேன் என்று அவர் நினைக்கிறாரோ... என்னவோ?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஏற்கெனவே ஒரு தேவதையை நீங்கள் வழிபட்டு வரும் பொழுது, சட்டென்று அதை நிறுத்திவிட்டு வேறு ஒரு தேவதையைப் பூஜை செய்யத் தொடங்கினால், உங்களது பழைய மூர்த்தி உங்களைப் பழிவாங்க முற்படுவாரா?" கேசவன் சந்தேகம் கேட்டான்.

"துர்கா தேவியின் அருள் ஒருவனுக்குக் கிடைத்து விட்டால், அதன்பிறகு அவனை எப்படிப்பட்ட சக்தியாலும் ஒன்றும் செய்ய முடியாது. அதனால் எவ்வளவு விரைவில் அந்தக் கோயிலைக் கண்டுபிடித்து அங்குள்ள கிரந்தத்தை நான் கைப்பற்றுகிறேனோ, அவ்வளவும் எனக்கு நல்லது. அந்தக் கிரந்தம் மட்டும் என் கையில் கிடைத்து விட்டால் பிறகு நான் யாருக்கும் பயப்பட வேண்டியது இல்லை."

கேசவனுக்கு ஒரு விஷயம் விளங்கியது. 'தனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கும் இந்த மந்திரவாதி தனக்கும்கூட ஒரு எதிராளிதான். ஆனால், இந்த மந்திரவாதியை எதிர்க்கும் மந்திர வலிமை தனக்குக் கிடையாது' கேசவன் யோசனையிலாழ்ந்தபோது சன்னியாசி கேட்டார்.

"ஆமாம், நீங்கள் அந்த அரண்மனையின் வாரிசுதாரரா அல்லது அங்கு வசிப்பவர் மட்டும்தானா?"

"நான் தற்காலிகமாக அங்கு வசிப்பவன். அவ்வளவுதான்."

"உங்களுக்கு மந்திரம் கற்றுக்கொள்வதில் ஆசை உள்ளதா?"

"ஆசையிருக்கிறது, ஆனால்...."

"அப்படியானால் நீங்கள் என் சீடராகிவிடலாமே. நான் உங்களுக்கு மந்திர வித்தைகளைக் கற்பிக்கிறேன்."

"இதற்கு நான் யோசித்துப் பதில் சொல்கிறேனே. ஒருநாள் அவகாசம் கொடுங்கள்."

"தாராளமாக, நான் உங்களுக்காகக் காத்திருப்பேன்."

கேசவன் எழுந்து நடக்கத் தொடங்கியபோது அவர் மீண்டும் அவனை அழைத்தார்.

"இங்கு வாருங்கள்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

20

கேசவன் திரும்பி வந்தபோது அவர் கூறினார். "துர்கா கோயிலைப்பற்றி நான் உங்களிடம் கூறிய ரகசியத்தை, நீங்கள் வேறு யாரிடமும் வெளியிட்டு விடக்கூடாது. உங்கள் மனசுக்குள்ளேயே அது பத்திரமாக இருக்க வேண்டும்... புரிந்ததா?"

கேசவன் அதை ஒப்புக்கொள்ளும் பாவனையில் தலையாட்டி அவரிடமிருந்து விடைபெற்றான். வரும் வழியில் அவன் மனம் அந்த சன்னியாசியைப் பற்றி நினைத்தது.

'நான் பெற முயற்சிக்கும் பொருளையே அவரும் தேடி வந்திருக்கிறார். இந்தப் பொருளைப்பற்றி நமக்குத் தெரிந்ததைவிட ஒரு படி அதிகமாகவே அவர் தெரிந்து வைத்திருக்கிறார்.

இந்த சன்னியாசி அதைக் கண்டுபிடித்துக் கைப்பற்றிவிட்டால், நம்முடைய எல்லா லட்சியங்களும் தகர்ந்துவிடும். அதனால் அவர் துர்கா கோயிலை நெருங்குவதற்கு முன்பாக எப்படியாவது நான் அதை அடைய வேண்டும்' கேசவனின் மனதில் ஒரு தீர்மானம் உருவானது.

அன்று நள்ளிரவில் கேசவன் அரண்மனையிலிருந்து வெளியேறினான். மோகினி கோயிலுக்குச் சென்று வசந்தசேனையைச் சந்திக்க விரும்பினான். அங்கு சென்றபோது அவனுக்காகவே காத்திருந்த மாதிரி அவள் எதிர்ப்பட்டாள்.

"என்ன இன்றைக்கு வழக்கத்தைவிடச் சீக்கிரமாக வந்திருக்கிறீர்கள்? ஏதாவது செய்தி இருக்குமென்று தோன்றுகிறது. எனது ஊகம் சரிதானா?" அவள் கேட்டாள்.

கேசவன் அன்று மதியம் சன்னியாசியைச் சந்தித்ததையும், அவரிடமிருந்து தெரிந்து கொண்ட விஷயங்களையும் அவளிடம் கூறினான். இறுதியாக. "இதையெல்லாம் நான் ஏன் உன்னிடம் சொல்கிறேன் தெரியுமா? வசந்தசேனை, நீ ஒரு மனிதப் பெண்ணாக இல்லாததால்தான். இந்த ரகசியத்தை வேறு எந்த மனிதரிடமும் தெரிவிக்கக்கூடாது என்பது சன்னியாசியின் கட்டளை."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இப்பொழுதைய நிலையில் அந்த சன்னியாசி ஆபத்தானவர். துர்காதேவியின் கையிலுள்ள கிரந்தத்தைப் பற்றி அவருக்குத் தெரிந்துள்ளது. அதனால் எந்தவிதமான தியாகத்தையும் செய்து அவர் அதைக் கைப்பற்ற முயலுவார். இல்லையா?" வசந்தசேனை கேட்டாள்.

"ஆனால், இளவரசி கூறிய விஷயம் வேறு அல்லவா? ஓர் ஆண் அதை எடுக்க முடியாது என்றாரே! இவ்வளவெல்லாம் தெரிந்து கொண்ட சன்னியாசி, இந்த விவரத்தையும் தெரிந்து வைத்திருப் பாரோ?"

"வந்திருக்கும் சன்னியாசிக்கு இந்த விவரம் தெரியுமா தெரியாதா என்பதை, நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்?"

"அந்த சன்னியாசி என்னை அவரது சிஷ்யனாகும்படி கூறினார்."

வசந்தசேனை மௌனமாக இருந்தாள். பின்பு கோயிலை நோக்கி நகர்ந்து உட்புறமாகத் திரும்பி நின்றாள். சற்று நேரம் ஏதோ யோசனையிலிருந்துவிட்டுப் பின்பு கேசவனிடம் கூறினாள். "நீங்கள் அவருடைய சீடரானால், அவர் உங்களது குருவாகி விடுவார். அதன்பிறகு குருவை எதிர்த்துச் செயல்படுவது பாவ மில்லையா? நீங்களே அந்தக் கிரந்தத்தை எடுத்துக் கொள்வதாக இருந்தாலும் உங்களுடைய குரு என்கிற நிலையில் அவர் அதைக் காணிக்கையாகக் கேட்கலாம் இல்லையா?"

'வசந்தசேனை கூறியது சரிதான். ஒருபோதும் தான் அவருக்குச் சிஷ்யனாகக் கூடாது' என்று கேசவன் தீர்மானித்தான்.

"ஆனால் வசந்தசேனை, இன்னொரு விஷயத்தையும் நீ கவனத் தில் கொள்ள வேண்டும். அவர் ஒரு பெரிய மந்திரவாதி. என்னைத் தாக்க வந்த பிசாசை தன்னுடைய ஒரே ஒரு தலைமுடியாலேயே எரித்துவிட்டார்."

"இருக்கலாம். ஆனால், குருவும் சீடனும் மகத்தான ஒரே விஷயத்திற்காக உழைப்பதென்பது சரி அல்ல. பின்னால் சிக்கல்கள் ஏற்படுவதற்கு முன்பே இந்த நட்பை ஓர் அளவுடன் நிறுத்திக் கொள்வது நல்லது."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"சரி. ஆனால் அவரது நடவடிக்கைகளை நான் எவ்வாறு தெரிந்து கொள்வது?"

"அதற்கு வேண்டுமானால் நான் உங்களுக்கு உதவுகிறேன்."

ஏறத்தாழ ஒரு வார காலம் நாகேந்திரன் என்கிற அந்த சன்னியாசி பாண்டவ மலையின் அடிவாரப் பகுதியில் ஒரு மூலை முடுக்கைக்கூட விடாமல் அலசிப் பார்த்தார். ஒரு நாள் மாலை நேரத்தில் இதேபோல் அவர் சுற்றி அலைந்து கொண்டிருந்தபோது வயதான ஒரு காட்டுவாசியை சந்தித்தார்.

பார்த்தால் நூறு வயது மதிக்கத் தோன்றும். முடி நரைத்திருந்தது. சாக்குத் துணி போன்ற போர்வையை அங்கி போல் தைத்து அணிந்திருந்தார். அவரது கையில் ஒரு சிறிய மரக்கொம்பு இருந்தது. அதை ஊன்றியபடியே அவர் நடந்தார்.

நாகேந்திரனைக் கண்டதும் அவர் சட்டென்று நின்றார். பயபக்தியுடன் முனிவரை வணங்கினார். ஒரு வார காலமாக மலையடிவாரத்தில் சுற்றிக் கொண்டிருந்த நாகேந்திரனுக்கும் இந்தக் கிழவரை சந்தித்தபோது மகிழ்ச்சி தோன்றியது.

"பெரியவரே, நீங்கள் யார்?"

"இந்த மலை உச்சியில் வசிக்கிற ஒரு வனவாசி நான்."

"தனியாகத்தான் இருக்கிறீர்களா?"

"எனக்கு குழந்தைகள், பேரக்குழந்தைகள் என்று ஒரு பட்டாளமே இருந்தது. எல்லாரும் இறந்து விட்டார்கள். மற்றவர்களுக்கு என்னைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது."

"உங்களது பெயர்?"

"பேரா? எனக்கா? அப்படி ஒன்று எனக்கு இருந்ததாக ஞாபக மில்லை."

"இருந்தாலும் உங்களை மற்றவர்கள் அழைத்துப் பேச ஒரு அடையாளம் வேண்டாமா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இதுவரை என்னை யாரும் எதற்காகவும் அழைத்ததில்லை. எதற்காகக் கூப்பிட வேண்டும்?"

"மலையில் எங்கே தங்கியிருக்கிறீர்கள்?"

"அதோ, அந்த மலை உச்சியில் அகலமாக விழுது இறங்கி யிருக்கிற ஒரு பெரிய ஆலமரம் உள்ளது. அந்த மரத்தில் பரண் கட்டிக் கொண்டு வசிக்கிறேன்."

"நான் உங்களுடன் உங்கள் பரண் வீட்டுக்கு வரலாமா?" சன்னியாசி கேட்டார்.

"தாராளமாக வாருங்களேன்."

'இந்தப் பெரியவருக்கு துர்கா கோயிலைப் பற்றி ஏதாவது தெரிந்திருக்க வேண்டும்' என்று நாகேந்திரன் நினைத்தார். இருந்தாலும் அதை உடனடியாகக் கேட்டுவிடக் கூடாது என்றும் தோன்றியது. அதற்காகவே பெரியவருடைய பரண் வீட்டிற்குச் சென்றார்.

தான் இதுவரை கற்றிருந்த மந்திர வித்தைகளைப் பயன்படுத்திப் பார்த்தும் அந்தத் துர்கா கோயில் எங்கே உள்ளது என்பது மட்டும் இதுவரை தெரியவில்லை. எனவே, அதைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும் என்று தேடத் தொடங்கியிருந்தார்.

இருவரும் மலை உச்சியை அடைந்தபோது இருட்டி விட்டி ருந்தது. ஆனால் மலை உச்சியில் மட்டும் சிறிது வெளிச்சம் தெரிந்தது. அங்கிருந்தபடியே பார்த்தபோது, சுற்று வட்டாரத்திலுள்ள கிராமம் முழுவதும் தெளிவாகத் தெரிந்தது. சற்று நேரம் கழித்து மேகங்களி லிருந்து விடுபட்ட நிலவொளி பூமிப் பரப்பின் மீது பட்டதும் மந்திர வாதியான நாகேந்திரனுக்கே அந்தக் காட்சிகள் ஒரு மாயாஜாலம் போல் தெரிந்தன. அது புதுமையான அனுபவமாகவும் இருந்தது.

"வாருங்கள், நாம் பரணுக்குச் செல்லலாம். இந்த இடத்தில் இருப்பது பாதுகாப்பனதல்ல" பெரியவர் கூறினார்.

"நீங்கள் என்னுடன் இருப்பது வரை உங்களுக்கு எந்த ஆபத்தும் நேராது!" நாகேந்திரன் கூறினார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இங்கிருக்கிற காட்டு விலங்குகளுக்கு இந்த மகிமையெல்லாம் தெரியாது. நீங்கள் யாராக இருந்தாலும் பிடித்துத் தின்றுவிடும்."

"சரி, வாருங்கள் போகலாம்."

வயதானவர் ஆலமரத்தடியை நெருங்கினார். தன் கையில் இருந்த கம்பை உயர்த்திக் கொடிகளால் கட்டப்பட்டிருந்த ஓர் ஏணியைத் தட்டிவிட்டார். அது ஒரு நூலேணி போல் அழகாகப் பின்னப்பட்டிருந்தது. வயதாகியிருந்தாலும் பெரியவர் எந்தவிதச் சிரமமும் இல்லாமல் சரசரவென்று அந்த ஏணியில் ஏறினார். நாகேந்திரனும் அவரைப் பின்தொடர்ந்தார்.

"நேரம் இரவாகிவிட்டதே! நீங்கள் எதுவும் சாப்பிடவில்லை யென்று நினைக்கிறேன்."

"ஆமாம், உண்மைதான்."

"உங்களுக்குப் பசிக்கிறதா?"

"இங்கு வந்தபிறகு பசிக்கிறது என்று சொல்லி என்ன பிரயோஜனம்?"

"நான் சாப்பிடுகிற பொருளை நீங்களும் சாப்பிடுவீர்கள் என்று நினைக்கிறேன்."

"மீன், இறைச்சி வகைகளைத் தவிர, வேறு எதுவாக இருந்தாலும் சாப்பிடுவேன்."

"அப்படியானால் நான் தருகிறேன்" பெரியவர் பரணின் ஒருபுறச் சுவரிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த சுரைக் குடுக்கையை எடுத்தார்.

"இது ஒருவகையான பானம். காட்டுப் பழங்களையும் தேனையும் கலந்து தயாரிக்கப்பட்டது. இதில்தான் என்னுடைய உடல் வலுவின் ரகசியம் அடங்கியுள்ளது. என் உருவத்தைப் பார்த்து நீங்கள் தவறாக நினைக்க வேண்டாம். என் உடலில் நல்ல வலுவுள்ளது. இத்துடன் நான் சுட்டு வைத்திருக்கும் கிழங்குகளையும் தருகிறேன்."

சற்று நேரத்தில் அவற்றைக் கொண்டு வந்தார். இருவரும் திருப்திகரமாகச் சாப்பிட்டனர். அந்தப் பானத்தின் ருசி இன்னதென்று விவரிக்க முடியாததாக இருந்தது. ஆனால், நல்ல சுவையாகவே

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

இருந்தது. அந்தக் கிழங்கு வகைகளை நாகேந்திரன் இதுவரை கேள்விப்பட்டதோ, பார்த்ததோ கூட இல்லை. அவையும் நல்ல சுவையுடன் இருந்தன. பெரியவர் கிழங்குகளைவிட மதுபானம் போன்ற அந்த பானத்தையே அதிகம் பருகினார்.

"வெகு நாட்களுக்குப் பிறகு இந்தப் பகுதியில் நான் ஒரு மனிதனைச் சந்திக்கிறேன். எனக்குத் தெரிந்து சுமார் பதினைந்து வருடங்களாகிறது, இந்த இடத்தில் மனிதர்களைச் சந்தித்து. அப்படித் தான் எனக்குத் தோன்றுகிறது" கிழவர் கூறினார்.

"உங்களுடைய இந்தப் பரணுக்கு என்னைப் போலவே தோற்ற முள்ள மனிதர் யாராவது இதற்குமுன் வந்திருக்கிறார்களா?"

"இங்கு யாரும் அநாவசியமாக வருவது இல்லை. ஆனால், எவரும் வரவே இல்லையென்றும் சொல்ல முடியாது."

"இங்கு வந்தவர்கள் எதற்காக வந்திருந்தனர்?"

"ஒவ்வொருவரும் அவரவர்க்கு விருப்பமான பொருள்களைத் தேடி வந்தனர்."

"இதுவரையில் எத்தனை பேர் வந்திருப்பார்கள்?"

பெரியவர் யோசனையில் ஆழ்ந்தார். சற்றுநேரம் அந்தப் பரணின் மோட்டு வளையையே பார்த்துக் கொண்டிருந்தார். அதன் தட்டிச் சுவரில் பச்சையான இலைச்சாறு கொண்டு என்னவெல்லாமோ கிறுக்கப்பட்டிருந்தது. அந்தச் சுவரில் என்னவெல்லாமோ தொங்கிக் கொண்டிருந்தன.

புலி நகம், விலங்குகளின் கொம்புகள், எலும்புத் துண்டுகள் போன்றவை ஓர் ஒழுங்கு முறையில்லாமல் இறைத்து வைத்தவை போல் இருந்தன.

"மூன்று பேர் வந்திருப்பார்கள்."

"எதற்காக வந்தார்கள்?"

"அதை அவர்கள் என்னிடம் சொல்வார்களா? ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு நோக்கமிருந்திருக்கும்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"எதனால் அவர்கள் தங்களது நோக்கத்தைப் பற்றி உங்களிடம் கூறவில்லை?"

"அதை அவர்களைத் தவிர, மற்றவர்கள் அறிந்து கொள்வதை அவர்கள் விரும்பவில்லை என்பதுதான் அர்த்தம்?"

"நீங்களும் அவர்களிடம் அதைப்பற்றி கேட்டதில்லையா?"

"நான் ஏன் அதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும்? இங்கு வந்தால் நான் உபசரிப்பேன். பிறகு அவர்கள் தங்கள் வழியைப் பார்த்துக் கொண்டு போவார்கள்."

"ஆனால், நான் எதற்காக இந்த இடத்திற்கு வந்திருக்கிறேன் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துவதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையுமில்லை. காரணம், நான் அதை உங்களிடம் கூறினால், எனக்குப் பயன்படுவது மாதிரி நீங்கள் உதவக்கூடும்."

"என்னிடம் சொல்ல வேண்டுமென்று தங்களுக்குத் தோன்றினால் சொல்லுங்கள், கேட்டுக் கொள்கிறேன்" பெரியவர் இன்னும் சற்று பானத்தை அருந்தினார்.

"இந்த மலையில் எங்கேயோ ஒரு கோயில் உள்ளது. அதன் பெயர் துர்காதேவி கோயில். அந்தத் துர்காதேவியை வணங்கி வழிபடுவதற்காக நான் வந்திருக்கிறேன்."

"இவ்வளவுதான் விஷயமா? அப்படி ஒரு கோயிலைப் பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்."

"உங்களுக்கு அந்தக் கோயிலைப் பற்றி ஏதாவது தெரியுமா?"

"எனக்குத் தெரிந்த ஒரே ஒரு விஷயம் இதுதான். இந்த மலையில் எங்கோ ஓரிடத்தில் கீழ்ப்புறமாக இறங்கிச் செல்லும் சுரங்கம் ஒன்று உள்ளது. மழை படாதபடி அது அமைந்துள்ளது."

"அப்படியானால் அதுதான் நான் தேடி வந்த கோயிலுக்கான வழியாக இருக்கும்."

"அந்த விவரமெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால், அந்தச் சுரங்கத்தை வேண்டுமானால் காட்டித் தருகிறேன்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"உங்களுக்கு எப்பொழுது சௌகரியப்படும்?"

"பகல் நேரமாக இருந்தால் அது எங்கே உள்ளது என்று தெளிவாகத் தெரியும். ஆனால், அந்த வழியாக நீங்கள் இறங்கிச் செல்ல முடியுமோ, என்னவோ? எனக்குத் தெரியாது."

"ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?"

"பகல் வேளையில்கூட அதற்குள் கடுமையான இருட்டுதான். அங்கே பகலும் இரவும் ஒன்றுதான்!"

"இந்த இரவில் நீங்கள் எனக்கு அதைக் காட்டுவதில் உங்களுக்குச் சிரமம் ஏதாவது உண்டா?" நாகேந்திரன் கேட்டார்.

"எனக்கென்ன சிரமம்? நான் காட்டுகிறேன்" பெரியவர் தட்டிச் சுவரை உற்றுப் பார்த்தபடியே கூறினார்.

21

பெரியவர் நாகேந்திரனுடன் பரணிலிருந்து கீழே இறங்கினார். பிறகு மலை உச்சிப் பகுதியிலேயே மிகப்பெரியதாகத் தோன்றிய பாறையை நோக்கி நடந்தார்கள். அப்பொழுது நிலவு நன்றாகப் பிரகாசித்தது. அந்தப்பகுதி முழுவதும் நிலவொளியில் நன்கு தெளிவாகத் தெரிந்தது. தூரத்திலிருந்து பார்த்ததைவிடப் பக்கத்தில் நெருங்கியபோது, அந்தப் பாறை இன்னும் பெரியதாக இருந்தது.

"இந்தப் பாறையை அகற்றினால் இதற்குள் ஒரு குகை உள்ளது. அதற்குள்ளேயும் ஏராளமான ரகசியங்கள் புதைந்திருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அதைச் சோதித்துப் பார்த்த தில்லை" பெரியவர் கூறினார்.

"இதற்குள் யாராவது இறங்கியிருப்பதாக நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?" நாகேந்திரன் கேட்டார்.

"இதற்குள் இறங்கிச் சென்ற எவரும் இதுவரை மீண்டு வந்ததாக நான் கேள்விப்பட்டதில்லை" பெரியவர் பதிலளித்தார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld
https://telegram.me/tamilbooksworld

இதைக்கேட்ட நாகேந்திரனின் முகம் மங்கியது. ஆனாலும் தைரியத்துடன் நின்றிருந்தார்.

"இந்தப் பாறையை அகற்றினால்தான் உள்ளே போக முடியும் அல்லவா?"

"ஆமாம். இதற்குள் சென்றவர்கள் எல்லாரும் இந்தப் பாறையை நீக்கும் வல்லமை பெற்றிருந்தார்கள்."

நாகேந்திரன் இன்னும் சற்றுப் பின்னால் நகர்ந்தார். சற்று நேரத்திற்குப் பிறகு தமது தலையிலிருந்து ஒரு முடியைப் பிடுங்கினார். அதை உதட்டுடன் சேர்த்து மந்திரம் சொல்லிய பிறகு கல்லை நோக்கி எறிந்தார். அந்த முடி கல்லைச் சுற்றியபடி விழுந்தது. முடி ஒரு வட்டப்பாதையில் கல்லைச் சுற்றிலும் பிடித்துக் கொண்டது. உடனே அவர் அந்த முடியைப் பிடித்து இழுத்தார்.

பெரியவர் வியப்பின் வசப்பட்டு இமைக்க மறந்து நின்று கொண்டிருந்தார். அந்தப் பிரம்மாண்டமான கல் சட்டென்று ஒருபுறமாக நகர்ந்தது. தொடர்ந்து கீழ்ப்புறம் செல்லும் குறுகலான படிகளும், குகை வாசலும் தெரிந்தன.

படிக்கட்டில் பச்சை நிறமான பாசம் பீடித்திருந்தது. "நான் உள்ளே செல்கிறேன்" நாகேந்திரன் கூறினார்.

"சரி" எந்தவிதமான உணர்வையும் வெளிப்படுத்தாமல் பெரியவர் நாகேந்திரனிடம் கூறினார். பிறகு தன்னுடைய பரணை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

மரத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த ஏணியில் ஏறித் தனது பரண் சுவரில் காட்டுக்கொடி ஒன்றினால் வளையம் ஒன்றைச் செய்து வைத்தார். அப்படிப்பட்ட வளையங்கள் இத்துடன் ஆறு இருந்தன. ஒருமுறை அவற்றை எண்ணிச் சரிபார்த்த பெரியவர், தமக்குள் சிரித்துக் கொண்டார்.

நாகேந்திரன் ஒவ்வொரு படிக்கட்டிலும் வெகு கவனமாக அடி வைத்து இறங்கிக் கொண்டிருந்தார். இருபத்தோராவது படியை மிதித்த பிறகு கால் பதிந்தது ஒரு சமதளம் என்பது தெரிந்தது. எங்கும் இருள்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நிறைந்திருந்தது. நாகேந்திரன் தன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த பையிலிருந்து தீப்பெட்டி ஒன்றைத் தேடி எடுத்து உரசிக் கொளுத்தினார். சுற்றுமுற்றும் பார்த்தார். அவரது கண்கள் சட்டென்று ஒளி பெற்றன. பிறகு தோள் பையிலிருந்து ஒரு மெழுகுவத்தியை எடுத்துக் கொளுத்தினார். அதை அருகே ஓர் இடத்தில் பொருத்தினார்.

"கிழவர் சொன்னது பொய்யல்ல" நாகேந்திரன் முணுமுணுத்தார்.

நாகேந்திரன் அந்த மலைக் குகையில் கண்ட காட்சி வியப்பிற்குரியதாக இருந்தது. பன்னிரண்டுக்குப் பன்னிரண்டடி சம சதுரமாக இருந்த அந்தக் குகையின் ஒரு பகுதியில். ஒரு சிலை இருந்தது. ஓர் ஆள் உயரத்தில் பாம்பு வடிவத்தில் இருந்தது அது. ஆனால் அதன் தலை ஒரு மனிதப் பெண்ணினுடையதுபோல் இருந்தது. உடலின் மீதிப் பகுதிகள் மண்ணுக்குள் புதைந்திருந்தன.

அந்தச் சிலைக்கு முன்பாகக் கல்லால் ஆன ஒரு விளக்கு இருந்தது. அதில் எண்ணெய் இருந்ததற்கான அடையாளமே இல்லை. இந்த விளக்கின் வலதுபுறத்தில் நான்கு அடிஉயரமுள்ள ஐந்து சிலைகள் இருந்தன. ஐந்தும் ஆண் சிலைகள்.

நாகேந்திரன் அந்தச் சிலைகளைப் பரிசோதித்தார். பல வயதிலுள்ளவர்களின் உருவங்கள். எல்லாரும் அசாதாரணமான வர்கள் என்பது தோற்றத்திலேயே தெரிந்தது.

'இவர்கள் யாராக இருப்பார்கள்?' நாகேந்திரன் யோசித்தார். பெரியவர் சொன்ன விஷயம் நினைவுக்கு வந்தது. 'குகைக்குள் சென்ற யாரும் மீண்டதில்லை' ஒருவேளை இவர்கள்தானோ அது? அப்படியானால் தன்னுடைய நிலை? இதை எண்ணிய நாகேந்திரன் ஒருகணம் திடுக்கிட்டார்.

அதே நேரத்தில் பாம்பு வடிவத்திலிருந்த தலையின் கண்கள் மெதுவாக அசையத் தொடங்கின. நாகேந்திரன் அதைக் கவனிக்க வில்லை. பூமியின் அடிப்புறமாச் சென்றுள்ளதுபோல் தோன்றிய அந்தச் சிலையின் வால் பகுதி நாகேந்திரனுக்குப் பின்புறமாக உயர்ந்து வந்து மெதுவாக நாகேந்திரனை நெருங்கவும் செய்தது. ஆனால். விளைவு சட்டென்று நிகழ்ந்தது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஒரு பிரம்மாண்டமான பாம்பின்வால் என்று தோன்றக்கூடிய அந்தப் பகுதி நாகேந்திரனின் உடலைச் சுற்றி வளைத்தது. கழுத்து வரை திடுமென்று சுற்றியதால் நாகேந்திரன் விழாமல் சட்டென்று சுதாரித்துக் கொள்ள நேர்ந்தது.

உடனே பாம்பு போலிருந்த அந்தப் பெண் தலையிலிருந்த கண்கள் குரூரமாக மாறின. அதன் உதடுகளில் பைசாசிகமான ஒரு சிரிப்பு தோன்றியது.

நாகேந்திரன் அந்தப் பிடியிலிருந்து தமது வலது கையை ஒரு வகையாக விடுவித்தார். தன் தலையிலிருந்து ஒரு முடியைப் பிடுங்கி அதன்மீது ஜபித்து எறிந்தார். ஆனால் அந்த முடி அதை நெருங்காமல் அந்தரத்திலேயே எரிந்து கருகியது.

இதைப் பார்த்ததும் நாகேந்திரன் திடுக்கிட்டார். ஆனால், வால் பகுதியின் பிடி இறுகிக் கொண்டிருந்தது.

"ஓகோ, என்னை அழிக்க நினைத்தாய் இல்லையா? அதற்கான தண்டனையை நீ அனுபவிக்கத்தான் வேண்டும். தண்டனை என்ன தெரியுமா?" எதிரே இருந்த கற்சிலைகளைப் பார்த்தபடியே அந்த உருவம் பேசியது.

"என்னைப் பொறுத்தருள வேண்டும். எனக்கு எதுவும் தெரியாது. பெரியவரின் வார்த்தைகளை நம்பி சட்டென்று இதற்குள் நுழைந்து விட்டேன்" நாகேந்திரன் கூறினார்.

"அப்படியானால் உன்னுடைய ஜடையிலிருந்து முடியைப் பிடுங்கி பாஸமந்திரம் ஜபித்து எதற்காக என்மீது எறிந்தாய்?" அந்தப் பாம்புச்சிலை கேட்டது.

"நான் ஒரு மந்திரவாதி. என்னுடைய சுய பாதுகாப்புக்காக அப்படிச் செய்து விட்டேன்."

இதைக் கேட்டதும் அந்தச் சிலையின் கோபம் தணிந்தது.

"நீ உண்மையைப் பேசியதால் தப்பித்தாய். நான் உனது எதிரியத்தில் மகிழ்ச்சியடைகிறேன்" வால் பகுதி அவரை விடுவித்தது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"மற்றவர்கள் என்னை எதிர்க்க முற்படவில்லை. அவர்கள் எனது தயவிற்காகப் பிரார்த்தித்தார்கள். நீ அவ்வாறு செய்யவில்லை. அதனால் உனது வீரத்தை மெச்சுகிறேன்."

நாகேந்திரனுக்குச் சற்று நிம்மதி தோன்றியது.

"நீ எதற்காக இங்கு வந்திருக்கிறாய்?" பாம்புக்கன்னி கேட்டாள்.

"பாண்டவன் மலையின் உட்புறத்தில் எங்கேயோ மறைந் திருக்கிற துர்காதேவி கோயிலைக் கண்டுபிடிப்பதே எனது லட்சியம்."

"துர்கா கோயில்... உதயநல்லூரை ஆட்சி செய்த மன்னன் கட்டிய கோயில்... அதைத்தானே?"

"ஆமாம். அந்த தேவி விக்கிரகம் சுயம்பு என்றும் கேள்விப் பட்டிருக்கிறேன்."

"நீ எதற்காக அதைத் தேடுகிறாய்?"

"அந்தக் கோயிலுக்குள் இருக்கும். தேவியின் கையில் ஓர் அற்புதமான கிரந்தம் உள்ளது. அதை எடுக்க வேண்டும்."

"நான் உனக்கு உதவ முடியுமா என்று பார்க்கிறேன். ஆனால். அதற்கு நீ எனக்குத் தரவேண்டிய பலி கொஞ்சம் கடினமானது" சர்ப்ப கன்னி கூறினாள்.

"என்னவென்று அருளிச் சொன்னால் அடியேன் செய்கிறேன். என் தலையையே வேண்டுமானாலும் தருகிறேன் தாயே."

"அது வேண்டாம். எனக்குத் தேவை ஒரு கன்னிப்பெண்ணின் ரத்தம். இந்த இடத்தில் அந்த பலியை நீ மேற்கொண்டால், உடனடியாகவே உனக்கு பலன் கிடைக்கும்."

"உத்தரவு! கொண்டு வருகிறேன்" நாகேந்திரன் தலை வணங்கிக் கூறினார்.

"அப்படியானால் நீ இங்கிருந்து வெளியேற உன்னை அனுமதிக்கிறேன். நீ வெளியே சென்ற பிறகு வாசலிலுள்ள பாறையை மீண்டும் பழைய நிலையிலேயே அடைக்க வேண்டும்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அப்படியே!" நாகேந்திரன் அங்கிருந்து வெளியே வந்தார். பழையபடி மந்திரம் ஜபித்துப் பாறையை நகர்த்தி மூடி வைத்தார். குகைவாசல் மறைந்து போனது.

நாகேந்திரன் ஆலமரத்தடியை அடைந்து, கொடியேணி வழியாகப் பெரியவரின் பரணை அடைந்தார். நாகேந்திரனை உயிருடன் பார்த்த பெரியவர் வியப்படைந்தார்.

"நீங்கள் திரும்பி வந்து விட்டீர்களா?" கிழவர் சுவரிலிருந்து ஒரு வளையத்தைக் கையில் எடுத்தபடியே கூறினார்.

"ஆமாம், நான் திரும்பி வந்து விட்டேன்" நாகேந்திரன் விடையளித்தார்.

"இப்பொழுது உங்களது தேவை ஒரு கன்னிப்பெண் அல்லவா?" பெரியவர் கேட்டார்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடன் நாகேந்திரன் வியப்படைந்து கிழவரையே பார்த்தார்!

22

"எனக்குத் தெரியும். நீங்கள் ஒரு கன்னிப்பெண்ணைத் தேடி வந்திருக்கிறீர்கள். அப்படித்தானே?" கிழவர் மீண்டும் நாகேந்திரனிடம் கேட்டார்.

"ஆமாம், நீங்கள் சொன்னது மெத்தச் சரி. எனக்கு அங்கிருந்து கிடைத்த உத்தரவும் அதுதான்."

"அவ்வளவு தூரம் வரை செல்ல முடிந்த நீங்கள் வெற்றி பெறவும் வாய்ப்பு உள்ளது. இதுவரை அங்கு சென்றவர்கள் திரும்ப வந்ததே இல்லை."

"எங்கிருந்து ஒரு கன்னிப்பெண்ணைக் கொண்டு வருவது?" நாகேந்திரன் கேட்டார்.

பெரியவர் சற்று நேரம் மௌனமாக இருந்தார். மறுபடியும் அவர் சுரைக் குடுக்கையிலிருந்து பானத்தை எடுத்துக் குடித்தார். பிறகு

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

சுவரில் தொங்கும் மூங்கில் குழாயை எடுத்தார். அதற்குள் புகையிலை இருந்தது. அதை விரித்து, ஒரு சுருட்டாக மாற்றிச் சுருட்டினார். பற்ற வைத்தார். அறை முழுக்க அதன் கடுமையான கார நெடி பரவியது.

"உங்களது தேவைக்கு நான் ஒரு வழி சொல்லித் தருகிறேன். நீங்கள் வசித்து வந்த மண்டபத்தின் தெற்குப்புறத்தில், தென்கிழக்குப் பகுதியில் ஒரு ஆறு உள்ளது. அதன் கரையில் ஓரிடத்தில் ஒரு புன்னை மரம் விழுந்து கிடக்கும். அதற்கு எதிர்த் திசையில் சென்றால் ஒரு சிறிய வீடு தென்படும். அங்கு ஒரு அம்மாவும் பெண்ணும் வசிக்கிறார்கள்" பெரியவர் கூறினார்.

"இது போதும். மீதியை நான் கவனித்துக் கொள்கிறேன்" நாகேந்திரனின் கண்கள் பளபளத்தன.

"அவள் ஒரு கன்னிப் பெண். அவளை எப்படியாவது அழைத்துக்கொண்டு வந்தால், உங்களது நோக்கம் நிறைவேறிவிடும்" பெரியவர் கூறினார்.

"நாளைக்கு அதுதான் எனது வேலை. உங்களைச் சந்தித்தது என்னுடைய நற்பலனால்தான் என்று கருதுகிறேன். இதற்குக் கைம்மாறாக நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?" நாகேந்திரன் கேட்டார்.

"துர்காதேவி கோயிலிலிருந்து நீங்கள் எதை எடுக்கிறீர்களோ அதில் ஒரு சிறு பகுதியை எனக்குத் தந்தால் போதும்."

"அது ஒரு கிரந்தமாயிற்றே. அதை எப்படி நீங்கள் கேட்பதுபோல் பிரிப்பது?"

"அது பரவாயில்லை. அந்தக் கிரந்தத்தில் உங்களுக்கு தேவையில்லாத ஏதாவது ஒரு பகுதியை எனக்குத் தந்தால் போதும்."

"எனக்குத் தேவையில்லாததையா? அப்படி ஒன்று அதில் இருக்குமா என்ன?" நாகேந்திரன் சந்தேகத்துடன் கேட்டார்.

"மந்திர வித்தைகளில் நீங்கள் சற்றும் சளைத்தவரல்லர் என்பது எனக்குத் தெரியும். அதனால் அப்படிப்பட்ட மந்திரங்கள் ஏதாவது,

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அதாவது உங்களுக்கு ஏற்கெனவே தெரிந்த. மறுபடியும் தேவைப் படாத மந்திரங்கள் இருந்தால் அதை எனக்குத் தரலாமல்லவா?"

"முதலில் அது நம் கையில் கிடைப்பதற்கு உங்களால் வேறு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யுங்கள். எவ்வளவு விரைவில் அந்தப் பெண்ணைக் கொண்டு வந்து அந்த நாக கன்னிகைக்குப் பலி கொடுக்க முடியுமோ அதை நான் செய்கிறேன்."

அன்று இரவை நாகேந்திரன் அந்தப் பரணில் பெரியவருடன் கழித்தார். மறுநாள் காலையில் நாகேந்திரன் மாலதியின் வீட்டை நோக்கி நடந்தார். விரைவிலேயே அந்த வீட்டைக் கண்டுபிடிக்கவும் செய்தார்.

நாகேந்திரனைக் கண்டவுடன் பவானியம்மாவும், மாலதியும் எழுந்து மரியாதை செய்து வரவேற்றனர்.

"மங்களம் பவந்து" நாகேந்திரன் அவர்களை ஆசீர்வதித்தார்.

" வாமி எங்கிருந்து வருகிறீர்கள்?" பவானியம்மாள் கேட்டாள்.

"இன்ன இடம்தான் என்று எங்களைப் போன்றவர்களுக்கு ஏதாவது உண்டா என்ன? எங்கிருந்தோ வருகிறோம். எங்கேயோ போகிறோம். அப்படிப்பட்ட ஒரு பயணத்தில் இப்பொழுது இந்த இடத்தை அடைந்திருக்கிறேன்."

" வாமிக்கு இளநீர் தரலாமா?"

"சாப்பிடலாம். ஆனால் ஒரு நிபந்தனை - அதை ஒரு கன்னிப் பெண்தான் தரவேண்டும்" நாகேந்திரன் மாலதியைப் பார்த்தபடி கூறினார்.

"உங்களைப் போன்றவர்களுக்காக எதையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். மாலதி, வாமிக்கு ஒரு இளநீரைக் கொண்டு வந்து கொடும்மா."

சன்னியாசியாகத் தோற்றமளிக்கும் நாகேந்திரனைக் கண்டபோது மாலதிக்கும் அவரிடம் மதிப்பு தோன்றியது. நாகேந்திரனின் ஒளி பொருந்திய முகமும் வசீகரமான கண்களும் யாரையும் கவரும்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

வகையில் இருந்தன. அவரது நடை, உடை, பாவனை கூட சட்டென்று எவரையும் மயக்கும் தன்மையிலேயே இருந்தன.

நாகேந்திரன் கேட்டபடியே மாலதி இளநீரைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

"இது உங்கள் மகள்தானே!" நாகேந்திரன் பவானியம்மாளிடம் கேட்டார்.

"ஆமாம் வாமி."

"குழந்தையின் நட்சத்திரம் என்ன?"

பவானியம்மாள் அதைக் கூறினாள்.

உடனே நாகேந்திரன் தனது துணிப் பையிலிருந்து சோழிகளை எடுத்தபடி, ஒரு பலகையைக் கொண்டு வரும்படி கூறினார். அதில் சோழிகளைப் பரப்பி வைத்துக் கணக்கிட்டார். பின்பு வெகுநேரம் யோசித்தார். இறுதியில் பவானியம்மாளிடம் கூறினார்.

"இந்தக் குழந்தையின் தசாபுத்தி இப்பொழுது மிகவும் மோசமாக உள்ளது. மூன்று மாதத்திற்குள் இந்தப் பெண்ணிற்கு ஒரு விபத்து நேருவதற்கான வாய்ப்பு உள்ளது."

இதைக் கேட்டவுடன் அந்த இருவரது முகமும் மங்கலடைந்தன. அதுவரையில் அவர்களது முகத்திலிருந்த மகிழ்ச்சியே வடிந்தது போல் இருந்தது.

"அதற்கு என்ன செய்யலாம் வாமி? நீங்கள்தான் இதற்கும் ஒரு வழி சொல்ல வேண்டும்" பவானியம்மாள் வேண்டினாள்.

"எதற்கும் நான் இன்னொரு தடவையும் பார்த்து விடுகிறேன்" மறுபடியும் சோழிகளைப் பரப்பினார், யோசித்தார்.

"உங்கள் பெண்ணுக்கு நாகமோகினியின் கோயிலில் மூன்று நாட்கள் பூஜை செய்தால், எல்லா தோஷங்களும் அத்துடன் மறைந்து விடும். அதுமட்டுமல்ல, அதற்குப் பிறகு இவளுக்கு எல்லாவிதமான மங்கலங்களும் வந்து சேரும்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இதைக்கேட்ட போது பவானியம்மாளுக்கு மனதில் சற்று ஆறுதல் பிறந்தது. தனக்கு ஆணுக்கு ஆணாகவும் பெண்ணுக்குப் பெண்ணாகவும் இருக்கும் ஒரே மகள் அவள்தான். மகளுக்கு ஏதோ ஆபத்து ஏற்படப்போகிறது என்றவுடன் அவளுக்குப் பயம் தோன்றியது. அதற்குப் பரிகாரமாக நாகமோகினியின் கோயிலில் பூஜை செய்தால் சரியாகும் என்று சொல்கிறார். 'அந்தக் கோயில் எங்கு இருக்கிறதோ? யார் இதையெல்லாம் இருந்து கவனிப்பது?' என்றெல்லாம் யோசிக்கத் தொடங்கினாள் பவானியம்மாள்.

"என் மீது உங்களுக்கு நம்பிக்கை இருந்தால் நானே இந்த பூஜைக்கு ஏற்பாடு செய்கிறேன்" நாகேந்திரன் கூறினார்.

பவானியம்மாள் உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தாள். எப்படியாவது மகளுக்கு வரவிருக்கும் ஆபத்து நீங்கினால் போதுமென்று அந்தத் தாயுள்ளம் நினைத்தது. அதற்காக எந்தத் தியாகத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

"இப்பொழுது இந்த வீட்டிற்கே தோஷம் உள்ளது. ஒரு ஆவி இந்த வீட்டிற்குள் குடியேறி உள்ளது. அது வந்த பிறகு உங்களுக்கு ஆபத்தையும் வரவழைத்தது. இனிமேலும் அந்த ஆவி உங்களைத் தொல்லை செய்யும். உங்களை அறியாமலேயே நீங்கள் அதிலிருந்து காப்பாற்றப்பட்டு விட்டீர்கள்" நாகேந்திரன் படிப்படியாக அவர்களைத் தயார்ப்படுத்தினார்.

"அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் வாமி?" பவானியம்மாள் கேட்டாள்.

"வழி இருக்கிறது. இங்கு இப்பொழுது ஒரு சிறிய ஹோமம் நடத்தி அந்த ஆவித் தொல்லையை மாற்றி விடுகிறேன். அதற்கு வில்வ மரத்தின் சுள்ளிகள் கொஞ்சம் தேவை" எதிரில் நின்றிருந்த வில்வ மரத்தைப் பார்த்தபடியே பேசினார் நாகேந்திரன்.

"இதோ, உடனே கொண்டு வருகிறேன்" என்றபடி பவானியம்மாள் கையில் அரிவாளுடன் வில்வ மரத்தை நெருங்கினான்.

சற்று நேரத்தில் ஹோமம் தயாரானது. அவர்களை ஏமாற்றுவதற்காகவென்றே நாகேந்திரன் போலியாகச் சில மந்திரங்களை

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

உச்சரித்தார். ஆனால், அவரது சம்புடத்தில் இருந்த விபூதியைக் கையில் வைத்தபடி வசிய மந்திரத்தை உருவிட்டார்.

அந்த விபூதியை வெளியிலெடுத்து பத்துத் தடவை தேவியைத் தியானித்து, ஜபித்து எந்தப் பெண்ணின் தலையில் போட்டாலும் அவள் அவருக்கு அடிமையாகி விடுவாள்.

நாகேந்திரன் மேலும் சில மந்திரங்களை ஜபித்துக் கொண்டிருந்தார். பின்பு தன் தலையிலிருந்து ஒரு முடியைப் பிடுங்கி அதை ஹோம குண்டத்தில் போட்டார். சட்டென்று முடி கரிந்த மணம் காற்றில் பரவி பவானியம்மாவிற்கு மயக்கம் வருவது போல் தோன்றியது. தலையைப் பிடித்தபடி சுவரோடு அப்படியே சரிந்தார் அவர்.

ஆனால், எதிரே இருந்த மாலதியின் தலைமீது நாகேந்திரன் மீண்டும் மீண்டும் விபூதியைத் தூவினார். மறுபடியும் மந்திரம் கூறினார்.

நேரம் மாலையானது. நாகேந்திரன் அங்கிருந்து எழுந்து நடக்கத் தொடங்கினார். மாலதியும் அவருக்குப் பின்னால் நடக்கத் தொடங்கினாள். மாலதி கனவில் நடப்பதுபோல் அவரைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தாள். நாகேந்திரனே அந்த விபூதியின் மகிமையை அப்பொழுதுதான் முதன் முறையாகப் பரிசோதித்துப் பார்த்தார் எனலாம்.

நாகேந்திரன் தங்கியிருந்த மண்டபத்திற்கு அருகே வந்ததும் மாலதி ஒரு கல் தடுக்கி விழுந்தாள். அப்பொழுதைய நிலையில் நாகேந்திரன் அவளைத் தொடக்கூடாது என்பதால் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார்.

இதுவரையில் எந்த ஆணும் தொடாத ஒரு கன்னிப்பெண்ணை நாகமோகினிக்குப் பலி கொடுத்தால் மட்டுமே பூஜை நிறைவடையும் என்பதால், அவர் அவளைத் தொடாமல் இருந்தார். நேரம் இருட்டிக் கொண்டிருந்தது. எந்த வழியும் தோன்றாத நாகேந்திரன் பக்கத்திலிருந்த ஒரு பாறைமீது உட்கார்ந்தார்.

பாண்டவன் மலையின் அடிவாரத்தில் இருள் பரவுவது திடும் என்றுதான். உதயநல்லூர் கிராமத்தின் மேற்குப்புறம் சூரியன்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

மறைந்தால் உடனே ஒரு கறுத்த ராட்சசனைப்போல இருள் வந்து அந்தக் கிராமத்தை மூடிவிடும்.

இரவாகி விட்டால் ஆள் நடமாட்டமற்ற அந்தப் பகுதியில் பூத, பேய்க்கணங்கள் சாதாரணமாக உலாவத் தொடங்கும் என்று பெரிசுகள் சொல்வதுண்டு.

எத்தனையோ நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் ரத்த தாகம் கொண்ட ஆவிகளும், மனிதர்களும் அகப்பட்டால் முடியையும், நகத்தையும் தவிர வேறு எதையும் மீதமாக விட்டு வைக்காத பிசாசுகளும் அங்கு வெகு சாதாரணமாக உலவுவது வழக்கமாம். நாகேந்திரனைப் பொறுத்தவரை அதெல்லாம் ஒரு பொருட்டே அல்ல என்றாலும் மாலதி உடனிருப்பதால் சிலசமயம் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படலாம் என்று நினைத்தார்.

சிலசமயம் தன்னைவிட வலு மிகுந்தவர்களுடன் மோத நேரிடலாம். அதனால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மாலதியை நாகமோகினியின் முன் கொண்டு செல்ல அவர் விரும்பினார். எனவே அவளுக்கு முன்பாக அமர்ந்து மீண்டும் மந்திரங்களை உச்சரிக்கத் தொடங்கினார். சற்று நேரத்தில் மாலதி கண் திறந்தாள். இருப்பினும் அவள் சுய நினைவு இல்லாமலே கிடந்தாள். நாகேந்திரன் தனது மந்திர சக்தியால் அவளை எழுந்து நிற்க வைத்தார். அவள் மெதுவாக அவருக்குப் பின் எழுந்து நடக்கத் தொடங்கினாள்.

மண்டபத்தின் வழியாகவே அவர்கள் செல்ல வேண்டியிருந்தது. ஆனால், மண்டபத்தை நெருங்கியபோது யாரோ விளக்கேற்றுவதைக் கவனித்தார் நாகேந்திரன். உற்றுக் கவனித்தபடியே நெருங்கினார். அங்கே கேசவன் இருந்தான்.

"நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்?" நாகேந்திரன் கேட்டார்.

"இப்பொழுதுதான் வந்தேன். ஆமாம், உங்களுடன் இருப்பது யார்?" கேசவன் கேட்டான்.

"என் சீடப் பெண்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஆனால் அவனது கேள்வியை அவள் காதில் வாங்கியதாகவே தெரியவில்லை. நாகேந்திரன் நடக்கத் தொடங்கினார். மாலதி அவரைப் பின்தொடர்ந்தாள்.

"மாலதி, நில் அங்கேயே!" கேசவன் ஆணையிடுவது போல் கூறினான்.

ஆனால் நாகேந்திரன் தன்னுடைய சம்புடத்திலிருந்து விபூதியை எடுத்து தம்பன மந்திரம் ஜபித்து கேசவன் மீது எறிந்தார். அத்துடன் கேசவன் ஒரு கற்சிலைபோல் அசையாமல் நின்று போனான்.

23

நாகேந்திரனுக்குப் பின்னால் கனவில் நடப்பதைப் போல் மாலதி நடந்து செல்வதை கேசவன் பார்த்துக் கொண்டே இருந்தான். ஆனால், எவ்வளவுதான் முயன்றபோதும் அவனால் அசைய முடியவில்லை. அவனது இரண்டு கால்களும் சிலையின் கால்கள் போல் மாறி விட்டிருந்தன.

மகத்தான சக்தி வாய்ந்த ருத்திராக்ஷ மாலையின் சக்தி வீணாகிப் போனதை நினைத்து இப்பொழுது அவன் வருந்தினான். எவ்வளவு கஷ்டப்பட்டு எடுத்த மாலை அது.

நாகேந்திரனும் மாலதியும் இருளில் நடந்தார்கள். தான் நினைத்தது போல, நாகேந்திரன் நல்ல மனிதன் அல்ல என்பது கேசவனுக்குப் புரிந்தது. மாலதியை அவர் அழைத்துச் செல்வது ஏதாவது குரூரமான செய்கைக்காகவே இருக்கும் என்று அவன் உள்மனம் கூறியது. ஆனால், அவளை எப்படிக் காப்பாற்றுவது? எப்படி என்று யோசிப்பதைவிட எப்படியாவது அவளைக் காப்பாற்றிவிட வேண்டும் என்று விரும்பினான் கேசவன்.

எனவே, அங்கிருந்தபடியே மனதில் வசந்தசேனையைத் தியானித்தான். ஆனால், மோகினி கோயிலிலுள்ள பாலை மரத்தில் இருக்கும் வசந்தசேனை இரவின் மூன்றாம் யாமத்திற்குப் பிறகே வெளியில் வரமுடியும். கேசவன் தன்னைக் குறித்துத் தியானிக்கிறான்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

என்பது அவளுக்கும் புரிந்தது. எனவே, அங்கிருந்தபடியே அவனுக்கு எப்படி உதவுவது என்று யோசித்தாள்.

பந்தன மோட்ச யந்திரம் வரைந்து, மந்திரம் எழுதி எந்த விதமாகவாவது கேசவனது தலையில் வைத்தால் அவனது பந்தனம் மாறிவிடும் என்று அவளுக்குத் தோன்றியது. உடனே அவள் ஒரு பச்சைக் கிளியாக மாறினாள்.

பாலை மரத்தின் ஓர் இலையை உடைத்து அதில் 'ட' என்கிற எழுத்தையும் அதைச் சுற்றிலும் சாத்யநாமத்தையும், நான்கு புறமும் 'ஹ்ரீம்' என்கிற மாய உச்சரிப்பையும் எழுதினாள். அதைச் சுற்றி ஒரு சதுரம் வரைந்து அந்தச் சதுரத்துக்குச் சுற்றிலும் 'ஓம்.. ஹ்ரிம்... ரீம்... பந்தி அமுஷ்ய பந்த மோட்சம் குருகுரு வாஹா' என்ற மந்திரத்தையும் எழுதினாள்.

பிறகு வாயு மந்திரம் ஓதி அந்த இலையைக் காற்றில் பறக்க விட்டாள். அந்த இலை மேற்குத் திசை நோக்கிக் காற்றில் மிதந்து சென்றது. நூல் கட்டி இழுத்ததுபோல் அந்த இலை நேராக கேசவன் குட்டியின் தலைக்கு மீதே சற்று நேரம் நின்று, பின்பு அவனது தலையில் வந்து படிந்தது.

சட்டென்று தன் உடலிலிருந்து ஒரு பெரிய பாரம் இறங்கியது போல் தோன்றியது. கேசவன் தன் கை கால்களைக் உதறிதான். உடனே அங்கிருந்து பாண்டவ மலையை லட்சியமாக்கி ஓடத் தொடங்கினான்.

மலையின் அடிவாரத்தில் இருள் கவிந்திருந்தது. அவனது கண்களுக்குச் சட்டென்று எதுவும் புலப்படவில்லை. இருப்பினும் மனதில் எதையோ நினைத்தபடி நடந்தான். காலில் ஏதோ தட்டுப்பட்டது. குனிந்து அதை எடுத்தான். அது ஒரு கால் கொலுசு.

மாலதியின் காலிலிருந்து அறுந்து விழுந்திருக்கலாம் என்று கேசவன் நினைத்தான். அதைப் பார்த்தவுடன் மனதில் புத்துணர்ச்சி தோன்றியது. வேகமாக நடக்கத் தொடங்கினான். சற்றுத் தூரத்தில் அந்த வழி மேற்புறமாகச் சென்றது. தொடர்ந்து நடந்தான். துணி ஒன்று அவன் முகத்தின் மீது விழுந்தது. பக்கத்திலிருந்த முள் செடியில் சிக்கியிருந்த

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

துணியின் ஒரு பகுதி மட்டும் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. சன்னமான, நட்சத்திரங்களின் ஒளி அந்தப் பகுதியில் இருந்தது. அந்த வெளிச்சத்தில் முள்ளிலிருந்து பக்குவமாகத் துணியை எடுத்தான் கேசவன். அது மாலதியின் தாவணி என்பது தெரிந்தது. இதைப் பார்த்தபோது, தன்னுடைய ஊகமும், வழியும் சரிதான் என்று அவனுக்குத் தோன்றியது. தொடர்ந்து நடந்து உச்சிப்பகுதியை அடைந்தான்.

அங்கிருந்து பார்த்தபோது உதயநல்லூர் கிராமம் முழுவதும் தூரத்தில் தெளிவற்ற ஒரு படத்தை விரித்து வைத்திருப்பது போல் தெரிந்தது. மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் நின்று கொண்டிருந்தபோது யாரோ தன்னை நோக்கி வருவதைக் கண்டான். தடிஒன்றை ஊன்றியபடி நடந்து வரும் வயதான ஒரு பெரியவர், வந்தவர் கேட்டார். "நீங்கள் யாரைத் தேடி வந்திருக்கிறீர்கள்?

"ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு ஒரு சன்னியாசி இந்தப் பக்கமாக வந்தாரா?"

"இப்பொழுது புரிகிறது. நீங்கள் ஏழாவது நபராக வந்திருக் கிறீர்கள்."

"நீங்கள் சொல்வது புரியவில்லை" என்றான் கேசவன்.

"நீங்கள் கேட்டவர் ஆறாவது நபர். அவர்தான் குகையிலிருந்து வெளியில் வந்த முதல் மனிதரும்கூட. அவர் அந்தப் பெண்ணைப் பலி கொடுப்பதற்காக அழைத்துச் செல்கிறார்."

"ஐயோ, என்ன வார்த்தை சொல்கிறீர்கள்? நான் அவளை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும்" கேசவன் கூறினான்.

"நீங்கள் மிகவும் தாமதமாக வந்திருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது."

"இருந்தாலும் அந்த இடத்தை நீங்கள் எனக்குக் காட்டினால் நல்லது."

பெரியவர் சற்று நேரம் மௌனமாக நின்றார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஆனால் உங்களால் எப்படி அவரைச் சமாளிக்க முடியும்? அவர் ஒரு மந்திரவாதியாயிற்றே? உங்களுக்கு அந்த வித்தைகள் ஏதாவது தெரியுமா?"

கேசவனுக்கு இந்த வார்த்தைகள் ஏமாற்றம் தந்தன.

"உங்களுக்கும் அந்தப் பெண்ணுக்கும் என்ன தொடர்பு?"

"உறவென்று ஒன்றுமில்லை. எனக்குத் தெரிந்த ஒரு ஏழை வீட்டுப் பெண் அவள். அவர்களது குடும்பத்தில் அம்மா மட்டுமே இருக்கிறாள். எப்படியாவது அவளைக் காப்பாற்றியே தீரவேண்டும்."

"யாரை யார் காப்பாற்றினாலும் எனக்கு எல்லாமே ஒன்றுதான். உங்களுக்கு நான் ஒரு யோசனை சொல்லித் தருகிறேன். ஒருவேளை, அது உங்களுக்கு உதவலாம்."

"சீக்கிரம் சொல்லுங்கள்..."

குகைப் பக்கமாக நடந்தபடியே கிழவர் கூறினார். "அந்த சன்னியாசி அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு போயிருக்கிற இடத்திற்கு உங்களை அழைத்துச் செல்கிறேன். அது ஒரு குகை. அங்குள்ள படிக்கட்டு வழியாக இறங்கிச் சென்றால் ஒரு நாகமோகினியின் சிலை தென்படும். அங்கு சென்றவுடன் பலவிதமான எண்ணங்கள் தோன்றலாம். நாகமோகினியின் உடல் உங்களை முறுக்குவதாய்த் தோன்றலாம். பயப்படக் கூடாது. அது வெறும் நினைப்பு மட்டும்தான். இதையெல்லாம் பொருட்படுத்தாமல் நீங்கள் அதன் கையிலிருக்கிற சூலத்தை எடுக்க வேண்டும். அது உங்கள் கைக்கு வந்துவிட்டால் அதன் பிறகு அந்த சன்னியாசியால் உங்களை எதுவும் செய்ய முடியாது!"

"மிகவும் நன்றி பெரியவரே. எனக்கு நீங்கள் உதவி செய்திருப் பதற்கு நான் எப்படி கைம்மாறு செய்வதென்று புரியவில்லை."

"அதையெல்லாம் திரும்பி வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம். அதோ தெரிவதுதான் குகை. அந்தக் கல்லின் கீழ்ப்புறமாகத் தெரிவது அதன் வாசல்."

கேசவன் வேகமாக ஓடினான். படியில் இறங்க நினைத்தபோது வெகு தூரத்தில் வெளிச்சம் தெரிந்தது. படிக்கட்டுகள் தெரிந்தன.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இறங்கத் தொடங்கினான். நடக்க நடக்க வெளிச்சப் பகுதி நெருங்கியது. கடைசியாகக் கிழவர் குறிப்பிட்ட நாகமோகினியின் சிலை தெரிந்தது. தூரத்திலேயே அவன் கண்ட காட்சி பயங்கரமாக இருந்தது. கண் மூடித் திறப்பதற்குள் அது நடந்து விட்டது.

ஒரே வெட்டில் மாலதியின் தலை அவள் உடலிலிருந்து அறுபட்டு அந்தச் சிலையின் முன் விழுந்தது.

உடனே நாகமோகினியின் சிலையிலிருந்து வார்த்தைகள் கேட்கத் தொடங்கின. "நான் விரும்பியதை எனக்கு வழங்கிவிட்டதால், இதோ எனது சூலத்தை உனக்குத் தருகிறேன். இது உன் கையில் இருக்கும் வரை உன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது."

நாகேந்திரன் அந்தச் சூலத்தை எடுப்பதற்காக முன்புறம் நகர்ந்தார். கேசவன் சட்டென்று மூன்று கரணம் அடித்து அதன் அடிப்பகுதியை அடைந்து சூலத்தைக் கையால் எட்டிப் பிடித்து, அதே விரைவில் பழைய இடத்திற்கு விரைந்தான். கண் மூடித் திறப்பதற்குள் இந்த வித்தையைச் செய்ய கேசவனின் உடற்பயிற்சியும் சண்டைப் பயிற்சியும் உதவின.

வியப்படைந்தவராக நாகேந்திரன் மேற்புறம் பார்த்தார். கையில் சூலத்துடன் படிக்கட்டில் கேசவன் நின்று கொண்டிருந்தான்.

நாகேந்திரன் வழக்கமாகச் செய்வது போல் தன்னுடைய தலைமுடியைப் பிடுங்கி மந்திரம் ஜபித்து கேசவன் மீது எறிந்தார். அது ஒரு பயங்கரப் பாம்பாகக் கேசவனை நெருங்கியது. கேசவன் கையிலிருந்த சூலத்தை அதை நோக்கி நீட்டினான். அந்தப் பாம்பு கருநீல நிறமடைந்து எரிந்து சாம்பலாயிற்று.

இதனால் மேலும் கோபமடைந்த நாகேந்திரன் கோபம் கொப்பளிக்கும் கண்ணுடன் தனது கழுத்திலிருந்த சங்கு மாலையைக் கழற்றி கேசவனை நோக்கி வீசினார். அது ஒரு கொடிய பாம்பாக மாறிக் கேசவனை நெருங்கியது. அதுவும் முன்போலவே எரிந்து சாம்பலானது.

கேசவன் கூறினான். "நாகேந்திரா. இந்தச் சூலம் என் கையில் இருப்பது வரை உன்னால் என்னை எதுவும் செய்ய முடியாது. இதை

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இழந்துவிட விரும்பாததாலேயே உன்மீது எறியாதிருக்கிறேன். நான் விடைபெற்றுக் கொள்கிறேன்.”

கேசவன் படிக்கட்டுகளில் ஏறினான். மாலதியைக் காப்பாற்ற முடியவில்லையே என்கிற வருத்தம் ஏற்பட்டது. அதெல்லாம் நடந்து முடிந்து விட்டது. பவானியம்மாவிற்கு ஆறுதல் சொல்லக்கூட முடியாது. இந்த விஷயத்தை அவளிடம் சொல்லப் போனால், ஒருவேளை தன் மீதே கூட அவருக்குச் சந்தேகம் ஏற்படலாம். அதைவிட எதையும் சொல்லாமல் இருப்பதே நல்லது என்று நினைத்தான்.

நடந்து கொண்டிருந்தவன் தனக்குச் சற்று முன்பாக அந்தக் கிழவர் நிற்பதைப் பார்த்தான்.

“இந்தச் சூலம் எனக்குக் கிடைத்து விட்டது” கேசவன் கூறினான்.

“அந்தப் பெண்ணை அவர் கொன்று விட்டார் இல்லையா?”

“ஆமாம். தடுக்க முடியவில்லை.”

“அதனால்தான் இந்தச் சூலம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது.”

“இதனால் எனக்கு என்ன பிரயோஜனம்?”

“உங்களுக்குக் கிடைத்துள்ள மிகப்பெரிய பலனே இது அவர் கையில் கிடைக்காமல் போனதுதான். இதன் சக்தி என்னவென்று நேரம் வரும்போது உங்களுக்குப் புலப்படும். இன்று இரவு வேண்டுமானால் என்னுடன் என் பரணில் நீங்கள் தங்கலாம்.”

“உங்களது அழைப்பிற்கு நன்றி. ஆனால் நான் உடனே திரும்ப வேண்டி உள்ளது. இன்றிரவு நான் ஒரு இடத்திற்குச் செல்ல வேண்டும்.”

“நீங்கள் போய்த்தான் தீரவேண்டிய அவசியமான வேலை என்றால் தாராளமாகச் சென்று வாருங்கள். உங்களுக்குச் சௌகரியம் ஏற்படும் பொழுது எனது பரணுக்கு வரலாம்.”

கேசவன் விடைபெற்று நடந்தான். கிழக்குக் கோட்டை அரண்மனைக்குப் போக வேண்டியிருந்தது. நேரமும் அதிகமாகிவிட்ட சூலத்தைத் தன்னுடைய படுக்கை அறையில் பத்திரமாக வைத்தபிறகு கதவை மூடிப் படுத்துக் கொண்டான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஜாமக்கோழி கூவியது.

ஊர்மிளா தனக்காகக் காத்திருப்பாள் என்று தோன்றியது. அவளைச் சந்திக்க மனம் ஏங்கியது. அவர்களுக்கிடையிலான உறவு ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிய முடியாத அளவுக்கு அவ்வளவு நெருக்கமாகியிருந்தது. உடனே அவளைப் பார்க்கப் புறப்பட்டான். அபூர்வ சக்தி வாய்ந்த அந்தச் சூலமும் அவன் கையில் இருந்தது.

ஆற்றங்கரை ஓரமாக அவன் நடந்தான். ஆறு அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. கற்களில் மோதியவாறு நீர் ஓடுவது துல்லியமாகக் கேட்டது. வளைந்து வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில் கேசவன் விரைவாக நடந்தான்.

மேலக்காவு மனையின் பின்புறத்தை அடைந்து மதிலைத் தாண்டினான். முற்றத்தில் யாரோ பேசிக் கொண்டிருப்பது அவனுக்குக் கேட்டது. கேசவன் சட்டென்று ஒருகணம் நிதானித்து தூரமாக ஒதுங்கி நடந்து கிணற்றைச் சுற்றி வந்து ஓர் ஓரமாக நின்று கொண்டான்.

பிரம்மதத்தன் நம்பூதிரியும், ராவுண்ணியாரும்தான் அருகருகே நின்றபடி நிலவிளக்கின் அருகே நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

"இனிமேல் நான் காலம் தாழ்த்த முடியாது. பலிகளுக்கு இடையே உள்ள இடைவெளி அதிகமானால் நான் அதை மீண்டும் ஆரம் பத்திலிருந்து தொடங்க வேண்டியதாக இருக்கும்" பிரம்மதத்தன் கூறினார்.

"என்னை ஒவ்வொருவரும் இப்பொழுது சந்தேகத்துடன் கவனிக்கின்றனர். நான் என்ன செய்ய முடியும்?" ராவுண்ணியார் பரிதாபமாகக் கேட்டார்.

"இன்றிலிருந்து ஏழாம் நாள். வேறு யாரும் அகப்படவில்லை யென்றால்... அவளை நான் பலியிட வேண்டியதுதான்" ஒரு தீர்மானத்திற்கு வந்தவராக, உறுதியான குரலில் பிரம்மதத்தன் நம்பூதிரி பேசினார்.

கேசவன் திடுக்கிட்டான். 'யார் அது? ஊர்மிளாவையா சொல்கிறார்?'

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

24

"ஐயோ. என்ன வார்த்தை பேசுகிறீர்கள்?" ராவுண்ணியார் பயந்தபடி கேட்டார்.

"உனக்கு இன்னும் இந்த பூஜையின் மகிமை தெரியவில்லை" நம்பூதிரி தன் தோளில் குறுக்காகக் கிடந்த பூணூலை வருடியபடி கூறினார்.

ராவுண்ணியாருக்கு இன்னும் விஷயம் இன்னதென்று விளங்கவில்லை. நம்பூதிரி பைசாசிகமான நரபலி நடத்துகிறார் என்பது மட்டும் அவருக்குத் தெரியும்.

எத்தனையோ நூற்றாண்டுகளாக மேலக்காவு மனை நம்பூதிரிகள் நரபலி நடத்தி வருகின்றனர். அவர்களுக்குப் பிடிக்காதவர்களையும், அவர்களை எதிர்ப்பவர்களையும் தங்களது இஷ்ட தேவதைகளுக்குப் பலி கொடுப்பது அவர்களது வழக்கம். அதற்காகவென்றே அவர்களுக்கு ஒரு கோயில் இருந்தது. அந்தக் கோயிலிலிருந்த தேவதைகள் எல்லாருமே மனித ரத்தத்தை விரும்பும் துர்த்தேவதைகளாகவே இருந்தனர்.

கண்டா கர்ணன், ரத்த சாமுண்டி வரி, பட்சி துர்கா, வனதுர்கா போன்ற துஷ்ட தேவதைகளின் சிறிய சிறிய பிரதிஷ்டைகளும் அங்கு கவனமாகப் பராமரிக்கப்பட்டு வந்தன.

ஒவ்வொரு கோயிலுக்கு முன்பாகவும் பலிக் கற்களும் இருந்தன. அந்தக் கோயில்கள் இருந்த பகுதியே பயங்கரமாகத் தோற்றம் அளித்தது. அந்தப் பகுதியைச் சுற்றிலும் இரண்டரை ஆள் உயரத்திற்கு உட்புறமாக வளைந்த மதிலை எழுப்பியிருந்தனர். உட்புறம் சூரிய ஒளிகூட ஊடுருவாதவாறு எட்டி மரங்களும், பாலை மரங்களும் அடர்ந்து நெருங்கி வளர்ந்திருந்தன. கள்ளிச் செடிகளும், நாக மோகினிகள் வசிக்கும் புற்றுகளும்கூட அதற்குள் இருந்தன. பகல் நேரத்தில்கூட அதற்குள் நுழைய எந்த மனிதனுக்கும் பயம் தோன்றும். பறவைகள்கூட அதற்கு நேராக மேல்புறம் பறப்பதில்லை. மீறிப் பறந்தால் அந்த இடத்தைக் கடக்க முடியாமல் சுருண்டு விழுந்துவிடும் என்பது பெரியவர்களது நம்பிக்கை.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அந்தச் சுற்றுச்சுவரின் ஒரு மூலையில் ஆழமான ஒரு பெரிய பள்ளம் இருந்தது. மேலிருந்து பார்த்தால் அடிப்பரப்பே கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு அவ்வளவு ஆழம் கொண்டிருந்தது அந்தப் பள்ளம். பலி கொடுக்கப்படுபவர்களின் உடம்பை அதற்குள் எறிவதுதான் வழக்கம். இப்படியெல்லாம் இருந்தாலும் மேலக்காவு மனையைச் சேர்ந்த நம்பூதிரிகள் இப்படிப்பட்ட குரூரச் செயல்கள் செய்வதை இதுவரை யாருமே எதிர்க்க முற்படவில்லை. பயம்தான் காரணம்.

ஒரு தடவை யாரோ டீக்கடையிலிருந்தபடியே பொழுது போக்காக இதைப் பற்றிப் பேசினாராம். மறுநாள் அவரது உடம்பு ஆற்றில் மிதந்ததாம். அவர் எப்படி இறந்தார் என்பதே யாருக்கும் புலனாகவில்லை.

ஆனால், அந்த நேரத்தில் அந்த டீக்கடையில் இருந்தவர் களுக்கெல்லாம் அதற்கான காரணம் புரிந்தது. மேலக்காவு மனை நம்பூதிரிகளிடம் விளையாடினால் முடிவு இப்படித்தான். அவர் பேசும்போதே அவர்கள் மனதில் கணக்குக் கூட்டியிருந்தனர். அத்துடன் இதைப்பற்றிப் பேச மட்டுமல்ல, இதைப்பற்றி யோசிக்கவும் கூட யாரும் தயாராக இல்லை.

"இருந்தாலும் இது மிகவும் பாவமில்லையா?" ராவுண்ணியார் கேட்டார்.

"இன்னும் சொல்லப் போனால் அவள் யார்? என் சகோதரியின் மகள். அப்படியென்றால் அந்நியக் குடும்பத்தில் ஆணுக்குப் பிறந்தவள்" நம்பூதிரி கோபத்துடன் கூறினார்.

"நான் குறிப்பிட்டது அதையல்ல எஜமான். உங்களுக்குக் குழந்தைகளே இல்லை. வேறு யார் இந்த மனையைக் கட்டி ஆள்வது? இந்தக் குடும்பமே வாரிசு அற்றுப் போய்விடாதா? அதற்குத்தான் கூறினேன்."

"ஓகோ, அதுதான் விஷயமா? அதை நான் சொன்னால் உமக்கு விளங்காது. அதனால் அதைச் சொல்லாமல் நிறுத்தி விடுகிறேன்."

பிரம்மதத்தன் நம்பூதிரி அதைச் சொல்லாமல் இருந்ததற்கு ஒரு காரணமும் இருந்தது. 'தனது பலிகள் பூர்த்தியடைந்தால் கிடைக்கப்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

போவது நீண்ட கால வாழ்க்கை அதாவது இரண்டு தலை முறைகளுக்குப் பிறகும் தாம் வாழ்வோம்' என்பது பிரம்மதத்தனின் மனக்கணக்கு.

அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு தனக்கு ஸித்திக்கப் போகிறது. இதற்கு முன்னால் மேலக்காவு மனையிலிருந்த நம்பூதிரிகளின் ஜாதகத்தில் குறிப்பிட்டிருந்தபடி அதே தேதியில். அதே நேரத்தில் மரண மடைந்தனர். ஆனால் பிரம்மதத்தன் அப்படிப்பட்ட ஜாதகத்தையும் மீறி உயிருடன் வாழ்ந்து காட்டப் போகிறார்.

மரணத்தை ஏற்படுத்தும் தேவதைகளை அவர் வெல்லப் போகிறார். அது நடக்கவும் செய்யும்.

"நான் இன்னுமொரு முறை முயற்சி செய்து பார்க்கிறேன். முடிந்தால் சீக்கிரமாகவே வேறு யாரையாவது அழைத்து வருகிறேன்" ராவுண்ணியார் உறுதியளித்தார்.

"அதற்கெல்லாம் நேரமில்லை ராவுண்ணியார். இனிமேலும் இதைத் தள்ளிப்போட்டால். இதுவரையில் செய்ததெல்லாம் பயனற்றதாகிவிடும்" நம்பூதிரி அவசரப்பட்டார்.

"எதற்கும் கடைசியாக நான் ஒரு தடவை முயன்று பார்த்து விடுகிறேனே" ராவுண்ணியார் வேண்டினார்.

"ஞாபகம் இருக்கட்டும். இன்றிலிருந்து ஏழாவது நாள்" நம்பூதிரி நினைவூட்டினார்.

"ஞாபகமிருக்கிறது. நான் வ்ருகிறேன்" ராவுண்ணியார் விடைபெற்றார்.

பிரம்மதத்தன் வீட்டுக்குள் நுழைந்து இருளில் மறைந்தார். கேசவன் திடுக்கிடும் மனதுடன் தானிய அறையை நெருங்கினான். வாசலிலேயே ஊர்மிளா நின்றிருந்தாள்.

"உள்ளே வாருங்கள். வெளியில் நிற்காதீர்கள்" சொல்லியபடியே அவனை உட்புறமாக இழுத்துக் கதவை மூடினாள். இருவரும் கட்டிலில் அமர்ந்தார்கள்.

ஊர்மிளாவின் உடம்பிலிருந்து கிளம்பிய தாமரைப்பூவின் வாசனை கேசவனின் மூக்கை நிறைத்தது. அவள் வெளியிட்ட மூச்சுக் காற்றுக்குக்கூட ஒருவிதமான போதை இருந்தது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அவள் உடல் கேசவனது மார்பில் சாய்ந்தது. அவள் ஒரு தாமரைத் தண்டாய், மல்லிகைக் கொடியாய் மாறினாள். பொழுது இன்பமாக நகர்ந்து கொண்டிருந்தது. சிற்ப வேலைகள் செய்யப்பட்ட அந்த அறையின் மரச்சுவர்களை அமைதியாகப் பார்த்தபடியே அவர்கள் கனவில் லயித்திருந்தனர்.

அவர்கள் உறங்கவில்லை; உறங்க முடியவில்லை. எப்படி உறங்குவார்கள்? அவர்கள் நட்சத்திரங்கள் நிறைந்த உலகத்தில் அல்லவா உலவிக் கொண்டிருந்தனர்?

எங்கோ ஜாமக்கோழி கூவியது.

கேசவன் கட்டிலிலிருந்து சட்டென்று எழுந்தான்.

"ஏன் எழுந்து விட்டீர்கள்?"

"மணி இரண்டைத் தாண்டிவிட்டது."

"அதற்கு என்ன?"

"நான் உடனே புறப்பட வேண்டும்" கேசவன் அவள் கைவிரல் களிலிருந்து தன் விரல்களைப் பிரித்தெடுத்து விடை பெற்றான்.

எண்ணெய் போட்டு வைத்திருந்த தாழ்ப்பாள் சத்தம் போடாமல் திறந்து கொள்ள, கேசவன் வெளியேறினான். அவன் மதிலைக் கடந்து போவது வரையில் அவனையே பார்த்துக் கொண்டிருந்த ஊர்மிளா ஒரு பெருமூச்சுடன் கதவை மூடித் தாழிட்டுக் கட்டிலில் படுத்தாள்

ஊர்மிளாவின் அம்மா நாராயணி அந்தர்ஜனம் இதையெல்லாம் தெரிந்து கொள்ளாமலேயே படுத்திருந்தார். அவரது வாழ்க்கை ஏறத்தாழ ஒரு சிறை வாழ்க்கை போன்றது. அந்த வீட்டிற்கு வெளியே, ஓர் உலகம் உள்ளதோ, அந்த வாழ்க்கையோ அவருக்கு எதுவும் தெரியாது. கொஞ்ச நாள் கணவருடன் வாழ்ந்த ஒரு நினைவு மட்டுமே அவருக்கு இருந்தது. அதுவும் நைந்து போன பலவீனமான நினைவு.

அந்தப் பிரம்மாண்டமான மனையின் ஆள் புழக்கமற்ற ஒரு பகுதியில் அவரது வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது. சமைய லறையில் ஒரு வேலைக்காரி உதவிக்கு வருவாள். அவருக்குத் தெரிந்தவள் அவள் மட்டும்தான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நேரா நேரத்திற்கு உணவுண்டு. நாமம் ஜபித்து இரவில் உறங்கிப் போய் விடுவார். தன் மகளைப் பற்றிப் பேசக்கூட அவருக்கு அங்கு உரிமையில்லாமல் இருந்தது.

கேசவன் மேலக்காவு மனையிலிருந்து புறப்பட்டு கிழக்குக் கோட்டை அரண்மனையை அடைந்தான். மணி மூன்றைத் தாண்டியிருந்தது.

தனது அறைக்குள் நுழையப் போனவன் அங்கு இளவரசி உட்கார்ந்திருப்பதைக் கவனித்தான். சர்வாலங்கார பூஷிதையாக உட்கார்ந்திருந்தாள் அவள்.

"எங்கிருந்து வருகிறீர்கள்? இப்பொழுது பிரம்மச்சரிய விரதத்தை முழுவதும் கைவிட்டாற்போல் தெரிகிறதே. ஒருமுறை பிரம்மச்சரியம் அழிந்தால் மறுமுறை கிடைப்பதல்லவே அது" இளவரசி கிண்டல் செய்யும் தொனியில் கூறினாள்.

கேசவன் என்ன சொல்வது என்று புரியாமல் நின்றான். தனது ரகசிய நடவடிக்கைகளை அவருக்கும் கவனித்திருக்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" கேசவன் கேட்டான்.

"எப்படித் தெரியாமல் போகும்?" இளவரசி சிரித்தாள்.

கேசவன் திண்ணையில் அமர்ந்தான்.

அவளும் அங்கு வந்து அமர்ந்தாள்.

"நீங்கள் இன்னும் என்னைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளவிலை என்று தோன்றுகிறது. உங்களது நண்பர் கிட்டு ஆசான் என்னைப்பற்றி உங்களிடம் ஏராளமாகக் கூறியிருப்பாரே."

"ஆமாம். நிறையச் சொல்லியிருக்கிறார். உங்களிடம் ஓர் அபூர்வமான ஓலைச்சுவடி உள்ளது என்றும். அது கிடைத்தால் எதையும் வரவழைக்கலாம் என்றுகூடச் சொன்னார்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"உண்மைதான். இதுவரையில் நான் அந்த ரகசியத்தை யாரிடமும் சொன்னதே இல்லை" கிழக்குப்புறமாகப் பார்த்தபடியே இளவரசி பேசினாள்.

"எனக்கு அதைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் போல் உள்ளது."

"என் மூதாதையரான பா கர ரவிவர்மா அவர்களிடமிருந்து எனக்கு அந்த ஓலை கிடைத்தது; அதிலிருந்து நான் ஏராளமாகக் கற்றுக்கொண்டேன். பலவற்றைப் பரிசோதித்தேன். எல்லாமே வெற்றிகரமானது. கடைசியில் என்னால் அதைப் பாதுகாக்க முடியவில்லை."

"எதனால் அப்படி?"

"அந்த ஓலைச்சுவடியைப் பற்றித் தெரிந்தவர்கள் நிறையப் பேர். அதைக் குறித்துப் பல பழைய சுவடிகளில் விவரிக்கவும் செய்துள்ளனர். அதனால் அந்த ஓலைச்சுவடியைக் க்வர்ந்து செல்லப் பலரும் இங்கு வந்தனர்."

"அப்படிப்பட்டவர்களையெல்லாம் நீங்கள் இங்கு சந்தித்திருக் கிறீர்கள், அப்படித்தானே?"

"ஆமாம், நான் அதை மறுக்கவில்லையே! அன்றே நான் இதை உங்களிடம் சூசகமாகக் குறிப்பிட்டேனே, என்னை நெருங்கியவர்கள் தோல்வி அடைந்தபோது மரணமடைந்தனர். கடைசியில். நான் ஒரு ஹோமம் நடத்தி பூதகணங்களை வரவழைத்து. அந்த ஓலைச் சுவடியை துர்கா கோயிலில் சேர்த்து விடும்படி ஏற்பாடு செய்தேன்."

"அப்படியானால் உங்களுக்கு அந்தக் கோயில் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டுமே."

"இல்லை, தெரியாது. யாருக்குமே அது தெரியாது. எனக்கு முன்பே காலமான உதயன் மகாராஜாவுக்குக்கூட அதைப்பற்றித் தெரியாது என்றே சொல்லலாம்."

"மேலக்காவு பிரம்மதத்தன் நம்பூதிரியை உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டுமே."

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இல்லை. அவர் இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர் அல்லவா?"

"அப்படியானால் தெரிந்து கொள்ளுங்கள். அவர் பயங்கரமான ஒரு ஹோமம் நடத்துகிறார். நரபலிகளை நிறையவே செய்திருக்கிறார். ஏதோ திவ்யமான சக்தி பெறுவதற்காகவே அவர் அதைச் செய்து வருகிறார்."

"உண்மையாகவா?" இளவரசி கார்த்தியாயினி தேவியின் முகம் கோபத்தால் சிவந்தது. அந்தக் கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் பறப்பதுபோல் கேசவனுக்குத் தோன்றியது. "என்ன, அந்தத் துரோகி மறுபடியும் தொடங்கி விட்டானா?"

"ஆமாம். அவர் கன்னிப் பெண்களை ஏதோ ஒரு பிசாசிற்குப் பலி கொடுக்கிறார்."

"உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?"

"அதைத் தெரிந்து கொண்டதால்தான் நான் இந்த அரண்மனைக்கு வர நேர்ந்தது. துர்கா தேவி கோயிலில் உள்ள அந்த மாந்திரீக கிரந்தம் மட்டும் என் கைக்கு வந்துவிட்டால், அவருடன் போராட என்னாலும் முடியும்" கேசவன் கூறினான்.

அப்பொழுது பயங்கரமான இரைச்சல் ஒன்று அங்கே கேட்டது.

25

அந்த இரைச்சல் வரவர அதிகமாகியது. பின்பு அந்த அரண்மனையின் மேற்புறமாக வந்து அது நிலைத்தது.

"என்ன அது இரைச்சல்?" என்றபடியே இளவரசி தலையை உயர்த்திப் பார்த்தாள். "அப்படியானால் இவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டார்களா? அந்த அளவிற்கு இந்த அரண்மனையை மலிவாக நினைத்து விட்டார்களா?"

"என்ன அது?" கேசவன் கேட்டான்.

"நீங்களே வந்து பாருங்கள்" இளவரசி சுட்டிக்காட்டினாள். கேசவன் மேற்புறம் அண்ணாந்து பார்த்தான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நிலவையும் நட்சத்திரங்களையும் மறைத்துக்கொண்டு ஆகாயத்தில் ஏதோ ஒன்று இறக்கையை அசைத்துக் கொண்டிருந்தது. அது ஒரு பிரம்மாண்டமான பறவை. ஓர் எருதையே காலில் கவர்ந்து எடுத்துச் செல்லும் அளவுக்கு அது பெரிதாக இருந்தது.

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால், மேலக்காவு நம்பூதிரி பயங்கரமானவராகவே தோன்றுகிறது" இளவரசி கூறினாள்.

"நம்பூதிரியிடம் ஏற்கெனவே அமானுஷ்யமான சக்தி இருக்கிறது. இப்பொழுது அவர் நடத்திக் கொண்டிருக்கும் ஹோமத்தில் வெற்றி பெற்றால், அதற்குப் பிறகு இந்த உலகத்திலுள்ள எந்த மந்திர வாதியையும் அவர் சவாலுக்கு அழைப்பார் என்பது நிச்சயம்."

அப்பொழுதும் அந்த உருவம் ஆகாயத்தில் இறக்கைகளை அசைத்தபடியே பறந்து கொண்டிருந்தது. அதன் வலுவான சிறகசைப்புகளில் காற்று பிளவுபட்டுக் கொண்டிருந்தது. கீழ்ப்புறம் அதற்கு நேராகப் பரவிப் படர்ந்து வளர்ந்திருந்த வில்வமரத்தின் கிளைகள் அந்தக் காற்றில் பேயாட்டம் ஆடின.

துளசி மாடத்தில் வளர்ந்திருந்த செடி வேரோடு பிடுங்கப்பட்டு விடுமோ என்று தோன்றியது.

"நான் மிகவும் சோர்வடைந்திருக்கிறேன். போய்ப் படுத்துக் கொள்கிறேன்" கேசவன் புறப்பட முயன்றான்.

"உங்களது சோர்வு எனக்கும் தெரிகிறது. ஆனால், தனி ஒரு பெண்ணாக நான் இங்கு வசிக்கின்ற நிலையில், நீங்கள் என்னையும் தாண்டி அந்த மேலக்காவு மனைக்குச் செல்வது நியாயம்தானா?"

கேசவன், இளவரசியைப் பார்த்தான்.

இளவரசி உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருந்தாள். அவள் நெஞ்சு எழுந்து தாழ்ந்தது. தெளிந்த நீரில் துள்ளும் கயல்கள் போல் அவள் விழிகள் ஒளிவீசின. அவளிடமிருந்து திராட்சைச் சாறின் மணம் வீசியது.

"கேசவன், ஒரு வேடிக்கையைப் பார்க்கிறீர்களா?" என்றபடி இளவரசி நிலவிளக்கிலிருந்து எரியும் ஒரு திரியைக் கையில் எடுத்தாள். ஏதோ மந்திரம் ஜபித்தாள்.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இது சாதாரண மந்திரம்தான்" சொல்லும்போது அந்தத் திரி கொழுந்துவிட்டு எரிந்தது. பின்பு அதைக் கையிலிருந்து விடுவித்தாள். அந்தத் திரியின் இரண்டு முனைகளும் ஒன்றிணைந்து வட்டவடிவமாக மாறியது. பின்பு மேற்புறமாக உயரத் தொடங்கியது.

அவர்கள் இருவரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அந்தத் திரி மேலே மேலே உயர்ந்து அந்தப் பயங்கரப் பறவையின் கழுத்தில் படிந்தது. அவ்வளவுதான். அது ஓர் அலறலுடன் மேற்குப்புறமாகப் பறந்து போனது.

"இது அங்கே போய்ச் சேரும்போது, அனுப்பியவர் விஷயத்தைத் தெரிந்து கொள்வார். நான் இன்னும் உயிருடன் இருப்பதைப் புரிந்துகொள்வார். இப்பொழுது நான் உச்சரித்த மந்திரங்கள், உங்கள் ஞாபகத்தில் இருக்குமல்லவா? இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அது பயன்படும்" இளவரசி கூறினாள்.

முற்றத்தில் நிலவொளி படர்ந்தது. வில்வ மரம் அமைதியடைந்தது. குளிர்ந்த காற்று வீசியது.

"என்ன பயமெல்லாம் போய்விட்டதா? இனி போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்" கேசவனைப் பார்த்துச் சிரித்தபடியே கூறினாள் இளவரசி.

கேசவன் எழுந்து உள்ளே சென்றாலும், அந்தச் சிரிப்பு அவனைத் தொடர்வதாகத் தோன்றியது. படுக்கையில் படுத்த பிறகும் அது அவன் அருகிலேயே தொடர்ந்தது.

இளவரசி இப்பொழுதும் அதே இளமையுடன் இருந்தாள்.

வேலக்காவு மனையில் பிரம்மதத்தன் நம்பூதிரி அனுப்பிய தூதுமூர்த்தி இறக்கைகள் எரிந்த நிலையில் அவருக்கு முன்னால் வந்து விழுந்தது. அவர் திடுக்கிட்டார்.

"அவள் இப்பொழுதும் உயிருடன் இருக்கிறாளா?" பிரம்மதத்தன் அலறினார்.

கிழக்குக் கோட்டையின் அரண்மனையில் இருந்த சக்திகள் பெரும்பாலும் ஒடுங்கி விட்டன என்றே நினைத்தார். ஒன்றிரண்டு

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

தடவை அதுபோல்தான் தெரிந்தது. ஆனால், இந்த அளவிற்குப் பலமுள்ள விஷயம் அங்கு இருப்பது இப்பொழுதுதான் தெரிகிறது.

தான் அனுப்பிப் பரிசோதித்த சோதனை வெற்றி பெற்றுள்ளது. சில நாட்களாகத் தனக்கு எதிரான சக்தி ஒன்று செயல்பட்டுக் கொண்டிருப்பதாக நினைத்தது உண்மைதான்! அதுவும் அந்த இளைஞன் முதல்முறை வந்துவிட்டுப் போனதிலிருந்து. ஆனால் அன்று அவனை எச்சரிக்கை செய்து அனுப்பும்போது, அவன் இந்த அளவிற்கு வலுப்படுவான் என்று தோன்றவில்லை.

அவன் அந்த அரண்மனையில் தன்னுடைய வாசத்தை உறுதியாக்கிக் கொண்டு விட்டான். இளவரசி கார்த்தியாயினியைப் பற்றி ராவுண்ணியார் சொல்லித்தான் விவரங்களைத் தெரிந்து கொண்டிருந்தார் நம்பூதிரி.

உடனே ராவுண்ணியாரை அழைத்து வர ஆள் பறந்தான். அவரும் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தார்.

"ராவுண்ணியாரே, விஷயம் தெரியுமா? மேலக்காவு மனை மோசமாகிக் கொண்டு வருகிறது. இதுவரை நான் பெரியவன் என்கிற கர்வம் இருந்தது. ஆனால் உண்மை அப்படி இல்லை என்பதாகச் சூசகம் வந்துள்ளது" நம்பூதிரி ராவுண்ணியாரிடம் கூறினார்.

காரியதரிசி இதைக் கேட்டு அசந்து போனார். 'மேலக்காவு நம்பூதிரி இப்படி ஒரு வார்த்தையைச் சொல்வதா? என்ன இது?' அவரால் அதற்கு மேல் யோசிக்க முடியவில்லை.

"எதற்காக இந்த மாதிரி அசுபமான வார்த்தைகளைப் பேசுகிறீர்கள்?" ராவுண்ணியார் கேட்டார்.

"நான் இருப்பதை சொன்னேன். இட்டுக்கட்டி எதையும் சொல்லவில்லை."

"இப்பொழுது நீங்கள் திடுமென்று இப்படிப் பேசக் காரணம்?"

"காரணம் உள்ளது. எனக்கொரு சந்தேகம். அவளுக்குச் சக்தி கூடியிருக்கிறதோவென்று சோதித்துப் பார்த்தேன் ராவுண்ணியாரே. சோதிடர் ஒருவர் தேவை. அதுவும் உடனடியாகத் தேவை ஏற்பாடு

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

செய்யுங்கள். பிறகு ஆவாகித்து ஒதுக்க வேண்டியதுதான். அவனைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள வேண்டி உள்ளது.''

''நீங்கள் சொன்னதெல்லாம் சரிதான். அதற்கேற்ற ஒருவர் இருக்கிறார்'' கிட்டு ஆசானை மனதில் நினைத்துக்கொண்டு ராவுண்ணியார் பேசினார்.

''ஆள் யார்?''

''கிட்டு ஆசான்.''

''பொருத்தமானவர்தான். பழைய விஷயங்களையும் தெரிந்து கொள்ளலாம்.''

''பொழுது விடியும்போது ஆள் இங்கே இருப்பார்.''

சொன்னது போலவே சூரியனது முதல் கீற்று ஒளி புறப்படு வதற்குள் அவர் கிட்டு ஆசானை அழைத்து வந்தார்.

''விஷயங்களைக் கேள்விப்பட்டிருப்பீர்களே'' நம்பூதிரி கிட்டு ஆசானைப் பார்த்தவுடன் கேட்டார்.

''எல்லாவற்றையும் சொன்னார்'' ஆசான் பவ்யமாகக் கூறினார்.

''அப்படியானால் இன்று இரவே ஆரம்பிக்க வேண்டியதுதான். என்ன சொல்கிறீர்கள்?

''உங்களது விருப்பம் போலவே.''

''மறக்காமல் வந்து விடுங்கள். இந்தாரும், இதை வைத்துக் கொள்ளும்'' நம்பூதிரி இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளைச் சுருட்டி ஆசானிடம் கொடுத்தார்.

ஆசான் அதைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

கிட்டு ஆசானுக்கு அறவே பிடிக்காத ஒருவர் இந்த நம்பூதிரி தான். இருந்தாலும் வீடு தேடி வந்து ராவுண்ணியார் அழைக்கும்போது எப்படிப் போகாமல் இருப்பது என்றுதான் வந்தார். மற்றுமொரு விஷயம். நம்பூதிரியின் ரகசியங்களைக் கண்டறியவும் செய்யலாம். கூப்பிட்டு அனுப்பிருப்பதைப் பார்த்தால், விஷயம் சாதாரணமாக இருக்காதுதான். இதெல்லாம் ஆசானின் மனதிற்குள் முகிழ்த்த சிந்தனைகள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

மதிய உணவு முடிந்து, நம்பூதிரி கொடுத்த பணத்திலிருந்து கொஞ்சம் சரக்கை உள்ளே இறக்கிவிட்டு, ஆசான் கிழக்குக் கோட்டையை நோக்கி நடந்தார். குறிப்பாக எந்தக் காரணமும் கிடையாது. உள்ளே போன சரக்கு அவருக்குக் கேசவனை ஞாபகப் படுத்தி விட்டது... அவ்வளவுதான்.

அவர் அங்கு சென்றபோது கேசவன் நல்ல தூக்கத்திலிருந்தான். தொண்டையைச் செருமினார். அவன் விழித்தான்.

"என்ன, பகல் தூக்கமெல்லாம் பலமாக உள்ளதே!" ஆசான் கேட்டார்.

"ஒன்றுமில்லை. தனியாக இருப்பதால் பொழுதுபோக வேண்டாமா..." கேசவன் கொட்டாவி விட்டபடியே எழுந்து உட்கார்ந்தான்.

"கொஞ்சம் சுறுசுறுப்பாகி விட்டு வா. பேச வேண்டி உள்ளது" ஆசான் கூறினார்.

கேசவன் கிணற்றடிக்குச் சென்று முகம் கழுவிவிட்டு வந்தான்.

"என்ன ஆசானே, என்ன விசேஷம்?" கேசவன் ஆவலுடன் கேட்டான்.

"நான் இப்பொழுது வந்தது பொழுது போக்காகத்தான். ஆமாம்; நீ வந்த விஷயம் எதுவரையில் வெற்றி அடைந்துள்ளது?"

"ஏறத்தாழப் பாதிக்கிணறு தாண்டியிருக்கிறேன்."

"சரி, மேலக்காவு மனை நம்பூதிரி ஒரு ஹோமம் நடத்தப் போகிறார். என்னைச் சோதிடம் பார்க்க அழைத்திருக்கிறார்" ஆசான் கூறினார்.

"உண்மையாகவா?"

"ஆனால், விஷயம் என்ன என்பது தெரியாது."

"எப்படி இருந்தாலும் அது எனக்குக் கெடுதல் செய்யத்தான் என்பதில் சந்தேகமில்லை. அதனால் அதற்கு ஏற்றபடி நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டியதுதான்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"கண்டிப்பாக நான் செய்கிறேன். அதைக் குறித்து நீ கொஞ்சமும் கவலையே படவேண்டாம்."

அன்று இரவு கிட்டு ஆசான் மேலக்காவு மனையை அடைந்தார். பிரம்மதத்தன் ஒரு ஹோமம் செய்வதற்கான ஏற்பாடுகளைக் கச்சிதமாகச் செய்து வைத்திருந்தார்.

26

பிரம்மதத்தன் நம்பூதிரியின் பூஜை அறையில் ஹோமத்திற்கான எல்லாம் தயாராக இருந்தன. அவர் பூஜையோ ஹோமமோ நடத்துகிற அன்று விடியற்காலையிலிருந்தே யாரும் அந்தப் பக்கம் வரக் கூடாதென்பது ஒரு சட்டமாக இருந்தது. பழைய காலத்தைச் சேர்ந்த அந்த வீட்டின் தெற்குப்புறத்தில் இந்த பூஜையறை இருந்தது. பிரத்யேகமாகக் கட்டப்பட்டிருந்த அந்த அறையின் வெளிப்புறத்தில் முட்செடிகள் நடப்பட்டு, கவனமாக வளர்க்கப்பட்டிருந்தன. வாசலுக்கு எதிர்ப்புறம் மட்டும் கொஞ்சம் வழிவிட்டு முட்செடிகள் நெருக்கமாக வளர்ந்திருந்தன.

மருமகள் ஊர்மிளாவும், வேலைக்காரியும் தூரத்தில் தங்கியிருக்கின்றனர். அதாவது அந்த வீட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள இந்தப் பூஜையறையில் விசேஷமான பூஜைகள் மட்டுமே நடக்கும்.

முன்பெல்லாம் தெற்குப் புறமிருந்த மற்றொரு பெரிய அறையில் பூஜை நடப்பது வழக்கம். ஆனால், சென்ற முறை ஹோமாக்னியில் கரும்பூனையொன்று தாவிக் குதித்து விழுந்ததால், அந்த அறையைக் கைவிட்டு இதைப் பூஜையறையாக மாற்றிக் கொண்டார்.

கிட்டு ஆசான் சௌகரியமாக குரண்டிப் பலகை முன் உட்கார்ந்தார். அருகே நம்பூதிரி ஓர் ஊஞ்சலில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார்.

"இருந்தாலும் கிட்டு ஆசானே, நான் சில விஷயங்களைச் சொல்லி விடுகிறேன். நீங்களும் இதைத் தெரிந்து கொள்வது நல்லது. இல்லாவிட்டால் நாம் செய்வதெல்லாம் பைத்தியக்காரத்தனமான விளையாட்டாகி விடும்" நம்பூதிரி தொடங்கினார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் தயாராக வந்திருக்கிறேன். சொல்லுங்கள்" கிட்டு ஆசான் சோழிகளைப் பையிலிருந்து எடுத்துப் பலகையில் பரப்பியபடியே பேசினார்.

"ஒரு மோகினி ஹோமம் நடத்த வேண்டும். காரணம் தெரியுமென்று நினைக்கிறேன். அவள்தான் அவனுக்கு உதவுகிறாள்."

"யாரைச் சொல்கிறீர்கள் என்று தெரியவில்லை."

"அவளது முழுப் பெயரையும் நான் ஜோதிடம் மூலம் தெரிந்து கொள்ள வேண்டும்."

"மோகினியின் பெயரை அறிந்துகொள்ள வேண்டுமா?"

"நிச்சயமாக."

"அப்படியானால் பார்த்துவிட வேண்டியதுதான்."

"அது மட்டும் போதாது. எப்படித் தோன்றியது. அதை அழிக்க என்ன செய்யலாம் போன்ற எல்லா விவரங்களும் தேவை."

கிட்டு ஆசான் யோசித்தார். 'தனக்கு முன்பாக ஊஞ்சலில் உட்கார்ந்திருப்பவன் ஒரு கார்க்கோடகன். இன்றுவரை அவன் நல்லது என்பதையே செய்ததில்லை. ஒரு மோகினியை ஹோமாக்னியில் எரிக்க வேண்டுமென்றால், அவள் அவனுடைய எதிராளிக்கு உதவுபவளாக இருக்க வேண்டும். பிரம்மதத்தனின் எதிராளி யாராக இருந்தாலும் அவன் நல்லவனாகவே இருப்பான். ஒருவேளை, அது கேசவன் குட்டியாக இருப்பானோ?'

"கிட்டு ஆசானே, விவரங்களைச் சரியாகச் சொல்லாவிட்டால் இன்று உங்களை இங்கிருந்து விடப்போவதில்லை. என்னை உங்களுக்கு நன்றாகவே தெரியும். உடம்புக்கு எதுவும் நேர வேண்டாமென்றால் சரியாகக் கணித்துச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் உங்களை என்னுடைய மூர்த்திக்குப் பலி கொடுக்க நேரிடும். நான் அதற்கெல்லாம் பயப்படுகிற ஆளில்லை."

நம்பூதிரியின் வார்த்தைகளைக் கேட்டதும் ஏற்கெனவே பலவீனமான கிட்டு ஆசான் திடுக்கிட்டார். பிரம்மதத்தன் நினைத்தால், தன் கழுத்தை அவரது உள்ளங்கையில் வைத்து நெரித்து விடுவார்.

If You Want More Free E-books
https://t.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ம்... சீக்கிரம் ஆரம்பியுங்கள்" நம்பூதிரி கட்டளையிட்டார்.

கிட்டு ஆசான் சோழிகளை வீசினார். முதலில் விழுந்தது இரட்டைப்படை எண். மீண்டும் மீண்டும் மூன்று முறை முயன்றார். அதன் பிறகு தன்னுடைய பரதேவதையை நினைத்துக் கொண்டார்.

"பெயர் வசந்தசேனை என்று வருகிறது. சரிதானா?" கிட்டு ஆசான் கேட்டார்.

"சரிதான், மேலே சொல்லும். அது எனக்கு ஏற்கெனவே தெரியும். நீர் கணிப்பது எல்லாம் சரிதானா என்று பார்க்கிறேன். நான் நினைத்தால் தண்ணீரிலேயே எனக்குத் தேவையான விடைகளை வரவழைக்க முடியும். உண்மையிலேயே நீர் கெட்டிக்காரர்தாம். ம்... மேலே தொடருங்கள். இனி அவளது தோற்றம் பற்றிக் கூறுங்கள்."

இதைக் கேட்டவுடன் கிட்டு ஆசான் ஒருகணம் தயங்கினார்.

"அது கொஞ்சம் கஷ்டம். மோகினி, கந்தர்வர்கள் எல்லாம் கல்பாந்த காலமாக வாழ்ந்து வசிப்பவர்கள் சுயம்புவாகத் தோன்றியவர்கள்."

"அதனால் சொல்ல முடியாது என்கிறீரா?"

ஒன்றும் சொல்லாமல் கிட்டு ஆசான் சோழிகளை வீசினார். அது சங்கு வடிவத்தில் விழுந்தது. நம்பூதிரியும் அதைக் கவனித்துக் கொண்டே இருந்தார்.

"அதிசயமாக இருக்கிறதே வலம்புரிச்சங்கு. அப்படியென்றால் அதற்குள்தான் அவள் இருந்தாளா? யாரோ அவளைச் சங்கில் அடைத்திருக்க வேண்டும். அப்படியானால் அத்துடன் மற்றொரு சங்கும் இருக்க வேண்டுமே" என்றார்.

"அதெப்படிக் கணக்கிட்டீர் நம்பூதிரி?"

அவர் ஒருமுறை தோள்களைக் குலுக்கிச் சிரித்தார். அந்தச் சிரிப்பைப் பார்த்தபோது கிட்டு ஆசானுக்கு உள்ளூர உதறல் தோன்றியது. அது ஒரு கொலைச் சிரிப்பு.

"நீர் எதிரில் இருப்பதால் எனக்கும் அதைச் சொல்வதற்கு சுவாரயம் தோன்றுகிறது. தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள்

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

உடன் இருந்தால் இன்னும் சந்தோஷம்" என்றபடி நம்பூதிரி தொடர்ந்தார். "வலம்புரிச் சங்கிலிருந்து யாரோ அவளை விடுதலை செய்திருக்கிறார்கள். மற்றொரு சங்கு என்றால் அது சாதாரண சங்கு. அதில்தான் அவளது சக்தி அடங்கியிருக்கும். அது நம் கைக்குக் கிடைத்துவிட்டால், அவளது கதையை முடித்துவிடலாம்" நம்பூதிரி முடித்தார்.

கிட்டு ஆசான் தர்மசங்கடத்தில் ஆழ்ந்தார். 'அது எங்கே இருக்கிறதென்று கண்டுபிடித்துச் சொல்லவேண்டியிருக்கும். இந்த நேரம் பார்த்துத்தானா சோழிகள் வெகு கச்சிதமாக விழுந்து தொலைக்க வேண்டும்? நிலைமை இப்படியே நீடித்தால் எல்லா விவரங்களும் வெளியாகிவிடுமே' என்று அவர் பயந்தார்.

பிரம்மதத்தன், கிட்டு ஆசானை சோதிடம் பார்க்க அழைத்த போது, 'கேசவனுக்கு உதவும் வகையில் ஏதாவது நல்லது செய்ய முடியுமா?' முயன்று பார்க்கலாம் என்றுதான் அவர் வந்தார். ஆனால் இங்குள்ள நிலையைப் பார்த்தால் ஏடாகூடமாகவல்லவா உள்ளது? என்ன செய்வதென்று கிட்டு ஆசான் தவித்தார். இங்கிருந்து நழுவுவதும் முடியாத விஷயம். கிட்டு ஆசான் யோசித்தார்.

"சீக்கிரம் பாருங்கள்" ஊஞ்சலை ஆட்டியபடி நம்பூதிரி கூறினார்.

கிட்டு ஆசான் மீண்டும் சோழிகளைப் பரப்பினார்.

"நீங்கள் சொல்ல வேண்டாம். நானே சொல்கிறேன். ஈரேழு பதினான்கு. ஒரு பெரிய கட்டடத்திற்குள். மரச்சுவரில் அது ஒளிந் திருக்கிறது. இடமும் தெரிந்துவிட்டது."

"எங்கே என்று தெளிவாகப் புரிந்ததா?"

"அதுதான் துலக்கமாகத் தெரிகிறதே. கிழக்குக் கோட்டையில் இருக்கிறாளே சாமுண்டி? அவளது மந்திரத்தால் கட்டுண்டிருந்தவள் எவளோ, அவள்தான் நான் தேடும் மோகினி. அப்படி ஒரு கதையை நான் முன்பே கேள்விப்பட்டிருக்கிறேன்."

"இனி நான் என்ன செய்ய வேண்டும்?"

"நான் ஹோமத்தைத் தொடங்க வேண்டியதுதான். இதில் சரிப் பட்டு வரவில்லையென்றால், அந்தச் சங்கை எடுத்து வரவேண் டியதுதான்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நம்பூதிரி, மோகினி ஹோம மந்திரத்தை உருவிடத் தொடங்கினார். நெய்யில் ஊற வைத்த செம்பருத்திப் பூக்களை ஹோமாக்னியில் வீசிக் கொண்டிருந்தார்.

கேசவன் அதே நேரத்தில் கிழக்குக் கோட்டையின் திண்ணையில் உட்கார்ந்திருந்தான். கிட்டு ஆசான் 'ஹோமத்திற்குப் போகப் போவதாகச் சொல்லியிருந்தார். சோதிடம் பார்த்து முடித்தவுடன் இங்கு வருகிறேன்' என்றும் சொல்லியிருந்தார். ஆனால், அவர் சொன்ன நேரம் தாண்டியும் அவர் இன்னும் வரவில்லை. கேசவன் நிம்மதி இழந்தான்.

இன்னும் ஆறு நாட்களுக்கு இளவரசி வரமாட்டாள் என்பதும் கேசவனுக்குத் தெரியும். அவள் தந்துவிட்டுச் சென்ற ஓலைச்சுவடியிலிருந்த சில மந்திரங்களைப் படித்து வைத்திருந்தான். இரவு வெகு நேரமாகி விட்டது.

அரண்மனையின் வாசலுக்கு வெளியே யாரோ நிற்பதுபோலத் தெரியவே, சட்டென்று கவனித்தான். வசந்தசேனை. எழுந்து வெளியே சென்றான்.

"என்ன வசந்தசேனை? என்ன விஷயம்?"

அவள் பரபரப்பிலிருந்தாள். "என்னை உங்களால் காப்பாற்ற முடியுமா?"

"நான் என்ன செய்ய வேண்டும்? சொல். எப்படிக் காப்பாற்ற வேண்டும்?"

"வாருங்கள். எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறுகிறேன்" என்றபடி அவனையும் அழைத்துக்கொண்டு மோகினி கோயிலுக்கு விரைந்தாள்.

பாலை மரத்தின் அடியில் இருவரும் அமர்ந்தனர்.

"என்னை ஹோமிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார் மேலக்காவு மனை நம்பூதிரி. நான் அன்று சொன்ன விஷயம் ஞாபகம் இருக்கிறதா?"

"அந்தச் சங்கு விஷயம்தானே?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஆமாம்... அது அங்கேயே பத்திரமாக இருக்கிறதல்லவா?"

"என்னைத்தவிர வேறு யாருக்கும் அந்த ரகசியம் தெரியாது."

"அப்படி இல்லை. கிட்டு ஆசானும், பிரம்மதத்தனும் சோதிடம் பார்த்தபோது நான் அங்கே இருந்தேன். சங்கிற்குள் என் முழுச் சக்தியும் இருப்பதை அவர்கள் கண்டுபிடித்து விட்டார்கள். இந்த நிலைமையில் உடனடியாக அதை எடுத்து வருவதற்கான ஏற்பாட்டைச் செய்வார்கள்."

"யாரை அனுப்புவார்கள்?"

"அவரிடம் ஏராளமான மூர்த்திகள் இருக்கிறார்களே."

பாலை மரத்தைச் சுற்றிலும் இருள் மண்டிக்கிடந்தது. ஆகாயத்தில் நட்சத்திரங்கள் இருந்தன. அவற்றின் பலவீனமான வெளிச்சம் மெலிதாகப் பரவியிருந்தது. ஆனால், மரத்தின் அடிப்பகுதியில் கனமான இருட்டு அப்பிக் கிடந்தது.

"அப்படியானால் நாம் இங்கே உட்கார்ந்திருப்பது ஆபத்து அல்லவா? வா, அரண்மனைக்குப் போகலாம்."

"அங்கே இளவரசி இருப்பார்களே."

"இன்னும் ஒரு வாரத்திற்கு இளவரசி அங்கு வரமாட்டார்."

"இதை அங்கேயே சொல்லியிருந்தால் நாம் இங்கு வந்திருக்கவே வேண்டாம்."

மறுபடியும் இருவரும் கோட்டைக்குத் திரும்பினார்கள்.

அரண்மனை அமைதியாக இருந்தது. துளசி மாடத்தில் துளசி அசைவற்று நின்றிருந்தது. ஓர் இலைகூட அசையவில்லை.

வசந்தசேனை கேசவனின் படுக்கை அறையுள் நுழைந்தாள். கேசவன் கட்டிலில் படுத்தபோது வசந்தசேனை அவனது கால் பகுதியில் அமர்ந்தாள்.

"ஒரு தடவை நான் உங்களைப் பார்ப்பதற்காக வந்திருந்தேன்."

"இந்த இடத்திற்கா? எப்பொழுது?" கேசவன் வியப்புடன் கேட்டான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஓர் அமாவசை நாளன்று."

"அப்போது நான் இங்கு இல்லையா?"

"இருந்தீர்கள். ஆனால் தனியாக இல்லை."

கேசவனுக்குப் புரிந்தது. இளவரசியுடன் தான் தனித்திருந்த வேளையையே அவள் குறிப்பிடுகிறாள்.

"இளரசியிடம் நீங்கள் மயங்கி விடுவீர்கள் என்று நான் நினைக்கவே இல்லை."

"ஒரு சந்தர்ப்பத்தில் அது தவிர்க்க முடியாததாகி விட்டது."

"உங்களை நான் எச்சரித்திருந்தேனே!"

"இருந்தாலும் சில முக்கியமான விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்காக அவளுடன் நெருங்க நேர்ந்தது."

"உண்மையைக் கூறினால், இந்த முயற்சியில் நீங்கள் மட்டுமே இதுவரை தப்பித்து மீண்டு வந்திருக்கிறீர்கள். இவ்வளவு நாட்களாக யாரும் இதைச் சாதிக்கவில்லை. அப்படியானால் நீங்கள் பல விஷயங்களைச் சாதித்திருப்பீர்கள், இல்லையா?"

"சில விஷயங்களை நான் தெரிந்துகொள்ள முடிந்தது. ஆனால், முழுமையாக என்று கூற முடியாது."

"மேலக்காவு மனையில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறீர்களா?"

"இந்த இரவு நேரத்தில் அது எப்படி வசதிப்படும்?"

"நான் காண்பித்துத் தருகிறேன்."

"எங்கே?"

"என் தொண்டையின் கீழ்ப்பகுதியைப் பாருங்கள்."

கேசவன் கவனித்தான். அவளது தொண்டைக்குக் கீழே இரு மார்பகங்களுக்கு இடையில் வட்டமான கண்ணாடி போல் பளபளத்தது. பின்னர் அங்கே ஒரு காட்சி தெரிந்தது. பிரம்மதத்தன் நடத்தும் ஹோமாக்னியும், கிட்டு ஆசானும் தெரிந்தார்கள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"எதனால் அவர்களது ஹோமம் பலிக்கவில்லை?" கேசவன் கேட்டான்.

"நீங்கள் என் பக்கத்திலேயே இருப்பதால்."

"அது எப்படி முடியும்?"

"உங்களது வலது கால் பாதத்தை நான் பிடித்துக் கொண்டிருக்கிறேன். நான் உங்களிடமிருந்து பிரிந்து நின்றால் மட்டுமே அவர்கள் என்னை ஏதாவது செய்ய முடியும்."

வசந்தசேனை சொன்னதன் பொருள் உண்மையில் கேசவனுக்கு விளங்கவில்லை.

"எனக்குப் புரியவில்லை, வசந்தசேனை."

"நாம் ஒன்றுபடப் போகிறோம்."

அவள் கேசவனை நெருங்கினாள். கேசவனது நெஞ்சில் வளர்ந்திருந்த ரோமங்களின் ஊடாக அவளது கை அளைந்தது. அவள் அவனது நெஞ்சில் முகம் பதித்தபோது அவளிடம் பிரமிப்பேற் படுத்தும் ஒருவித வாசனை தோன்றியது.

அவளது பட்டுப் போன்ற மென்மையான கைகள், அவளை இறுக்கி அணைத்தன. அவளது மார்பு அவனது மார்பில் அழுந்தியது. வசந்தசேனை ஒரு வசந்த மலராக மாறினாள்.

உலகத்திலுள்ள எல்லாப் பூக்களின் மணமும் அவளிடம் இருந்தன. அவள் ஒரு தொட்டிலாக மாறிவிட்டிருந்தாள். அவளது உடலின் ஒவ்வோர் உயிரணுவிலும் ஒன்றிக் கலந்துவிட அவள் முயன்றபோது, கேசவன் நட்சத்திரங்கள் மலரும் ஓர் உலகத்தில் அமிழ்ந்துவிட்டிருந்தான். கந்தர்வர்களின் கானங்கள் அவன் செவியில் விழுந்தன.

அவளது வெப்பமான மூச்சுக்காற்று அவள் கன்னங்களில் பட்டுத் தெறித்தபோது கேசவன் உலகத்திலுள்ள மற்ற எல்லாவற்றையும் மறந்தே போனான். ஏன், தன்னையும் மறந்தான்.

சட்டென்று வெளியில் ஏதோ குலுங்கும் சத்தம் கேட்க இருவரும் திடுக்கிட்டு சுய நினைவுக்கு வந்தார்கள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

27

"என்ன அது?" கேசவன் கேட்டான்.

"என்னவோ மணியடிப்பது போல் உள்ளதே!" வசந்தசேனை கூறினாள்.

"வருவது இளவரசியாக இருந்தால் உன்னைப் பார்த்து விடுவார்களே!" கேசவன் எச்சரித்தான்.

"இப்படிப்பட்ட நிலைமையில் யாரும் நம்மை எதுவும் செய்துவிட முடியாது. ஆனால், பூதகணங்கள் வருவதானால் நம் இருவரையும் எங்காவது தூக்கிச் சென்றுவிடும். அதிலிருந்து தப்பிக்க நான் ஒரு வழி சொல்லித் தருகிறேன்" வசந்தசேனை கேசவனின் காதில் கிசுகிசுத்தாள்.

உடனே கேசவன் வலது கையால் அருகிலிருந்த சூலத்தை எடுத்து வாசற்புறமாக எறிந்தான். அங்கிருந்து ஓர் அலறல் எழுந்தது.

"இனி பயப்படத் தேவையில்லை" சற்று நேரம் கழித்து அவனிடமிருந்து எழுந்தபடி அவள் கூறினாள்.

"நான் போய் என்னவென்று பார்த்துவிட்டு வருகிறேன்" கேசவன் கூறினான்.

"வேண்டாம். நானே முதலில் செல்கிறேன்" வசந்தசேனை நகர்ந்தாள்.

சூலம் நிலைவாசற்படியில் செருகி வைத்ததுபோல் இருந்தது. அது இறங்கியிருந்த பகுதியிலிருந்து சூடான ரத்தம் வடிந்திருந்தது.

"இதோ பாருங்கள்" வசந்தசேனை கூறினாள்.

வந்து பார்த்த கேசவன் "ரத்தம்" என்றான்.

"இங்கு எப்படி ரத்தம் வந்தது தெரியுமா? உங்களால் ஊகிக்க முடிகிறதா."

"நம்பூதிரி யாரையோ இங்கு அனுப்பியிருக்கிறார். ஆனால், எதற்காக என்பது விளங்கவில்லை."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"எனக்கு என்ன தோன்றுகிறது என்றால்..." வசந்தசேனை பேசத் தொடங்கினாள். "நான் இங்கே இருக்கக்கூடும் என்று அவர் தெரிந்து கொண்டிருப்பார். ஆனால், என்னை எடுத்துச் செல்லும் வல்லமை வந்தவருக்கு இல்லை. இருந்தால் சத்தம் போடாமல் நெருங்கியிருப் பார். ஒருவேளை, அந்தச் சங்கை எடுத்துப் போகத்தான் வந்திருக்க வேண்டும்?"

"எந்தச் சங்கை?"

"இன்னும் ஒரு சங்கு பத்திரமாக உள்ளதே. அதை எடுத்து வந்துவிட்டால் என்னை அழித்து விடலாமென்று அவர் தெரிந்து கொண்டாரே! ஹோமத்தில் என்னை ஆவாஹம் செய்ய முடியாததால், பூத கணத்தை அனுப்பியிருப்பார்."

"அப்படியானால் நான் என்ன செய்ய வேண்டும்?"

"நீங்கள் என்னைக் காப்பாற்ற விரும்பினால், அந்தச் சங்கை யாரும் எடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்."

"அது எப்படி என்னால் முடியும்?"

"வழி உள்ளது. ஆனால், அது சுலபமல்ல."

"சுலபமாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை. நான் முயல்கிறேன். விஷயத்தைச் சொல்."

"அந்தச் சங்கைப் பாண்டவ மலை அடிவாரத்திலுள்ள துர்கா கோயிலில் கொண்டு போய் வைக்க வேண்டும். அதுவரையில் நீங்கள் அதை உங்கள் கழுத்திலேயே அணிய வேண்டும். மந்திரத்தால் அந்தச் சங்கைச் சிறியதாக மாற்ற வேண்டும். அதற்கான மந்திரத்தையும் சொல்லித் தருகிறேன்."

கேசவன் சங்கை எடுத்து வந்தான்.

வசந்தசேனை மந்திரம் ஜபித்தாள்.

சங்கு மிகச் சிறியதாகி ஒரு சிறிய நாணய அளவிற்கு மாறியது.

"அதோ - அந்தப் படத்தில் சார்த்தப்பட்டுள்ள ருத்திராக்ஷ மாலையை எடுத்து அதில் இதைக் கோத்து உங்கள் கழுத்தில் அணிந்து கொள்ளுங்கள்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அணிந்து கொண்டான்.

"இனிமேல் கவலை இல்லை" வசந்தசேனை நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

அதேசமயம் மேலக்காவு மனையில் ஹோமம் நடந்து கொண்டிருந்தது. பிரம்மதத்தன் நம்பூதிரி ஒவ்வொரு முறையும் மோகினி ஹோம மந்திரத்தை ஜபித்து யாரையோ ஆவாஹம் செய்வதுபோல் காற்றிலிருந்து பிடித்துப் பிடித்து அக்னியில் போட்டபடி இருந்தார்.

"யக்ஷி ஹனன... வாஹ..."

மறுபடி மந்திரம் சொல்வார். மறுபடி ஹோமிப்பார்.

இப்படி ஆயிரத்து ஒருமுறை ஹோமித்தபிறகு கிட்டு ஆசானை நோக்கித் திரும்பினார்.

"அவள் அகப்பட்டு விட்டாளா, பாருங்கள்" என்றார்.

கிட்டு ஆசான் சோழிகளைப் பரப்பினார்.

கூட்டினார்... கழித்தார்... வகுத்தார்... மீதத்தைக் குறித்தார். கடைசியில் கூறினார்.

"சூன்ய பலம்தானே தெரிகிறது."

"நன்றாகப் பாரும். ஏமாந்துவிடக் கூடாது."

"நான் சொன்னது உண்மை. இதுவரை அவளுக்கு எதுவும் நேரவில்லை" ஆசான் உறுதியாக அறிவித்தார்.

"அப்படியானால் நான் இதுவரை செய்ததெல்லாம் வீணா?" கோபத்துடன் நம்பூதிரி கேட்டார்.

"அப்படித்தான் பலன் சொல்கிறது."

"அப்படியானால் இன்னும் கடுமையாக்க வேண்டும் என்கிறீர். செய்துவிட்டால் போகிறது. அவளை இந்த ஹோம குண்டத்தில் ஓர் ஈசலைப்போல் போட்டுச் சாம்பலாக்கவில்லை என்றால் நான் எதற்கு மந்திரம் கற்றேன்? அதற்கு அர்த்தமில்லாமல் போகும்" நம்பூதிரி மீண்டும் நெய்யில் நனைத்த செம்பருத்திப் பூவைக் கையில் எடுத்தார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஓம் பைரவாய நம..." மந்திரம் உச்சரித்தார்.

இம்முறை சற்று உக்கிரமூர்த்தியான பைரவனை அழைத்தார். முன்புறம் பிரதிஷ்டை செய்திருந்த உக்கிரமூர்த்தி ஒன்றின் கையிலிருந்த வாளைச் சட்டென்று உருவினார். அதன் கூர்மையான பகுதியில் தனது வலக்கையின் பெருவிரலை வைத்து அழுத்தினார். துளிர்த்து, உருண்டு வந்த ரத்தத் துளிகளை ஹோம குண்டத்தில் சொரிந்தார்.

மறுபடியும் மந்திரம் கூறினார். "ஓம்... பைரவாய நம...!"

ஹோம அக்னியில் ரத்தம் விழுந்து பொசுங்கும் வாசனை மேற்புறமாக உயர்ந்தது. அந்த அக்னி குண்டமே ஒரு கணம் சிவப்பு நிறமாக மாறினாற்போல் அவருக்குத் தோன்றியது. ரத்தம் வடிந்த போதும் பிரம்மதத்தன் முகத்தில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக, அந்த முகத்தில் ரௌத்ரம் உயர்ந்து கொண்டிருந்தது.

ஆயிரத்து ஒன்று...

"கிட்டு ஆசானே! பாரும் இனியும் இல்லையென்று பதில் சொல்லக்கூடாது" நம்பூதிரி ஆணையிட்டார்.

ஆசான் மீண்டும் சோழியைப் பரப்பினார்.

"ஐயா, மன்னிக்க வேண்டும். என்னால் அப்படிச் சொல்ல முடியவில்லை" பயந்தபடியே கூறினார் கிட்டு ஆசான்.

"ஓகோ, விஷயம் அப்படியா உள்ளது?"

"ஆமாம்... எஜமான்."

"அப்படியானால் காரணம் தெரிய வேண்டுமே."

"அதை வேண்டுமானால் பார்த்துவிடலாம்."

"சீக்கிரம் பாருங்கள்."

"தெளிவாக எதுவுமே தெரியவில்லையே?"

"அப்படியென்றால்...?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஒரு பனிமூட்டம் மாதிரி உள்ளது."

"அந்த அளவிற்குப் போய்விட்டதா?" கேட்டபடியே நம்பூதிரி தன் தலையிலிருந்து ரோமம் ஒன்றைப் பிடுங்கி ஹோம குண்டத்தின் அக்னியில் போட்டார்.

முடி நெருப்பில் கருகிய நாற்றம் மூக்கைத் துளைத்தது.

"நான் அனுப்பிய காலகேயி எங்கே போய்த் தொலைந்தாள்? முதலில் அவள் என்ன ஆனாள் என்று பாருங்கள்" நம்பூதிரி ஆசானைப் பார்த்துக் கூறினார்.

மறுபடியும் சோழியைப் பரப்பினார்.

கிட்டு ஆசானின் முகம் தெளிவடைந்தது.

"ஏதாவது தெரிகிறதா?"

"சூல அடையாளம் தெரிகிறது. சூலத்தால் பாதிக்கப்பட்டிருப்ப தாய்த் தெரிகிறது."

"சூலம் எறிந்து அவளைக் கொன்றுவிட்டானா? அப்படி யானால் நாக மோகினியின் சூலம் அவன் கைக்குக் கிடைத்திருக்கிறது என்றாகிறது."

"நீங்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம்."

"அப்பொழுது ஒரே ஒரு வழிதான் தென்படுகிறது" நம்பூதிரி சிந்தனையிலாழ்ந்தார்.

'சத்ரு சம்ஹாரத்திற்கான இறுதி வழி ஒன்றே ஒன்றுதான். ஆனால் அந்த வழி தனக்கோ. தன்னுடைய குலத்திற்கோ ஒத்து வராத விஷயம்.

சுடலை பத்ரகாளியை ப்ரீதிப்படுத்தி சத்ருவை தம்பிக்கச் செய்ய வேண்டும். அதற்குச் செய்ய வேண்டிய கர்மமோ நச்சுப் பிடித்த வேலை. பிரம்மதத்தன் யோசித்தார்.

பிணத்தை எரித்துக் கிடைக்கும் சாம்பலை, குளித்தபின் உடல் முழுக்கப் பூசி ஒற்றையாளாக இரவில் சுடலையில் உட்கார்ந்து தியானிக்க வேண்டும். அப்பொழுதுதான் காளி பிரத்தியட்சமாவாள். எதிரியைத் தொலைப்பதற்கான வழியைச் சொல்லித் தருவாள். சரி,

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

யாரை எரித்து அந்தச் சாம்பலை உடலில் பூசுவது? இது ஒரு சிக்கலான பிரச்சினைதான்.

சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. ஏதாவது ஒரு பிராமணனை எரித்து அந்தச் சாம்பலை பூசிக் கொள்ளலாம். அதில் சிக்கல் ஏதும் வராது. சரி. அதற்கு பிராமணனை எங்கே தேடுவது? எப்படிக் கொல்வது?'

"சரி. நீங்கள் போகலாம் தேவைப்பட்டால் நான் சொல்லி அனுப்புகிறேன்" பிரம்மதத்தன் விடை கொடுத்தார்.

மோட்சம் கிடைத்த பக்தன் மாதிரி கிட்டு ஆசான் மகிழ்ச்சியுடன் அங்கிருந்து புறப்பட்டார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு கிட்டு ஆசான் கேசவனைச் சென்று சந்தித்தார். நடந்ததையெல்லாம் ஒரு நாடகம் போல் அவனிடம் ஒப்பித்தார்.

"வேறு ஏதாவது தெரிய வேண்டுமா?" கிட்டு ஆசான் கேசவனிடம் கேட்டார்.

"நிறையத் தெரிந்து கொள்ள வேண்டியது இருக்கிறது. பிரம்மதத்தன் குரூரமானவர். சும்மா இருக்க மாட்டார். எதிராளியின் பலத்தை அவர் பூரணமாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். என் கையில் ஆயுதம் இருக்கின்ற நிலையில் அவர் தன்னுடைய மொத்த வல்லமையையும் பிரயோகிக்க முயல்வார்" கேசவன் தன் கழுத்தில் கிடந்த ருத்ராக்ஷத்தைத் தடவியபடி கூறினான்.

"அவர் ஆளனுப்பியது இங்குள்ள சங்கை எடுப்பதற்காக. ஆனால் அது நடக்கவில்லை. சூலமெறிந்து அழித்தாகிவிட்டதென்று கணிப்பில் தெரிந்தது.

"நல்லவேளை, நீங்களே வந்ததால் எனக்கு விஷயம் விளங்கியது."

"அவரது அடுத்த நடவடிக்கை என்ன என்பதை யாரால் சொல்ல முடியும்?"

"எதுவாக இருந்தாலும் சமாளிக்க வேண்டியதுதான். வேறு என்ன செய்வது?" கேசவன் கேட்டான்.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஆசான் விடைபெற்றார்.

வழக்கம்போல் வசந்தசேனை வந்தாள்.

கேசவன் அவளிடம் கூறினான். எல்லாவற் றையும் கேட்டபிறகு அவள் சற்று நேரம் தியானத்தில் அமர்ந்தாள்.

"இனி அவருடைய தாக்குதல் பலமானதாக இருக்கும். எதிராளியை மாரணம் செய்வதுதான் அது. ஒருவேளை அவர் அதைச் செய்வாரோ, மாட்டாரோ?" வசந்தசேனை கூறினாள்.

"அதென்ன? மனிதனால் முடியாத விஷயமா என்ன?"

"அதை ஒரு பிராமணரான அவர் செய்வாரா என்பதுதான் யோசனை."

"ஏன் அப்படி ஒரு சந்தேகம்?"

அவள் அதைக் கேசவனுக்கு விளக்கினாள். அதற்கான மந்திரத்தையும் சொல்லிக் கொடுத்தாள்.

"ஹ்ரீம்... நரசிரோ மாலாலம்க்ருதாயே நம ஹ்ரீம்."

"இதுதான் மந்திரம். அதைப் பத்தாயிரத்து ஒருமுறை உச்சரிக்க வேண்டும். தவறக்கூடாது. பிறகு சுடுகாட்டிலிருந்து பிணம் எரித்த சாம்பலை உடம்பில் பூசவேண்டும். இதையெல்லாம் அவர் செய்வாரா?"

"செய்வார் என்றுதான் நினைக்கிறேன்."

"அவர் அதைச் செய்துவிட்டால் அதன் பிறகு நாம் இருவருமே அவருடைய அடிமைகளாகி விடுவோம். ஏன், இளவரசியும் அடிமையாக வேண்டியதுதான்" வசந்தசேனை கூறினாள்.

"அப்படியானால் அப்படி நடக்க விடக்கூடாது" கேசவன் உறுதியுடன் கூறினான்.

"இதற்கு என்ன மாற்று என்பதை இளவரசிதான் சொல்லித்தர வேண்டும். அவருக்குத்தான் அது தெரியும்."

ஏழாம் நாளன்று இளவரசி கார்த்தியாயினி வந்தாள். இம்முறை அவள் மிகவும் இளமையாகி விட்டிருந்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் முன்னைவிட அழகாக - இளமையாக இருக்கிறேனா?" இளவரசி அவனிடம் கேட்டாள்.

அவள் கழுத்தில் கிடந்த மாலையில் ஒரு பதக்கம் இருந்தது. விஷ்ணுமாயா தகடு பொருத்தப்பட்ட பதக்கம். கேசவன் அதைக் கவனிக்கவில்லை.

28

இளவரசியின் கழுத்திலிருந்த செயினில் மறைந்திருந்த விஷ்ணுமாயா தகட்டிற்கு ஒரு மகத்தான சக்தி உண்டு.

இந்த இயந்திரத்தகடு கைவசமுள்ள ஆண், தான் விரும்பும் பெண்ணையும், பெண்ணானால் ஆணையும் ஒருபோதும் விட்டுப் பிரியாதபடி வசியப்படுத்தி வைத்திருக்க முடியும். இளவரசி இதை முன்பு எப்பொழுதோ படித்திருந்தாள். கேசவனை விட்டுப்பிரிவது என்பது அவளைப் பொறுத்தவரை ஒரு கடினமான பணியாக இருந்தது.

கிழக்குக்கோட்டை அரண்மனைக்கு இதற்கு முன்பு வந்துள்ள எத்தனையோ உடலழகும், வீர விளையாட்டுகளில் தேர்ந்தவர்களும் இளவரசியைத் திருப்திப்படுத்த முடியாமல் அந்த விஷயத்தில் தோல்வியடைந்திருந்தனர். அதனால் ஒவ்வொரு முறையும் இளவரசியை நெருங்கிய ஒவ்வொரு வீரனும் மரணமடைய நேரிட்டது. இளவரசியின் அளவுக்கு மீறிய உணர்ச்சிக் கொந்தளிப்பால் என்றே கூறலாம்.

தன்னுடைய விருப்பம் நிறைவேறாதபோது இளவரசி ஒரு பிசாசாகவே மாறி அவர்களைக் கொலையும் செய்து விடுவாள். இப்படியாக இளவரசியின் உள்ளத்தில் காம நெருப்பு தகித்து வளர்ந்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் எல்லா வகையிலும் தேர்ந்த கேசவன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் முதன்முதலாக இளவரசியிடமிருந்த நெருப்பை அணைக்கவும் செய்தான்.

வசந்தசேனையுடனான கேசவனது தொடர்பு தெரிந்துவிடவே இளவரசியால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இனி

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஒருபோதும் கேசவன் வேறு ஒருவரையும் தொடர்பு கொள்ளக்கூடாது என்று இளவரசி தீர்மானித்தாள். தொடர்ந்து, தான் கற்ற மந்திரத்தைப் பிரயோகிக்கவும் செய்தாள்.

தகட்டில் மந்திரத்தை எழுதி, இயந்திரம் வரைந்து ஷட்கோண மந்திரத்தில் க்ளீம் என்கிற காமபீஜத்தையும், அதைச்சுற்றி சாந்த்யா நாமத்தையும் மூலைப் பகுதிகளில் 'மோகினி ஸர்வ்வஜ்னம் மேவசம் குருகுரு வர்கா' என்கிற மோகினி மந்திரத்தையும் இரண்டிரண்டு எழுத்து வீதம் எழுதி, பூஜை செய்து பதக்கத்தில் அடைத்து அணியவும் செய்தாள்.

இனி ஒருபோதும் கேசவன் வேறு யாரையும் நினைக்கக்கூட மாட்டான் என்கிற நம்பிக்கையுடன்தான் இளவரசி அன்று வந்தாள்.

கேசவன் இளவரசியைப் பார்த்தான். அவள் புதுமையாகத் தெரிந்தாள். என்னவென்று புரியாத ஏதோ ஒரு புதுமை.

தனக்கு முன்பாக நிற்பது யார்?

ஒரு க்ஷத்ரிய குல இளவரசியல்லவா?

ஒரு காலத்தில் இந்த நாட்டை ஆண்ட மன்னர் பரம்பரையின் கடைசி வாரிசு!

தங்கச்சரிகை வைத்த புதிய உடைகளுடன் கழுத்தில் வைடூரியம் பதித்த மாலையும், கைகளில் புஷ்பராகம் பதித்த வளையல்களும் காலில் ஒலியெழுப்பும் சலங்கைகளும், இடையில் ஒட்டியாணமும் அணிந்திருந்தாள்.

கன்னக் கதுப்புகளில் செக்கர் வானத்தின் சிவப்பு மின்னியது. உதடுகளில் காமத் தேனூறும் ஈரக்கசிவு. கண்களில் கவிதை பிறக்கும் பார்வை. காமனின் கணை போன்ற புருவங்கள். கேசவன் குட்டியின் நரம்புகளின் ஊடாக இளவரசி கார்த்தியாயினி ஒரு மோக நதியாகப் பிரவகித்தாள்.

எல்லாவற்றையும் மறந்து... தான் இருக்கும் சுற்றுப்புறத்தையும் மறந்து... கனவில் ஆழ்ந்துவிட்டவனைப்போல் அவன் இளவரசியை நெருங்கினான். நெருங்கிய பின் அவளது உடலிலிருந்து மனதை

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

மயக்கும் ஏதோ ஒரு சுகந்தம் அவனுள் ஊடுருவி வழிந்தது. தாமரைப் பூக்களின் சுகந்தமோ என்னவோ? அல்லது புராணத்தில் பீமசேனன் கொண்டு வந்த சௌகந்திகப்பூவின் பரிமள வாசனையோ?

கேசவன் இளவரசியின் தோளைத் தொட்டான். அவள், அவனது கையைப் பற்றியபடி முன்புறம் நடந்தாள்.

உள்ளே அறுபத்து நான்கு மரத்துண்டுகளின் இணைப்பில் சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைத்த கட்டிலில் இளவரசி அமர்ந்தபோது, கேசவன் அவளை வியப்புடன் பார்த்துக்கொண்டே இருந்தான்.

"இப்பொழுது நான் எப்படி இருக்கிறேன்?" கடைக்கண்ணால் அவனைப் பார்த்தபடி அவள் கேட்டாள்.

"ஒரு மெழுகுச்சிலை மாதிரி."

"என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?"

"பிடிக்காமல் எப்படி?"

"எந்த அளவுக்குப் பிடித்துள்ளது?

"என்னை நான் விரும்புவதைவிட அதிகமாக."

"வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லையா?"

கேசவன் யோசித்துப் பார்த்தான். அவளுக்கு ஈடாக வேறு யாரும் அவன் மனதில் தோன்றவில்லை. நினைவு அலைகளுக்கிடையில் அவன் தேடினான். அங்கு தெளிவில்லாமல் ஒன்றிரண்டு பெண் உருவங்கள் தட்டுப்பட்டன. ஆனால், அவர்கள் யாரென்று அவனது ஞாபகத்தில் வரவில்லை.

"இல்லை, என்னால் வேறு யாரைப்பற்றியும் சொல்ல முடிய வில்லை" கேசவன் கூறினான்.

இளவரசிக்கு விஷயம் விளங்கியது. தன் கழுத்திலிருக்கும் மந்திரத்தகடு வேலை செய்யத் தொடங்கிவிட்டது. இனி மேல் கேசவன் ஒருபோதும் தன்னை விட்டுப் பிரியமாட்டான் என்கிற உறுதி தோன்றியது.

"ஏன் நின்றுகொண்டே இருக்கிறீர்கள்?" இளவரசி கேட்டாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"உங்களைப் பார்த்தபடி இப்படியே நின்று கொண்டிருக்கலாம் என்று தோன்றுகிறது."

"இப்படி வந்து உட்காருங்கள்."

கேசவன் கீழ்ப்படிந்தான். இருவரும் அங்கு அன்றைய இரவைக் கழித்தனர்.

இளவரசியின் கற்பனைகளும், கனவுகளும் பலித்த இரவு அது. எல்லா வகையிலும் அவளுக்குப் பொருத்தமான கேசவன், அவளை மகிழ்விப்பதற்காகவே வந்தவன் என்று அவளுக்குத் தோன்றியது.

விடியற்காலையில் கோழி கூவுவதற்கு முன்பே அந்த அறையிலிருந்து வெளியேறி அரண்மனையின் ஏதோ ஓர் இருண்ட நிலவறைக்குள் புகுந்து மறைந்துகொண்ட இளவரசி கார்த்தியாயினி நினைத்தாள். 'இன்னும் பதினைந்து வருட காலத்திற்குத் தனக்கு இந்த இளைஞனே போதும்."

மறுநாள் இரவும் அவள் வந்தாள்.

வாசல் வழியாக உள்ளே நுழைய விரும்பிய வசந்தசேனை, தின்னை வழியாக மேற்குப்புறமாக நடந்து சென்ற இளவரசியைப் பார்த்தாள். அருவருப்புடன் அப்படியே நின்றுவிட்டாள். இளவரசி கண்களுக்கு மறைந்தபிறகு ஒரு பட்டாம்பூச்சியின் வடிவமெடுத்து அவளுக்குப் பின்புறமாகப் பறந்து சென்று தென்புறமாக இருந்த அறை வழியாக நுழைந்து அங்கிருந்த விளக்கருகே அமர்ந்தாள்.

கீழே மேஜைமீது நிலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

படுக்கையில் யார் பார்த்தாலும் கண்ணை மூடிக்கொள்ளும் காட்சியைக் கண்டு, வசந்தசேனை வருந்தினாள். கேசவன் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறான் என்பது விளங்கியது. கேசவனின் ரத்த ஓட்டம் வடிவதுவரை இனி கேசவனுக்கு விமோசனமே கிடைக்காது என்பதைத் தெரிந்து கொண்டாள். 'எப்படிக் கேசவனை இதிலிருந்து விடுவிப்பது?' அவள் யோசித்தாள்.

இரவு நேரத்தில்தான் இளவரசி வருவாள். பகலில் தன்னால் எங்கும் வர முடியாது. பிறகு எப்பொழுதுதான் கேசவன் குட்டியிடம்

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

பேசுவது? கடைசியாக இரவின் மூன்றாம் ஜாமத்தில் இளவரசியை எப்படியும் உறங்க வைப்பது என்று தீர்மானித்தான். எனவே, அங்கிருந்தவாறே நித்ரா மந்திரம் ஜபித்தபடி அவள் இளவரசியின் தலைப்பகுதியைச் சுற்றி வந்தாள். சற்று நேரத்தில் மந்திரத்தின் வலிமையால் இளவரசி ஆழ்ந்த சுகமான உறக்கத்தில் லயித்தாள்.

இளவரசி முழுமையாக சுயநினைவிழந்து உறங்கத் தொடங்கி விட்டாள் என்று தெரிந்தபிறகு வசந்தசேனை தன்னுடைய சுய வடிவிற்கு மாறினாள். இளவரசியுடன் நெருங்கிப் படுத்திருந்த கேசவனைத் தொட்டு எழுப்பினாள்.

கண்களைத் திறந்து பார்த்த கேசவன் முன்பின் பழக்கமில்லாத வனைப் போல் அவளைப் பார்த்தான்.

"எழுந்து வாருங்கள்."

"யார் நீ?"

"ஐயோ கடவுளே. என்னைத் தெரியவில்லையா?" அவளது தொண்டையில் ஏதோ அடைத்தாற் போல் இருந்தது.

"யார் நீ? இங்கு எதற்கு வந்தாய்? படுக்கையறைக்குள் நுழைய உனக்கு எப்படித் தைரியம் வந்தது?" சரமாரியாகக் கேட்டான் கேசவன்.

"உன்னை உங்களுக்குத் தெரியவில்லையா?" அவள் மறுபடியும் கேட்டாள்.

"எனக்கு யாரையும் தெரிந்துகொள்ள வேண்டிய தேவை இல்லை. நீ இங்கிருந்து போனால் போதும்" கேசவனது குரல் உயர்ந்து வந்தது. .

வசந்தசேனை வாய்விட்டு அழுதாள். தான் இதயத்தில் வைத்து வணங்கும் கேசவனுக்கு, தன் காதலனுக்கு சொந்தக் காதலியையே அடையாளம் தெரியவில்லையாம்.

இவருக்காக நான் எவ்வளவு தியாகம் செய்திருக்கிறேன்? மோகினி வடிவம் தாங்கிக் கட்டிலில் தூங்கிக் கொண்டிருக்கிற இளவரசி என்கிற அரக்கியிடமிருந்து விலகி இருங்கள் என்று எத்தனை தடவை படித்துப் படித்துச் சொன்னேன்? அவளுடன்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

சல்லாபித்த எத்தனையோ பேர் இந்த அரண்மனையின் மேற்குப் புறத்திலுள்ள குளத்தில் கொல்லப்பட்டு வீசியெறிந்திருப்பதை எத்தனை தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன்?

கேசவன் இங்கு வந்தது ஒரு லட்சியத்திற்காக. பரமதுஷ்டனும், பிசாசு போன்றவனுமான பிரம்மதத்தன் நம்பூதிரியுடன் போராடி வெற்றி பெற வேண்டாமா? அதுவும் எப்படிப்பட்ட யுத்தம்? மாந்திரீக யுத்தம்.

'பாண்டவ மாலையின் ஏதோ ஒரு பகுதியில் மறைந்திருக்கிற துர்கா கோயிலிலிருந்து புனிதமான கிரந்தத்தை எடுத்து, மந்திரங்களைக் கற்று மாந்திரீக வல்லவனாக மாற வந்தவரல்லவா நீங்கள்? ஆனால், இப்பொழுது இந்த ராட்சசியுடன் ஒரு லட்சியமுமில்லாமல் படுத்துக் கொண்டிருக்கிறீர்களே?' அவள் மனம் ஓலமிட்டது.

"என்னைத் தெரியவில்லையா?" வசந்தசேனை மீண்டும் கேட்டாள்.

"தெரியவில்லை" நிர்த்தாட்சண்யமாகப் பதிலளித்தான் கேசவன்.

"நான் வசந்தசேனை வந்திருக்கிறேன்."

"அப்படிப்பட்ட பெயரை எங்கோ கேள்விப்பட்டதாக நினைவுக்கு வருகிறது. ஆனால், அப்படி யாரையும் எனக்குத் தெரியாது."

"இதே அறையில் நீங்கள் என்னுடன் ஒன்றாக உறங்கியதில்லையா? நாம் ஒன்றாகக் காட்டுக்குள் இருந்து மோகினி மந்திரம் ஜபித்து தேவியிடமிருந்து துர்கா கோயிலைப் பற்றிய விவரங்களைக் கேட்கவில்லையா. நாம் அந்த இடத்தைச் சென்று பார்த்தது ஞாபகம் வரவில்லையா?" வசந்தசேனை பழைய விஷயங்களைக் கூறி கேசவனின் கவனத்தைத் திருப்ப முயன்றாள்.

"இல்லை. நீ குறிப்பிட்ட எதுவும் எனக்கு நினைவில் இல்லை."

"கடவுளே. இவ்வளவு சீக்கிரம் எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களா?" நெஞ்சில் கை வைத்தபடி கேட்டாள் வசந்தசேனை.

"எனக்கு எதுவுமே நினைவில் இல்லை. நீ இங்கிருந்து உடனடியாகப் போவதுதான் நல்லது. இல்லாவிட்டால் நான் இளவரசியை எழுப்ப வேண்டி இருக்கும்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அவர் நல்ல தூக்கத்தில் இருக்கிறாரே?"

"ஓகோ, நீதான் அவரை உறங்க வைத்தாயா? உன்னை என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியும் இரு."

"ஐயோ, வேண்டாம். நான் போய் விடுகிறேன்" வசந்தசேனை ஜன்னல் வழியாக ஒரு மூடுபனி மாதிரி வெளியே வந்தாள்.

வந்தவள் நேராக மேலக்காவு மனையை நோக்கி விரைந்தாள். ஊர்மிளா படுத்திருக்கும் இடம் அவளுக்குத் தெரியும். கேசவன் குட்டியுடன் அவளுக்கு நட்பு ஏற்பட்ட பிறகு அவள் வழக்கமாகப் படுக்கும் இடம் தானிய அறைதான். அவன் எப்பொழுது வேண்டு மானாலும் வரக்கூடும் என்று அவளுக்குத் தெரியும்.

வசந்தசேனை தானிய அறையின் வாசலில் நின்றாள். தான் ஒரு மோகினி என்பதை ஊர்மிளா தெரிந்துகொள்ள வேண்டாமென்று அவள் விரும்பினாள். தெரிந்தால் ஒருவேளை பயத்தில் கூச்சல் போடலாம். அதனால் அவள் அந்தக் கதவை மெதுவாகத் தட்டினாள்.

ஊர்மிளா விழித்தாள். கதவைத் திறந்தாள். கேசவன் என்றுதான் முதலில் அவள் நினைத்தாள். ஆனால் அதற்கு பதிலாக ஒருபெண் நின்றிருந்தாள்.

"யார் நீங்கள்?" ஊர்மிளா கேட்டாள்.

"பெயர் வசந்தசேனை."

"அப்படி ஒருத்தரையும் எனக்குத் தெரியாதே."

"எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்கிறேன். இப்போது நான் உள்ளே வரலாமா?"

"வாருங்கள்" விளக்கை ஏற்றியபடியே அவள் கேட்டாள். "எதற்காக வந்திருக்கிறீர்கள்?"

"உங்களுக்குக் கேசவனைத் தெரியுமல்லவா?"

"அவர் எங்கே இருக்கிறார்?"

"அதைச் சொல்லத்தான் வந்திருக்கிறேன்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"சீக்கிரம் சொல்லுங்கள். அவருக்கு என்ன ஆயிற்று?"

"அதையெல்லாம் நான் பிறகு சொல்கிறேன். முதலில் நீங்கள் என்னுடன் கிழக்குக் கோட்டைக்கு வாருங்கள். வரமுடியுமா உங்களால்?"

"எப்பொழுது வரவேண்டும்?"

"இப்பொழுதே"

"இந்த இரவு நேரத்திலா?" சொல்லியபடியே ஊர்மிளா வெளியே பரந்துள்ள இருட்டை வெறித்துப் பார்த்தாள்.

29

வெளியே நிலவொளியும் இருட்டும் ஒன்றாக லயித்துக் கிடந்தன. உறக்கத்திலிருந்து சட்டென்று விழித்ததனால், அந்தக் காட்சி ஒரு கனவு போல் அவளுக்குத் தெரிந்தது.

விளக்கு வெளிச்சத்தில் தனக்கு எதிரே நிற்பவள் மனிதப் பெண்ணல்ல என்பது அவளுக்குப் புரிந்தது.

"இந்த இரவில் நாம் எப்படிப் போவது?" ஊர்மிளா மீண்டும் கேட்டாள்.

"நான்தான் உங்களை அழைத்துப் போகிறேன் என்கிறேனே. என் கையை நீங்கள் பிடித்துக்கொண்டால் போதும்" வசந்தசேனை வற்புறுத்தினாள்.

தனது காதலனான கேசவனைக் காண வேண்டுமென்கிற ஆசை முதலிடம் பெற்றதால், ஊர்மிளா வசந்தசேனையின் கையைப் பிடித்துக் கொண்டாள். சட்டென்று தான் மேற்புறமாக உயர்வதுபோல் ஊர்மிளாவுக்குத் தோன்றியது.

"கண்ணை மூடிக்கொள்ளுங்கள்" வசந்தசேனை கூறினாள். அவள் ஏற்கெனவே கண்களை மூடியிருந்தாள்.

ஊர்மிளாவுடன் வசந்தசேனை மிக விரைவாக அந்தரத்தில் பறந்து கிழக்குக்கோட்டை அரண்மனையின் முற்றத்தை அடைந்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நிலவொளியில் அமிழ்ந்து கிடந்த அந்தப் பழைய கட்டடத்தைக் கண்டபோது ஊர்மிளா வியப்படைந்தாள்.

"இது எந்த இடம்?" அவள் கேட்டாள்.

"வாருங்கள், சொல்கிறேன்."

வசந்தசேனை ஊர்மிளாவுடன் கேசவன் படுத்திருந்த அறையை அடைந்தாள். அங்கு நிர்வாணமான இளவரசி கார்த்தியாயினியுடன் படுத்திருந்த கேசவனைக் கண்டதும் வெட்கம் தோன்றிய ஊர்மிளா சட்டென்று பின்வாங்கினாள்.

"சே... என்ன காட்சி இது!" ஊர்மிளா அருவருப்புடன் கண்களை மூடினாள்.

வசந்தசேனை, இளவரசியின் அருகில் இருந்த துணியை எடுத்து அவள் உடம்பை மூடிவிட்டாள். பின்பு மறுபடியும் கேசவனை அழைத்தாள்.

"எழுந்திருங்கள், யார் வந்திருப்பது என்று பாருங்கள்" வசந்த சேனை கேசவனைத் தட்டி எழுப்பினாள். கேசவன் தூக்கக் கலக்கத்துடன் கண் விழித்தான். தனக்கு முன்பாக நின்றிருக்கும் பெண்களை உற்றுப் பார்த்தான். அறிமுகமில்லாதவர்கள் என்கிற உணர்ச்சி அவன் முகத்தில் தெரிந்தது.

"இது யாரென்றாவது உங்களுக்குப் புரிகிறதா?" வசந்தசேனை ஊர்மிளாவை முன்னால் நிறுத்திக்கொண்டு கேட்டாள்.

"இல்லை, எனக்குத் தெரியவில்லை. நீங்கள் எல்லாம் யார்?" கேசவன் சுவாரசியம் இல்லாதவனாகக் கேட்டான்.

"என்ன வார்த்தை சொல்கிறீர்கள்? உங்களுக்கு என்ன ஆகிவிட்டது?" வசந்தசேனை மீண்டும் கேட்டாள்.

"நீங்கள் இங்கிருந்து போகிறீர்களா இல்லையா? இல்லாவிட்டால் நான் உங்களை இங்கிருந்து வெளியேற்ற வேண்டியிருக்கும்" கேசவன் அவர்களை நெருங்கினான்.

ஊர்மிளாவுக்கும் ஒன்றும் பேசத் தோன்றவில்லை. துயரம் தாங்காமல் விழுந்துவிடுவோமோ என்று அவள் பயந்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

வசந்தசேனை யோசித்தாள். 'ஏதோ சதி நடந்திருக்கிறது. இளவரசி ஏதோ மாயாஜாலம் செய்து கேசவனை வசீகரித்திருக்கிறாள். இல்லாவிட்டால் ஒருபோதும் இப்படி நிகழ வாய்ப்பே இல்லை. நானும் அவரை விரும்பியவள்தானே. இந்த மோசமான சூழ்நிலையிலிருந்து எப்படியும் கேசவனை மீட்டாக வேண்டும்.'

எப்படியெல்லாம் யோசித்தபோதும் அவளுக்கு விஷயம் இன்னதென்று விளங்கவில்லை. இளவரசி ஒரு பெரிய மந்திரத்தைப் பயன்படுத்தியிருக்கிறாள் என்பது மட்டும் அவளுக்குப் புரிந்தது.

வசந்தசேனை, ஊர்மிளாவுடன் வெளியே வந்தாள்.

இரண்டு பேரும் கோட்டை வாசலில் சற்று நேரம் உட்கார்ந்தனர்.

"அந்தப் பெண்மணி யார்?" ஊர்மிளா கேட்டாள்.

"அவரைத் தெரியாதா? அவர்தான் கிழக்குக்கோட்டை இளவரசி கார்த்தியாயினி."

"அப்படி ஒருவர் வாழ்ந்திருந்ததாக அம்மா கூறியிருக்கிறார். நீங்கள் சொல்வது உண்மையா? இவர்தானா அது? அது எப்படி உண்மையாக இருக்க முடியும்?"

"உங்களது சந்தேகங்கள் எல்லாம் நியாயமானவைதான். அவர் மரணத்தை வென்றவர். மரணத்தை வெல்லும் மந்திர வித்தைகள் இளவரசிக்கு அத்துப்படி."

"அப்படியானால் கேசவனையும் அவர்தான் மயக்கி இருப்பாரோ?"

"அதுதான் நடந்திருக்கிறது."

"இதை எப்படி நாம் முறியடிப்பது?"

"அதை இனிமேல்தான் கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் எல்லாருக்கும் ஆபத்துதான்."

"நீங்கள் யார்?" ஊர்மிளா கேட்டாள்.

"நீங்கள் பயப்படாமல் இருப்பதானால் சொல்கிறேன். நான் ஒரு மோகினி."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"உண்மையாகவா?"

"பயம் தோன்றவில்லையா?"

"இல்லை."

"எப்படி பயம் தோன்றும்? மேலக்காவு மனையின் மகா மாந்திரீகனான பிரம்மதத்தன் நம்பூதிரியின் மருமகள் எதற்காக பயப்பட வேண்டும்?"

"சாதாரணமாகவே மோகினிகள் எங்களை ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் பிராமணர்கள் அல்லவா?"

வசந்தசேனைக்கு ஊர்மிளாவின்மீது மிகுந்த மதிப்பு தோன்றியது. 'ஒரு மாந்திரீக குடும்பத்தின் சரியான வாரிசுதான்.'

"நாம் வந்து இவ்வளவு பேசியும் அவள் ஏன் தூக்கத்திலிருந்து விழிக்கவில்லை என்பது தெரியுமா?"

"தெரியவில்லை."

"நான்தான் நித்திரை மந்திரம் ஓதி இளவரசியைத் தூங்க வைத்திருக்கிறேன். இப்போதைக்கு அவள் விழிக்க முடியாது. அது போகட்டும், கேசவனை நாம் எப்படிக் காப்பாற்றுவது?"

"இந்தச் சிக்கலிலிருந்து அவரை விடுவிப்பதற்கான மந்திரங்கள் எதுவும் உங்களுக்குத் தெரியாதா?"

"ஏதோ கொஞ்சம் தெரியும். ஆனால் அது போதாது."

"ஒன்று செய்யலாமா? மாமாவின் படுக்கையறையில் சில பனையோலைச்சுவடிகள் உள்ளன. விடியற்காலையில் காலைக் கடன்களை முடிப்பதற்காக வெளியே செல்லும் அவர் ஒரு நாழிகை நேரத்திற்குப் பிறகே திரும்புவார். அந்த நேரத்தில் இதற்கு உதவுவதுபோல் ஏதாவது ஓலைச்சுவடி அங்கு இருக்கிறதா என்று பார்க்கிறேன்."

"அப்படியானால் அதை விரைவில் செய்யுங்கள்."

ஊர்மிளாவை அவளது வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தபிறகு வசந்தசேனை திரும்பினாள். அதற்குள் இளவரசி விழித்து விட்டிருந்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் நன்றாக உறங்கிவிட்டேன் இல்லையா?"

"என்ன, இப்படி ஒரு தூக்கம்?"

"என்னவோ தெரியவில்லை."

அப்பொழுது தூரத்தில் எங்கேயோ ஓர் இரவுப்பறவை குரலெழுப்பியது. அதைக் கவனித்த இளவரசி கூறினாள்.

"ஏதோ ஒரு அபசகுனமாகத் தெரிகிறது."

"அப்படியென்றால்?"

"ஏதோ ஒரு மோசமான பூதம் அந்த வழியே வந்திருக்கிறது."

சட்டென்று நம்பூதிரியின் விஷயம் நினைவிற்கு வந்தவனாக, "மறுபடியும் எதையாவது அவர் அனுப்பியிருப்பாரா?" என்று கேட்டான் கேசவன்.

"இங்கு அப்படி யாரும் சுலபத்தில் வந்துவிட முடியாது."

"எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"மேலக்காவு நம்பூதிரிக்கு இந்த அரண்மனையின்மீது ஒரு கண். ஆனால், அது நடக்கக்கூடிய காரியமல்ல."

"ஆனால், மற்றவர்கள் சொல்வது வேறுவிதமல்லவா? இன்று உயிருடன் இருப்பவர்களிலேயே மிக அதிகமான மாந்திரீக சக்தி அவரிடம்தான் உள்ளது என்கிறார்களே."

"இருக்கலாம், ஆனால் அவர் என்னுடன் மோதும்போது விஷயம் தெரியும்."

இவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது தெற்குப் புறமிருந்த கதவு ஒருபக்கமாகத் திறந்திருந்தது. அதையொட்டி இருந்த ஜன்னல் அருகில் இருந்த மரத்தில் ஆந்தையொன்று அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது. அது அவர்களை கவனிப்பது போல் இருந்தது.

"மேலக்காவுமனை நம்பூதிரியை எதிர்க்க யாரால் முடியும்?" கேசவன் கேட்டான்.

"என்னால் முடியும். ஆனால் அந்த கிரந்தம் இங்கு இல்லாமல் போய்விட்டது."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"எந்தக் கிரந்தம்?"

"இந்த நாட்டை உருவாக்கியபோது துர்காதேவி பரிசளித்த கிரந்தம்."

"அதுதானே துர்கா கோயிலில் உள்ளது."

"ஆமாம்."

"அதை எடுக்க முடிந்தால்?"

"யாரால் முடியும்?"

"அதுவும் சரிதான்" கேசவன் கூறினான்.

கேசவன் எல்லாவற்றையும் மறந்துவிட்டிருந்தான். தான் எங்கிருந்து எதற்காக அங்கு வந்திருக்கிறோம். தன்னுடைய நோக்கம் என்ன என்பதுகூட அவனுடைய நினைவிலில்லை. எல்லாவற்றையும் அடியோடு மறந்துவிட்டிருந்தான்.

இப்பொழுது அவனது மனம் முழுவதிலும் இளவரசி கார்த்தியாயினி மட்டுமே நிறைந்திருந்தாள். அவளுடன் வாழ்வது மட்டுமே அவனது ஒரே லட்சியமாக இருந்தது. விஷ்ணுமாயா தகடு தன்னுடைய உச்சபட்ச வல்லமையைக் காட்டிய இளவரசிக்கும் அது புரிந்தது. அதை ஒருமுறை உறுதிப்படுத்திக் கொள்ள அவள் நினைத்தாள்.

"கேசவன், நீங்கள் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள்?" இளவரசி அவன் கண்களை உற்று நோக்கியபடி கேட்டாள்.

அவள் அவனுக்கு நேராக நின்றிருந்தாள். இருவருக்கு மிடையிலிருந்த விளக்கின் ஒளி இளவரசியின் கழுத்தில், மார்புப் பகுதிகளில் பதிந்திருந்தது. அங்கு ஒளி வீசியபடி தொங்கிய பதக்கத்தின் ஒளி கேசவனது நெஞ்சில் பிரதிபலித்தது. கேச வனின் மோக ஆவேசம் அதிகரித்தது. சட்டென்று பாய்ந்து தனக்கு முன்பாக நிற்கும் இளவரசியை வாரி அணைத் தான். அவள் மார்பிலும், உதட்டிலுமாக ஆவேசத்துடன் முத்தமிட்டான்.

"என்னை உங்களுக்கு இந்த அளவு பிடித்து விட்டதா?" இளவரசி கேட்டாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இந்த உலகத்தில் எல்லாவற்றையும்விட நான் உங்களைத்தான் அதிகம் விரும்புகிறேன்."

"நான் இதுவரையில் தூங்கிவிட்டேன். இன்னும் பொழுது விடிய வெகுநேரம் உள்ளது. எதற்காக விழித்திருக்க வேண்டும்" சொல்லிய படியே கேசவனைக் கட்டிலுக்கு இழுத்தாள்.

இந்தக் காட்சிகளை எல்லாம் பார்த்தபடியே மரக்கிளையில் அமர்ந்திருந்த ஆந்தை, அவர்கள் படுத்ததும் சிறகடித்துப் பறந்தது. விர்ரென்று பறந்து நேராக மேலக்காவு மனையை அடைந்தது.

தரையில் அதன் கால்கள் பதிந்தபோது அது பயங்கரமான ஒரு வடிவம் பெற்றது. நடு நெற்றியில் ஒற்றைக் கண்ணுள்ள ஓர் உருவமாக இருந்தது அது.

பிரம்மதத்தன் அந்த உருவத்திடம் கேட்டார்.

"என்ன பார்த்தாய்?"

"அந்த ராட்சசியுடன் அவன் சேர்ந்து படுத்திருக்கிறான்."

"உண்மையாகவா? மிகவும் நல்லது. இனிமேல் நான் எதையும் செய்ய வேண்டியதில்லை. எல்லாவற்றையும் அவளே கவனித்துக் கொள்வாள். நீ போகலாம்."

அந்த பயங்கர உருவம் அந்தரத்தில் கலந்து மறைந்தது.

பிரம்மதத்தன் தன் மனத்தை, வெகு தூரத்திற்குக் காலத்தை ஊடுருவி அனுப்பினார். ஐம்பது வருடங்களுக்கு முன்னால் இருந்த இளவரசியின் முன்பாகப் போய் அது நின்றது.

அன்று எங்கிருந்தோ வந்திருந்த ஓர் அரசகுமாரனை இதே விஷ்ணுமாயா தகட்டினால் வசியப்படுத்தி வைத்திருந்தாள். அவனது சக்தியும், இளமையும் தீருவது வரையில் அவனைப் பயன்படுத்தி, இறுதியில் அவனையும் கொன்று எறிந்தாள். இதோ, இப்பொழுது அதேபோல் ஒருவன் சிக்கியிருக்கிறான். இனி அந்த எதிரியை அழிக்கத் தான் எதையுமே செய்ய வேண்டியதில்லையென்று நம்பூதிரிக்குத் தோன்றியது.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

விடியற்காலையில் வழக்கம்போல் எழுந்து தமது காலைக் கடன்களை முடிக்க பிரம்மதத்தன் வெளியே வந்தார். அந்த நேரம் பார்த்து மாமாவின் அறைக்குள் ஊர்மிளா நுழைந்தாள்.

சுவரில் இருந்த அலமாரி ஒன்றில்தான் அவர் பனையோலைச் சுவடிகளை அடுக்கி வைத்திருந்தார். எரிந்து கொண்டிருந்த ஒரு நிலவிளக்குடன் அவள் அலமாரியை நெருங்கினாள். ஆனால் அலமாரியைப் பார்த்ததும் ஒருகணம் நடுங்கிப் பின்வாங்கினாள்.

ஓலைச்சுவடிகள் அடுக்கி வைத்திருந்த பகுதியில் அவற்றின் மீது படர்ந்தபடி உடலை இழையவிட்டு தங்க நிறப் பாம்பு ஒன்று படம் உயர்த்தியபடி இருந்தது.

என்ன செய்வது என்று தெரியாமல் ஊர்மிளா ஒரு விநாடி தயங்கினாள்.

30

ஓலைச்சுவடிகளில் உடலை நெளிய விட்டுப் படுத்திருந்த பாம்பைக் கண்டதும் அவள் பயப்படவே செய்தாள். ஆனால், எப்படியும் அங்கிருந்து ஓலையை எடுக்காமல் வேறு வழி இல்லை என்பதும் அவளுக்குத் தெரிந்தது.

"பயப்படத் தேவையில்லை. உனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளலாம்" மச்சில் ஒட்டிக் கொண்டிருந்த பல்லி கூறியது.

அதைக் கேட்டவுடன் தைரியமடைந்த ஊர்மிளா தன் கையை ஓலைச்சுவடியை நோக்கிக் கொண்டு போனாள். உடனே அந்த பாம்பு தனது உடலைக் குறுக்கி, அங்கிருந்து விலகி ஒரு மூலையில் சென்று படுத்துக்கொண்டது. உடனே அவள் ஒவ்வொரு ஓலைச்சுவடியாக எடுத்துப் பார்த்தாள். வசிய மந்திரம் எழுதப் பட்டிருந்த ஓலை தட்டுப்பட்டதும் அதை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு மற்றவற்றைப் பழைய இடத்திலேயே வைத்துவிட்டுத் தனது அறைக்குத் திரும்பினாள்.

அன்று இரவு வசந்தசேனை வருவாள் என்று அவளுக்குத் தோன்றியது. நள்ளிரவானபோது அதேபோல் அவள் வரவும் செய்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் சொன்னது கிடைத்ததா?"

"இது போதுமா?" என்றபடி ஒரு பழைய ஓலைச்சுவடியை அவளிடம் கொடுத்தாள் ஊர்மிளா.

வசந்தசேனை அதை வாங்கிப் பார்த்தாள். ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே வந்தபோது, எதேச்சையாக விஷ்ணுமாயா மந்திரம் எழுதியிருந்த சுவடி கண்ணில் தட்டுப்பட்டது. அவள் அந்த மந்திரத்தை வாசித்தாள். அதற்கான இயந்திரம் வரைந்திருப்பதையும் கவனித்தாள்.

அப்படியானால் இதுதான் விஷயம் என்பது புரிந்துவிட்டது. ஆனால், இளவரசி இதைத் தன் உடம்பில் எங்கே வைத்திருக்கிறாள் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். அதை மட்டும் செய்துவிட்டால், கேசவனைக் காப்பாற்றி விடலாம் என்கிற நம்பிக்கை தோன்றியது.

ஆனால், அது எப்படிச் சாத்தியம்? மந்திரவாதியாகவும் விளங்கும் இளவரசியின் உடலைத் தொட வசந்தசேனையால் ஒருபோதும் முடியாது. உடனே இது தொடர்பான பழைய சம்பவம் ஒன்று அவளுக்கு நினைவு வந்தது. அதை நினைத்தபோதே அவள் உடல் நடுங்கியது.

ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு நிருத்தாலங்கோட்டு மோகினி கோயிலில் அப்பொழுது வசந்தசேனை வசித்திருந்தாள். அன்று வசந்தசேனை வனதுர்காவின் ஏவலாளாக இருந்தாள்.

மந்திரங்களில் தேர்ந்த இளவரசி கார்த்தியாயினி நரபலி வழங்கி தேவியை மகிழ்ச்சிப்படுத்த கனகதுர்கா இயந்திரத்தை வசப்படுத்த முயன்றாள்.

அந்த இயந்திரத்தை அணிந்து கொண்டால், அணிந்திருப் பவரது எதிராளிகள் நல்லவர்களாக இருந்தாலும், கெட்டவர்களாக இருந்தாலும் வேருடன் அழிந்து போவார்கள். இதனால் நல்லவர் களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று நினைத்து இளவரசியின் நரபலியைத் தடைசெய்ய முயன்றாள் வசந்தசேனை.

நரபலிக்காக தான் கொண்டு வந்திருந்த கன்னிப்பெண்ணைக் குளித்துவிட்டு வரும்படி அனுப்பினாள் இளவரசி. அப்போது

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

வசந்தசேனை அப்பெண்ணைக் காப்பாற்றி விட்டாள். குளிக்கப்போன பெண் வரவில்லையே என்பதை ஞானதிருஷ்டி மூலம் அறிந்த இளவரசி, வசந்தசேனைதான் அதற்குக் காரணம் என்பதை அறிந்தாள். உடனே அவளைப் பந்தனம் செய்து அடக்கி விட்டாள். கேசவன் வந்தபிறகுதான் அதிலிருந்து வசந்தசேனைக்கு விமோசனம் கிடைத்தது. இப்படிப்பட்ட இளவரசியை நெருங்க தைரியமில்லாத வசந்தசேனை குழம்பினாள்.

"ஏன் என்னவோ போல் இருக்கிறீர்கள்?" ஊர்மிளா கேட்டாள்.

"இந்த இயந்திரத்தை இளவரசி தன் உடம்பில் அணிந்திருக்கிறார் என்பது உண்மைதான். ஆனால், அதை எப்படி அப்புறப்படுத்துவது என்று யோசிக்கிறேன்."

"கேசவன் நினைத்தால் அது நடக்காதா?"

"அது எப்படி முடியும்? கேசவன் இந்த மந்திரத்தின் சக்தியில் அகப்பட்டிருக்கிறார். இது அவள் உடம்பில் இருப்பதையே அவரால் இப்போது புரிந்துகொள்ள முடியாது."

"அப்படியானால் யார் அதை அகற்றுவது?"

"அதைப் பற்றித்தான் நான் யோசிக்கிறேன்."

என்னதான் யோசித்தாலும் இருவருக்கும் எதுவும் பிடிபட வில்லை.

"இப்பொழுது என்ன செய்வது? அந்த நல்ல மனிதரின் ஆயுள் வீணாகக் கழியுமே" வசந்தசேனை கூறினாள்.

அன்று இரவு முழுவதும் இருவரும் மாறிமாறி யோசனை செய்தும் கடைசியில் எந்த வழியும் புலப்படவில்லை.

பிரம்மதத்தன் நம்பூதிரி மீண்டும் தம்முடைய கன்னிப்பலியைப் பூர்த்தி செய்யும் முயற்சியில் இறங்க விரும்பினார். இன்னும் ஒரே ஒரு பெண்ணைப் பலி கொடுத்தால், தான் எதிர்பார்க்கும் எல்லா சக்திகளும் கைக்கு வந்துவிடும். எனவே, நாற்பத்தொன்றாவது பலியைப் பற்றி யோசிக்கத் தொடங்கினார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

காரிய தர் ராவுண்ணியார் வழக்கம்போல வந்து சேர்ந்தார். நம்பூதிரி அவரிடம் கேட்டார்: "என்ன ராவுண்ணியாரே, போன காரியம் ஒன்றும் பழமாகவில்லைபோல் இருக்கிறதே."

"நான் முயற்சித்துக் கொண்டுதான் இருக்கிறேன்."

"அப்படிச் சொன்னால் காரியம் நடக்குமா? இதற்கெல்லாம் கால தாமதம் கூடாது என்பது தெரியும்தானே?"

"இது என்ன, சட்டென்று செய்யக்கூடிய காரியமா? எல்லாம் சரியாகப் பொருந்தி உள்ளதா, நம்பலாமா, என்றெல்லாம் கவனிக்க வேண்டாமா?"

"அதுவும் கவனிக்க வேண்டிய விஷயம்தான். இதில் எதுவும் குறை வந்துவிடக்கூடாது. அப்படி ஏதாவது குறை ஏற்பட்டால் எல்லாமே ஆபத்தில் கொண்டு போய்விடும்."

"அதனால்தான் காலதாமதமாகிறது. இப்பொழுது நான் வந்திருப்பதும் ஒரு நல்ல செய்தி சொல்வதற்காக."

"சீக்கிரம் சொல்லும்."

"நம்முடைய குஞ்சன் நாயருக்கு ஒரு மகள் இருக்கிறாள். பதினைந்து வயதாகிறது. பார்வைக்கு நல்ல அழகு. பார்த்தால் யாரும் பத்தொன்பது வயது மதிப்பார்கள். அப்படியொரு வளர்ச்சி."

"உண்மையா? அப்படியானால் இதை ஏன் முன்பே சொல்லி யிருக்கக் கூடாது?"

"இதுவரை சொல்லாமல் இருந்தது வேறு எதற்காகவுமில்லை. அவர் மனைவியை ஒதுக்கிவிட்டுப் போயிருந்தார். போகும்போது தன் மகளையும் கூடக் கொண்டு போயிருந்தார். இப்பொழுது அம்மாவும், பெண்ணும் பழையபடி ஒன்றாகியிருக்கிறார்கள். வெகு நாட்கள் கழித்து மனைவியைப் பார்த்த குஞ்சன் நாயர் கடைசியில் வந்து ஒட்டிக் கொண்டார். விஷயம் இதுதான்."

"இப்பொழுதுதான் அந்தப் பெண்ணைப் பார்த்தீர் என்று சொல்லும்."

"ஆமாம், நேற்றுதான் அவர்கள் வீட்டிற்குப் போயிருந்தேன்."

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"சரி. அவளை எப்படி நம் வழிக்குக் கொண்டு வருவது? குஞ்சன் நாயர் மோசமானவர். எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

"அதெல்லாம் எனக்கு ஒருபொருட்டே இல்லை. எப்படியும் நான் அவளை இங்கு கொண்டு வருகிறேன்."

"காரியம் நடந்தால் சரி."

ராவுண்ணியார் விடைபெற்றுப் போனவுடன் பிரம்மதத்தன் நம்பூதிரி, குஞ்சன் நாயரது மகளை மனதில் கற்பனை செய்து பார்த்தார். பதினைந்து வயது. எந்த ஆணும் இதுவரை தொடாத ஒரு பெண். கை படாத பூ. இப்படி யோசனை செய்தபடியே ஓலைச்சுவடிகள் வைத்திருந்த அறைக்குச் சென்றார். அங்கே ஏட்டுச்சுவடிகள் வரிசை கலைந்திருப்பது தெரிந்தது.

'என்ன இது? இதை யார் கலைத்திருப்பார்கள்?'

உடனே ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்த்தார். ஒன்றே ஒன்று மட்டும் காணவில்லை. நம்பூதிரி வியப்புடன் அங்கும் இங்கும் பார்த்தார்.

முக்கியமான வசீகரண மந்திரங்கள் உள்ள ஓலைச்சுவடி காணாமல் போயிருக்கிறது. அது உண்மையிலேயே காணாமல் போயிருந்தால் சிக்கல்தான். யாரைக் கூப்பிட்டுக் கேட்பது? போகட்டும். இந்த அறைக்குள் யார் நுழைய முடியும்? யார் நுழைந்திருப்பார்கள்?

தனக்கு மிகவும் தேவைப்படும் ஓர் ஓலைச்சுவடி காணாமல் போயிருப்பதை அறிந்தவுடன் பிரம்மதத்தனுக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. பரபரவென்று எங்கெல்லாமோ தேடினார். என்னதான் தேடியும் அதுமட்டும் கிடைக்கவில்லை. ஏமாற்றத்துடன் மனங் குமைந்து நின்றிருந்தபோது சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. 'ஒருவேளை ஊர்மிளா இதற்குள் வந்திருப்பாளோ?'

சாதாரணமாக அவள் இந்த அறைக்குள் நுழைவதில்லை. பெண்கள் யாரும் இந்த அறைக்குள் நுழையக்கூடாது என்று அவர் தடை விதித்திருந்தார். 'எதற்கும் அவளை அழைத்து விசாரித்தால் என்ன?' என்று தோன்றியது. உடனே "ஊர்மிளா!" என்று இடிக்குரலில் அழைத்தார். இரண்டு மூன்று தடவை அழைத்தும் பதில் கிடைக்க

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

வில்லை. மறுபடியும் குரல் கொடுத்தபோது அவள் மெதுவாக வராந்தாவிற்கு வந்து "என்ன மாமா?" என்றாள்.

"நீ எனது அறைக்குள் நுழைந்தாயா?" அதே இடிக்குரலில் கேட்டார்.

"இல்லையே" அவள் பதறியபடி பதில் கூறினாள்.

"வேறு யார் நுழைந்தது?"

"தெரியாது."

"சரி, நீ போகலாம்."

அவள் அப்படியெல்லாம் தன் அனுமதியின்றி அந்த அறைக்குள் நுழையமாட்டாள் என்று நம்பூதிரி சமாதானமடைந்தார். சரி, இந்தத் திருட்டை எப்படிக் கண்டுபிடிப்பது என்று யோசித்தார். அப்படி யார் இந்த அறைக்குள் நுழைந்து எடுத்திருக்க முடியும்? என்கிற கேள்வி அவர் மனதைக் குடைந்தது.

கடைசியாகக் கிட்டு ஆசானை அழைத்து சோதிடத்தில் பார்த்து விடுவது என்று முடிவு செய்தார். மாந்திரீகமும், ஜோதிடமும் வேறுவேறு என்பதால் நம்பூதிரி அதையே முடிவு செய்தார்.

அன்று நள்ளிரவானபோது வசந்தசேனை, ஊர்மிளாவின் அறைக்குள் வந்தாள்.

"இப்பொழுதும் நான் அவரைப் பார்த்துவிட்டுத்தான் வருகிறேன். எப்படியாவது அவரைக் காப்பாற்றியே தீரவேண்டும்" வசந்தசேனை கூறினாள்.

ஊர்மிளா தனது பெட்டியிலிருந்து அந்த ஓலையை எடுத்து வசந்தசேனையிடம் நீட்டினாள்.

"என்னிடம் தரவேண்டாம். அதை நீங்களே வைத்திருங்கள்."

"இதைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தும் எனக்கு எதுவும் விளங்க வில்லையே."

"நான் அதை வாங்கக்கூடாது. நீங்களே வைத்திருப்பதில் தவறில்லை."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஏன் நீங்கள் வாங்கக்கூடாது?"

"நான் யாரென்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே?"

"ஒரு மந்திரவாதி என்றுதான் நினைத்தேன்."

"அப்படியே நினைத்துக் கொள்ளுங்கள். அதில் தவறு இல்லை."

"முதலில் மோகினி என்று கூறினீர்களே."

"உங்களுக்குத் தைரியம் உள்ளதா என்று சோதிக்க அப்படிக் கூறினேன்."

"என் மாமா மகாமந்திரவாதியாயிற்றே. எனக்குப் பயம் இருக்குமா? என்னுடைய சிறு வயதில் மாமாவின் பூஜை அறையை ஓர் ஓட்டைவழியாக எட்டிப் பார்த்துக்கொண்டே இருப்பேன். அப்பொழுது நான் பார்த்தவற்றையெல்லாம் மற்றவர்களிடம் சொன்னால் நம்பக்கூட மாட்டார்கள்."

"அப்படி என்னவெல்லாம் பார்த்திருக்கிறீர்கள்?"

"மோகினிகளைப் பார்த்திருக்கிறேன்."

"பார்ப்பதற்கு அவர்கள் எப்படி இருந்தார்கள்?"

"மிக அழகாக, தேவதைகளைப் போல் இருந்தார்கள்."

"நான் எப்படி இருக்கிறேன்?"

"அந்த மாதிரித் தெரியவில்லை."

இதைக்கேட்டு வசந்தசேனை சிரித்தாள்.

"சாதாரணமாக இந்த நேரத்தில் கேசவனும் இளவரசியும் அங்குதான் இருப்பார்கள். தாமதிக்காமல் நாம் இங்கிருந்து புறப்பட்டோமானால், இளவரசியின் உடம்பிலிருந்து அந்தத் தகட்டை உடனே எடுத்துவிடலாம்" வசந்தசேனை கூறினாள்.

"நானும் வரவேண்டும் என்கிறீர்களா? ஏதாவது ஒரு காரணத்தினால் அங்கிருந்து உடனடியாகத் திரும்பி வரமுடியாவிட்டால் சிக்கல் அதிகமாகிவிடும். அது ஆபத்தும் கூட."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

யோசித்தபோது வசந்தசேனைக்கும் அது உண்மை என்றே தோன்றியது. 'நான் எப்படியாவது தப்பித்து விடலாம். ஊர்மிளா மனிதப் பெண். இவள் உண்மையில் யாரென்று இளவரசி அடையாளம் தெரிந்துகொண்டால், ஒருவேளை இவளுக்கு ஏதேனும் ஆபத்தை ஏற்படுத்தி விடக்கூடும். அத்துடன் கேசவனது திட்டங்கள் எல்லாம் பாழாகிவிடும். ஆகவே, தனியாக நான் மட்டும் செல்வதுதான் நல்லது.'

விஷ்ணுமாயா மந்திரம் உள்ள ஓலைச்சுவடியைப் பார்த்து அந்த மந்திரத்தை மனப்பாடம் செய்துகொண்டு கிழக்குக் கோட்டை அரண்மனையை நோக்கிப் போனாள் வசந்தசேனை.

அங்கே கேசவன் அந்த அறையில் இருக்கவில்லை. இளவரசி மட்டும் கட்டிலில் அலங்கோலமாகப் படுத்திருந்தாள்.

தன்னை ஒரு காலத்தில் சிறைப்படுத்திய இளவரசியின் முன்பாக வசந்தசேனை நின்றாள்.

31

கேசவனுடன் இன்பமாகச் செலவழித்த நிமிடங்களின் இனிமை, இன்னும் அந்த முகத்திலிருந்து வடிந்திருக்கவில்லை. கன்னக் கதுப்புகள் சிவந்திருந்தன. அவளுடைய நீண்ட மூக்கில் வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன. தலைமுடி முகத்திலும் மேற்புறமுமாகக் கலைந்திருந்தது.

வசந்தசேனை இளவரசியின் ஒவ்வோர் அங்கத்தையும் கூர்மையாக கவனித்துக் கொண்டே வந்தாள். சட்டென்று அவளது பார்வை இளவரசியின் கழுத்தில் கிடந்த வட்ட வடிவமான பதக்கத்தின் மேல் பதிந்தது. அந்தத் தங்கப்பதக்கம் அவளது கண்களைப் பிடித்து இழுத்தது. அதனுள் அந்த விஷ்ணுமாயா இயந்திரத் தகடு இருப்பது தெரிந்தது. எப்படிப்பட்ட ஆடவனையும் மோக வளையத்திற்குள் வீழ்த்திவிடக் கூடிய அதையே அவள் சற்று நேரம் பார்த்தபடி நின்றிருந்தாள்.

அதை எப்படி எடுப்பது? இளவரசியின் உடம்பைத் தொடாமல் அதை எடுக்கமுடியாது. அதே நேரம் இளவரசி விழித்துக் கொண்டால்

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

தனது வாழ்க்கையே முடிந்துவிடும். ஆனால், அந்தப் பதக்கத்தில் இருப்பது விஷ்ணு மாயா இயந்திரம்தான் என்பதை அறிந்த பிறகும் அதை எடுக்காத பட்சத்தில் கேசவன் தொலைந்தான் என்பது திண்ணம். அத்துடன் அவனுடைய ல்ட்சியங்களும் சமாதியாகி விடும். எத்தனையோ வீராதி வீரர்களை, சூராதி சூரர்களை அடிபணியச் செய்து அவர்களை இளவரசி அழித்து எறிந்ததுபோலவே கேச வனையும் எறிந்து விடுவாள். அப்படிப்பட்டவள் கார்த்தியாயினி.

வசந்தசேனை பல வழிகளை யோசித்தாள். இறுதியாக எது வந்தாலும் வரட்டும் என்று அந்தப் பதக்கத்தை எடுக்கத் தீர்மானித்தாள்.

இளவரசியின் தலைக்கு நேர் பின்புறம் சென்று நின்றாள். பதக்கம் மார்பின் மையத்தில் பதிந்து கிடந்தது. பதக்கத்தை எடுப்பதானால் செயினுடன்தான் எடுக்கவேண்டும். கொக்கி கழுத்தின் இடதுபுறம் இருக்க வேண்டும். வசந்தசேனை உற்றுக் கவனித்தாள். கொக்கி விலகியிருந்தது. எங்கேயோ இழுபட்டு கொக்கி விலகியிருக்க வேண்டும் என்று நினைத்தாள். சமீபத்தில்தான் அது நடந்திருக்க வேண்டுமென்றும் தோன்றியது.

வசந்தசேனை மெதுவாகச் செயினை விடுவித்தாள். கழுத்தின் வலதுபுறமாக அதை உருவினாள். நெஞ்சிலிருந்து பதக்கம் உயர்ந்து மேலேறியபோது இளவரசி தூக்கத்திலேயே புன்னகைத்தாள். ஆனால், விழிக்கவில்லை. செயின் வசந்தசேனையின் கைக்கு வந்தது. உடனே அத்துடன் மேலக்காவு மனையை அடைந்தாள்.

"இதுதான் அந்த மாலை. இதை இனிமேல் நீங்கள் கழுத்தில் போட்டுக் கொள்ளுங்கள். எந்தக் காரணம் கொண்டும் இதை அழிக்கக்கூடாது. இப்படியே உங்களைக் கேசவன் காண வேண்டும்" என்றபடி வசந்தசேனை, அதை ஊர்மிளாவின் கழுத்தில் அணிவித்தாள்.

மறுநாள் கிட்டு ஆசான் மேலக்காவு மனையை அடைந்தார்.

"ஆசானே, என்னுடைய பூஜை அறையிலிருந்து ஒரு பொருள் காணாமல் போயிருக்கிறது. யாரோ அறைக்குள் நுழைந்திருக்கிறார்கள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நுழைந்தது ஆணா, பெண்ணா என்பதை மட்டும் கண்டுபிடித்துச் சொல்லுங்கள். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார் நம்பூதிரி அவரிடம்.

கிட்டு ஆசான் யோசித்தார்.

'கொஞ்சம் யோசிக்க வேண்டிய விஷயம். பூஜையறையில் நுழைந்தவரை நம்பூதிரி வெறுமனே விடமாட்டார். இந்த வீட்டில் பெண் என்பது அவருடைய மருமகள். அவள் கேசவனது காதலி. அவள் ஒருவேளை நுழைந்திருந்தால், அது கேசவன் சொன்னதற்காகத்தான் இருக்கும். அதனால் பெண்தான் நுழைந்தாள் என்றால் அவர் தன் மருமகளைக் கொல்வது நிச்சயம். தன்னால் அந்தப் பெண்ணின் வாழ்வு முடிவுபெறக் கூடா'தென்று அவர் தீர்மானித்தார்.

சோழிகளைப் பரப்பினார் கிட்டு ஆசான். பிரம்மதத்தன் எதிரில் உட்கார்ந்திருந்தார். அவர் கிட்டு ஆசானின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். சட்டென்று ஆசானின் மனதில் ஓர் உருவம் தெரிந்தது. ராவுண்ணியார்! அவரைச் சிக்க வைத்துவிட்டால் என்ன?

அந்தத் துரோகியால் எத்தனை பேர் பலியாகியுள்ளனர். இந்த முறை அவரது கழுத்திற்கே சுருக்கு போட்டால் என்ன?

"பார்த்தவரையில் அறையில் நுழைந்தது ஆண் என்றே தெரிகிறது."

"என்ன சொன்னீர்? ஆணா? அடையாளம் பாரும்" நம்பூதிரியின் மனம் கேசவனை எண்ணியது. ஏற்கெனவே இந்த வீட்டிற்கு அவன் ஒருமுறை வந்திருந்தானே! ஒருவேளை அவனேதானோ?

"இளைஞனா?" நம்பூதிரி கேட்டார்.

"இல்லை, சற்று வயதானவர்"

"ஒருவேளை என்னையேதான் சொல்கிறீரா?"

"இல்லை. கொஞ்சம் மெலிந்த உருவமாகத் தெரிகிறது. கொஞ்சம் உடம்பு வளைந்ததுபோல் தெரிகிறது."

"பேரைச் சொல்ல முடியுமா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"பார்க்கிறேன்."

நம்பூதிரி ஆவலுடன் காத்திருந்தார்.

"யாராக இருக்கும்?"

"விஷ்ணுவின் ஆறாவது அவதாரத்தின் பெயர் அது என்று குறிப்பு காட்டுகிறது."

"யார் ராமனா? யாரது ராமன்? ராமனுண்ணி, ராவுண்ணியாரா?" நம்பூதிரியின் கண்களில் ரத்தச்சிவப்பு ஏறியது.

"என்ன கிட்டு ஆசானே, நீங்கள் சொல்வது சரிதானா? ராவுண்ணியார் என் பூஜையறைக்குள் நுழைவாரா? அவருக்கு அவ்வளவு தைரியம் ஏது?"

அடுத்தபடியாக என்ன சொல்வதென்று யோசித்தார் கிட்டு ஆசான். கடைசியாக ஒரு போடு போட்டு வைத்தார். "இந்தக் காலத்தில் யாரைத்தான் நம்புவது? மந்திர கிரந்தம் ஏதாவது காணாமல் போய்விட்டதா?"

"ஆமாம், ஒரே ஒரு கிரந்தத்தைக் காணவில்லை."

"அப்படியானால் அவராக இருக்கும். உங்களுடனேயே இருக்கிறார். எதையாவது கொஞ்சம் நாமும் கற்று வைக்கலாமே என்று நினைத்திருக்கலாம்."

"முக்கியமான பல மந்திரங்கள் அதில் உள்ளன. அதையெல்லாம் யார் அவ்வளவு துல்லியமாக ஞாபகம் வைத்திருக்க முடியும்? தேவைப்படும்போது ஒரு புரட்டுப் புரட்டித்தான் ஞாபகப்படுத்திக் கொள்வது வழக்கம்."

"எஜமான், ஒரு விண்ணப்பம்". என்றார் கிட்டு ஆசான் பவ்யமாக.

"என்ன?"

"நான்தான் இதை வெளிப்படுத்தினேன் என்று வெளியே தெரிய வேண்டாம்."

"அது ரகசியமாகவே இருக்கும். உங்களது உதவி மீண்டும் அடிக்கடி தேவைப்படலாம்" நம்பூதிரி உறுதி கூறினார்.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் குறிப்பிட்டது அதையல்ல."

"வேறு என்ன?"

"ராவுண்ணியார் உங்கள் காரிய தர். நானோ அந்நியன். அதனால் நான்தான் கண்டுபிடித்தேன் என்று நீங்கள் அவரிடம் சொல்லி விடுவீர்கள்."

"இல்லை, சொல்லவே மாட்டேன். சொன்னால் அது சொன்ன வார்த்தைதான். இந்தாரும்... இதை வைத்துக் கொள்ளும்" நம்பூதிரி இரண்டு வெள்ளி நாணயங்களைத் தந்தார்.

அதைப் பெற்றுக் கண்களில் ஒற்றியபடியே ஆசான் வெளி யேறினார்.

அங்கிருந்து புறப்பட்ட கிட்டு ஆசான் நேராகச் சென்று நின்றது கிழக்குக் கோட்டை அரண்மனையில்தான். கேசவன் படியிறங்கி வருவதை அவர் கண்டார். தேடிய மூலிகை காலில் பட்டதுபோல் நின்றார்.

"என்ன ஆசானே, எப்படி இருக்கிறீர்கள்? உங்களைப் பார்த்து வெகு நாட்களாகிவிட்டதே..." கேசவன் கேட்டான்.

"நான் இப்பொழுது மேலக்காவு மனையிலிருந்து வருகிறேன். ஒரு சோதிடம் பார்க்க வேண்டியிருந்தது."

"உண்மையாகவா? என்ன விசேஷம்?" கேசவன் விசாரித்தான்.

ஆசான் வாசலருகில் அமர்ந்தார். நடந்த எல்லாவற்றையும் விவரித்தார். "ஆனால் ஓலையை எடுத்துச் சென்றவள் ஒரு பெண். அதுவும் அவரது மருமகளேதான்."

"உண்மையா? அது என்ன கிரந்தம் ஆசானே?"

"ஏதோ இயந்திரங்கள் வரைந்திருக்கிற கிரந்தமாம்."

"ஊர்மிளாவுக்கு அது எதற்கு?" கேசவன் யோசித்தான்.

"யாருக்குத் தெரியும்?" ஆசான் கூறியப்டி ஒரு பீடியைப் பற்ற வைத்தார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் உங்களுக்காகவே காத்திருக்கிறேன். சில நாட்களாக நான் ஏதோ ஒன்றில் சிக்கிவிட்டிருந்தேன். நேற்று இரவு நான் அதிலிருந்து விடுபட்டேன்" கேசவன் கூறினான்.

"என்ன விஷயம் அது?" ஆசான் கேட்டார்.

"இந்த இளவரசியிடம் அகப்பட்டுக் கொண்டேன். என்னவென்று சரியாகத் தெரியவில்லை. எல்லாரையும் நான் மறந்தே போனேன். ஊர்மிளாவின் முகம்கூட மனதில் தோன்றவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். எப்பொழுதும் இளவரசி என் அருகிலேயே இருக்க வேண்டும்; அவளுடனேயே சதா பேசிக் கொண்டிருக்க வேண்டும், ஒவ்வொரு தடவை நான் பார்க்கும் போதும் அவள் அழகியாய், மிக அழகியாய் மாறிக்கொண்டிருந்தாள். வேறு எதையுமே யோசிக்க முடியாமலிருந்த நான். நேற்றுதான் எல்லாவற்றையும் திரும்பப் பெற்றேன்."

"அப்படியானால் இளவரசி உங்களை வசியப்படுத்தி வைத்திருந்தாள் என்று தெரிகிறது."

"அது எப்படி முடியும் ஆசானே?"

"நான் உள்ளே வருகிறேன். விஷயம் என்னவென்று சரியாகக் கணித்தே பார்த்து விடலாம் என்ன?"

ஆசான் உள்ளே வந்து சோழிகளைப் பரப்பினார். இம்முறை உண்மையைக் கண்டறிவதுதான் லட்சியம். ஆசான் எல்லாவற்றையும் உள்ளபடி விளக்கினார்.

"இளவரசியின் கழுத்தில் ஒரு புதிய சங்கிலி கிடப்பதை நான் பார்த்த ஞாபகம் வருகிறது. பிறகு அது காணாமல் போய்விட்டது."

"அதுதான் சங்கதி. அதில் நான் முன்பு குறிப்பிட்ட வசிய மந்திரத்தகடு இருந்திருக்கும்."

"அப்படியானால் அது எப்படிக் காணாமல் போனது?"

"யாருடைய கழுத்திலாவது இருக்கலாம்."

அன்று இரவு கேசவன் மேலக்காவு மனையை அடைந்தான். ஊர்மிளாவை சந்தித்தான். எண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில் அவளது கழுத்தில் பளபளக்கும் சங்கிலியைக் கண்டான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இது எப்படி உனக்குக் கிடைத்தது?" கேசவன் கேட்டான்.

ஊர்மிளா உண்மையைச் சொன்னாள்.

"உண்மை எதுவாக இருந்தாலும் சரி, நான் உன்னைக் காதலிக்க இந்தச் சங்கிலி தேவையே இல்லை. இதை அவிழ்த்துப் பெட்டியில் வைத்துவிடு. உன் மாமா பார்த்து விட்டால் வீணான சிக்கல் ஏற்படும்."

"உண்மைதான்" என்றபடி அவள் அதைக் கழற்றிப் பெட்டியில் வைத்தாள்.

ஒரு வாரமாகப் பார்க்காமல் இருந்த ஆவேசம் ஊர்மிளாவிற்குள் எரிந்து தகித்துக் கொண்டிருந்தது. அவள் கேசவனைக் கட்டிலுக்கு அழைத்துச் சென்றாள். அப்பொழுது வெளியே ராவுண்ணியாரின் பேச்சுக்குரல் கேட்டது.

"ராவுண்ணியாரே, நீங்கள் என் பூஜையறைக்குள் நுழைந்தீரா இல்லையா?" நம்பூதிரி கேட்டார்.

"சத்தியமாக நான் நுழையவில்லை எஜமான்" ராவுண்ணியார் உயிருக்கு பயந்து அலறினார்.

"வேறு யார் நுழைந்தது?"

"எனக்குத் தெரியாது எஜமான்."

"அப்படியானால் கிட்டு ஆசான் சோதிடம் பார்த்து சொன்னாரே. அது பொய்யா?"

"அவன் குலத்துரோகி எஜமான்."

"போகட்டும், நான் அவரைக் கவனித்துக் கொள்கிறேன். நீர் உடனடியாக நாளைக் காலையில் வேறு ஒரு நல்ல சோதிடரைக் கொண்டு வரவேண்டும். கிட்டு ஆசான் சொல்வது பொய் என்று நிரூபிப்பது மாதிரி."

"கண்டிப்பாய்க் கொண்டு வருகிறேன்."

"பிறகு நான் சொன்ன பெண் என்ன ஆனாள்?"

"கொண்டு வந்திருக்கிறேன்" ராவுண்ணியார் கூறினார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

32

"கூட யாராவது இருக்கிறார்களா?" பிரம்மதத்தன் ராவுண்ணியாரிடம் கேட்டார்.

"யாருமில்லை. நான்தான் அவளை அழைத்து வந்திருக்கிறேன்."

"நான் கொடுத்த பொருளை அந்தப் பெண்ணுக்குக் கொடுத்தீரா?"

"விடுவேனா? நீங்கள் மந்திரித்துத் தந்த பொருளைப் பாலில் கலந்து கொடுத்தேன். அவ்வளவுதான், பெண் என் பின்னாலேயே இறங்கி வந்துவிட்டாள்."

ராவுண்ணியாரிடம் பெண் வசிய மந்திரம் ஜபித்த கல்கண்டைக் கொடுத்திருந்தார் நம்பூதிரி. ராவுண்ணி நாயருக்கு அந்த வீட்டுடன் ஒரு சிறிய தொடர்பு இருந்தது. அந்தப் பெயரில் அங்கு சென்று, அதை அவளிடம் கொடுக்கவும் செய்தார். ஏழைக் குடும்பமாக இருந்ததால் அந்தப் பெண்ணுக்கு ஒரு நல்ல வேலை வாங்கித் தருவதாக அவர் வெகு நாளாகப் பொய் சொல்லி வந்திருந்தார். அதனால் அவருடன் அந்தப் பெண்ணை அனுப்ப அந்த வீட்டாரும் தயாராக இருந்தனர். ஆனால் ராவுண்ணியாரின் வஞ்சனை அவர்களுக்குத் தெரியாது.

"அப்படியானால் தைரியமாக நாம் வேலையைத் தொடங்கி விடலாம் அல்லவா?" நம்பூதிரி கேட்டார்.

"நான்தான் சொல்லிவிட்டேனே. இந்த விஷயத்தில் உங்களுக்குக் கொஞ்சம்கூட பயமே வேண்டாம்."

"அப்படியானால் ஒன்று செய்யும். நீர் அந்தப் பெண்ணை நமது இடத்திற்கு நேரடியாகக் கொண்டு வந்துவிடும். நான் பின்னாலேயே வந்து விடுகிறேன்."

அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு ராவுண்ணியார் புறப்பட்டு விட்டார் என்கிற விஷயம் கேசவனுக்குப் புரிந்தது. நேரடியாக நம்பூதிரியை எதிர்க்க முடியாது என்பதும் கேசவனுக்குத் தெரியும். எனவே, அந்தப் பெண்ணை ராவுண்ணியாரிடமிருந்து மீட்டு விடலாம் என்று தீர்மானித்தான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஆனால் நம்பூதிரி மந்திரம் ஜபித்து நான்கு யோகினிகளையும் அனுப்பி வைத்திருந்தார். பைசாசிக சக்தி வாய்ந்த இந்த யோகினிகள், எத்தனை பேர் எதிர்த்து வந்தாலும் பட்சணமாக்கிச் சாப்பிட்டு விடும் வல்லமை பெற்றவர்கள்.

ராவுண்ணியார் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு நம்பூதிரி வழக்கமாகப் பலி நடத்தும் இடத்திற்குச் சென்றார். யோகினிகள் காவலிருந்தனர். வசந்தசேனையும் இதைப் புரிந்துகொண்டு, "தனியாகச் சென்றால் எந்தவிதப் பிரயோஜனமுமில்லை" என்று கேசவனை எச்சரித்தாள்.

"வேறு என்னதான் செய்வது?"

"அன்று நாகமோகினியிடமிருந்து பெற்ற சூலத்தையும் உடன் எடுத்துச் செல்லுங்கள். யோகினிகளை எதிர்க்க அது பயன்படும்."

"உண்மைதான். அது எனக்கும் ஞாபகம் இருக்கிறது."

"பிறகு என்ன தயக்கம்?"

"அந்தச் சூலத்தை நமது இறுதிப் போராட்டத்திற்காக வைத்திருக்கிறேன்."

துர்கா கோயிலுக்குள் நுழையும்போது என்ன நடக்கும் என்று கேசவனுக்கே தெரியாது. அப்பொழுது ஒரு பாதுகாப்பு ஆயுதமாக அது இருக்கட்டும் என்று நினைத்திருந்தான் கேசவன்.

"நம்பூதிரி அனுப்பியுள்ள யோகினிகள் அசாதாரணமான சக்தி வாய்ந்தவர்கள். சாதாரணமாக அவர்களை எதிர்த்து வெற்றி பெற நினைப்பது முட்டாள்தனம். அந்தச் சூலம் கையிலிருந்தால் தைரியமாக எதிர்க்கலாம்" வசந்தசேனை கூறினாள்.

"சரி. அப்படியே செய்கிறேன்" என்று கேசவன் இறுதியில் ஒப்புக் கொண்டான்.

"அப்படியானால் சூலத்தை உங்கள் கையில் எடுத்துக்கொண்டு என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள். நான் உங்களை விரைவாக அங்கு கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்" வசந்தசேனை கூறினாள்.

கேசவன் சூலத்துடன் புறப்பட்டான். வசந்தசேனை அவனுடன் பறந்தாள். அந்த இடத்தை அடைந்ததும் அவனை இறக்கிவிட்டு அவள் ஓர் எட்டி மரத்தின் அடியில் நின்று கொண்டாள்.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நாம் எதற்காக இங்கு வந்திருக்கிறோம்?" அந்தச் சிறு பெண் ராவுண்ணியாரிடம் கேட்டாள்.

"உனக்கு இங்குதான் வேலைக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். இது நம்பூதிரியின் பழைய வீடு. இதை உன் சொந்த வீடாகவே நினைத்து இங்கு நீ வசிக்கலாம். நம்பூதிரி சொல்கிற வேலைகளைச் செய்தால் போதும். இதெல்லாம் பின்னால் உனக்குச் சொந்தமாகி விடும்."

"இந்த இடத்தைப் பார்த்தாலே எனக்குப் பயமாக இருக்கிறது."

"பழைய வீடானதால்தான் இப்படித் தோன்றுகிறது."

கேசவன் வாசலைக் கடந்தபோது அவனுக்கு முன்பாகத் தெளிவற்ற முகத்துடன் ஓர் உருவம் எதிர்ப்பட்டது. அதனுடைய கைகள் கேசவனை நோக்கி நீண்டு வந்தன. கேசவன் சட்டென்று சூலத்தை எடுத்து அதை ஓங்கிக் குத்தினான். விநாடி நேரத்தில் அந்த உருவம் எரிந்து சாம்பலானது. சற்று முன்னேறியபோது அதேபோன்ற மற்றொரு உருவம் தென்பட்டது. சூலத்தைப் பாய்ச்சியபோது அதுவும் எரிந்து போனது. மறுபடியும் அதேபோன்ற இரண்டு உருவங்கள். எல்லாவற்றையும் அழித்த பிறகு கேசவன் அந்த அறைக்குள் நுழைந்தான். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ராவுண்ணியார். நம்பூதிரியைவிட வேறு ஏதோ ஒரு பெரிய மந்திரவாதி வருவதாகவே முதலில் நினைத்தார். உள்ளே நுழைந்த கேசவன் ஓங்கி ஒரு மிதித்து அங்கிருந்த ராவுண்ணியாரை முதலில் கீழே தள்ளினான். பிறகு அந்தச் சிறுமியைத் தோளில் போட்டுக்கொண்டு வெளிப்புறமாக நடந்தான்.

அதேசமயம் நம்பூதிரி அங்கு வந்தார்.

"யாரது? இந்த மாதிரி அட்டகாசம் செய்திருப்பது?" என்று கேட்டார்.

"நான்தான்."

"அப்படியென்றால்?"

"ஏற்கெனவே இங்கு வந்திருப்பவன்."

"ஓகோ. நீதானா? உனக்கு உயிர்மீது ஆசையிருந்தால் அந்தப் பெண்ணை விட்டுவிட்டு ஓடிவிடு" நம்பூதிரி சாதாரணமாகப் பேசினார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் அதற்குத் தயாராக இல்லை."

"நல்லது. நானும் இப்படி ஒரு சந்தர்ப்பத்திற்காகவே இவ்வளவு நாட்களும் காத்திருந்தேன். இன்று நீ தப்பிக்க முடியாது."

நம்பூதிரி தன் இடுப்பிலிருந்து ஒரு சரடை அவிழ்த் தெடுத்தார். அதைக் கையில் பிடித்தபடி நாகமந்திரம் ஜபித்தார். பின்பு கேசவனைப் பார்த்து மேற்புறமாக வீசி எறிந்தார்.

மேற்புறம் சென்ற கயிறு வட்ட வடிவத்தில் கேசவனது தலைக்கு நேராக வந்தது. கேசவன் சட்டென்று பின்புறம் நகர்ந்தான். சரடு அவனை நோக்கி நகர்ந்தது. உடனே அதை நோக்கிச் சூலத்தை உயர்த்தினான். அந்தச் சரடும் எரிந்து சாம்பலானது.

இதைக் கண்டவுடன் அந்தச் சூலம் எதுவென்று நம்பூதிரிக்குப் புரிந்தது. அது அவன் கையிலிருப்பது வரையில் தான் என்ன செய்தாலும் பலிக்காது என்பதைப் புரிந்துகொண்ட அவர், சட்டென்று இருளில் நடந்து மனைக்குள் புகுந்து கொண்டார்.

அந்தப் பெண்ணுடன் கேசவன் அங்கிருந்து வெளியே வந்தான். வசந்தசேனை அவனுடன் வந்து இணைந்து கொண்டாள். எதுவும் புரியாமல் இதையெல்லாம். விழித்தவாறே பார்த்துக் கொண் டிருந்தாள் அந்தப் பெண்.

"என்னை எங்கே கொண்டு போகிறீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"உன்னை அந்தப் பிசாசுகள் பலியிடுவதற்காகக் கொண்டு வந்தனர்" என்றான் கேசவன்.

"என்ன, பலி கொடுப்பதற்கா?" என்று அவள் அலறினாள்.

கேசவன் அவளுடன் கிழக்குக் கோட்டை அரண்மனைக்குள் வந்தான். பொழுது விடிந்தபோது, அவள் தனது வீட்டைப் பற்றியும், நிலைமையைப் பற்றியும் கூறினாள். ராவுண்ணியார் என்ன சொல்லி அவனைக் கொண்டு வந்தார் என்பதையும் கூறினாள்.

"அப்படியானால் ஒன்று செய். நீ இங்கேயே தங்கி இருந்து எனக்குச் சமையல் செய்து கொடு. எனக்கும் வேறு யாரும் இல்லை. நீ

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

என்னுடைய சகோதரி போல் இங்கேயே வசிக்கலாம். நான் இங்கிருந்து போகும்போது உன்னையும் அழைத்துச் செல்கிறேன்."

அவள் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டாள்.

"உன் பேரென்ன?" கேசவன் கேட்டான்.

"சந்திரிகா."

"நீ அதிர்ஷ்டம் செய்தவள். இல்லாவிட்டால் பாவிகள் இதற்குள் உன்னைப் பலி கொடுத்திருப்பார்கள்."

கேசவன் அவள் படுத்துக்கொள்ள ஓர் அறையைக் காட்டினான். இளவரசி அந்த அறைக்குள் நுழையாமல் இருப்பதற்காக ஓர் இயந்திரம் வரைந்தான். சந்திரிகா படுத்துக் கொண்டாள். கேசவனும் தனது அறைக்குச் சென்று படுத்தான்.

வழக்கம்போல் இளவரசி வந்தாள்.

தான் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலி தொலைந்து போயிருந்தாலும் கேசவனுக்குத் தன்னிடம் உள்ள அன்புக்குக் குறைவிருக்காது என்று அவள் நினைத்திருந்தாள். ஆனால் கேசவன் இளவர சியைப் பார்த்ததும் எந்தவிதமான எதிர்ப்பையும் காட்டவில்லை.

"நான் சற்று முன்பு இங்கே வந்திருந்தேன். எங்கே போயிருந் தீர்கள்?" என்று கேட்டாள் இளவரசி.

"ஒரு இடம் வரை போக வேண்டி இருந்தது."

"அந்த அறைக்குள் ஒரு பெண் படுத்திருக்கிறாளே. அவள் யார்?"

"அவள் என் சகோதரி. அவளை அழைத்து வரத்தான் சென்றிருந்தேன். எனக்குச் சமைத்துப் போட யாருமில்லை."

"இவ்வளவு நாளும் எப்படிச் சாப்பிட்டீர்கள்?"

"நானே சமைத்து; ஆனால் அது எனக்கு அலுத்து விட்டது."

"எனக்குச் சமைக்கத் தெரியாது. தெரிந்திருந்தால் நானே உங்களுக்குச் சமைத்துப் போட்டிருப்பேன்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"சரிதான். கிழக்குக் கோட்டை அரண்மனையின் இளவரசி. இந்தச் சாமானியனுக்குச் சமைத்துப் போடுவதா? நல்ல வேடிக்கை."

"அதற்கென்ன? விருப்பமுள்ளவருக்கு என்ன செய்தாலும் அது ஒரு பொருட்டாகாது."

"எல்லாவற்றுக்கும் ஒரு அளவு உள்ளது."

"இந்த மாதிரி விஷயத்திற்கெல்லாம் ஏது அளவுகோல்? போகட்டும். இன்று அமாவாசை" சொல்லிய இளவரசியின் கண்கள் பளபளத்தன.

அந்தப் பார்வையில் உணர்ச்சிகள் கொப்பளித்தன.

இளவரசி நாளுக்கு நாள் இளமையாகிக் கொண்டு வருவதாக கேசவனுக்குத் தோன்றியது. 'ஆண்களின் தொடர்பு இளவரசிக்கு இளமையைத் தருகிறது!' என்ற வசந்தசேனையின் வார்த்தை நினைவுக்கு வந்தது. அவளுடன் தொடர்பு கொள்ளும் இளைஞன், இளமையிலேயே முதுமையைப் பெறுவான். அதுதான் இளவரசியின் இளமை ரகசியம்.

கேசவன். இளவரசியிடமிருந்து விலகியிருக்க விரும்பினான். நிலைமை இப்படியே தொடர்ந்தால் இளவரசியின் அடிமையாகிப் போக நேருமென்று கேசவனுக்குத் தோன்றியது. நேற்றுவரை இந்த ஞானம் தோன்றவில்லை. இளவரசியின் கழுத்திலிருந்த விஷ்ணுமாயா இயந்திரம் கேசவனுக்கு வெறியூட்டிக் கொண்டிருந்தது. இப்பொழுது தான் அதிலிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது. ஆனால், இளவரசிக்குச் சந்தேகம் ஏற்படாத வகையில் விலக வேண்டும். இல்லாவிட்டால், அவள் உடனே வேறு ஏதாவது வழியைப் பின்பற்றத் தொடங்கினாலும் தொடங்கக்கூடும்.

"இன்றிலிருந்து பதினான்கு நாள்கள் வரை நான் விரத மிருக்கிறேன்" கேசவன் கூறினான்.

"அதாவது. பெண்களைத் தொடக்கூடாது என்கிற விரதம்! எதற்காக இந்த விரதம்?"

"துர்காதேவி கோயிலுக்குள் நுழைவதானால் விரதம் வேண்டும். இல்லாவிட்டால் தேவி கோபிப்பாள்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"பதினான்கு நாட்களுக்குப் பிறகு?"

"நாள் இளவரசியின் விருப்பத்திற்கு உடன்படுவேன்."

"அதன்பிறகு இந்த இடத்திலிருந்து போக முடியாது."

"அப்படியே!"

இளவரசி திரும்பிப் போனாள். ஆனால், போகும்பொழுது சந்திரிகா படுத்திருக்கும் அறை வாசலில் சற்று நேரம் நின்றாள். ஆனால், உள்ளே நுழையவில்லை.

பிரம்மதத்தன் நம்பூதிரி அடுத்த போராட்டத்திற்கு தயாராகிக் கொண்டிருந்தார். கண்டாகர்ணனுக்கு ஒரு முழு ஆட்டைப் பலி கொடுத்தபோது அவர் காட்சியளித்தார். "நீ இன்னும் என்னுடைய பலியைப் பூர்த்தியாக்கவில்லை. இன்றிலிருந்து பதினான்கு நாட்களுக்குள், நீ அந்தப் பலியை நடத்தாவிட்டால் நீ இதுவரை செய்ததெல்லாம் வீணாகி விட்டது என்று பொருள்!"

33

அடுத்த பலியை நடத்துவதற்கு இன்னும் பதினான்கு நாட்கள் மட்டுமே தவணை உள்ளது என்கிற விஷயத்தைக் கேள்விப்பட்டதும் பிரம்மதத்தன் நம்பூதிரிக்கு இருப்புக் கொள்ளவில்லை.

எங்கிருந்தாவது ஓர் இளம் பெண்ணை விரைவில் கண்டுபிடிக்க முடியாவிட்டால், தான் இன்றுவரை செய்துள்ள எல்லாமே பயனற்றதாகிவிடும். அது மட்டுமல்ல, தன் எதிராளி வேறு நாளுக்குநாள் பலம்பெற்று வருகிறான்.

அன்றொரு நாள் தனக்கு முன்பாக வெகு சாதாரண இளைஞனாக இருந்த ஒருவன், இன்று மந்திரவித்தையில் எவ்வளவோ முன்னேறியிருக்கிறான். அதைக் கண் முன்பாகவே பார்த்தாகி விட்டது.

ராவுண்ணியார் கொண்டு வந்த பெண்ணை, தான் காவல் நிறுத்தியிருந்த யோகினிகளை அழித்துவிட்டு அபகரித்துச் சென்றுள்ளான். இந்த நேரத்தில் தனது லட்சியம் பூர்த்தியடையவில்லை என்றால், அவன்தான் வெற்றி பெறுவான் என்பது உறுதி.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அந்தப் பெண் எங்கிருக்கிறாள் என்றாவது கூற முடியுமா?" நம்பூதிரி தன் உக்கிரமூர்த்தியிடம் கேட்டார்.

"அவன் தங்கியுள்ள அரண்மனையிலேயே இருக்கிறாள்."

நம்பூதிரி யோசித்தார். 'என்ன செய்யலாம்? இனிமேல் அங்கு வேறு யாரை அனுப்பினாலும் எந்தவிதமான பலனும் இருக்காது. வேறு யார் சென்றாலும், அந்தப் பெண்ணைத் திரும்பக் கொண்டுவர முடியாது. நான் போனால் என்ன?' என்று யோசித்தார். இறுதியில் அதுவே தீர்மானமானது.

இரவு நேரத்தில் கேசவன் அங்கு இருப்பதில்லை. பலமுறை இரவு நேரத்தில் அவன் இங்கு இருந்ததில்லை.

இரண்டு நாளுக்குப் பிறகு வெள்ளிக்கிழமையன்று அவர் ஒரு தூதனை அனுப்பினார். ஓர் ஆந்தையின் வடிவத்தில் பறந்து சென்ற தூதன் கிழக்குக்கோட்டை அரண்மனையின் எதிரிலிருந்த ஒரு புளிய மரத்தில் பதுங்கியிருந்தான். அங்கிருந்தபடி பார்த்தால் அரண்மனையின் முற்றம், வராந்தா போன்ற இடங்கள் நன்றாகத் தெரிந்தன.

கேசவன் அங்கிருந்து வெளியேறுவதை அந்தத் தூதன் கவனித்தான். அவனுடன் ஓர் இளம் பெண்ணும் இருந்தாள். அவள் சற்று நேரம் வெளியே நின்றுவிட்டு மீண்டும் உட்புறம் சென்றாள். தூதன் இதைக் கவனித்துவிட்டு உடனே பறக்கத் தொடங்கியது. மேலக்காவு மனையை அடைந்தது. விவரத்தை நம்பூதிரியிடம் தெரிவித்தது. 'அங்கிருக்கும் பெண் சந்திரிகாதான்' என்று அவர் உறுதியாக நினைத்தார்.

உடனே நம்பூதிரி கிழக்குக்கோட்டை அரண்மனையை நோக்கி நடக்கத் தொடங்கினார். ஒரு முனிவரின் தோற்றத்தில் நம்பூதிரி தலைமுடியை உச்சியில் முடிந்து, நீண்ட தாடி மீசையுடன், கழுத்தில் ருத்திராக்ஷ மாலை அணிந்து, யாரும் சந்தேகப்பட முடியாதவாறு வேடம் பூண்டார்.

கோட்டை வாசலை அடைந்தபோது, உட்புறமாகக் கவனித்தார். ஒரு நிலவிளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. அங்கு யாரும் தென்படவில்லை. உள்ளே தான் தேடி வந்த பெண் இருக்கிறாள்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

என்கிற எண்த்தில் அங்கிருந்தபடியே இருமினார். சற்று நேரத்தில் ஒரு பெண்ணுருவம் வெளியே வந்தது. அவளைப் பார்த்தவுடன், வசீகரண மந்திரம் ஜபித்த விபூதியை அவள் மீது வீசினார். இனி, தன்னுடைய அனுமதி இல்லாமல் அவள் நிற்கும் இடத்திலிருந்து நகர முடியாது என்பது அவருக்குத் தெரியும்.

"நீங்கள் யாரென்று தெரியவில்லையே?" அவள் கேட்டாள்.

"எல்லாம் தானாகவே புரிந்துவிடும். எனக்குக் குடிக்க ஏதாவது கிடைக்குமா?" கேட்டுவிட்டு வராந்தாவில் உட்கார்ந்தார்.

அவள் உள்ளே சென்றாள். சற்று நேரத்தில் திரும்பி வந்தாள். அவள் கையில் ஒரு வெண்கல டம்ளர் இருந்தது. குளிர்ந்த மோர். அவரிடம் கொடுத்தாள்.

"உன் பெயர் சந்திரிகாதானே?"

"ஆமாம் வாமி! உங்களுக்கு எப்படித் தெரியும்?" அவள் வியப்புடன் கேட்டாள்.

"எனக்குத் தெரியாத விஷயங்கள் இந்தப் பிரபஞ்சத்தில் ஏதாவது இருக்கிறதா என்ன?" முனிவர் கேட்டார்.

" வாமிகள் எங்கிருந்து வருகிறீர்கள்?"

"வெகு தூரத்திலிருந்து... அதாவது இமய மலையின் அடிவாரத் திலிருந்து வருகிறேன்."

"இன்று இங்கேயே தங்குங்கள். உங்களது இரவு உணவைச் சமைத்து விடுகிறேன்."

"அதெல்லாம் வேண்டாம். இப்பொழுது சாப்பிட்டதே அதிகம்."

"அப்படியானால் நீங்கள் ஓய்வுகொள்ள இடம் ஒதுக்கட்டுமா?"

"செய்."

அவள் உள்ளே நுழைந்தபோது நம்பூதிரியும் அவளைப் பின்தொடர்ந்தார். அவள் ஓர் அறையில் அவருக்காகப் பாயை எடுத்து விரித்தபோது பிரம்மதத்தன் தனது பழைய வடிவத்திற்கு மாறினார். அவள் திரும்பியபோது அவர் அவள் கையைப் பிடித்தார். அவள்

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

எந்தவிதமான எதிர்ப்பையும் காட்டவில்லை. அவர் அவளைப் படுக்கையில் தள்ளினார். தனது மாந்திரீக சக்திக்குள் அவள் அகப்பட்டு விட்டாள் என்று புலப்பட்டது.

வெகுநாளாக பெண்ணைத் தொடாமலிருந்த நம்பூதிரி, அவளை வெகு ஆவலுடனும், ஆவேசத்துடனும் நெருங்கினார். அவள் அவருக்கு உடன்பட்டாள். நள்ளிரவானதும் நம்பூதிரி எழுந்தார். அவள் கட்டிலில், நல்ல உறக்கத்திலிருந்தாள். இதுதான் சரியான தருணமென்று கருதி அவளைத் தோளில் போட்டுக் கொண்டு நம்பூதிரி வெளியேறினார். வராந்தாவில் கால் வைத்தபோது அவள் கேட்டாள். "நாம் எங்கே போகிறோம்?"

"எல்லாம் போன பிறகு தெரியும்." நம்பூதிரி கூறினார்.

"ஒரு விஷயம் வாமி, நான் அங்கு வசிக்க முடியாதே."

"நீ இங்கிருப்பதும் அங்கிருப்பதும் ஒன்றுதான், பேசாமல் வா" நம்பூதிரி அவளுடன் நடந்தார்.

வாசலைத் தாண்டி இருளில் நடக்கத் தொடங்கினார். அந்த நேரம் மோகினி கோயில் வாசலில் வசந்தசேனை நின்றிருந்தாள். கிழக்குக் கோட்டையில் ஏதாவது அசம்பாவிதம் நடக்கிறதா என்பதைக் கவனிக்கவும், சந்திரிகாவைப் பாதுகாக்கவும் கேசவன் அவளை நியமித்திருந்தான்.

கேசவன் அங்கிருந்து நேராக மேலக்காவு மனைக்குச் சென்றிருந்தான். ஊர்மிளா அவனுக்காகக் காத்திருந்தாள். கேசவனைக் கண்டதும் அவள் கூறினாள். "மாமா வீட்டில் இல்லை. எங்கேயோ போயிருக்கிறார்."

"அப்படியானால் நாம் நிறையப் பேசலாமே?"

"உண்மையில் நானும் உங்களிடம் நிறையப் பேச வேண்டும்."

"சரி. யார் முதலில் பேசுவது?" கேசவன் கேட்டான்.

"நானே பேசி விடுகிறேன். முதலில் என் வயிற்றைத் தொட்டுப் பாருங்கள்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"எனக்கு விஷயம் விளங்கிவிட்டது."

"இப்பொழுது என்ன செய்வது?"

"ஒன்றும் செய்ய வேண்டாம்."

"மாமாவுக்குத் தெரிந்தால் என்னைப் பலி கொடுத்து விடுவார்."

"அந்த அளவிற்கு நான் விட்டால்தானே?"

"இப்படிச் சொல்வது சுலபம். ஆனால் மாமாவிடம் இதெல்லாம் செல்லாது."

"சரி, நான் என்ன செய்ய வேண்டுமென்று நீயே சொல். நான் அப்படியே நடந்து கொள்கிறேன்."

"மாமாவுக்கு இந்த விஷயம் தெரிவதற்குமுன் நாம் இங்கிருந்து போய்விடுவது நல்லது."

"திடுமென்று எங்கே போவது?"

"நீங்கள் வசிக்கிற இடத்திற்கு."

"நான் கிழக்குக் கோட்டை அரண்மனையில் தங்கியிருக்கிறேன். இப்பொழுதைய நிலையில் - உன்னை அங்கே கொண்டு போய்க் குடிவைப்பது நல்லதல்ல."

"அப்படியானால், நீங்கள் போன பிறகு இந்த இடத்தில் எனது பிணம்தான் கிடக்கும்."

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காது. பயப்படாதே. கொஞ்ச நாள் போனால் உன்னை நான் அழைத்துச்சென்று விடுவேன். இந்த வயிற்றைப் பார்ப்பவர்கள் சட்டென்று இதையெல்லாம் ஊகிக்க முடியாது. மாமா உன் வயிற்றையா கவனிக்கப் போகிறார்?"

"இங்குள்ள வேலைக்காரிகள் மோசமானவர்கள் என்று தெரியுமா உங்களுக்கு?"

"நீ எதற்கும் பயப்படாதே. இன்னும் இரண்டு மூன்று நாள் களுக்குள் நான் நிறையக் காரியங்கள் செய்ய வேண்டியுள்ளது."

"அதிகமாகப் போனால் இன்னும் இரண்டு வாரத்திற்கு மேல் நான் இங்கு தங்க முடியாது. அது ஞாபகமிருக்கட்டும்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நீ இன்னுமொரு விஷயத்தை யோசித்துப் பார். நான் உன்னை இங்கிருந்து கொண்டுபோய் விட்டால், உன் மாமா என்னைச் சும்மா விட்டுவிடுவாரா? அதன்பிறகு நாம் இரண்டு பேருமே உயிருடன் இருக்க முடியாது. உன் மாமா அனுப்பும் பிசாசுகள் நம்மைத் தின்று தீர்ந்து விடும்; தெரியுமா?"

"அதெல்லாம் சரிதான். இப்படியே நாம் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? இதற்கு என்னதான் முடிவு?"

"நீ கவலைப்படாதே. நான் சில திட்டங்கள் வைத்திருக்கிறேன். தயவுசெய்து கொஞ்ச நாள் காத்திரு."

மூன்றாம் ஜாமம் ஆனபோது ஊர்மிளா கேசவனை எழுப்பினாள். "நாளைக்கு வருவீர்களா?"

"தினமும் வருவேன்" கேசவன் வெளியேறினான். ஊர்மிளா அங்கிருந்தபடியே அவன் செல்வதைப் பார்த்தாள்.

மோகினி கோயிலை நெருங்கியபோது கேசவன் நின்றான். வசந்தசேனை அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

"ஏதாவது செய்தி உண்டா?" கேசவன் கேட்டான்.

"நம்பூதிரி அரண்மனைக்கு வந்திருந்தார்."

"பிறகு?"

"அவர் திரும்பிச் சென்றேபாது அவர் தோளில் ஒரு பெண் கவிழ்ந்தபடி படுத்திருந்தாள்."

செய்தியைக் கேட்ட கேசவன் வியர்த்து விதிர் விதிர்த்துப் போனான்.

"நீ ஒன்றும் செய்யாமல் இருந்தாயா?"

"யாருடன் யார் மோதுவது? இருந்தாலும் நான் முயற்சி செய்தேன். ஆனால் அவரைச் சுற்றி ஏதோ ஒரு பாதுகாப்பு வளையம் இருந்தது. என்னால் அவர்களை நெருங்க முடியவில்லை."

"இப்பொழுது என்னதான் செய்வது?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நீங்கள் காலம் தாழ்த்தி வந்தது தவறு. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் நீங்கள் அங்கு அதிக நேரம் தங்கியிருக்கக் கூடாது."

"உண்மைதான்."

மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் கேசவன் நடந்தான். கிழக்குக் கோட்டை அரண்மனையில் கால் பதித்தபோது சேவல் கூவியது.

அவன் அப்படியே வராந்தாவில் தளர்ந்து போய் உட்கார்ந்தான்.

"உள்ளே வந்து படுப்பதுதானே? எதற்காக இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்?" குரலைக் கேட்டுக் கண் திறந்தான்.

சந்திரிகா நின்று கொண்டிருந்தாள். ஒருவேளை தான் காண்பது கனவோ என்று நினைத்துக் கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தான்.

"ஏன், என்னவோ மாதிரிப் பார்க்கிறீர்கள்?" அவள் கேட்டாள்.

கேசவன் தாங்க முடியாத வியப்புடன் அவளையே பார்த்தான்!

34

"என் எதிரில் நிற்பது சந்திரிகாதானா, அல்லது இளவரசியா என்று பார்க்கிறேன்" கேசவன் சந்தேகத்துடன் கேட்டான்.

பிரம்மதத்தன் நம்பூதிரி சந்திரிகாவைத் தோளில் போட்டுக் கொண்டு சென்றதாக கேசவன் தவறுதலாக முடிவு செய்தான். அதனால்தான் என்ன செய்வது என்று புரியாமல் குழம்பிக் கொண்டிருந்தான். ஆனால், இங்கு வந்து பார்த்தால் சந்திரிகா இதோ எதிரில் நிற்கிறாள். அப்படியானால்...?

'நம்பூதிரி யாரைக் கொண்டு போனார்? ஒருவேளை இளவரசியைக் கொண்டு போய் விட்டாரோ? நம்பூதிரி இந்த மாதிரி விஷயங்களில் சுலபத்தில் ஏமாற மாட்டாரே? இது உண்மையானால் தன் முன்பு நிற்பது இளவரசியாகத்தான் இருக்க வேண்டும்? இளவரசியும் இப்படிச் செய்யக்கூடியவள்தான். எந்தவிதமான

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

மாயாஜாலத்தையும் செய்துகாட்ட இளவரசியால் முடியும். சந்திரிகாவை இங்கு கொண்டு வந்து வைத்திருப்பதே இளவரசிக்குப் பிடிக்கவில்லை. இரண்டு வாரம் விரதம் இருக்கிறேன் என்பது வேறு அவளை எரிச்சலடைய வைத்திருக்கும். விளையாட்டுக் காட்டுவதற் காக இந்த வேடத்தில் இளவரசி வந்திருக்கிறாளோ?' கேசவன் யோசித்துக் கொண்டிருந்தான்.

"சந்தேகமே வேண்டாம். நான் அசல் சந்திரிகாவேதான்!"

கேசவன் சட்டென்று எழுந்து அவளை உட்புறம் அழைத்துச் சென்றான். உள்ளே பாதுகாப்பாக மறைத்து வைத்திருந்த சூலத்தை எடுத்து அவள் உடம்பைத் தொட்டான். அவளுக்கு எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை. அத்துடன் அவனது சந்தேகம் விலகியது.

பிரம்மதத்தன் நம்பூதிரி கிழக்குக் கோட்டையை அடைந்தபோது இளவரசி அவரைப் பார்த்துவிட்டாள். அவர் எதற்காக வந்திருக்கிறார் என்பதையும் உணர்ந்து கொண்டாள். மேலக்காவு மனையும், கிழக்குக் கோட்டை அரண்மனையும் ஒருவருக்கு ஒருவர் எத்தனையோ நூற்றாண்டுகளாகவே எதிரிகள். வெகு காலமாகவே இந்த இரு குடும்பத்தின் மூத்த - முந்தைய தலைமுறையினர் அடிக்கடி பல வகைகளில் மோதிக் கொண்டவர்கள்தாம். உதயநல்லூர் அரசை நிறுவிய உதயவர்மனிலிருந்து அந்தப் பகை தொடரவே செய்துள்ளது. பிரம்மதத்தனும் மாந்திரீக வித்தைகளில் சளைத்தவர் அல்லர் என்பதும் இளவரசிக்குத் தெரியும்.

துர்மந்திரங்கள் கொண்ட எத்தனையோ ஓலைச்சுவடிகள் மேலக்காவு மனையில் இருக்குமென்று இளவரசி நினைத்தாள். எப்படியாவது அவற்றைக் கவர்ந்து கொண்டு வரவேண்டுமென்று இளவரசியும் விரும்பினாள். ஆனால், நேரடியாக அந்த மனைக்குள் நுழைவது என்பது சாத்தியமல்ல என்பதும் அவளுக்குத் தெரியும். இப்படிப்பட்ட சூழலில்தான் நம்பூதிரி அங்கு வந்தார். இளவரசி உடனே சட்டென்று ஓர் இளம் பெண்ணாக வடிவம் எடுத்தாள்.

அந்த அரண்மனையில் ஓர் இளம் பெண்ணைப் பார்த்ததும் அவள்தான் சந்திரிகாவாக இருக்கக் கூடுமென்று நம்பூதிரி கணக்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

கிட்டார். இப்படியாக அவளைத் தன் தோளிலிட்டு கடத்திக் கொண்டு வரவும் செய்தார்.

மேலக்காவு மனையை அடைந்த நம்பூதிரி அவளைத் தன் படுக்கையில் வீசினார். அதனால் அவளது உடைகள் சற்று கலைந்தன. அறை விளக்கின் மங்கிய மஞ்சள் நிற வெளிச்சத்தில் அந்த வடிவத்தைப் பார்த்த நம்பூதிரி அசந்தே போனார். இப்படியும் ஒரு பெண் உருவமா? அவர் உடலின் நரம்புகள் முறுக்கேறின.

சந்தன மரத்தில் கடைந்தெடுத்தது போன்ற உருவம். அன்று பலியிடுவதற்கு ஏற்ற நாளல்ல. எனவே அவளை அன்று தங்க வைக்க வேண்டியதாகி விட்டது.

நம்பூதிரி தன் உடம்பை உற்று நோக்குவதை பாதி மூடிய கண்களின் வழியாக இளவரசியும் கவனித்தாள். நம்பூதிரி மோகப் பரவசம் கொண்டிருக்கிறார் என்பதும் புலப்பட்டது. இந்த நேரத்தைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்த இளவரசி படுக்கையில் ஒருமுறை நெளிந்தாள். அதனால் அவளது உடைகள் மேலும் நெகிழ்ந்தன. நம்பூதிரி தன்னுடைய சுய நினைவை இழந்தார். விளக்கொளி மங்கியது. நம்பூதிரி அந்தப் பெண்ணை நெருங்கியதும். அவள் அவரைத் தன்னை நோக்கி இழுத்துக் கொண்டாள்.

ஒரு பெண்ணாவது தன்னைத் தளர்ச்சியடையச் செய்து. தோல்வியடைய வைக்கமாட்டாளா என்று பிரம்மதத்தன் ஏங்கிய துண்டு. ஆனால் அது யாராலும் முடிந்ததில்லை. இதோ இந்தப் பெண். முதன் முதலாக அதை நிறைவேற்றியிருக்கிறாள்! பிரம்மதத்தன் முதன் முறையாக ஒரு பெண்ணிடம் தோல்வியடைந்திருக்கிறார். அவர் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார் என்பதைத் தெரிந்து கொண்டதும் இளவரசி படுக்கையிலிருந்து எழுந்தாள். உடையைச் சரிசெய்தாள்.

விளக்கைக் கொளுத்தினாள். தளர்ந்திருந்த நம்பூதிரி குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருந்தார். தான் வந்த வேலையைக் கவனிப்பதற்காக விளக்குடன் அந்த அறையை விட்டு வெளி யேறினாள் இளவரசி.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

பூஜையறை பக்கத்திலேயே இருந்தது. அலமாரியில் ஓலைச் சுவடிகளின் மீது தங்க நிற நாகம் உடலை அளைய விட்டுப் படுத் திருந்தது. இளவரசி தன்னுடைய மோதிரத்தைக் கழற்றி அதன்மேல் போட்டாள். நாகம் இறங்கி மறைந்தது.

விளக்கைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு இளவரசி ஓலைச் சுவடிகளை ஆராய்ந்தாள். ஓர் ஓலையில் முக்கியமான மந்திரங்கள் இருந்தன. அதைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, கதவின் தாழ்ப்பாள் விலகும் ஓசை கேட்டது. வலது கையில் தங்க நாகத்துடன் நம்பூதிரி நின்றிருந்தார்.

இதற்கு முன்பு ஓர் ஓலைச்சுவடி திருடு போயிருந்ததால், மேற் கொண்டு அப்படி எதுவும் நடக்காமல் இருப்பதற்காக, சுவடிகளைக் காவல் காக்கும் தங்க நாகத்திற்கு சில உத்தரவுகளைப் பிறப்பித் திருந்தார் நம்பூதிரி. அதாவது தன்னிடம் உடனே வந்து விவரம் தெரிவிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அதையொட்டி பாம்பு உடனே அவரை அணுகி விஷயத்தைத் தெரிவித்து விட்டது.

"ஏய் பெண்ணே, இங்கு என்ன செய்கிறாய்?" நம்பூதிரி கேட்டார்.

அந்தக் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த பெண்ணுக்குச் சந்திரிகாவின் தோற்றம் இல்லை. சாட்சாத் இளவரசி கார்த்தியாயினி தேவி அங்கு நின்று கொண்டிருந்தாள்!

"யார் நீ?" இடிக்குரலில் கேட்டார்.

"என்னை நிஜமாகவே தெரியவில்லையா?"

"இல்லை."

"அப்படியானால் தெரிந்துகொள்ள வேண்டாம்."

"முதலில் ஓலையை அங்கே வை."

"இதற்காகத்தான் நான் வந்திருக்கிறேன். இதை நான் எடுத்துக் கொண்டு போகவும் செய்வேன்."

"நீ யாருடன் விளையாடுகிறாய்? இந்தப் பிரம்மதத்தனிடமா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நீங்கள் இன்னும் மந்திரவாதத்தில் முழுமை அடையவில்லை என்பது எனக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, என்னை உங்களால் ஒருபோதும் வெல்லவும் முடியாது!"

"முட்டாள் பெண்ணே, உன் அறியாமைக்கு இப்பொழுதே நான் பரிசளிக்கிறேன், பார்" தன் கையிலிருந்த பாம்பை இளவரசியை நோக்கி எறிந்தார்.

அதை வெகு சாதாரணமாகப் பிடித்த இளவரசி மெதுவாக பழைய இடத்திலேயே அதை விட்டாள்.

"நீ அவ்வளவு கெட்டிக்காரியா?" என்றபடி அவர் தன் இடுப்பிலிருந்த சரடை உருவி பாசமந்திரம் ஜபித்து இளவரசி மீது எறிந்தார்.

இளவரசி சற்றும் பதற்றப்படாமல் அதை ஒரு கையால் பிடித்து, நம்பூதிரியின் மீதே எறிந்தாள். அது தன் கழுத்தில் விழாமல் ஒதுங்கிப் பிடித்தபோது, அவரது கையில் அது ஒரு நாகமாக மாறியது. பிரம்மதத்தன் முதன்முறையாகப் பயப்பட ஆரம்பித்தார்.

"பிரம்மதத்தா, நீ யாருடன் விளையாடுகிறாய் என்பது நினைவிருக்கட்டும். உன்னைவிட முந்நூறு வயது அதிகமான இளவரசி கார்த்தியாயினி தேவியிடம் இதெல்லாம் செல்லாது. முட்டாள்தனமாக என்னைத் தடை செய்ய முயலாதே. நான் வருகிறேன்."

இளவரசி ஓலைச்சுவடியுடன் வெளியே செல்வதற்காக கதவின் தாழை நீக்கியபோது பிரம்மதத்தன் அலறினார்.

"நீ அவ்வளவு சுலபத்தில் தப்பித்து விடலாம் என்று மனப்பால் குடிக்காதே. உனக்கு முந்நூறு வயதாகிறதென்றால் என்னிடம் மூவாயிரம் வருடத்து ஸித்திகள் உள்ளன. அதுமட்டுமா, என்னுடைய லட்சியம் நிறைவேறிவிட்டால், இங்கிருந்தபடியே உன்னையும், உனது அரண்மனையையும் எரித்துச் சாம்பலாக்கி விடுவேன்."

கையிலிருந்த பாம்பை வீசி எறிந்தபிறகு, தலையிலிருந்து ஒரு முடியைப் பிடுங்கி அதைக் கையாலேயே இரண்டு மூன்றாக உடைத்துக் கசக்கி வீசி எறிந்தார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

உடனே ஐந்து பைசாசிகமான, பயங்கர உருவங்கள் வெளிப் பட்டன. நிழல் போன்ற கறுத்த உருவங்கள்.

"அவளைத் தடுத்து நிறுத்துங்கள்!" நம்பூதிரி அவற்றிடம் உத்தரவிட்டார்.

அவை இளவரசியை நெருங்கின. இளவரசியும் சளைக்காமல் தனது தலைமுடியைப் பிடுங்கி, மந்திரம் ஜபித்து வீசி எறிந்தாள். அது ஒரு தீச்சரடு போல் அந்த ஐந்து உருவங்களையும், சுற்றி வளைத்து எரித்துச் சாம்பலாக்கியது.

உடனே நம்பூதிரி பக்கத்திலிருந்த விபூதிச்சம்புடத்திலிருந்து கை நிறைய விபூதியை எடுத்து மந்திரித்து இளவரசி மீது வீசினார். விபூதியின் ஒவ்வோர் அணுவும் ஒவ்வொரு நெருப்பு உருண்டையாக மாறி இளவரசியைச் சூழ்ந்து கொண்டன.

இளவரசி தன் தலையிலிருந்து ஒரு மல்லிகைப் பூவைக் கிள்ளியெடுத்து, மந்திரித்து எறிந்தாள். இதன் விளைவைப் பார்த்துப் பிரம்மதத்தனே அசந்து போனர். ஒவ்வோர் அக்கினி உருண்டையும், மின்மினிப் பூச்சியாக மாறி ஜன்னல் வழியாக வெளியே பறந்து போயின.

நம்பூதிரி, தன்னுடைய இத்தனை கால வாழ்க்கைக்கு நடுவே இப்படி ஓர் அற்புதத்தைச் சந்தித்ததே இல்லை. இதுதான் முதல் முறை. இவ்வளவு மந்திரங்களை யாரிடமும் பயன்படுத்த நேர்ந்ததில்லை. அதுமட்டுமா, அவரது எல்லா மந்திரங்களும் தோல்வியில் முடிந்துள்ளன.

இளவரசி எதுவுமே நடக்காதது போல் கதவைத் திறந்துகொண்டு வெகு நிதானமாக நடந்து சென்றாள்.

பிரம்மதத்தன் தன்னுடைய சொந்த வீட்டிலிருந்து ஒரு பைத்தியக் காரனைப் போல் ஓடினார். நேராகத் தன் உக்கிரமூர்த்தியின் சிலையை நெருங்கினார். அதன் கையிலிருந்த நீண்ட கூர்மையான சூலத்தைப் பிடுங்கி இளவரசியை நோக்கி எறிந்தார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

35

பிரம்மதத்தன் சூலம் எறிவதற்கு முன்னரே இளவரசி சட்டென்று திரும்பி நின்றாள். தன் கையிலிருந்த ஓலைச்சுவடியை ஒரு கேடயம் போல் அந்தச் சூலத்திற்கு நேராகப் பிடித்தாள்.

பாய்ந்து வந்த சூலம் சற்று நேரம் அப்படியே தயங்கி நின்று பிறகு திரும்பி விர்ரென்று பறந்து போய் பழைய இடத்தில் அந்தச் சிலையின் கையிலேயே பொருந்தி நின்றது.

முற்றிலும் எதிர்பாராத இந்த சம்பவத்தைக் கண்டு பிரம்மதத்தன் ஆச்சரியடைந்தார். உக்கிரமூர்த்தியின் கையிலிருந்த சூலம், அந்த மாந்திரீக ஓலைச்சுவடியின் முன்பு வலுவிழந்து திரும்பி வந்த போதுதான், அந்த ஓலைச்சுவடியின் மகிமை அவருக்கே புரிந்தது. மேற்கொண்டு என்ன செய்வது என்று அவர் யோசித்தபோது இளவரசி படி தாண்டி வேகமாகக் கண்களிலிருந்து மறைந்தாள்.

பிரம்மதத்தன் வெகுவாகப் பயந்து போனார். உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும். அவர் தன் இடுப்பிலிருந்த தாயத்தைப் பிடுங்கி வெகுவேகமாக மண்ணில் வீசியெறிந்தார்.

உடனே அருகிலிருந்து ஒரு ராட்சத உருவம் வெளிப்பட்டது.

சுமார் பன்னிரண்டடி உயரம். முழங்காலைத் தாண்டி வளர்ந்துள்ள தலைமுடி, ஆணா பெண்ணா என்று பிரித்தறிய முடியாத உருவம். கோரைப் பற்களும், தடித்த மூக்கும், நெற்றியில் ஒரே கண்ணுடனும் அந்த உருவம் பயங்கரமாக இருந்தது. அந்த உருவத்தின் இடுப்பில் மனித எலும்புகள் ஆடைபோல் தொங்கின.

"கிழக்குக் கோட்டை அரண்மனைக்குச் சென்று இளவரசி கார்த்தியாயினியைக் கொன்றுவிட்டு, அந்த இடத்தையே தரைமட்ட மாக்கி விட்டுத்தான் நீ திரும்பி வரவேண்டும்!" நம்பூதிரி அந்த உருவத்திடம் கட்டளையிட்டார்.

உடனே அந்த உருவம் உயர்ந்து பறந்தது.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

மறுவிநாடி எதுவோ தகர்ந்து விழும் ஓசை கேட்டது. என்னவென்று தெரிந்து கொள்வதற்காக நம்பூதிரி வெளியே வந்து பார்த்தார். தனது வீட்டின் வடக்குப் பகுதியிலிருந்த பனை மரத்தின் மேல்பகுதி காணாமல் போயிருந்தது. தான் அனுப்பிய துர்ப்பூதம் பயணம் செய்த வழி அது என்று தெரிந்து கொண்டபின், அவர் ஆறுதலடைந்தார். இவ்வளவு சக்தி வாய்ந்த அந்த உருவம் அரண்மனையை அடைந்தால் அதன் கதி என்ன ஆகும் என்று கற்பனை செய்தார்.

அந்த பூதம் நேராகக் கிழக்குக் கோட்டையின் வாசலை அடைந்து கீழிறங்கி நின்றது.

அந்த இடம் அமைதியாக இருந்தது. எந்தவிதமான சத்தமும் கேட்கவில்லை. அங்கு நின்றபடியே அந்த உருவம் அங்கிருந்த புளிய மரத்தின் பெரிய கிளை ஒன்றைப் பிடுங்கிக் கீழே எறிந்தது. பயங்கரமான சத்தத்துடன் அது கீழே விழுந்தது.

இளவரசி வெளியே வந்தாள். கோட்டைக்கு எதிரில் நிற்கும் அந்த உருவத்தைக் கண்டாள். வாசலில் நிலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. விளக்கை நெருங்கிய இளவரசி அதில் எரிந்து கொண்டிருந்த திரியை எடுத்து, அந்த உருவத்தை நோக்கி வீசி எறிந்தாள்.

சட்டென்று அந்தத் திரி ஒரு ஜுவாலையாக உயர்ந்து எழுந்து அந்த உருவத்தை நெருங்கியது. அந்த உருவம் தனது கையிலிருந்த சக்கராயுதத்தால் அதைத் தடுதத்து. அந்தத் திரி மீண்டும் சிறியதாக மாறியது.

சற்று வியப்படைந்த இளவரசி, இப்பொழுது வந்துள்ள உக்கிரமூர்த்தி வலுவான நபர்தான் என்பதை உணர்ந்தாள். இருப்பினும் அதைச் சமாளித்துவிடலாம் என்று தோன்றியது. எனவே, அந்த விளக்கில் எரிந்து கொண்டிருந்த மற்றொரு திரியை எடுத்து மந்திரம் ஓதி, அந்த உருவத்திற்கு நேராக எறிந்தாள்.

ஆகாயத்தில் அக்கினி வளையங்களைப் படைத்தபடி அந்தத் திரி பறந்துபோனது. ஆனால் அது அந்த உருவத்தைச் சுற்றிச் சுற்றி வந்ததே தவிர, அதை நெருங்கவில்லை!

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இளவரசி ஒரு கணம் பதறினாள். தன்னைக் கொன்று அந்தக் கிரந்தத்தை எடுத்துச் செல்வதுதான் அந்த பூதத்தின் நோக்கம் என்று புரிந்தவுடன், இளவரசி உட்புறம் சென்றாள். அந்த ஓலைச்சுவடி நிலவறைக்குள் பத்திரமாக வைக்கப்பட்டிருந்தது. அதனுடைய அபாரமான சக்தி இளவரசிக்குப் புரிந்திருந்தது. அதனால் என்ன நேர்ந்தாலும் அது மீண்டும் நம்பூதிரியை அடையக்கூடாது என்று நினைத்தாள்.

அந்த ஓலைச்சுவடியை ஒரு பித்தளைப் பெட்டிக்குள் போட்டு நிலவறையிலுள்ள ரகசிய அறைக்குள் வைத்திருந்தாள் இளவரசி. கேசவன் அதைப் பார்த்துவிடக்கூடாது என்பதற்காகவே அப்படிச் செய்திருந்தாள்.

கேசவன் எழுந்து வெளியே வந்தான். புளிய மரக்கிளை விழுந்த சத்தம் காதில் கேட்டாலும், இப்படிப்பட்ட அசாதாரணமான சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதால் கேசவன் அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவும் இல்லை. இருப்பினும் ஏதோ ஒரு சந்தேகம் தோன்றிய தால் வெளியே வந்து பார்த்தான். அப்போது ஒரு பிரம்மாண்டமான கை கீழ்ப்புறமாக நீண்டு வருவதைக் கண்டான்.

தலை உயர்த்திப் பார்த்தபோது அந்த பயங்கர உருவம் கண்ணில் தட்டுப்பட்டது. அதைச் சமாளிக்க முடியாது என்று கருதிய கேசவன் சட்டென்று உள்புறம் விரைந்தான்.

நாகமோகினியிடமிருந்து கிடைத்த சூலத்தை எடுத்து வருவது அவனது நோக்கம். சூலத்தைக் கையிலெடுக்கச் சென்றபோது வசந்தசேனை பின்னால் நின்றிருந்தாள்.

"எதற்காக எடுக்கிறீர்கள்?" அவள் கேட்டாள்.

"வெளியே நம்பூதிரி ஏவியிருக்கிற ஒரு பூதம் வந்திருப்பதை நீ பார்க்கவில்லையா?" கேசவன் கேட்டான்.

"பார்த்தேன். ஆனால், இந்தச் சூலத்தை அதற்குப் பயன்படுத்தாதீர்கள்" வசந்தசேனை தடுத்தபடி கூறினாள்.

"வேறு எப்படி அதை சமாளிப்பது?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"பிரம்மதத்தன் தன் இடுப்புத் தாயத்தில் அடக்கி வைத்திருந்த உக்கிரமூர்த்திதான் வந்திருப்பது. இதன் சரியான சக்தி எவ்வளவென்று நமக்குத் தெரியாது."

"அது எதற்காக வந்திருக்கிறது என்பதாவது தெரியுமா?"

"இளவரசியின் பின்னாலேயே அது பாய்ந்து வருவதை நான் பார்த்தேன்."

"எதற்காக வந்திருக்கும்?"

"மேலக்காவு மனையிலிருந்து ஏதாவது விலையுயர்ந்த பொருளை இளவரசி எடுத்து வந்திருக்க வேண்டும்."

"அது என்னவென்று தெரியாதா?"

"நான் பார்த்துவிட்டு வருகிறேன்."

அவள் ஒரு வண்ணத்துப் பூச்சியாக மாறிப் பறந்து போனாள். நிலவறையின் மேற்பகுதியை அடைந்து உட்புறம் பார்த்தபோது, இளவரசி எதையோ எரிப்பதைப் பார்த்தாள். உற்றுக் கவனித்தபோது, ஒரு தடித்த ஓலைச்சுவடியிலிருந்து உருவி எடுக்கப்பட்ட ஒவ்வொரு பக்கமும் நெருப்பில் எரிவது தெரிந்தது.

இளவரசி அதை எரிப்பதற்குக் காரணம் இருந்தது. அவ்வளவு மதிப்பு வாய்ந்த அந்த ஓலைச்சுவடியை மறுபடியும் பிரம்மதத்தனிடம் தர இளவரசியின் மனது இடம் தரவில்லை. வந்திருக்கிற பூதத்தைப் பார்த்தால் இதை எடுத்துச் செல்லாமல் இருக்காது. ஆகவே, அதை அழித்துவிட நினைத்தாள்.

ஒவ்வோர் ஓலையிலும் உன்னதமான மந்திரங்கள் இருப்பதை வசந்தசேனை கவனித்தாள். ஆனால், அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. எந்த வடிவத்திலிருந்தாலும் இளவரசி தன்னைச் சட்டென்று அடையாளம் கண்டுபிடித்துவிட முடியுமென்று அவளுக்குப் புரிந்தது.

எனவே அவள் விரைவாகப் பறந்து வந்து, தன்னுடைய சுய வடிவை அடைந்து விஷயத்தை விளக்கினாள். "எப்பாடு பட்டாவது அந்த ஓலைச்சுவடியைக் காப்பாற்றுங்கள்!" என்றாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அதற்குள் இந்தப் பூதம் இந்த அரண்மனையை இடித்துத் தரைமட்டமாக்கி விடுமே."

"பரவாயில்லை. அதை நான் கவனித்துக் கொள்கிறேன். நான் அதனுடன் மோதுவதில் ஒரு சிறப்பும் உண்டு."

வசந்தசேனை அங்கிருந்து நகர்ந்தபோது, கேசவன் நிலவறையை நோக்கி நடந்தான். அதை நெருங்கியபோது ஓலை எரியும் மணமும் புகையும் தெரிந்தன.

"இளவரசி என்ன செய்கிறீர்கள்?" நிலவறையின் மேல்பகுதியில் நின்றபடி கேட்டான்.

"யாரது, கேசவனா? இறங்கி வாருங்கள்."

உட்புறம் இறங்கினான்.

"ஏன் இதை எரிக்கிறீர்கள்? இது ஒரு நல்ல மந்திரச்சுவடியாகத் தெரிகிறதே."

"உண்மைதான். ஆனால் இதை வேறு யாரும் கைப்பற்றக்கூடாது. பிரம்மதத்தனிடமிருந்து எடுத்து வந்த ஓலைச்சுவடி இது. இது அழிந்து போனால் இதைப்போல் வேறு ஒன்றை அவரால் சுலபத்தில் பெற முடியாது."

"இதை நாம் பாதுகாத்து வைக்கக் கூடாதா?"

"கூடாது."

"ஏன்?"

"எங்கிருந்தாலும் இதை பிரம்மதத்தன் கவர்ந்து எடுத்துச்சென்று விடுவார்."

"வேண்டாம், இதை அழிக்காதீர்கள்" கேசவன் இளவரசியின் கையைப் பிடித்துத் தடுத்தான்.

சட்டென்று விளக்கு சரிந்து விழுந்து ஓலையின்மீது எண்ணெய் பரவி தீ கொழுந்து விட்டெரிந்தது. அப்போது -

"நிறுத்துங்கள்" என்று ஒரு கட்டளைக் குரல் கேட்டது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

36

குரல் கேட்டுக் கீழ்ப்புறமாகத் திரும்பியபோது நிலவறைக்குள் தெளிவற்ற ஓர் உருவம் தென்பட்டது.

தலையிலும், முகத்திலும் முடி வளர்ந்து செழித்திருந்த அந்த உருவத்தின் கண்கள் மட்டும் தெளிவாகத் தெரிந்தன.

"எதற்காக இந்த ஓலைச்சுவடிகளை எரிக்கிறீர்கள்?" அந்த உருவம் கேட்டது.

"இதை அழிக்கவில்லையென்றால் ஆபத்து!" இளவரசி கூறினாள்.

"இந்தச் சுவடியில் அடங்கியுள்ள மகத்தான மந்திரங்களைப் பற்றி உனக்குத் தெரியாதென்று நினைக்கிறேன்" ஓலைச்சுவடியின் இதழ்கள் அப்பொழுது கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தன. எரியும்போது அந்த நெருப்பில் சில மந்திர உச்சரிப்புகள் கேட்டன. எரிந்து போன ஓலைகளில் சம் கிருத எழுத்துகள் மின்னிக் கொண்டிருந்தன.

நிலவறைக்குள் தோன்றிய அந்த உருவத்தைக் கேசவன் உற்றுக் கவனித்தான்.

"நீங்கள் யார்?" இளவரசி அந்த உருவத்திடம் கேட்டாள்.

"நான் யாரென்று நீ அறிய வேண்டியதில்லை. ஆனால் நான் ஒரு எச்சரிக்கைக் குறிப்பு தருகிறேன். உன்னைவிட எனக்கு வல்லமை அதிகம் என்பதைப் புரிந்துகொள்."

நிலவறைக்குள் அவர்கள் பேசிக்கொண்டிருந்த அதேசமயம், வெளியே வசந்தசேனை அந்தப் பூதத்தை நேரிட்டுக் கொண்டிருந்தாள். அந்தப் பைசாசிக உருவத்தின் இடது கை கீழ்ப்புறமாகத் தாழ்ந்து வசந்தசேனையின் தலைமுடியை இறுகப்பற்றியது. அவளை மேற்புறம் தூக்க முற்படுவதற்கு முன்பாக அவளாகவே மேற்புறம் உயர்ந்தாள்.

தரையிலிருந்து மேற்புறம் எழும்பாமல் உருவத்தால் மேல் நோக்கி வளர்ந்து கொண்டிருந்தாள். நிமிட நேரத்திற்குள் இருவரும் ஒரே அளவு உயரமானார்கள். ஆனால் வசந்தசேனை மேலும் வளர்ந்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இந்த வேடிக்கையைப் பார்த்தபோது அந்தப் பைசாசிக உருவம் பதற்றமடையத் தொடங்கியது. அது வசந்தசேனையின் தலை முடியைக் கையிலிருந்து நழுவ விட முயன்றது. ஆனால், அதற்குள் அவளது தலைமுடிதாறுமாறாகக் கலைந்து அதன் கையை எடுக்க முடியாதபடி பின்னிப்பிணைந்து கொண்டது. மீண்டும் வசந்தசேனை வளரத் தொடங்கியபோது, அந்த உருவம் சிறிய வடிவம் போல் தோன்றியது. சற்று நேரத்திற்குள் மிக பிரம்மாண்டமாக வளர்ந்த வசந்தசேனை, தன் தலையை வட்டமாகச் சுற்றத் தொடங்கினாள். வெகு வேகமாக அவள் தலையைச் சுற்றியபோது அவள் தலைமுடி அந்தப் பூதத்தைப் பிடித்திருந்த பிடியைச் சட்டென்று தளர்த்தியது.

அந்த உருவம் தூரத்தில் போய் விழுந்து தெறித்தது. பிறகு மேலக்காவு மனையின் முற்றத்தில் போய் விழுந்து நிலம் தொட்டது. ஓர் அலறலும், ஏதோ விழுந்த பயங்கரமான சத்தத்தையும் கேட்டு பிரம்ம தத்தன் வெளியே வந்தார். கிழக்குக் கோட்டை அரண்மனையைத் தகர்ப்பதற்காகத் தான் அனுப்பிய கராள ரூபினி பரிதாபமாகத் தரையில் விழுந்து கிடந்தது.

தான் தோல்வியடைகிறோம் என்பதை உணர்ந்த பிரம்மதத்தன் விபூதியில் மந்திரம் ஓதி அந்த உருவத்தின் மீது ஊதினார். அந்த உருவம் மறைந்தது.

மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையை கைக்கொள்வது என்று யோசித்தபடி, நம்பூதிரி தன்னுடைய பூஜையறைக்குள் சென்று அமர்ந்தார்.

சமீப காலமாக தான் எல்லாவற்றிலும் தோல்வியடைந்து கொண்டிருக்கிறோம் என்பது அப்பொழுதுதான் அவருக்குப் புரிந்தது. ஆகவே, எவ்வளவு விரைவாகக் கடைசி பலியையும் நடத்தி, பயங்கரத் தோற்றமுள்ள கண்டாகர்ணனிடமிருந்து அற்புதமான மந்திரங்களைக் கைப்பற்ற முடியுமோ அவ்வளவு விரைவாகக் கைப்பற்றியதாக வேண்டும். இல்லாவிட்டால் தன்னுடைய நிலையே கேள்விக் குறியாகி விடுமென்று தோன்றியது. அதற்காக உடனடியாக ஒரு கன்னிப் பெண்ணை எப்படியாவது கொண்டு வரவேண்டுமென்று நினைத்தார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

மறுநாள் ராவுண்ணியார் வந்தவுடன் நம்பூதிரி அவரிடம் கூறினார்: "ராவுண்ணியாரே, நிலைமை மிகவும் சிக்கலாக உள்ளது. 'நானா, எதிராளியா' என்கிற நிலை. எப்படியாவது அவனைக் கீழ்ப்படிய வைக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் இத்தனை நாட்களாக செய்வதெல்லாம் பயனற்றதாகி விடும். வரவர என்னால் வேறு எதையுமே யோசிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நல்ல யோசனையாக ஒன்று சொல்லுங்கள், பார்க்கலாம்."

ராவுண்ணியார் சாமானியமானவர் அல்லர். ஊரையே விற்று விடும் வல்லமை பெற்றவர். இந்த அறுபது வயதிற்குள் அவர் செய்யாத வஞ்சனைகள் இல்லை. பிரம்மதத்தனுக்காகவே அதில் முக்கால் பாகம் செய்துள்ளார். ஏழு ஜன்மங்களுக்குத் தேவையான மொத்தப் பாவங்களையும் இந்த ஒரே ஜன்மத்தில் செய்து விட்டிருந்தார் அவர்.

"உங்கள் எதிராளியும் பெண்கள் விஷயத்தில் நல்லவன் என்று கூற முடியாது" வெகு நேர ஆலோசனைக்குப் பிறகு ராவுண்ணியார் கூறினார்.

"இது என்ன திடீர் ஞானோதயம்?"

"ஆள் வசிப்பதே கிழக்குக்கோட்டை அரண்மனையில். அங்கு இன்னும் மரணமடையாத அந்த இளவரசி இருக்கிறாளே. எனக்கு விவரம் தெரிந்தே அங்கு எத்தனையோ பேர் சென்று சிக்கி உயிரிழந்திருக்கிறார்கள்."

"சரி... மீதியையும் சொல்லுங்கள்."

"அங்கு அவன் வசிப்பதால் இளவரசியை மகிழ்ச்சிப்படுத்தாமல் இருக்க முடியாது. அப்படி இளவரசியைத் திருப்திப்படுத்தி அங்கே தங்குபவன் சாமானியமானவனாக இருக்கவும் முடியாது."

"உண்மை, நான் இதுவரையில் யோசித்துப் பார்க்காத ஒரு விஷயம். உண்மையிலேயே நீங்கள் புத்திசாலிதான். மீதி உள்ளதையும் சொல்லி முடியுங்கள்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இப்படிப் பார்க்கும்போது, நாம் ஒரு பெண்ணை அங்கே அனுப்பினால் என்ன? பெண் என்று நான் சொல்வது உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்."

"புரிகிறது. ஆனால் நாம் அனுப்பும் பெண்ணின் வலையில் அவன் விழ வேண்டுமே. அதுதானே சிக்கல்."

ராவுண்ணியார் மறுபடியும் யோசித்தார். பிறகு உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்து சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு திரும்பவும் பேசத் தொடங்கினார்.

"அழகான ஒரு பெண் என்றால் அது யோகினியாகவே இருக்கட்டும். பார்த்த உடனே அவளுடன் உறவு கொள்ள அவன் விரும்பும் விதத்தில் ஏதாவது வசிய மந்திரமும் செய்து அனுப்பிவிட வேண்டியதுதான். சரியான உச்சகட்டத்தில் யோகினி தன் சுய உருவைக் காட்டி, வந்த வேலையை முடித்துவிட வேண்டியதுதான். என்ன சொல்கிறீர்கள்?"

"பரவாயில்லை, இனிமேல் இந்த ஒரு வழிதான் புலப்படுகிறது."

"இன்னுமொரு விஷயம். நாம் அனுப்பும் யோகினி, ஒரு மோகினி போல் அழகியாக இருந்தால் நாம் வெற்றி பெற்ற மாதிரியேதான்."

"நீர் இப்பொழுது கூறியதுதான் மெத்தச்சரி. என்னை விட உமக்கு புத்தி அதிகம். ஏற்கனவே அவனுக்குத் துணையாக ஒரு மோகினி இருக்கிறாள். அவளை நான் ஹோமிக்க முயன்றேன். ஆனால் முடியவில்லை. அதுவும் நல்லதற்குத்தான் என்று இப்பொழுது தோன்றுகிறது" பிரம்மதத்தனின் மனம் மற்றொரு திசையில் சென்றது. விநாடி நேரத்திற்குள் அவருக்கு ஒரு மாற்று வழி புலப்படவும் செய்தது.

'தனது மாந்திரீக சக்தியால் ஒரு யோகினியை, கேசவனுக்குத் தெரிந்த மோகினியின் வடிவத்தில் அங்கு அனுப்ப வேண்டும். கேசவனுடன் அவள் எப்படியாவது படுக்கை அறைக்குச் செல்ல வேண்டும். அத்துடன் கேசவன் தொலைந்தான். அதன்பிறகு தனக்கு எந்தவிதமான பிரச்சினையுமில்லை. உடனேயே நாற்பத்தொன்றாம் பலியையும் நடத்தி மகத்தான மந்திர சக்தியையும் பெற்று விடலாம்.'

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ராவுண்ணியாரே. நீங்கள் சொன்ன வழியிலேயே செயல்படலாம். அதற்கு முன்னால் மற்றொரு வேலை செய்ய வேண்டும். அந்த மோகினி எப்படி இருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு என்ன வழி?"

"அதற்கும் ஒரு வழியுண்டு. வடக்குத் திசையில் ஒரு மந்திரவாதி இருக்கிறார். அவரிடம் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட மாயக்கண்ணாடி ஒன்று உள்ளது."

"நானும் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். உண்மைதான். நாம் அங்கே போய்விட்டு வரலாம். முடிந்தால் அந்தக் கண்ணாடியையும் கடத்திக்கொண்டு வரவேண்டியதுதான். திவ்யமான சக்தி நிறைந்த அப்படிப்பட்ட கண்ணாடி ஒன்று நம்மிடம் இருப்பதும் நல்லதற்குதான். அதனால் பல காரியங்களைச் சாதிக்க முடியும்."

"நீங்கள் இந்த விஷயத்தைத் தீர்மானம் செய்துவிட்டால் உடனே பயணம் புறப்பட வேண்டியதுதான். இன்றேகூடப் புறப்பட்டால் நல்லது" தூரப் பிரயாணத்தில் விருப்பமுள்ள ராவுண்ணியார் ஆவலுடன் கூறினார்.

பிரம்மதத்தன் நம்பூதிரியுடன் பல இடங்களுக்கும் பயணம் செய்தவர் ராவுண்ணியார். மாந்திரீகனான நம்பூதிரிக்குப் பல வீடுகளுடன் தொடர்பு இருந்தது. அங்கெல்லாம் ராவுண்ணியாருக்கும் பங்கு கிடைப்பதுண்டு.

"இன்று மதியத்திற்கு மேல் புறப்படலாம்" நம்பூதிரி கூறினார்.

"நான் எப்பொழுதும் தயார். ஒரே ஒரு விண்ணப்பம். ராத்திரி நேரத்தில் ஏதாவது வீட்டில் படுக்க வேண்டும். அதுமட்டும்தான் என்னுடைய விருப்பம்."

"அதையெல்லாம் கவனித்துக் கொண்டால் போயிற்று. போய்த் தயாராக வாரும்."

அன்று மதியத்திற்கு மேல் இருவரும் பயணம் புறப்பட்டனர்.

கிழக்குக்கோட்டை அரண்மனையில் கேசவன் விரதமிருப்பதாகக் கூறியதால் இரவுநேரத்தில் இளவரசி வருவதில்லை. அதனால்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

கேசவன் இளவரசிக்குத் தெரியாமல் நிலவறையை ஓர் இரவில் நெருங்கினான்.

'நிலவறைக்குள் தான் பார்த்த உருவம் யார்? அது ஏன் அங்கு வசிக்கிறது?' என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவனுக்கு ஏற்பட்டது. இன்றுவரை அந்த அரண்மனையில் வசித்திருந்தும் தனக்குத் தெரியாத ஏதோ ஓர் அற்புதமான மனிதர் அவர் என்று அவனுக்குத் தோன்றியது.

நள்ளிரவில் கையில் விளக்குடன் நிலவறையை அடைந்தான். நிலவறையின் மேற்புறப் பலகையை மெதுவாக அகற்றினான். அப்பொழுது கீழேயிருந்து அந்தக் குரல் கேட்டது.

"கீழே இறங்கி வரவேண்டாம். அங்கேயே இருங்கள்."

கேசவன் அங்கேயே நின்றான். கீழேயிருந்து யாரோ மேலேறி வரும்படி காலடி ஓசை கேட்டது. கேசவன் வழிவிட்டுச் சுவரோரமாக ஒதுங்கி நின்றான்.

அவன் கையிலிருந்த விளக்கொளியில் உயரமான, கம்பீர வடிவத்தைக் காண முடிந்தது. ஆஜானுபாகுவான ஒரு மனிதன்.

தோளைத் தாண்டி மடிந்து வளர்ந்து கிடந்த தலைமுடி, வெள்ளைப்பட்டு நூல் போன்ற முடியிழைகள், தாடியும் மீசையும் இணைந்து தொப்பூழ் வரையில் நீண்டிருந்தன. கழுத்தில் ஒரு நீண்ட ருத்திராக்ஷ மாலை, தங்கக் கம்பிகளில் கோக்கப்பட்டிருந்தது. தங்கச் சரிகை போட்ட வேட்டி. கையின் மணிக்கட்டு, தோளின் கீழ்ப்புறம் போன்ற இடங்களில் நாக வடிவமுள்ள அணிகலன். நெற்றியில் நாக வடிவம் தாங்கிய விபூதிப்பூச்சு. யார் பார்த்தாலும் பணிவுடன் மரியாதை செலுத்தத்தக்க அந்த உருவத்தைக் கேசவன் வணங்கினான்.

"யார் நீ?" கட்டளையிடும் குரலில் அந்த உருவம் அவனிடம் கேட்டது.

"என்னுடைய பெயர் கேசவன்."

"இங்கு எதற்காக வந்தாய்?"

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இந்த இடத்தை அழிக்கக் கங்கணம் கட்டிப் புறப்பட்டிருக்கும் மகாமாந்திரீகனான பிரம்மதத்தனை எதிர்க்க வந்திருக்கிறேன்."

"உன்னால் அது எப்படி முடியும்?"

"துர்காதேவி கோயிலுக்கு வழி காணவே நான் இங்கு வந்து தங்க நேர்ந்தது. இளவரசி எனக்கு அபயமளித்தார்."

"அது உனது திறமைக்குக் கிடைத்த பரிசு. இல்லாவிட்டால், மேற்குப் புறத்திலுள்ள குளத்தில் சமாதியடைந்தவர்களின் கூட்டத்தில் நீயும் ஒருவனாக அமிழ்ந்திருப்பாய்."

கேசவன் மௌனமாக அவரைப் பார்த்துக்கொண்டே இருந்தான். அந்த முகத்தில் மேன்மையான குடும்பச் செருக்கும் அதிகாரமும், கம்பீரமாகச் சுடர்விட்டன.

"தாங்கள் யாரென்று அடியேனுக்குத் தெரியவில்லை. தெரிந்து கொள்ள மிக்க ஆவல் உள்ளவனாக இருக்கிறேன்."

"நான் சொல்கிறேன். ஆனால் நீ பயப்படக் கூடாது."

37

கேசவன் வியப்புடன் அவரையே பார்த்துக் கொண்டு நின்றான். 'இவ்வளவு நாட்களாக இவரும் அரண்மனையில் இருந்திருக்கிறாரா? இதுவரையில் ஏன் இவரைப் பார்க்க முடியவில்லை?' யோசித்தான் கேசவன்.

"என்னைப்பற்றி நானே சொல்லி விடுகிறேன். ஆனால் இந்த ரகசியத்தை நீ வேறு யாரிடமும் சொல்லக்கூடாது. உனக்குள்ளேயே பத்திரமாகக் காப்பாற்ற வேண்டும்" அந்த உருவம் கூறியது.

கேசவன் உறுதியளித்தான். "ஒருபோதும் சொல்ல மாட்டேன்."

"அப்படியென்றால் நீ என் முகத்தை கவனமாகப் பார்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

விளக்கு வெளிச்சத்தில் கேசவன் அவரை உற்றுப் பார்த்தான். அவன் பார்த்துக் கொண்டிருந்தபோதே அந்த உருவம் மாறியது. சற்று நேரத்தில் தலையில் தங்கக் கிரீடம், கழுத்தில் ராஜ ஆபரணங்கள், கைகளிலும், புஜங்களிலும் ரத்தின ஆபரணங்கள், இடுப்பில் உடைவாள் எல்லாம் தெரிந்தன.

சாட்சாத் உதயநல்லூர் நாட்டின் தாபகரான உதயவர்மன், எல்லா வகையான லட்சணங்களுடனும் தனக்கு முன்னால் நிற்பதைக் கேசவன் கவனித்தான். அந்த நாட்டை ஆட்சி செய்த மன்னனைக் கேசவன் பணிந்து வணங்கினான்.

"நீ ஒரு நல்ல காரியத்திற்காக வந்திருப்பதால், உனக்கு எப்பொழுதும் என்னுடைய ஆசீர்வாதம் இருக்கும். ஆனால், நீ சொல்லிய உறுதிமொழியை நன்றாக நினைவில் வைத்துக்கொள். என்னை இந்த வடிவத்தில் நீ பார்த்ததை யாரிடமும் சொல்லக்கூடாது. இளவரசி கார்த்தியாயினியிடம்கூட."

"இல்லை, நான் யாரிடமும் கூற மாட்டேன்."

அடுத்த விநாடி அந்த உருவம் மறைந்தது.

தனக்குக் கிடைத்த அற்புதமான அந்தக் காட்சியை மனதில் தேக்கியபடி கேசவன் நடந்தான். கேசவன் படுக்கையறையில் கட்டிலில் தனிமையில் படுத்திருந்தபோதும் அவன் மனம் முழுக்க அந்த உருவமே தங்கியிருந்தது.

சட்டென்று கேசவன் திரும்பிப் பார்த்தான். வாசலில் வசந்த சேனை நின்றிருந்தாள். மல்லிகைப் பூவின் மணம் அறையெங்கும் கவிந்திருந்தது. அவள் அவனை நெருங்கி வந்து கட்டிலில் அமர்ந்தாள்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை."

"நான் ஒரு விஷயம் சொல்லட்டுமா? பிரம்மதத்தனும் ராவுண்ணி யாருடம் வடக்குப்புறமாக யாத்திரை சென்றிருக்கிறார்கள். எதற்காக என்று தெரியவில்லை."

"அவர்களை நீ எங்கு சந்தித்தாய்?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"மோகினி கோயிலுக்கு முன்பாகப் பார்த்தேன்."

"எதற்காக இருக்குமென்று நினைக்கிறாய்?"

"நம்பூதிரி எல்லா வகையிலும் தோல்வி அடைந்திருக்கிறார். அவர் அனுப்பிய யோகினியை நான் வீசி எறிந்தபோது அது போய் விழுந்த இடம் அவர் வீட்டு வாசல். அதை அவர் நேரடியாகப் பார்க்கவும் செய்தார். அதனால் அது தொடர்பாகவே எங்காவது புறப்படுகிறார் என்று நினைக்கிறேன்."

"அவர்கள் திரும்பி வரும்பொழுது எனக்குத் தெரியப்படுத்து. இதில் ஏதாவது உள்நோக்கம் இருக்கலாம்."

"சரி" என்றபடி அவள் கட்டிலில் படுத்தாள்.

"என்ன. இன்றைக்கு இங்கே தங்குவது உனது நோக்கமா?"

"இல்லை... ஆனால் நீங்கள் விரதமிருப்பதாக இளவரசியிடம் கூறுவதைக் கேட்டேன்."

"அவரிடமிருந்து தப்பிப்பதற்காக அப்படிக் கூறினேன்."

"என்னிடம் அப்படித் தோன்றாது என்று நினைக்கிறேன்."

"நான் அப்படிச் சொல்லவில்லையே."

"ஒரு மோகினி என்கிற நிலையில் எனக்குக் கிடைத்திருப்பது பெரிய அதிர்ஷ்டம். ஒரு சங்கிற்குள் அடைபட்டிருந்த என்னை நீங்கள் விடுதலை செய்தபோதே நான் உங்களுக்குச் சொந்தமாகி விட்டேன்."

"எனக்கும் அதில் மகிழ்ச்சிதான்."

"ஆனால். உங்களுக்கு ஊர்மிளாவுடன் உள்ள அன்பு என்னோடு இல்லாமல் இருந்தாலும். எனக்கு அதில் வருத்தமில்லை. சம்ஹார மூர்த்தியான பரமாத்மாவிற்குக் கூட சக்தியும். கங்கையும் உள்ளனர். அப்படி இருக்கும்போது நான் உங்களுக்கு அதிகமான ஒரு சுமையாக இருக்க மாட்டேன் என்றே தோன்றுகிறது."

"நான் ஒருபோதும் அப்படி நினைத்ததில்லை."

"ஏன் விலகியிருக்கிறீர்கள்?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

கேசவன், வசந்தசேனையின் நெற்றி மையத்திலிருந்து கீழ்ப்புறமாக விரலால் வருடினான். மூக்கு, உதடு, நெஞ்சு என்று அந்த விரல்கள் ஊர்ந்து அவளது தொப்பூழ்க் கொடியை அடைந்தன.

வசந்தசேனை உடல் சிலிர்த்தாள். அப்படியே கட்டிலில் சாய்ந்தாள். கேசவன் அவள் தலைமுடியில் விரலால் அளைந்தான்.

உடையற்ற அவளது தோள் மற்றும் கைப்பகுதிகளிலும் அவனது விரல்கள் படிப்படியாக ஊர்ந்தன.

எவ்வளவு அழகானவள்; நல்லவள்!

மனிதர்களிடம் காணமுடியாத அபரிமிதமான அழகு அவளிடம் நிறைந்து வழிந்தது.

"இந்த அரண்மனைக்குள் இதே அறைக்குள் எத்தனையோ இளைஞர்கள் வந்துள்ளனர்..." அவள் கூறினாள்.

"அத்தனை பேரையும் நீ கவனித்திருக்கிறாய் இல்லையா?"

"ஆமாம், அவர்களில் அரசகுமாரர்களும் இருந்தனர். இந்தக் கட்டிலில் எத்தனையோ ஆண்கள் இளவரசியின் படுக்கையைப் பகிர்ந்துள்ளனர். அதையெல்லாம் நான் வேடிக்கை பார்த்திருக் கிறேன்" அவள் எங்கோ தொலைவில் பார்த்தபடி அவனிடம் கூறினாள்.

கேசவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஆனால் அவையெல்லாம் இளவரசியின் சதைப்பசி நிறைந்த கதைகள். யாராலும் அந்த ராட்சசியைத் திருப்திப்படுத்த முடிய வில்லை. உங்களால் மட்டுமே அவரை அடக்க முடிந்திருக்கிறது. அதன் ரகசியம் என்ன?" வசந்தசேனை கேட்டாள்.

"அது நான் என்னுடைய லட்சியத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக நிகழ்ந்தவை. அவர்களுடன் நான் தனியே இருந்த போதெல்லாம்கூட என் மனம் துர்காதேவி கோயிலைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது."

"நீங்கள் இதைச் சொன்னவுடன் எனக்கு மற்றொரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது" வசந்தசேனை எழுந்து உட்கார்ந்தாள். சற்று

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நேர யோசனையிலிருந்து விட்டுக் கேட்டாள். "நீங்கள் நாக மோகினியின் கோயிலுக்குப் போயிருந்தீர்கள். ஞாபகம் உள்ளதா?"

"ஆமாம். போயிருந்தேன்."

"அங்கு அதையும் தாண்டி வேறு ஒரு கோயில் உள்ளது. அது கர்ணபிசாசினி என்கிற தேவதையுடையது. அதைப்பற்றி நீங்கள் ஏதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"இல்லையே."

"அப்படியானால் அங்கு செல்ல வேண்டும். முழுக்கக் கருங்கல்லால் ஆன கோயில். ஆனால், அங்குள்ள சிலையைப் பார்த்து பயந்துவிடக்கூடாது."

"ஏன் இப்படி ஒரு எச்சரிக்கை."

"அந்த அளவுக்கு அது பயங்கரமானது. பார்ப்பவர்களை மிகவும் அச்சுறுத்தக்கூடிய உருவம் அந்த தேவியினுடையது. நீங்கள் அங்கே சென்று மோகினி பூஜை இயந்திரம் வரைந்து, மந்திரம் ஜபிக்க வேண்டும். அப்படிச் செய்தால் நீங்கள் எதைக் கேட்கிறீர்களோ அதற்கான வழியை உங்களுக்குச் சொல்லித் தரும்."

"இது எப்படி உனக்குத் தெரியும்?" கேசவன் கேட்டான்.

"நேற்று இரவு நான் இளவரசியின் அறைக்கு ஒரு பல்லியின் உருவில் சென்றேன். அங்கிருந்த ஓலையில்தான் இந்தச் செய்தி இருந்தது."

"அந்த ஓலை எங்கே உள்ளது?"

"அதை நான் கொண்டு வந்தேன். ஆனால், வரும் வழியில் அது தவறி விழுந்துவிட்டது. இருந்தாலும் அதிலிருந்த மந்திரங்களை நான் மனப்பாடம் செய்து விட்டேன்."

"அப்படியானால் நாம் அங்கே சென்று பார்க்கலாமே."

"இன்னுமொரு விஷயத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். சுத்தமில்லாமல் லட்சம் தடவை மந்திரம் சொல்ல வேண்டும்."

"புரியவில்லை."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"உடல் சுத்தம் இருக்கக் கூடாது. அதாவது குளிக்கக்கூடாது. உடம்பை அசுத்தப்படுத்திய பிறகு குளிக்கக் கூடாது என்று அர்த்தம்."

"இப்பொழுது புரிந்து விட்டது. மந்திரம் தெரியுமல்லவா?"

"உங்களுக்கு சந்தேகமாக இருந்தால் நான் சொல்லித் தருகிறேன். மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்."

அவள் அதைச் சொலலி முடித்தவடன் கேசவனின் கரங்கள் அவளது இடுப்புப் பகுதியில் அமர்ந்தன. பிறகு அவளைத் தன்புறமாக இழுத்தான். பேரழகியான வசந்தசேனையின் உடல் கேசவனின் உடலுடன் ஒன்றியது. இரவில் மூன்றாம் ஜாமத்தில் அவள் எழுந்தாள்.

"நாளை பகல் வேளையில் நீங்கள் அந்த இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். இரவானவுடன் நான் அங்கு வந்து சேர்ந்து கொள்வேன்" வசந்தசேனை கூறினாள்.

"அங்கு நானும் காத்திருப்பேன்" என்றான் கேசவன்.

பிரம்மதத்தனும், ராவுண்ணியாரும் கள்ளிமங்கலத்தை அடைந்தனர். அங்கிருந்த குடும்பத்தார் பரம்பரை பரம்பரையாக மந்திர வித்தை பயின்று தேர்ந்து, அதைக் காத்து வருபவர்கள். அங்குதான் மாயக்கண்ணாடியும் இருந்தது.

கள்ளிமங்கலத்தின் பெரியவர் அவர்கள் இருவரையும் வரவேற்றார். பிரம்மதத்தன் தான் கொண்டு வந்திருந்த பரிசுப் பொருள்களை அவரிடம் வழங்கினார். அதன்பிறகு வந்த காரியத்தை விளக்கினார்.

"நீங்கள் குறிப்பிடும் நபர் மோகினிதான் இல்லையா?"

"ஆமாம்."

"அப்படியானால் முயற்சி செய்யலாம்."

பெரியவர் உட்புறம் சென்று திரும்பினார். அவரது கையில் ஒரு தங்க நிறக் கண்ணாடி இருந்தது. அதை நிலவிளக்கின் பின்புறம் வெளிச்சத்திற்கு நேராகச் சுவரில் சாய்த்து வைத்தார்.

"இதோ, இந்த இடத்தில் பாருங்கள். நீங்கள் யாரைப் பார்க்க வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, அந்தப் பெயரை மனதில்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

உச்சரித்துக் கொண்டே பாருங்கள். அதில் அந்த உருவம் தெரியும்" சொல்லிவிட்டு அந்தப் பெரியவர் கமண்டலத்திலிருந்து சிறிது நீரைக் கையில் சாய்த்து, அதை ஜபித்துவிட்டுக் கண்ணாடியில் தெளித்தார்.

தண்ணீர் பட்டவுடன் கண்ணாடியின் பளபளப்பான பகுதி சிவப்பு நிறமாக மாறியது!

38

அந்தத் தங்கக் கண்ணாடியின் உட்புறம் ரத்தச் சிவப்பாக மாறியது. ரத்தத்தாலான ஒரு தட்டு போல் அது தெரிந்தது. கள்ளிமங்கலத்து மகா மாந்திரீகனான பெரியவர், மந்திரங்களை உச்சரித்தபடி, பூக்களை அதன் மீது எறிந்து கொண்டிருந்தார். சில விநாடிகளுக்குள் கண்ணாடியின் சிவப்பு நிறம் படிப்படியாகக் குறைந்து வெள்ளி நிறமாக மாறியது. பேரழகியான வசந்தசேனையின் அழகான வடிவமும் முக அழகும் தெரிந்தது.

"என்ன ஓர் அழகு! இவளுடன் ஒருநாள் கழித்தாலே அது ஒரு அதிர்ஷ்டம்தான்!" பிரம்மதத்தன் தன்னையறியாமலேயே வாய் விட்டுக் கூறினார்.

"அதற்கு என்ன தடை இருக்கப் போகிறது?" என்றார் கள்ளி மங்கலத்தார்.

"நல்ல வேடிக்கை. மோகினியுடன் சல்லாபிப்பதா? அதனால் ஏற்படும் தோஷம் என்னவென்று யாருக்குத் தெரியும்? சும்மா ஒரு வார்த்தைக்குச் சொன்னேன்."

"அப்படிச் சொல்ல முடியாது. வடக்கு மோகினி மந்திரம் ஜபித்து, தேவியை மகிழ்ச்சிப்படுத்தினால், தேவியே உங்களுடன் படுத்துக் கொள்ள வருவாள் என்றும், மை தருவாள் என்றும் நீங்கள் கேள்விப் பட்டதில்லையா?" கள்ளிமங்கலத்தார் கேட்டார்.

"உண்மைதான். மோகினிதேவியுடன் கிரீடை நடத்தும்போது அதில் தோல்வியடைந்தால் என்ன நடக்கும்? ஆளே போய்விட வேண்டியதுதான்."

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அதற்கான வலுவெல்லாம் உங்களிடமிருந்து விடை பெற்று விட்டது என்கிறீர்கள், இல்லையா?" ஒரு தமாஷ் போல் கேட்டார் கள்ளிமங்கலத்தார்.

"அதுவும் உண்மைதான். என்னால் முடிந்த நேரத்தில் புகுந்து விளையாடி இருக்கிறேன். இனிமேலும் அப்படியே செல்ல வேண்டும் என்பதுதான் என் முயற்சிகள். இந்த மாதிரி நேரத்தில்தான் இப்படியொரு குறுக்கீடு."

"அப்படி என்ன குறுக்கீடு?" கள்ளிமங்கலத்தார் கேட்டார்.

"அது ஒரு பெரிய கதை. நான் ஒரு பெரிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். அதற்கு நடுவே சில சிக்கல்கள் இப்படிப் புதியதாக முளைத்து வருகின்றன. இதோ தெரிகிறாளே, அவள் நமது எதிராளிக்கு உதவுகிறாள். ரொம்ப நெருக்கமும்கூட. இப்பொழுது தான் ஆளையே பார்க்கிறேன். இவளைப் பார்த்தால் யார்தான் படிய மாட்டார்கள்?"

"நூற்றுக்கு நூறு சரிதான். என்ன ஓர் அழகு."

"நானும் எவ்வளவோ பேரைப் பார்த்திருக்கிறேன். ஆனால், இது உண்மையிலேயே ஆளை அசத்தும் அழகுதான்!" கள்ளிமங்கலத்தார் வசந்தசேனையைச் சிலாகித்தார்.

தொப்பூழுக்குக் கீழே, இடுப்பிலிருந்த ஓர் உடை, மார்புக் கச்சை தவிர, உடம்பில் வேறு எங்கும் பொட்டுத் துணி இல்லை . எந்த மகாமுனிவனையும் உணர்ச்சிவசப்படுத்தும் மார்பகங்கள். தலைமுடி புட்டத்தையும் தாண்டி நீண்டிருந்தது.

"என்ன, உருவம் மனதில் தெளிவாகப் பதிந்து விட்டதா?" கள்ளிமங்கலத்தார் கேட்டார்.

"நானும் ஒரு தடவை பரிசோதித்துக் கொள்கிறேனே!" பிரம்ம தத்தன் சுற்றுமுற்றும் பார்த்தார்.

ராவுண்ணியார் வெளிவாசலருகே இருந்தார். தெற்குப் புறத்தில்தான் கள்ளிமங்கலத்தாரின் பூஜை அறை. தூரத்துப் பார்வைக்கு அது ஒரு கோயில் போலவே தெரிந்தது. சிற்ப வேலை

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

செய்யப்பட்ட மரச்சுவர்களும், வாச்ல்களும் தெரிந்தன. ஒவ்வொரு தூணிலும் பூதகணங்களின் உருவம் செதுக்கப்பட்டிருந்தது.

நேர்ப்புறமாக ஒரு வராந்தா. வராந்தாவின் கிழக்குப் புறமாக ஒரு கட்டில். அந்தக் கட்டிலை பைசாசிகமான பூத உருவங்கள் தாங்கிக் கொண்டிருந்தன. கட்டிலில் மான் தோல் விரிக்கப்பட்டிருந்தது. அதில்தான் கள்ளிமங்கலத்தார் படுப்பது வழக்கமாம்.

அந்த அறைக்குள் அவர்கள் இருவரையும் தவிர வேறு யாரும் இல்லை. விளக்கொளி மட்டுமே அங்கிருந்தது.

பிரம்மதத்தன் தன் மடியிலிருந்து ஒரு வெள்ளிச் சிமிழை வெளியில் எடுத்தார். அதனுள்ளிருந்து ஒரு சிட்டிகை விபூதி எடுத்து ஜபித்து, காற்றில் ஊதினார்.

'பூம்' என்கிற சப்தத்துடன் ஒரு தீக்கோளம் அங்கு தோன்றியது. ஜ்வாலை மறைந்தபோது அந்த இடத்தில் மற்றொரு வசந்தசேனை நின்றிருந்தாள். கள்ளிமங்கலம் இரண்டு உருவங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தார். இரண்டும் ஒரே அச்சில் வார்த்தெடுத்ததுபோல் இருந்தன. எந்தவித மாற்றமும் தெரியவில்லை!

பிரம்மதத்தன் மீண்டும் விபூதியைக் காற்றில் ஜபித்து ஊதினார். அந்த உருவம் மறைந்தது.

"இந்த இரவிலேயா திரும்பிப் போகப் போகிறீர்கள்?" கள்ளி மங்கலத்தார் கேட்டார்.

"நாங்கள் உடனே போகவேண்டும். வேறு வழியில்லை. ஒவ்வொரு நிமிடமும் மதிப்பு வாய்ந்தது, இப்பொழுதைய நிலையில்."

"உங்களைச் சரியாக உபசரிக்கக்கூட முடியவில்லையே."

"அதையெல்லாம் பார்த்தால் முடியுமா? இரவாக இருப்பதால் விடைபெற்றுக் கொள்ள முடியவில்லை" பிரம்மதத்தன் எழுந்தார்.

ராவுண்ணியார் வாசலருகிலேயே காத்திருந்தார். இருவரும் ஒன்றாக நடக்கத் தொடங்கினர்.

"வந்த காரியம் வெற்றிகரமாக முடிந்துவிட்டது. இனிமேல் அவன் தொலைந்தான் என்றே எண்ணிக்கொள்ள வேண்டியதுதான்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நீங்கள்கூடத் தோற்றுப் போவீர்களா, என்ன?"

"ஒவ்வொன்றும் வந்து சேர்வதைப் பார்."

இருட்டிற்கு வலு கூடிக்கொண்டே வந்தது. கொஞ்ச நேரம் கழித்து மேற்குப்புறத்திலிருந்து ஓர் இரைச்சல் கேட்டது.

"எஜமான், சீக்கிரமாக எட்டு வையுங்கள். மழை வரும் போல் தோன்றுகிறது. ஒரே இடியும் மின்னலுமாக இருக்கும் என்று தோன்றுகிறது."

விரைவாக நடந்தனர். மழையும் நெருங்கிக்கொண்டிருந்தது.

"அதோ ஒரு மண்டபம் தெரிகிறது. அதில் வேண்டுமானால் கொஞ்ச நேரம் தங்கியிருக்கலாம்" ராவுண்ணியார் கூறினார்.

அப்பொழுது படர்ந்த ஒரு மின்னலில் அந்த மண்டபம் தெளிவாகத் தெரிந்தது. கருங்கல் தூண்களுக்கு மேல் பாறை ஒன்றைக் கவிழ்த்து வைத்தது போன்ற மண்டபம். இருவரும் அதற்குள் ஏறி நின்றனர். மழையும் வலுவாகப் பெய்யத் தொடங்கியது. நல்ல மழை. ஆனால், மண்டபத்திற்குள் ஒரு துளி நீர் வரவில்லை.

"எஜமான், மழை இப்போதைக்கு விடாது என்றே தோன்றுகிறது. நான் கொஞ்ச நேரம் கண்ணுறங்கட்டுமா?" ராவுண்ணியார் கேட்டார்.

"படுத்துக்கொள்ளும்."

படுத்தவுடனே அவர் உறங்கினார்.

பிரம்மதத்தன் தூணில் சாய்ந்தபடியே வெற்றிலை போடத் தொடங்கினார். இடியும் மின்னலும் தொடர்ந்தன. மின்னலில் மழைத்துளிகள் வெள்ளி நூல் போல் இழை இழையாக விழுந்தன. மழை சுலபத்தில் நிற்பது மாதிரி தெரியவில்லை. ராவுண்ணியாரின் குறட்டைச் சத்தம் துல்லியமாகக் கேட்டது.

அதையும் மீறி ஒரு கொலுசுச் சத்தம் பிரம்மதத்தனின் காதுகளுக்குக் கேட்டது.

'என்னய்யா இது. இந்த நேரத்தில் அதுவும் இந்த இடத்தில் யார் அது?' என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு சத்தம் வந்த திசையைப் பார்த்தார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அப்பொழுது படர்ந்த ஒரு மின்னல் வெளிச்சத்தில் எதிரே சிலை போல் ஓர் அழகி தெரிந்தாள். அவளுக்கும் மின்னலின் நிறம்தானோ? அடுத்தடுத்துத் தொடர்ந்த மின்னல்களின் வெளிச்சத்தில் அவள் துல்லியமாகத் தெரிந்தாள். மனதைக் கவரும் எல்லா அம்சங்களும் பொருந்திய ஓர் அழகி. அவள் மெதுவாக அவரை நெருங்கினாள்.

மடக்கிய இடது கையில் இடதுபுறக் கன்னத்தை வைத்துக் குறட்டை விட்டு உறங்கும் ராவுண்ணியாரை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு நம்பூதிரி கேட்டார். "நீ யார்?"

"இங்கு... பக்கத்தில் இருப்பவள்தான்" அந்தப் பெண் பேசினாள்.

"இந்த நேரத்தில் எங்கு வந்தாய்?"

"இந்த மண்டபத்திற்குப் பின்னால் ஒரு கந்தர்வன் கோயில் உள்ளது. அங்கு பூஜைக்காக வந்தேன்."

"உண்மையில் நீ யார்?"

"நான் இந்த மலைப்பகுதியின் காவலரான மலையரசனின் மகள்."

நடுநடுவே மின்னிய மின்னல் வெளிச்சத்தில் தனக்கு முன்பாக நிற்கும் செண்பகப்பூவின் மணமுள்ள அந்தப் பெண்ணை நம்பூதிரி பார்த்தார்.

கடுமையாகப் பெய்து கொண்டிருக்கும் மழை. குளிர்ந்த காற்று. எதிரில் கடைந்தெடுத்த அழகுச்சிலை... நம்பூதிரியின் ரத்தம் கூடேறியது.

"நீங்கள் நம்பூதிரி அல்லவா?" அவள் கேட்டாள்.

"ஆமாம். எப்படிக் கண்டுபிடித்தாய்?"

"பார்த்தாலே தெரிகிறதே."

நம்பூதிரி நிமிடத்திற்கு நிமிடம் உஷ்ணமடைந்து கொண்டிருந்தார். வெற்றிலைப்பாக்கு எச்சிலை மொத்தமாய் காறித் துப்பினார். மேலிருந்த கல்லிலிருந்து விழும் கொஞ்சத்தைக் கையில் பிடித்து மந்திரம் ஜபித்து. அந்தப் பெண்ணின் மேல் தெளித்தார். அவள் புனிதமடைந்தாள். நம்பூதிரி அவளை அந்த மண்டபத்தின் கல்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

தரையில் படுக்க வைத்தார். நிலவொளியின் வலுக்குறைந்த வெளிச்சத்தில் அவளது அழகை அவர் கவர்ந்தார்.

அவளிடமிருந்து வெப்பம் பெற்றபோது நம்பூதிரி தனக்கு இளமை திரும்பியதாக உணர்ந்தார். சற்று நேரத்தில் கண்களை மூடி மயங்கினார் அவர்.

ராவுண்ணியார் அழைத்ததைக் கேட்டுத்தான் நம்பூதிரி கண் திறந்தார். கிழக்கு வெளுத்திருந்தது.

"நான் படுத்தவுடன் நீங்களும் படுத்து விட்டீர்களா?" ராவுண்ணியார் கேட்டார்.

"இல்லை, நான் தளர்ந்துதான் படுத்தேன்."

"நானும் அப்படித்தானே?"

"அப்படியானால் உமக்கும் அந்த அனுபவம் கிடைத்ததா?"

"என்ன அனுபவம்?" ராவுண்ணியார் எதுவும் புரியாமல் கேட்டார்.

"நான் சொன்னது உமக்குப் புரியவில்லையென்று நினைக்கிறேன். இரவில் நான் தனியாகப் படுக்கவில்லை. ஒருவர் துணைக்கு இருந்தார்."

"உண்மையாகவா? இந்த அத்துவானக் காட்டில் யார் வந்தார்கள்?"

"ஓய், தேவையுள்ளவனைத் தேடி வருவார்கள். விழித்திருந்தால் நீரும் புசித்திருக்கலாம்."

பலதடவை அவருடன் ஒன்றாகவே பயணம் செய்துள்ள ராவுண்ணியாருக்கு நம்பூதிரியைப் பற்றி மிக நன்றாகவே தெரியும். அவருக்குக் கிடைப்பதை வஞ்சனையின்றித் தமது காரியதரிசிக்கும் அவர் வழங்குவதுண்டு.

"என்னமோ நான் தூங்கிப்போய் விட்டேன். பிறகு நீர் அழைத்தபோதுதான் எழுந்தேன்" நம்பூதிரி கூறினார்.

"ராத்திரியில் அவள் எதற்காக இந்தப் பக்கம் வந்தாளாம்?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"கந்தர்வன் கோயிலில் பூஜை செய்ய வந்தாளாம். மலையரசனின் மகள் என்றாள்."

"எஜமான், அவள் கன்னிப்பெண்ணாக இருந்தாளோ? இப்பொழுதான் எனக்கு ஞாபகம் வருகிறது."

"அடடா, அதுவும் உண்மைதான். நான் அதைப்பற்றிக் கேட்கவே மறந்து போனேன். நம்முடைய கடைசி பலிக்கு அவள்கூடப் போதுமானதாக இருந்திருக்குமே."

"ஒரு யோசனை, இன்று இரவு நாம் இங்கேயே தங்கிவிட்டால் என்ன?" ராவுண்ணியார் கேட்டார்.

"அதுவும் சரிதான். ஒரு பகல் பொழுதைத் தள்ளி விட்டால் போதுமே. முடிந்தால் இன்று இரவே அவளையும் அழைத்துக்கொண்டு போகலாம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்."

"அப்படியானால் குளி, ஜபம் எல்லாம் செய்ய வேண்டாமா? இங்கு அதற்கு ஏதாவது சௌகரியம் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு வருகிறேன். பக்கத்தில் நிச்சயமாக ஆறு ஏதாவது இல்லாமல் இருக்காது."

சற்று தூரம் நடந்த ராவுண்ணியார் நம்பூதிரியைக் கூவி அழைத்தார். "எஜமான், சீக்கிரம் இங்கு வாருங்களேன்."

39

பிரம்மதத்தன் உடனே அந்தப் பக்கமாக விரைந்தார். ராவுண்ணியார் ஒரு சமாதியின் அருகே நின்றிருந்தார். அவருக்கு எதிரில், உண்மையான அளவையொட்டிய ஒரு பெண்ணின் சிலை இருந்தது. முதல் தடவை பார்த்தபோதே நம்பூதிரி பயந்து விட்டார்.

முதல் நாளிரவு தன்னை நெருங்கிய அதே பெண்ணின் சிலை!

"ராவுண்ணியாரே, இது ஒரு மோகினி சிலைபோல் உள்ளதே."

"ஆமாம் எஜமான். நேற்று ராத்திரி உங்களை நெருங்கிய அதே பெண்ணின் சிலைதான்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நீர்தான் நல்ல தூக்கத்திலிருந்தீரே. பிறகு எப்படி இவள்தான் என்று கூறுகிறீர்?"

"திடுமென்று கண்விழித்தேன். உங்கள் பக்கத்தில் யாரோ படுத்திருப்பதுபோல் தெரிந்தது. சத்தம் போடாமல் தலையை உயர்த்திப் பார்த்தேன். போதாக்குறைக்கு மின்னல் ஒன்று வீசி எனது சந்தேகத்தைத் தீர்த்து வைத்தது."

நம்பூதிரி அந்தச் சிலையை உற்றுக் கவனித்தார். இரவு தன்னோடு இருந்தவள் ஒரு மோகினிதான் என்பது அவருக்குப் புரியவும் செய்தது. அந்தச் சிலையை மீண்டும் ஒரு தடவை கவனமாகப் பார்த்துவிட்டு குளிக்கப் புறப்பட்டார்.

திரும்ப வந்தபோது பொருள்கள் எதையாவது மறந்து வைத்துவிட்டோமா என்று ஞாபகப்படுத்திப் பார்த்த பிறகு மறுபடியும் சிலையை நெருங்கினார். இப்பொழுது அந்தச் சிலையின் காலடியில் தாழம்பூவின் இதழ் ஒன்று கிடந்தது. புதியதாகப் பறித்ததுபோல் நல்ல மணத்துடன் இருந்தது. அதில் தனக்கு ஏதோ செய்தி ஒன்று இருக்கிற தென்று நினைத்த நம்பூதிரி, அதை எடுத்து பத்திரமாக வைத்துக் கொண்டார்.

இருவரும் நடக்கத் தொடங்கினர். வந்த வழி முழுவதும் அந்தத் தாழம்பூ மணம் வீசிக்கொண்டே இருந்தது.

"ராவுண்ணியாரே, இந்தப் பூவின் மூலம் உணர்த்தப்படும் சூசகம் என்ன தெரியுமா?"

"தெரியவில்லையே."

"என்னை மறக்கவில்லை என்று அர்த்தம். இனி நாம் அங்கே சென்றால், நினைத்தாலே வந்து விடுவேன் என்று இந்தத் தாழம்பூ கூறுகிறது."

"அப்படியானால் எனக்கு ஒரு யோசனை."

"சொல்லும்."

"நீங்கள் அந்த மோகினியை எதற்கு வேண்டுமானாலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். உங்களை அவளுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டதென்று அர்த்தம்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

உடனே பிரம்மதத்தனின் மனதில் வேறொரு திட்டம் உருவானது. தாம் எதற்காகப் புறப்பட்டோமோ, அத்துடன் இந்த மோகினியைச் சந்தித்ததையும் ஒன்றுசேர்த்து யோசித்துப் பார்த்தார். சட்டென்று ஒரு முடிவு தட்டுப்பட்டது.

'வீட்டிற்குச் சென்றவுடன் வசந்தசேனையின் உருவத்தில் இந்த மோகினியை அனுப்ப வேண்டியதுதான். கேசவனைத் தொலைக்க இவளே போதும்!" பிரம்மதத்தன் யோசித்தபடியே நடந்தார்.

நாகமோகனியின் மண்டபத்தை அடைந்த கேசவன் கர்ணப் பிசாசினியின் மண்டபத்தை நோக்கி நடந்தான். வசந்தசேனை அந்த மண்டபத்திற்கு அருகில் இருப்பாள் என்று கூறியது நினைவுக்கு வந்தது. மாலை நேரம் மறைந்து கொண்டிருந்தது.

நடக்கும்போது, முற்காலத்தில் மரத்தின் மேற் புறங்களில் பரண்அமைத்துக்கொண்டு வசித்த மனிதர்கள் ஞாபகத்தில் வந்தனர்.

எதிரில் யாரோ நிற்பது போல் தெரிந்தது.

"இந்த வழியில் ஒற்றை மனிதராக நடந்து வருவது யார்?" அந்த மனிதன் கேட்டான்.

"உங்களைப் போலவே நானும் ஒருவன்" கேசவன் பதிலளித்தான்.

"ஆனால், நீங்கள் அபாயத்தை நோக்கியல்லவா பயணமாகிறீர்கள். அதைப்பற்றி எதுவும் தெரியாதா உங்களுக்கு?"

"அபாயத்தை நோக்கியா? எனக்கு அதைக் குறித்து ஒன்றும் தெரியாதே."

"அப்படியானால் நீங்கள் என்னுடன் வாருங்கள்."

"நான் வேறு ஒரு முக்கியமான விஷயத்திற்காகச் சென்று கொண்டிருக்கிறேன்."

"எனக்கும் அது தெரிகிறது. அதனால்தான் உங்களை என்னுடன் வரும்படி அழைத்தேன்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இந்த வார்த்தையைக் கேட்டதும் கேசவன் ஒருகணம் சந்தேகப்பட்டு நின்றான். 'இருளில் நிற்கும் புதிய மனிதன் தன்னைப்பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறான். நான் எங்கே செல்கிறேன் என்பதும் அவனுக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் உடனடியாக அவன் சொல்வதையே கேட்டு நடக்கலாம்' என்று நினைத்தான்.

"உங்களுடன் நான் வருகிறேன். ஆனால். நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள் என்று இதுவரை சொல்லவில்லையே."

"பக்கத்தில்தான் தங்கியிருக்கிறேன். ரொம்பத் தூரமில்லை" புதியவர் கூறினார்.

"உங்களைப் பார்ப்பதற்கு முன் நான் ஒரு பெண்ணைக் கண்டேன். 'அந்தப் பெண்ணால் எப்படி இந்த நேரத்தில் இங்கு வர முடிந்தது?' என்று யோசித்தபோது அவள் சாதாரணப் பெண்ணல்ல என்பது புரிந்தது. உடனே அவளை என்னுடைய இருப்பிடத்திற்குக் கொண்டு சென்று விட்டேன்."

"நீங்கள் அவளை என்ன செய்தீர்கள்?" கேசவன் பதற்றத்துடன் கேட்டான். 'தன்னை எதிர்நோக்கிக் காத்திருந்த வசந்தசேனையை இவர் பார்த்திருக்கிறார். என்னவோ செய்து அவளைக் கடத்திக் கொண்டு போயிருக்கிறார். அப்படியானால் இந்த மனிதனும் சாமானிய மானவனல்ல என்பது உண்மைதான்!' கேசவனது சிந்தனை இவ்வாறு விரிந்தது.

"சரி, வாருங்கள் போகலாம்."

கேசவன் அவரைப் பின்தொடர்ந்தான். நடைபாதையிலிருந்து சற்று இடது புறமாகத் திரும்பிச் சரிவுப்பக்கமாக அந்த மனிதன் நடந்தான்; கேசவனும் அவரைத் தொடர்ந்தான்.

தடைகள் நிறைந்த வழியாக இருந்தது அது. காலை வைத்தவுடன் உருண்டையான கூழாங்கற்கள் உருண்டு சரிந்தன. வெகு கவனமாக நடக்க வேண்டியிருந்தது. சரிவைத் தாண்டியவுடன் வழி மலையடி வாரத்தை நோக்கித் திரும்பியது.

"விழுந்து விடுவீர்கள் என்று பயமேற்படுகிறதா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அதெல்லாம் ஒன்றுமில்லை. பழக்கமில்லாத வழியாக இருப்பதால் சற்றுச் சிரமமாக உள்ளது."

"அப்படியானால் இந்தக் கொம்பைப் பிடித்துக் கொள்ளுங்கள்" அந்த மனிதர் கையில் வைத்திருந்த கோலை அவனிடம் நீட்டினார்.

கேசவன் அதைப் பிடித்துக் கொண்டான். இரண்டு எட்டு வைத்ததும் மூன்றாம் எட்டு எங்கும் கால் பதியாமல் கீழ்ப்புறமாகச் சென்றது. ஒரு விநாடி கேசவன் அந்தக் கொம்பில் தொங்கிக் கொண்டிருப்பது போல் தோன்றியது. ஆனால், மீண்டும் கால் வைத்தபோது எல்லாம் முன்போல் சரியாகிவிட்டது.

"விழுந்தே விட்டீர்கள் என்று பயந்து போனீர்கள் இல்லையா?"

"ஆமாம், என் கால்கள் தரையில் எங்கும் பதியவே இல்லை."

"உண்மைதான். சரியான நேரத்தில் நீங்கள் உங்களது கஷ்டத்தை வெளியிட்டீர்கள். எனது கைக்கொம்பையும் பற்றினீர்கள். நீங்கள் அதிர்ஷ்டசாலிதான். இல்லாவிட்டால் ஆழமான ஒரு பெரும் பள்ளத்தில் விழுந்திருப்பீர்கள்!"

சற்று தூரம் நடந்து சமதளத்தை அடைந்து வலப்புறமாக நடந்தனர். அங்கும் வெளிச்சமிருக்கவில்லை.

"நமது இடத்திற்கு வந்து விட்டோம்" புதியவர் கூறினார். அத்துடன் சற்று முன்புறமாக நகர்ந்து கதவு போல் தோன்றிய ஏதோ ஒன்றை இழுத்துத் திறந்தார். அது ஒரு குகை. மங்கிய நிலையில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் திரியை அவர் தூண்டி விட்டார்.

கேசவன் அந்த விளக்கைப் பார்த்தான். அது தேனடையிலிருந்து எடுத்த மெழுகை ஒரு மூங்கில் முளைக்குள் அடைத்து வைத்திருந்ததைப் போல் இருந்தது.

"இதுதான் எனது இருப்பிடம். பெரும்பாலான காட்டு வாசிகள் இப்படித்தான் செய்கிறார்கள். குகைகளில் வசிப்பவர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்."

"கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இப்பொழுதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறேன்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஏதாவது சாப்பிடுகிறீர்களா?"

"நான் சாப்பிட்டு விட்டுத்தான் வந்தேன்."

"அப்படியானால் குடிப்பதற்கு ஏதாவது தருகிறேன்."

கேசவன் அதற்கு பதிலளித்ததை கவனிக்காமல் காட்டுச் சுரைக்காயின் குடுக்கையிலிருந்து ஏதோ ஒரு பானத்தை ஊற்றிக் கொடுத்தார். கேசவன் அதை வாங்கிக்கொண்டு கையில் வைத்தபடி சற்று நேரம் உட்கார்ந்திருந்தான்.

"பயப்படாதீர்கள். யாரையும் ஏமாற்றும் கூட்டத்தைச் சேர்ந்த வனல்ல நான். தைரியமாய்க் குடிக்கலாம்" அவர் கூறினார்.

அதைக் கேட்டதும் எது வந்தாலும் சரி என்று நினைத்து அதைக் குடிக்க நினைத்தான். உடனே அந்த மனிதர் விளக்கின் திரியை மேலும் உயர்த்தி விளக்கை எடுத்து இருவருக்கும் நடுவே வைத்தார். அப்பொழுதுதான் கேசவன் அந்த மனிதரை முழுமையாகப் பார்த்தான்.

பார்வைக்கு வயதானவராகத் தோற்றமளித்தார். நரைத்த தாடி, மீசை, தலைமுடி ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து ஜடை போட்டிருந்தது. கழுத்தில் ருத்திராக்ஷ மாலை ஒன்றை, இரண்டு சுற்றாக மடக்கிப் போட்டிருந்தார். .

கேசவன் தான் கொடுத்த பானத்தைக் குடிக்கத் தயங்குகிறான் என்பதை உணர்ந்த அந்த மனிதர், உடனே கேசவனுக்கு முன்னா லேயே மற்றொரு பாத்திரத்தில் அதே பானத்தை ஊற்றிக் குடித்தார். உடனே கேசவனுக்கும் தைரியம் ஏற்பட்டது.

கேசவன் அந்தத் திரவத்தை ஒரே மூச்சில் குடித்தான். சற்று நேரத்தில் ஒரு புத்துணர்ச்சி தோன்றியது. உடம்பே மென்மையாகி விட்டதுபோல் தோன்றியது.

"எனக்காகக் காத்திருந்த ஒரு பெண்ணை நீங்கள் சந்தித்ததாகக் கூறினீர்களே! அந்தப் பெண் எங்கே?" கேசவன் கேட்டான்.

"எதற்காக அவசரப்படுகிறீர்கள்? அதற்கு முன்பாக நீங்கள் விரும்பும் வேறு பல விஷயங்கள் உள்ளன. அதையெல்லாம் பார்க்க வேண்டாமா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"எனக்கு விருப்பமானதா?" கேசவன் கேட்டான்.

அவர் அமர்ந்திருந்ததற்குப் பின்புறம் ஏதோ ஒரு விலங்கின் தோல் பதப்படுத்தப்பட்டு சுவரில் மாட்டப்பட்டிருந்தது. அந்த மனிதர் அதை அகற்றினார்.

எரியும் மெழுகு விளக்கின் வெளிச்சம் சட்டென்று உட்புறம் பாய்ந்ததும் கேசவன் திடுக்கிட்டான்!

40

தோல் விரிப்பை அவர் அகற்றியதும் அதற்குள் அவர் சேமித்து வைத்திருந்த பொருள்களைப் பார்த்த கேசவன் திடுக்கிட்டான். உள்ளே உட்குழிவாக இருந்த பொந்தில் மண்டையோடுகளும் எலும்புத் துண்டுகளும் இறைந்து கிடந்தன. மெழுகுவத்தி வெளிச்சத்தில் அவை உயிர்பெற முயல்வதுபோல் தோன்றின.

"எப்படித் தோன்றுகிறது உங்களுக்கு?" அந்த வயதான மனிதர் கேட்டார்.

"பயங்கரமான நிலை."

"ஆனால் இதெல்லாம் எனக்கு அப்படித் தோன்றவில்லை" வெகு இயல்பாகக் கூறினார்.

"ஆமாம். இதையெல்லாம் எங்கிருந்து சேகரித்தீர்கள்?"

"இதெல்லாம் ஆண்களா, பெண்களா? உங்களால் சரியாகச் சொல்ல முடியுமா?

"பார்ப்பதற்கு எல்லாம் ஒரே மாதிரியாக உள்ளன. ஆனால், நம்முடைய தலையளவு பெரிதாக இதில் எதுவுமில்லை."

"இதெல்லாம் பெண்களுடைய தலைகள்தான்."

"எப்படி அவ்வளவு உறுதியாகக் கூறுகிறீர்கள்?"

"சில தடயங்களை வைத்து நான் கண்டறிந்தேன்."

"உங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள நான் ஆவலாக இருக்கிறேன். தயவு செய்து விளக்கமாகக் கூறுங்கள்" கேசவன் வேண்டினான்.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

தொண்டையைச் செருமிக்கொண்டு அவர் பேசத் தொடங்கினார்: "என்னுடைய தாத்தா ஒரு பெரிய மந்திரவாதி. அவரிடமிருந்து நான் நிறைய மந்திரங்களைக் கற்றுக் கொண்டேன். ஆனால், முழுமையடைவதற்குள் அவர் சமாதியடைந்து விட்டார். இருந்தாலும் எனக்குத் தேவையுள்ள மந்திரங்கள் கிடைக்கவே செய்கின்றன. இந்த மலையில் மிகவும் உயர்ந்த பகுதியில் நாங்கள் வசித்திருக்கிறோம். அவர் இறந்த பிறகு நான் அங்கிருந்து கிளம்பி விட்டேன்."

கேசவன் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தான். வசந்த சேனையைக் காணவில்லை. தன் முன்னாலிருக்கும் இந்த மனிதர், அவளுக்கு ஏதாவது அபாயத்தை ஏற்படுத்தியிருக்கலாமோ? அவளை இவர் என்ன செய்திருப்பார் என்று கேசவனால் ஓரளவுக்கு ஊகிக்க முடிந்தது.

எப்படியும் அவளை மீட்டுவிட வேண்டும். முதலில் இந்தக் கிழவனைத் திருப்திப்படுத்தினால்தான் அதையெல்லாம் தெரிந்து கொள்ள முடியும். அதனால் கேசவன் குறுக்கிடாமல் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"இப்படியாக நான் இந்தக் குகையை அடைந்தேன். இது மிகப்பெரிய குகை. இதன் உட்புறம் ஒரு சிலை உள்ளது."

"என்ன தேவதை அது?"

"வாருங்கள், பார்க்கலாம்" பெரியவர் விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டார். தோலை நகர்த்திவிட்டு இருவரும் அதன் உட்புறமாக நடந்து சென்றனர்.

மண்டையோடுகளைத் தொடாமல் கேசவன் எச்சரிக்கையுடன் நடந்தான். உட்புறம் குளிராகவும், காற்றோட்டம் இல்லாமலும். ஏதோ ஒரு பழையநெடி மனதைப் புரட்டியது. விளக்கொளி வெகுதூரம் செல்லவில்லை. ஆனால், பெரியவர் பழக்கமான இடம்போல் விரைந்தார். ஓரிடம் வந்ததும் நின்றார்.

கையிலிருந்த விளக்கைச் சற்று முன்புறமாக நீட்டி மற்றொரு விளக்கை ஏற்றினார். அதன் ஒளி மேற்புறமாக எழுந்தது. உடனே கேசவன் திடுக்கிட்டுப் பின்வாங்கினான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஒரு பிணத்தின் மீது அமர்ந்து கொண்டு மனிதத் தலைகளால் கோத்த மாலையணிந்த எலும்புத் துண்டுகளை ஆடையாக அணிந்த ஒருபெண் உருவம் தட்டுப்பட்டது. வசந்தசேனை கூறியது சட்டென்று ஞாபகம் வந்தது.

கர்ணப்பிசாசினியின் உருவம்தான் எதிரில் தெரிவது. தான் வரவேண்டிய இடத்திற்குத்தான் வந்திருக்கிறோம் என்பது கேசவனுக்குப் புரிந்தது. இங்கிருந்துதான் அசுத்தத்துடன் பிசாசினியை ஜபித்து மகிழ்ச்சிப்படுத்தினால் பக்தன் நினைக்கும் எதிர்கால பலனை தேவி காதில் சொல்லித் தருவாள் என்று வசந்தசேனை கூறியிருந்தாள்.

"இந்த தேவியைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"தெரியாது" கேசவன் பொய் சொன்னான். தனக்கு உண்மை தெரியும் என்று கூறினால். ஒருவேளை தனக்கு ஏதாவது ஆபத்தை இந்தக் கிழவன் ஏற்படுத்தக்கூடுமோ என்று கேசவன் நினைத்தான்.

"இது கர்ணப்பிசாசினிதேவி. இவள் நினைத்தால் நாம் தெரிந்து கொள்ள விரும்பும் எதையும் நமது காதில் சொல்லித் தருவாள். நீங்கள் இங்கு வருவீர்கள் என்பதையே அப்படித்தான் நான் தெரிந்து கொண்டேன்."

"உண்மையாகவா?"

"நான் சொல்வதை முழுவதும் கேளுங்கள். நான் இந்த இடத்திற்கு வரும்பொழுது இந்தப் பலிக்கல்லைச் சுற்றியும் சிவப்பு நிறமான எலும்புத் துண்டுகளும், பெண்களின் ஆடையாபரணங்களும் இறைந்து கிடந்தன. நான் அவற்றையெல்லாம் இங்கிருந்து அகற்றி நீங்கள் பார்த்த இடத்தில் போட்டு வைத்தேன்."

"நீங்கள் யாரையாவது இங்கு பலியிட்டிருக்கிறீர்களா?"

"இல்லை."

"நீங்கள் எதற்காக இங்கு வசிக்கிறீர்கள்?"

"குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை. ஆனால், எனக்குப் பயன்படும்படியாக ஒருவர் என்றாவது இங்கு நிச்சயமாக வருவார் என்கிற நம்பிக்கைதான்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நீங்கள் என்ன விரும்புகிறீர்கள் என்பது எனக்குப் புரிய வில்லையே" கேசவன் சந்தேகத்துடன் அவர் முகத்தைப் பார்த்தான்.

"அன்புக்குரிய இளைஞரே, நீங்கள் இவ்வளவு முட்டாளாக இருக்கிறீர்களே! ஒருவகையில் பார்த்தால் நான் சொன்னது உங்களுக்குப் புரியாமல் இருப்பதே என்னுடைய அதிர்ஷ்டம் என்று நினைக்கிறேன்."

"நீங்கள் பேசுவது எதுவுமே எனக்குப் புரியவில்லை. ஒருவேளை என்னுடைய அறிவுக்குறைவால் அதைப் புரிந்துகொள்ள முடிய வில்லையோ என்னவோ?"

"ஆமாம், நீங்கள் இன்னும் பலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இன்னொன்றையும் நான் யோசிக்கிறேன். இனிமேல் எதற்காக நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்? உங்களுக்கு அழகு உண்டு. ஆரோக்கியயமான நல்ல உடம்பு உண்டு. என்னிடம் ஏராளமான மந்திர ஸித்திகள் உண்டு. ஆனால் நான் வயதானவன். இனிமேல் நான் இந்த உடம்பைக் காப்பாற்றுவதில் என்ன பிரயோஜனம் உள்ளது?" அந்தப் பெரியவர் கேசவனை ஒருமுறை உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பார்த்தார். அந்தக் கண்கள் ஒரு கழுகின் கண்கள்போல் இருந்தன. பார்வையில் வக்கிரமும் நுண்மையும் புலப்பட்டன. கேசவனுக்கு ஏதோ ஒரு விபரீதம் அதில் புலப்பட்டது. பசித்த ஓர் ஓநாயின் பார்வையாக அது அவனுக்குத் தோன்றியது.

"வாருங்கள், நாம் உள்ளே உட்கார்ந்து பேசலாம்" என்றவாறு கிழவர் அங்கிருந்த விளக்கை அணைத்ததும் இருவரும் பழைய இடத்திற்கு வந்து சேர்ந்தனர். பெரியவர் எதைக் குறித்துப் பேசுகிறார் என்பது அப்பொழுதும் கேசவனுக்கு விளங்கவில்லை.

"மந்திரத்தினாலும், தந்திரத்தினாலும் இளமையைத் திரும்பப் பெறுவது என்பது வீண் வார்த்தை. அப்படி யாராவது நினைத்தால் அது உண்மையல்ல. ஆனால் மந்திரத்திலேயே அதற்குச் சில வழிமுறைகள் உண்டு. அதில் ஒன்றுதான் பரகாயப் பிரவேசம் என்கிற கூடு விட்டுக் கூடுபாய்தல்" இதைக் கூறிவிட்டுக் கிழவன் மீண்டும் கேசவனைப் பார்த்தார்.

அவன் பதில் சொல்லாமல் கிழவனையே பார்த்துக் கொண் டிருந்தான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

பெரியவர் மீண்டும் சுரைக்குடுக்கையை எடுத்து அதிலிருந்த பானத்தை ஒரு பாத்திரத்தில் ஊற்றிக் கேசவனிடம் கொடுத்தார். கிழவரும் மற்றொரு பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டார். இம்முறை கேசவன் அதைக் குடிக்காமல் பக்கத்திலிருந்த பாறைமீது வைத்தான்.

"குடிக்கப் பிடிக்கவில்லையா?" அவர் கேட்டார்.

"நான் சாதாரணமாக இதையெல்லாம் சாப்பிடுவது கிடையாது."

"இது உடம்பிற்கு நல்லது. நானே என் கைப்படத் தயாரித்த பானம், சாப்பிடுங்கள்."

"வேண்டாம். ஏனோ எனக்கு அது பிடிக்கவில்லை."

"அப்படியானால் குடிக்காதீர்கள். நான் சொல்ல வந்த விஷயத்திற்கு வருகிறேன்" கிழவர் அந்தப் பானத்தைக் குடித்து விட்டுக் குடுக்கையை மூடி வைத்தார். தொடர்ந்து பேசினார்:

"நாம் இளமையைப் பற்றியும், முதுமையைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம் இல்லையா? நாம் இருவரும் ஒன்றிணைந்தால் எத்தனையோ காரியங்களைச் சாதிக்கலாம். அதாவது உங்களுடைய இளமையும், என்னுடைய அறிவும் இணைந்தால். நான் எதையும் சொல்லாமல் செய்ய மாட்டேன். உங்களது உடம்பில் நான் புகுந்துகொள்ளப் போகிறேன். அதாவது கூடுவிட்டுக் கூடு பாயப் போகிறேன்."

இந்த வார்த்தையைக் கேட்டடதும் கேசவனது உள்ளம் பதறியது.

பிரம்மதத்தன் நம்பூதிரியும் ராவுண்ணியாரும் மனையை அடைந்த பிறகு பிரிந்து சென்றனர்.

நள்ளிரவானபோது நம்பூதிரி தனது படுக்கை அறையில் அமர்ந்துகொண்டு அந்தத் தாழம்பூவை வெளியில் எடுத்தார். அப்பொழுது அதற்கு மணமிருக்கவில்லை. அதை வெகு கவனமாக ஒரு பீடத்தின் மீது வைத்தார். சற்று நேரத்திற்குள் அதன் நிறம் மாறியது. அப்பொழுதுதான் புதரிலிருந்து பறித்ததுபோல் புதியதாகவும் தோன்றியது. அதிலிருந்து மணம் கமழ்ந்தது. சற்று நேரத்தில் மண்டபத்தில் கேட்ட அதே கால் சலங்கை ஒலி கேட்டது. அந்த ஒலி

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நெருங்கி நெருங்கி வந்தது. இறுதியில் அந்த மோகினி எதிரில் வந்து நின்றாள்.

தேக்கு மரத்தில் கடைந்தது போன்ற உடல். சகல அங்கலட்சண சா திரத்தையும் அளவு தவறாமல் பயன்படுத்திப் படைக்கப்பட்ட ஒரு முழுமையான கலை வடிவம் போல் அவள் விளங்கினாள்.

"எஜமான், நான் வந்திருக்கிறேன்."

"உன் பெயர் என்ன?"

"பிணமோகினி."

"இந்தப் பெயர் உனக்குப் பொருத்தமானதாக இல்லையே."

"நீங்கள் என்னை இந்த வடிவத்தில் பார்த்ததனால் இப்படிப் பேசுகிறீர்கள். எனது சரியான வடிவத்தை பார்த்துக் கொள் ளுங்கள். வெளியே நிலா காய்கிறது. அங்கே போகலாம் வாருங்கள்."

நம்பூதிரி அவளுடன் வெளியே நடந்தார்.

"நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" பேசிய விநாடிக்குள் அந்த உருவம் வளரத் தொடங்கியது.

அன்று பௌர்ணமி தாண்டி இரண்டாம் நாள். நல்ல நிலவொளி எங்கும் பரவியிருந்தது. ஒவ்வொரு புல்லின் முனைகளும்கூடத் தெளிவாகத் தெரிந்தன.

நம்பூதிரி பார்த்துக்கொண்டே இருக்க. அந்த உருவம் இரண்டாள் உயரத்திற்கு வளர்ந்தது. மோகினியின் மற்றொரு வடிவம் அங்கே அவருக்குத் தென்பட்டது. பயங்கரம் நிறைந்த பைசாசிக உருவம். நம்பூதிரிக்குத் திருப்தி தோன்றியது. தன் எதிராளியைத் தொலைக்க அருமையான ஒரு கருவி.

"போதும், உன் பழைய உருவத்திற்கு மாறிவிடு."

அவள் பழையபடி அழகியானாள்.

"நான் சொல்கிறபடி நடந்துகொள்வதாகத்தானே சொன்னாய்?" நம்பூதிரி கேட்டார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஆமாம். அதில் சந்தேகம் இல்லை."

"அப்படியானால் நான் இப்பொழுது உனக்கு ஓர் புதிய வடிவம் தரப்போகிறேன்" பிரம்மதத்தன் கண்ணாடியில் தெரிந்த வசந்த சேனையின் உருவத்தை மனதில் வைத்துக்கொண்டே மந்திரங்களை உச்சரித்தார்.

பிண மோகினி, வசந்தசேனையாக மாறினாள்.

"இங்கிருந்து நேர் கிழக்காகச் சென்றால் ஒரு கோட்டை வரும். அங்குள்ள அரண்மனையில் ஓர் இளைஞன் தங்கியிருக்கிறான். அவன் அங்கே இல்லாவிட்டாலும் நீ அங்கே காத்திருக்க வேண்டும். வந்தவுடன் அவனுடன் உறவுகொள். அதன்பிறகு அவன் உயிருடன் இருக்கக்கூடாது. பிறகு நீ திரும்பி வந்ததும் உனக்கு ஒரு நல்ல பதவி கொடுத்து பலிகள் வழங்கி மகிழ்ச்சிப்படுத்தி விடுகிறேன்" நம்பூதிரி உறுதியளித்தார்.

"சரி. ஒப்புக்கொண்டேன். சென்று வருகிறேன்" அவள் அங்கிருந்து விடை பெற்றாள். வாசலைத் தாண்டி அவள் மறைவதை நம்பூதிரி பார்த்துக்கொண்டே நின்றார்.

41

அந்த மந்திரவாதி தன்னைப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறான் என்பது கேசவனுக்குப் புரிந்தது. எப்படியாவது இதிலிருந்து தப்பிக்க வேண்டுமென்று அவன் விரும்பினான். ஆனால், அந்தக் குகையிலிருந்து - மந்திர சக்தி நிறைந்த அந்தக் கிழவனிடமிருந்து தப்பிப்பது அவ்வளவு சுலபமல்ல என்பதும் புரிந்தது.

அந்த நேரம் ஒரு பறவை சிறகடித்த ஓசை கேட்டது. அசாதாரண மான ஒரு சத்தம் அது. சற்று நேரத்திற்குள் அந்தப்பறவை சிறகடித்துப் பறந்தபடி அந்தக் கிழவரின் தோளில் வந்து அமர்ந்தது.

அவ்வளவு அழகான ஒரு பறவையை கேசவன் அதற்கு முன்பு கண்டதே இல்லை. அதன் அலகுகள் கிளியின் அலகுகள் போல இருந்தன. அதன் இறக்கைகளில் எத்தனையோ வர்ணங்கள். ஆனால், அது ஒரு பஞ்சவர்ணக்கிளியாகவும் தெரிய வில்லை.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"இது மிகவும் சிறப்பு வாய்ந்த பறவை. இது பறந்து போக முடியாத இடமே கிடையாது. நீங்கள் வேண்டுமானால் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்" பெரியவர் கூறினார்.

"நான் எப்படிப் பயன்படுத்துவது?"

"அது மிகச் சுலபம். உலகின் மிகப்பெரிய முனிவர்களாலும் தவசிரேஷ்டர்களாலும் வெகுதொலைவிற்குத் தங்களுடைய மனதை அனுப்பவும், உடம்பை தனியே பிரித்து தேவைப்பட்ட இடங்களில் பொருத்தி வைக்கவும் முடியும். இதெல்லாம் சுலபமான விஷயங்கள்."

அவர் எதைப்பற்றிக் கூறுகிறார் என்று கேசவன் ஆவலுடன் கவனித்தான்.

"நீங்கள் எதற்காக இந்தப்பக்கம் வந்திருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த உருவத்தில் இருந்தால் அதெல்லாம் சுலபமல்ல. இந்தப் பறவையின் உடம்பில் நீங்கள் புகுந்து கொண்டால், நீங்கள் எங்கு வேண்டுமானாலும் தடையின்றிப் போய் வரலாம்."

"அது எப்படி?"

"மிகவும் சுலபம். நான் உங்களுக்குச் சொல்லித் தருகின்ற மந்திரத்தை நீங்கள் உச்சரித்தால் போதும். மனதின் மாற்றம் என்பதுதான் இதன் பொருள். லட்சிய வேட்கையுள்ள யாராலும் முடியக்கூடியதுதான் இது" பேசியபடியே அந்தப் பெரியவர் ஒரு பெரிய நெருப்புக் கரண்டியை அவர்களுக்கிடையே தள்ளி வைத்தார். அதில் ஏதேதோ வேர்களும், மரச் சீவல்களும், சக்கைகளும் புகைந்து கொண்டிருந்தன. மல்லாந்தபடி இருந்த ஒரு மண்டை ஓட்டுப்பகுதியை எடுத்து, அதற்குள் இருந்த திரவத்தை அந்தப் புகையின் மீது ஊற்றினார். ஐந்து ஆறு துளிகள் மட்டுமே அதிலிருந்து விழுந்தன.

அதன்பிறகு ஓர் இறக்கையை எரித்து அந்தக் கரண்டியில் வைத்தார். உடனே அந்தக் கரண்டியிலிருந்த நெருப்பு நீலநிறத்தில் கொழுந்து விட்டெரிந்தது. சற்று நேரத்தில் அதுவும் அணைந்து அடர்த்தி அதிகமான புகை அதிலிருந்து வெளிப்பட்டது.

அந்தப்புகை இழைகள் கேசவனது முகத்திற்கு நேராகக் காற்றில் இழைந்து வந்தன. அவனை விழுங்குவதுபோல் வாய் பிளந்துகொண்டு

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

அந்தப் புகை மண்டலம் நெருங்கியது. அப்பொழுது அந்தப் புகை வடிவமே ஏறத்தாழ ஒரு பூதம்போல் இருந்தது.

மீனவன் - பூதம் கதையில் இடம்பெற்ற பூதத்தைப் பற்றிக் கேசவனுக்கு அந்த நேரம் நினைவுக்கு வந்தது. ஆனால் திடுமென்று தலை சுற்றுவது போல் இருந்தது. நினைவு தவறிக் கொண்டிருந்தது. தன் உடம்பிலிருந்து தான் ஒரு காற்றாகி விலகுவதுபோல் அவனுக்குத் தோன்றியது. சில விநாடிகள்தான்... இப்பொழுது பறவையின் உடம்பில் இருக்கிறோம் என்பதும் அவனுக்குப் புரிந்தது.

அதே நேரத்தில் அந்த மந்திரவாதியின் உயிர் மெதுவாகக் கேசவனது உடம்பிற்குள் புகுந்து கொண்டது. உடனே கேசவனது ஆத்மா பறவையிலிருந்து விலகி, பெரியவரின் உடம்பிற்குள் புகுந்து கொண்டது.

கேசவன் குட்டியின் உருவம் அங்கிருந்து வெளியேறியது. அந்த உருவத்தைப் பின்தொடர 'கேசவன்' விரும்பினாலும் அவனது மனம் அதைத் தடுத்தது. அவனது உடம்பு திரும்பி வருவது வரையில் அங்கேயே தங்குவதென்று தீர்மானித்தான்.

பெரியவர் கேசவனின் உடம்பிற்குள் புகுந்துகொண்டபோது அவருக்கு ஒருவிதமான புத்துணர்ச்சி ஏற்பட்டது. ஒரு புதிய ஜன்மம் எடுத்ததுபோல் இருந்தது. அந்த உருவத்தின் லட்சியம் மேற்குப்புறமாக இருந்தது. அந்த மலையின் மேற்குப் பகுதியில்தான் கிழக்குக் கோட்டையும் இருந்தது.

அங்கிருந்த இளவரசி கார்த்தியாயினி பற்றி அந்த மந்திர வாதிக்கும் தெரிந்திருந்தது. அவள் அழகி என்பதுடன், ஆண்களை விரும்புபவள் என்பதையும் அறிந்திருந்தார். அவளுடன் உறவு கொள்வது மட்டுமின்றி, அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள விலைமதிப்பற்ற ஓலைச்சுவடிகளைக் கைப்பற்றுவதும் அந்தப் பெரியவரான மந்திரவாதியின் லட்சியங்களாக இருந்தன.

மந்திரவாதி வேகமாக நடக்கத் தொடங்கினார். அதை நடையென்று கூறுவதைவிடப் பறந்தார் எனலாம்.

நள்ளிரவு தாண்டி அவர் கிழக்குக் கோட்டை அரண்மனையை அடைந்தார். வாசலைத் தாண்டி உட்புறமாகக் கால் வைத்தவுடன்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அப்படியே ஒரு விநாடி தயங்கி நின்றார். யாரோ அங்கே காத்திருந்தனர்.

வெள்ளை உடை அணிந்த ஒரு பெண் எரியும் விளக்கொளியில் அவளின் ஒருபுற முகம் மட்டும் நன்றாகத் தெரிந்தது. பேரழகியான ஒரு பெண். 'ஒருவேளை இளவரசியாக இருப்பாளோ!' மந்திரவாதி யோசித்தார். 'அப்படித்தான் இருக்க வேண்டும். வேறு யார் இங்கே உட்கார்ந்திருப்பார்கள்? மற்றவர்களுக்கு இந்தத் தைரியம் வருமா என்ன?'

"யாரது?" வாசலிலிருந்த உருவம் கேட்டது.

"நான்தான் கேசவன்."

"இதுவரை எங்கே போயிருந்தீர்கள்?" அவளது கேள்வி மந்திரவாதியை மகிழ்ச்சிப்படுத்தியது.

'இது இளவரசியாகத்தான் இருக்க வேண்டும்!'

''இளவரசியா அது?

"இல்லை, இளவரசியல்ல. நான்தான். பக்கத்தில் வந்துதான் பாருங்களேன்."

'அப்படியானால் இவள் இளவரசியல்லவா? வேறு யார். இவ்வளவு தைரியத்துடன் இங்கு உட்கார்ந்திருப்பது? மந்திரவாதி யோசித்தார். இருப்பினும் அவளை நெருங்கினார். அவர் நெருங்கியதும் அவள் எழுந்தாள்.

"இதுவரை நீங்கள் எங்கே போயிருந்தீர்கள்?" அவள் கேட்டாள். ஆனால், அப்பொழுதும் அவருக்கு அது யாரென்று புரியவில்லை. வெறுமனே பார்த்தபடி நின்றிருந்தார். பிறகு நிமிர்ந்து உஷாரானார்.

'கேசவனது நெருங்கிய யாரோ ஒருபெண் இவள். பார்ப்பதற்கும் அழகாக இருக்கிறாள். அவள் யாராக இருந்தாலும் இந்த அரண்மனையுடன் தொடர்பு உள்ளவள்' மந்திரவாதி அதை உறுதியாக நம்பினார்.

"நான்தான் வசந்தசேனை" அவள் கூறினாள்.

அப்பொழுதுதான் அவருக்கு அவளைப்பற்றி ஓரளவு புரிந்தது. ஒருவேளை கேசவனின் காதலியாக இருக்கலாம்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அவள் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவரோ சுற்றுப்புறத்தை ஆராய்ந்தார். இப்பொழுதுதான் முதன்முறையாக இந்த அரண்மனைக்குள் காலெடுத்து வைக்கிறோம். இந்த அரண்மனை புகழ்பெற்ற அரச வம்சத்தினுடையது என்று கேள்விப்பட்டிருந்தார்.

முற்றத்திலிருந்த துளசி மாடத்தில் ஒரு பெரிய மரமே சிறியதாகி நிற்பது போன்று துளசி அசைந்து கொண்டிருந்தது. எத்தனையோ வருடங்களாகியும் இன்னும் அது தழைத்து நிற்கிறது. யாரோ இதைக் காப்பாற்றி வருகின்றனர்.

"என்ன அப்படியே அங்கேயே நின்று விட்டீர்கள்?" அவள் கேட்டாள்.

"ஒன்றுமில்லை."

"வாருங்கள், உள்ளே போகலாம்" அவள் அழைத்தாள்.

மந்திரவாதிக்கு அவளைப் பார்ப்பதா முக்கியம்? பார்க்க வேண்டியது இளவரசி அல்லவா? அந்த அரண்மனையில் மந்திரவாதம் தொடர்பான மந்திரசாரம், யந்திர சாரம், பிரபஞ்ச சாரம், பிரயோக சாரம், சாரதா திலகம் போன்ற அதிமுக்கியமான ஓலைச்சுவடிகள் உள்ளன என்பதை அவர் அறிவார். எப்படியும் அவற்றைக் கைப்பற்றுவதுதானே அவரது லட்சியம். மேற் குறிப்பிட்டுள்ளவற்றில் தான் கற்றுள்ளது மிகவும் குறைவு என்பதும் நினைவில் எழுந்தது. அவற்றுடன் ஒப்பிட்டால் கூடுவிட்டு கூடு பாய்வது என்பது வெறும் சுண்டைக்காய் சமாசாரம்தான். வேறு எவ்வளவு மகத்தான காரியங்கள் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளன.

மோகினி, கந்தர்வர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டு அவர்களுடன் கலந்து இந்தப் பிரபஞ்சத்தின் எந்த மூலைக்கும் நினைத்தபோது சென்று திரும்பலாம். பேரழகு வாய்ந்த கந்தர்வ, மேலுலகப் பெண்களுடன் சல்லாபம் செய்யலாம். இதன்மூலம் மரணத்திலிருந்து விடுதலை பெறுவது ஆகியவையே அந்த மந்திரவாதியின் லட்சியங்கள்.

"நான் உங்களுக்காகத்தான் காத்திருந்தேன்" வசந்தசேனை மீண்டும் கூறினாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நான் இங்கு வருவேன் என்பது உனக்கு எப்படித் தெரிந்தது?"

"எனக்குத் தெரியாமல் இருக்குமா?"

"நீ யாரென்று இன்னொரு முறை சொல் பார்க்கலாம்."

"வசந்தசேனை... என்னைத் தெரியவில்லையா?"

மந்திரவாதி அவளை மீண்டும் ஒருமுறை பார்த்தார். 'பரவாயில்லை. அழகிதான். ஆனால் மனிதப் பெண்ணல்ல, அது நிச்சயம்.'

"இன்றைக்கு ஏன் என்னவோபோல் இருக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை, இளவரசியை உடனடியாகப் பார்க்க வேண்டும் நான். இங்கே இருக்கிறாரா?"

"உள்ளேதான் இருக்கிறார். வாருங்கள் பார்க்கலாம்" அவள் அழைத்தாள். அவர் அவளைப் பின்தொடர்ந்தார்.

இருவரும் உட்புறம் சென்றார்கள்.

"அதோ தெரிகிறதே, அதுதான் படுக்கையறை" அவள் சுட்டிக் காட்டினாள்.

அவர் அவளுடன் அதற்குள் நுழைந்தார். அதேசமயம் உண்மையான வசந்தசேனையும் அங்கு வந்தாள். அவள் இந்தக் காட்சியை அற்புதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

42

கேசவனது உடம்பில் புகுந்துகொண்ட மந்திரவாதி இளவரசியின் அறைக்குள் நுழைந்தார். யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பதுபோல் அறைக்குள் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் மந்திரவாதி முன்பு கண்ட உருவமல்ல. இப்பொழுது அவர் முன் நிற்பது. அதற்குப் பதில் அவளைவிடச் சற்று வயதான, முகத்தில் ராஜகளை ததும்பும் ஒரு பெண். முதல் பார்வையிலேயே மந்திரவாதி அவளை அடையாளம் தெரிந்து கொண்டார்.

"இளவரசிதானே உட்கார்ந்திருப்பது?" மந்திரவாதி கேட்டார்.

இதைக்கேட்டு கிழக்குக் கோட்டை அரண்மனையின் இளவரசி கார்த்தியாயினி ஒருமுறை சிரித்தாள். அது பயங்கரமான ஒரு சிரிப்பு.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

கண்ணாடிச் சிதறல்கள் உடைந்து நொறுங்குவதுபோன்ற சிரிப்பு. பைசாசிகமான ஒரு சிரிப்பாக இருந்தது அது.

"ஒரே அம்பில் இரண்டு பறவைகள் என்று பழமொழி ஒன்றைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இதோ அப்படிப்பட்ட பறவைகள் இரண்டு எனக்கு முன்னால்" அட்டகாசமாய் சிரித்தபடியே இளவரசி கூறினாள்.

நூற்றாண்டுப் பழைமை நிறைந்த அந்த அறையின் மரச் சுவர்களில் அந்தச் சிரிப்பு ஆயிரம் ஆயிரமாக மோதி எதிரொலித்தது. மச்சின் மேற்புறத்தில் முதல் நாள் சாப்பிட்ட உணவினால் திருப்தி யடையாத வெளவால்கள் கீச்சு கீச்சென்று குரல் எழுப்பியபடி குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தன. ஒவ்வொன்றும் மோதிப் பிறகு பிரிந்தன.

உதயநல்லூர் நாட்டை தாபித்த உதயவர்மன் நிர்மாணித்த அரண்மனையே நடுங்குகிறதா? இளவரசியின் அட்டகாசமான கொலைச் சிரிப்பைக் கண்டு மந்திரவாதி ஒருகணம் பதறினார்.

இளவரசி விளக்கு வெளிச்சத்தில் மோதிரத்தைக் கழற்றி நீட்டினார். ஒளிமேலும் அதிகமாகியது. சந்தன மரத்தில் கடைந்தெடுத்து, உயிரூட்டியது போலிருந்த இளவரசியின் உருவத்தை மந்திரவாதி கண்ணிமைக்காமல் பார்த்தார். இளவரசியின் மேலாடை காற்றில் நழுவி விழுந்தது. மந்திரவாதி ஒருகணம் மெய்ம்மறந்தார்.

"என்ன பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? எதற்காக வந்தீர்கள்? பார்த்துக் கொண்டிருப்பதற்குத்தான் வந்தீர்களா?" இளவரசி கேட்டாள்.

"என்ன செய்வது?" என்று புரியாமல் மந்திரவாதி குழம்பினார்.

இளவரசி. அவரை நெருங்கினாள். வலது கையைச் சாய்த்துப் பிடித்து அவரது கழுத்தைத் தொட்டு நெஞ்சின் மையத்தின் ஊடாகக் கீழ்ப்புறமாக விரல்களால் அளைந்தாள். மந்திரவாதியின் ரத்தம் விர்ரென்று வெப்பநிலையைத் தொட்டது.

"என் பார்த்தபடி நிற்கிறீர்கள்?"

"உங்களது அழகு."

"இதை இப்பொழுதுதான் முதன் முறையாகப் பார்க்கிறீர்களா என்ன?" சிரித்தபடி இளவரசி கேட்டாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"எவ்வளவுதான் பார்த்தாலும் திகட்டாத அழகு உங்களுடையது" பேசினாலும் மந்திரவாதியின் உள்மனம் அவரை எச்சரிக்கவே செய்தது. தான் உண்மையில் கேசவன் அல்ல என்று தெரிந்து கொண்டால், இளவரசியின் நடவடிக்கை எப்படி இருக்குமோ என்றும் அது யோசித்தது.

தன்னைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு மந்திர. தந்திரங் களைக் கற்றவர் இளவரசி. அதுமட்டுமா? ஜன்மஜன்மாந்திரங்களையே இளவரசி வென்று விட்டிருக்கிறாள். ஏறத்தாழ இளவரசியின் வரலாறு முழுவதும் மந்திரவாதிக்குத் தெரிந்தே இருந்தது. எத்தனையோ பேர் உடல்ரீதியாக இளவரசியைத் தோல்வியடையச் செய்ய முயன்று, மரணமடைந்திருக்கிறார்கள் என்பதும் புரிந்தது. சிலரைப் பிடிக்காத தால் கழுத்தை நெரித்துக் கொன்று, பின்புறமுள்ள குளத்தில் வீசியெறிந்திருப்பதும் மந்திரவாதிக்குத் தெரியும்.

இதுவரை இளவரசியை வெற்றி பெற்றுள்ள ஒரே மனிதன் கேசவன் மட்டுமே. இப்பொழுது அந்தக் கேசவனுடைய உடம்பை இரவல் பெற்று தான் இங்கு வந்திருப்பதையும் மந்திரவாதி நினைத்துப் பார்த்தார். இளவரசியை வென்றுவிட்டால் எது கேட்டாலும் கிடைக்கும். கேசவனுக்கும் ஓலைச்சுவடிகளைப் பற்றிச் சரிவரத் தெரியாததால் இதுவரை அவன் கேட்டதில்லை. ஆனால், தனக்கு அதைப்பற்றி அதிகமாகத் தெரியும்.

மந்திரவாதி யோசனையில் மூழ்கியிருந்தபோது இளவரசி அவரைத் தன் புறமாக இழுத்தாள். அத்துடன் இளவரசியின் மனதில் தான் 'வெற்றி பெற்று விட்டோம்' என்கிற ஒரு பெருமிதமும் தென் பட்டது.

அவளைப் பொறுத்தவரையில் யார்மீதும் அவளுக்குத் தனிப்பட்ட அன்பு கிடையாது. காம வேட்கை நிரம்பியவள். அது ஆண் துணைக்காக ஏங்கியது. அதேசமயம் எந்த ஆணுக்கும் அடிமையாகி விடவும் அவள் தயாராக இல்லை. ஆனால் தன்னை வெற்றிகொண்ட ஒரு மனிதனை எப்படி அடிமைப் படுத்துவது? அதனால்தான் அவள் கேசவனுக்கு அடிபணிந்தாள். இருப்பினும் என்றாவது ஒருநாள் அவனை வெற்றிகொள்ள முடியுமென்றும், அத்தகைய சந்தர்ப்பத்தில், இதற்கு முந்தைய சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்டவர்களுடன் எப்படி

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நடந்து கொண்டிருக்கிறோமோ அதேபோல் கேசவனிடமும் நடந்து கொள்வதென்றும் இளவரசி முடிவு செய்திருந்தாள்.

இப்பொழுது தனக்கு முன்பாக நிற்பவன் கேசவன் அல்ல என்பது இளவரசிக்குத் தெளிவாகத் தெரிந்தது. கேசவனது உடம்பிற்குள் வேறு யாரோ ஒருவன் கூடுவிட்டுக் கூடு பாய்ந்துள்ளான் என்பதும் புரிந்தது. இந்த நிலைமையில் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குள் இந்த உடம்பிற்குள் அடங்கியிருக்கும் சக்தி ஒடுங்கிவிடும் என்றும், அதன்பிறகு இந்த உடம்பை வெற்றி கொள்வது ஒரு பிரமாதமான காரியம் அல்ல; அதை அழித்துவிடுவதும் சுலபம் என்றும் உணர்ந்து கொண்டாள்.

இளவரசியின் உடம்பில் சந்தன மணம் வீசுவதையும், அது வெது வெதுப்பாக இருப்பதையும் மந்திரவாதி உணர்ந்தார்.

இளவரசியின் மூச்சுக்காற்றுக்கு மதுவின் போதை இருந்தது. தனது திடமான உடல், இளவரசியின் உடல்மீது பளிங்குப் பரப்பில் தலைமுடி நழுவுவதுபோல் இழைந்து நழுவுவதை மந்திரவாதி உணர்ந்தார். விடியற்காலையில் சேவல் கூவுவதுவரை இளவரசி மந்திரவாதியுடன் இருந்தாள். மந்திரவாதி கண்விழித்தபோது இளவரசியை அங்கு காணவில்லை.

அந்த அரண்மனையின் ஒவ்வோர் அறையிலும் அவர் நுழைந்து பார்த்தார். இறுதியாக ஓர் அறை வாசல் முன் நின்றார் மந்திரவாதி. பித்தளைச் சங்கிலி கோத்து, தாழ்ப்பாள் போட்டிருந்த அந்த அறையின் சாவி இளவரசியின் இடுப்பில் தொங்குவதாக இருக்க வேண்டும். பிரதானமான ஓலைச்சுவடிகள் அதற்குள் பத்திரப்படுத்தி வைக்கப் பட்டிருக்கலாம் என்று மந்திரவாதி நினைத்தார். ஆனால், அதை அவரால் திறக்க முடியவில்லை.

அன்று இரவு அதைப்பற்றிக் கேட்டுவிடுவதென்று மந்திரவாதி நினைத்தார்.

மாலை நேரத்தில் நிலவிளக்கை யாரோ ஏற்றினார்கள். பனிபோன்ற ஓர் உருவம் அந்த விளக்கை ஏற்றுவதை மந்திரவாதி

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

கவனித்தார். ஒருவேளை இளவரசியின் மந்திர ஸித்தியில் விளைந்த யோகினிகளில் ஒருத்தியாக இருக்கக்கூடும் என்று நினைத்தார்.

அதேசமயம் வராந்தாவின் தென்புறத்தில் மற்றொரு பெண் உருவம் நிற்பதைக் கவனித்தார். அருகில் நெருங்கிச் சென்று பார்த்தபோது முதல் நாளிரவு இளவரசிக்குப் பதில் முதன்முதலாகப் பார்த்த உருவம் போல் தெரிந்தது.

"இளவரசிதானே நிற்பது?"

"இல்லை."

"வேறு யாரது?"

"நான் உங்களைத் தேடி வந்திருப்பவள்."

"என்னையா? எதற்காக?"

"எனக்கு உங்களைப் பார்த்தால் இரக்கமாக உள்ளது."

"எனக்காக யாரும் இரக்கப்படத் தேவையில்லை."

"நீங்கள் அழியப் போகிறீர்கள்."

"நான் எப்படி அழிவேன்? நான் யாரென்று உனக்குத் தெரியுமா?'

"தெரியும். அதனால்தான் கூறினேன்."

"நான் யாரென்று சொல் பார்க்கலாம்."

"நீங்கள் கேசவன் அல்ல."

"அந்த உண்மையை நீ தெரிந்து கொண்டாயா?"

"நான் மட்டுமல்ல, இளவரசியும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்."

"இளவரசியைப் பொறுத்தவரை நான் யாராக இருந்தால் அவர்களுக்கு என்ன? அவர்களுக்குத் தேவை ஒரு ஆண். அவரை மகிழ்விக்கும் எந்த ஆணுக்கும் அவர் எதையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார். என்னுடைய தேவையும் அதுதான்."

"இருக்கலாம். ஆனால் கேசவனுடைய உடம்பு அழிவதை நான் அனுமதிக்க முடியாது."

"நீ ஒருவேளை பூதகணமாகவோ, மோனியாகவோ இருக்கலாம். உன்னை எங்காவது ஆணியடிக்காமல் இருக்க வேண்டுமென்றால், இனிமேல் என் முன் வராதே. அதுதான் உனக்கு நல்லது."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இந்த வார்த்தையைக் கேட்டதும் வசந்தசேனை திகிலடைந்தாள். தனக்கு அப்படி ஏதாவது ஒன்று நிகழ்ந்து விட்டால் அதன்பிறகு கேசவனும் இல்லாமல் போய்விடுவான். மீண்டும் இளவரசி தன்னைச் சிறையிடுவாள். எனவே உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும்.

இன்னும் சற்று நேரத்திற்குள் இளவரசி வந்து விடுவாள். யோசித்த வசந்தசேனை உடனே மந்திரவாதியின் குகை நோக்கிப் பறந்தாள்.

அந்த நேரம் மேலக்காவு மனை பிரம்மதத்தன் நம்பூதிரி, கேசவன் என்ன செய்கிறான் என்பதை அறிந்துகொள்ள ஜோதிடம் பார்த்துக் கொண்டிருந்தார். ராவுண்ணியார் அருகிலேயே இருந்தார்.

இரண்டு முறை சோழிகளை வாரிவாரி வைத்தபோதும் ஒன்றும் பிடிபடவே இல்லை. வைப்பதில் பாதி மல்லாந்து விழுந்துகொண்டே இருந்தது. ஆனால், எண்ணிக்கையோ வெகு துல்லியமாக இருந்தது.

"ராவுண்ணியாரே, அவன் நம்மை ஏமாற்றுகிறானே. அந்த வேலை என்னிடம் சொல்லுபடியாகுமா? அவன் இப்பொழுது இரண்டு இடத்தில் வசிக்கிறான்."

"எஜமான், நீங்கள் சொல்வதன் அர்த்தம்?"

"ஓகோ, உமக்குப் புரியாதுதான். இப்பொழுது அவன் இரண்டு கூட்டில் வாழ்கிறான். அதில் ஏதாவது ஒரு கூட்டை உடைத்து விட்டாலே போதும். அவன் தீர்ந்தான்!"

பிரம்மதத்தன் தனது மோதிரத்தைக் கழற்றி மேற்புறமாக எறிந்தார். அது திரும்பக் கீழே வரவே இல்லை!

43

அடுத்த விநாடி அங்கு ஒரு பைசாசிகமான உருவம் வெளிப் பட்டது. உடல் முழுவதும் ரோமம் அடர்ந்து, ஒற்றைக்கண்ணுடன், முட்கள் நிரம்பிய கதாயுதத்தைக் கையில் பிடித்தபடி அது காட்சியளித்தது. பிரம்மதத்தன் அந்த உருவத்தை அழைத்தார்.

"காளராத்ரி, நீ உடனடியாக கிழக்குப்புறம் சென்று மலையடி வாரத்தை அடையவேண்டும். அங்கு இடது புறத்தில் ஒரு சரிவு

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

வளைந்தபடி இருக்கும். அங்கு ஒரு குகை இருக்கும். அழகான ஒரு இளைஞன் அங்கு இருப்பான். நீ அவனை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். நீ இந்த வடிவத்திலேயே சென்றால், அவன் உன்னை நெருங்க மாட்டான். அதனால் உனக்கு நான் வேறொரு வடிவம் தருகிறேன். அதுதான் அவனுக்குப் பிடிக்கும்" பிரம்மதத்தன் கொஞ்சம் விபூதி எடுத்து மந்திரம் உச்சரித்து அதன் மேல் வீசினார்.

உடனே அந்தப் பைசாசிக உருவம், வசந்தசேனையின் வடிவத்தை அடைந்தது.

"ராவுண்ணியாரே, எப்படி இருக்கிறது?" நம்பூதிரி கேட்டார்.

"துளிக்கூட வித்தியாசமே இல்லை. அசல் அவளேதான்" ராவுண்ணியார் 'பலே' போட்டார்.

"நிச்சயம்தானா?"

"அதிலென்ன சந்தேகம்? இவள் அங்கு செல்லவேண்டியதுதான். அவன் மயங்கிச் சுருண்டே விடுவான். அந்த இடத்தில்தான் அவன் இருக்கிறான் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"ஓய், சோழிகள் இரண்டு திசை நோக்கி விழுந்து கிடந்ததை நீர் பார்க்கவில்லையா? அங்கே மலைச்சரிவில் இருப்பவனை எனக்குத் தெரியும். முன்பொரு நாள் நான் அவனைச் சந்தித்திருக்கிறேன். அவன் எனக்குச் சமமானவன். இல்லை. கேசவன் அங்கு போய் மாட்டிக் கொண்டிருப்பான். கூடுவிட்டுக் கூடுபாய்ந்து இரண்டு பயல்களும் இடம் மாறி இருப்பார்கள். அதாவது கேசவனது உடலில் மந்திரவாதி இருப்பான். மந்திரவாதியின் உடலில் கேசவன் இருப்பான். இப்பொழுது கேசவன் குட்டியின் உருவம் கிழக்குக் கோட்டை அரண்மனைக்கு வந்திருக்கும். அந்தக் குகையில் மந்திரவாதியின் உடம்பிற்குள் புகுந்துகொண்ட கேசவன் இருப்பான். இரண்டும் இரண்டும் நாலு என்று கணக்குக் கூட்ட பிரமாதமான அறிவு வேண்டுமா என்ன? இந்த இரண்டில் எந்த ஒன்று அழிந்தாலும் நமக்கு நல்லதுதான். அத்துடன் அவன் தொல்லையும் தீர்ந்து விடும். காளராத்ரி, நீ போய் உன் வேலையைக் கவனி" வசந்தசேனையின் இரண்டாவது உருவத்திற்கு விடைகொடுத்து அனுப்பினார். அந்த உருவம் அங்கிருந்து மறைந்தது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அவள் பறந்து மலையடிவாரத்தின் குகையை அடைந்தபோது புலித்தோல் அணிந்து. தாடி மீசை வளர்த்திய ஒருவர் வாசலைப் பார்த்தபடி உட்கார்ந்திருப்பதைக் கவனித்தாள். அருகில் மெழுகு விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

காளராத்ரி என்கிற பிசாசு கேசவன்து முன்னால் நின்றது.

"யாரது. வசந்தசேனையா? நான் இங்கிருப்பது உனக்கு எப்படித் தெரிந்தது."

"அதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியுமா?" அவள் அவனை நெருங்கினாள்.

மந்திரவாதியின் வடிவிலிருந்த கேசவன் அவளை நெருங்கினான்.

"வசந்தசேனை. நான் ஓர் இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என் உடலில் புகுந்து கொண்ட மந்திரவாதி எங்கேயோ போய்த் தொலைந்து விட்டான். அநேகமாக அவன் கிழக்குக்கோட்டை அரண்மனைக்குத்தான் சென்றிருக்க வேண்டும். சீக்கிரம் நான் அங்கு செல்ல வேண்டுமே."

"அதற்கென்ன நான் கொண்டு போகிறேன்" அவள் அவனது தோளைப்பிடித்து தன்பக்கமாக இழுக்க முயன்றான். அப்பொழுது அவளுக்கு கேசவனைவிட உயரம் அதிகமாக இருந்தது. கேசவனுக்கு இதில் எந்தவிதமான சந்தேகமும் ஏற்படவில்லை.

ஆனால். அவள் கேசவனைத் தன்னுடன் இழுத்து அணைத்த போது அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அவளிடமிருந்து விடுபட முயன்றும் அவனால் முடியவில்லை. அவளது பலம் அதிகரித்துக் கொண்டே வந்தது. இதில் ஏதோ 'சூழ்ச்சி' உள்ளது. அவள் தன்னைக் கொல்லப் பார்க்கிறாள் என்பதும் புரிந்தது. அவனால் மூச்சு விடமுடியவில்லை. ஆனால். எதிர்பாராதவிதமாக அவளது பிடி விலகிச் சட்டென்று பின்புறம் சரிந்தாள். கேசவன் பார்த்தபோது நிஜ வசந்தசேனை கையில் வாளுடன் அங்கு நின்றிருந்தாள்.

கண் மூடித் திறப்பதற்குள் முதலில் வந்தவளுடைய உருவம் மாறிவிட்டது. அவள் காளராத்ரி என்கிற பிசாசாக மாறிவிட் டிருந்தாள். அவள் கையில் வைத்திருந்த பயங்கரமான ஆயுதத்துடன்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

வசந்தசேனையுடன் மோதத் தயாரானாள். வசந்தசேனை மிகவும் தந்திரமாகத் தனது வாளுடன் இந்தப் பிசாசை நேரிட்டாள்.

"உன் உயிர் மீது ஆசையிருந்தால் ஒழுங்காகத் தப்பித்துச் செல்! நானும் நீயும் வித்தியாசமான வேறு வேறு இனத்தவர்கள் என்பது உனக்குப் புரிகிறதா? நான் ஒரு மோகினி என்பதைத் தெரிந்து கொள்" வசந்தசேனை கூறினாள்.

"நீ யாராக இருந்தால் எனக்கென்ன? என்னிடம் ஒப்படைத்த வேலையை நான் முடித்த பிறகே இங்கிருந்து நகர்வேன். இந்த மனி தனைக் கொல்லவேண்டும் என்பது எனக்கிடப்பட்டுள்ள கட்டளை" சொல்லியபடியே அவள் தனது ஆயுதத்துடன் வலுவாக மோதினாள்.

விநாடி நேரத்தில் வசந்தசேனை தன்னுடைய வாளை அவளை நோக்கி வீசி எறிந்தாள். கொழுந்து விட்டு எரியும் ஒரு நெருப்பு அம்பு போல் அது காளராத்ரியின் நெஞ்சைத் துளைத்துக்கொண்டு மறுபுறம் பாய்ந்தது. உடனே அந்த உருவம் மறைந்தது.

"வசந்தசேனை, சரியான நேரத்திற்கு நீ வரவில்லை என்றால், நான் இந்நேரம் இறந்தே போயிருப்பேன். உனக்கு நான் எப்படி நன்றி சொல்வது?"

"அதையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். கிழக்குக் கோட்டைக்குள் அவன் வந்திருக்கிறான். உங்களது உடம்புதான் அவனை உள்ளே வர அனுமதி அளித்துள்ளது. அவன் நேற்று இரவு இளவரசியுடன் தங்கியிருந்தான். இன்றும் தங்கப் போகிறான். நிலைமை இப்படியே தொடர்ந்தால், இன்னும் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குள் உயிரில்லாத உங்களது உடலை இளவரசி குளத்தில் எறிந்து விடுவாள்" வசந்தசேனை அறிவித்தாள்.

"அப்படியானால் நான் என்ன செய்ய வேண்டும்?" கேசவன் கேட்டான்.

"அதற்கு ஒரே வழிதான் உள்ளது. நாம் எவ்வளவு விரைவாக அரண்மனையை அடைய முடியுமோ, அவ்வளவு விரைவில் அடைய வேண்டும். அந்த மந்திரவாதியை உங்களது உடம்பி லிருந்து அப்புறப் படுத்திவிட்டு நீங்கள் அதற்குள் புகுந்துகொள்ள வேண்டும்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அது எப்படி முடியும்? அவன் எனது உடம்பிலிருந்து வெளியேறினால்தானே நான் என் உடம்பிற்குள் புகுந்துகொள்ள முடியும்?" கேசவன் சந்தேகத்துடன் கேட்டான்.

அவன் கேட்ட கேள்வியும் நியாயமானதுதான்.

கூடுவிட்டுக் கூடு பாயும்போது, ஓர் உடம்பிலிருந்து ஓர் ஆத்மா வெளியேறிய பிறகுதான் மற்றோர் ஆத்மா அதற்குள் புகுந்துகொள்ள முடியும். இது இடைவெளியின்றி உடனடியாக நடைபெறவும் வேண்டும். அதேசமயம் நிர்ப்பந்தத்தாலோ, வற்புறுத்தலாலோ மாற்றவும் முடியாது.

"நான் ஒரு யோசனை சொல்லித் தருகிறேன். அதன்படி நடந்து கொண்டால், நீங்கள் தப்பிக்கலாம். இல்லாவிட்டால் ஆபத்துதான்" வசந்தசேனை கூறினாள்.

"சொல், நான் என்ன செய்ய வேண்டும்?"

"என்னுடன் உடனடியாக அரண்மனைக்கு வாருங்கள். அங்கு வந்தபிறகு நான் மந்திரவாதியின் உருவம் போன்ற ஒரு மாயையை ஏற்படுத்துகிறேன். அப்பொழுது நீங்கள் அவனைக் கொல்ல முயல வேண்டும். தான் இறக்கப் போகிறோம் என்று தெரிந்தவுடன் தன்னுடைய உடம்பு என்று கருதி அந்த மாய உடம்பில் புகுந்து கொள்ள முயல்வான். உடனே நீங்கள் உங்களது உடம்பில் புகுந்துகொள்ள வேண்டியதுதான்."

இதை ஒப்புக்கொள்வதைத் தவிர கேசவனுக்கு வேறு வழியே இல்லை. "சரி, புறப்படலாம்" என்றான்.

"என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்றாள் வசந்த சேனை. பிடித்துக்கொண்டான். இருவரும் ஆகாயத்தில் பறந்தபடியே நகர்ந்தார்கள். ஒருவழியாகக் கிழக்குக் கோட்டை அரண்மனையின் முற்றப்பகுதியை அடைந்தனர்.

அதேநேரம் மந்திரவாதியின் ஆத்மா பிரவேசித்திருந்த கேசவனது உருவம், இளவரசி கார்த்தியாயினியுடன் கட்டிலில் படுத்திருந்தது.

"இளவரசி இப்பொழுது வெளியேறி விடுவார்கள். நீங்கள் தயாராக இருங்கள்" என்ற வசந்தசேனை, தான் ஒரு பல்லியாக உருமாறி அறை வாசலின் மேற்புறத்தில் ஒண்டி நின்றாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

வெளியில் கனமான இருள் பரவியிருந்தது. சன்னமாய் மழை பெய்கிறது. இளவரசியின் அறையில் அவர்கள் இருவரும் ரகசியமாகப் பேசிக்கொண்டது இரவின் அமைதியில் தெளிவாக கேட்டது.

"கேசவன், உங்கள் உடல்நிலை மிகவும் மோசமாகி உள்ளது" இளவரசி கூறினாள்.

"என்னுடைய உடல்நிலையா? அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்களுக்கு எதனால் அப்படித் தோன்றுகிறது?" மந்திரவாதி கேட்டார்.

"இதற்கு முன்னால் நீங்கள் இப்படியெல்லாம் இல்லை. உங்கள் கைகளுக்குள் சிறைப்பட்டு மூச்சுத்திணறுவது எனக்கு சுவார யமான அனுபவமாக இருக்கும்" சொல்லிவிட்டு இளவரசி சிரித்தாள். பயங்கரமான சிரிப்பாக அது இருந்தது. அந்தச் சிரிப்பைக் கேட்டவுடன் மந்திரவாதிக்கு உள்ளூற பயம் தோன்றியது.

'இளவரசி கூறியதன் அர்த்தம் என்ன?' மந்திரவாதி யோசித்தார்.

"நான் வரட்டுமா?" இளவரசி விடைபெற்றாள். கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது.

வெளியில் சுழன்றடித்த காற்று வேகத்தில் விளக்குத் திரி வட்டமிட்டபடி அலைந்தது. இளவரசி வெளியேறியிருந்தாள். அவளது கால் சலங்கைகளின் சத்தம் படிப்படியாகக் குறைந்து கடைசியில் நின்று போனது.

இளவரசி இனிமேல் இன்றைக்கு வரமாட்டாள் என்று தெரிந்து கொண்டதும் வசந்தசேனை சுய உருவமடைந்தாள். "நான் முதலில் உள்ளே போகிறேன்" என்றபடி கதவின் இடைவெளி வழியாக உட்புறம் நுழைந்தாள். உள்ளே கேசவனது உடலிலிருந்த மந்திரவாதி படுத்திருந்தான்.

"நல்ல தூக்கமா?" அவள் கேட்டாள்.

மந்திரவாதி கண்களைத் திறந்து பார்த்தபோது, தான் பார்த்த முதல் உருவம் - வசந்தசேனை நின்றிருந்தாள். ஆனால், மந்திரவாதிக்கு அவள் யாரென்று சரிவரத் தெரியவில்லை.

"யாரது இளவரசியா, ஏன் திரும்பி விட்டீர்கள்?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நாள் இளவரசியல்ல. என் பெயர் வசந்தசேனை" சொல்லிய படியே அவள் கட்டிலில் அமர்ந்தாள். மந்திரவாதியின் நெஞ்சில் வளர்ந்திருந்த மெல்லிய ரோமங்களுக்கு இடையில் தன் இரண்டு கைகளாலும் அளைந்து கொண்டிருந்தவள் திடுமென்று அவனது கழுத்தைப் பிடித்தாள்.

மந்திரவாதியால் சத்தம் எழுப்ப முடியவில்லை.

"உனக்கு உயிர் வேண்டுமென்றால் அதோ அந்தப் பல்லியின் உடம்பிற்குள் புகுந்துகொள். இல்லாவிட்டால் நான் உன்னைக் கொன்று விடுவேன்!" அவனை மிரட்டினாள்.

மந்திரவாதி யோசித்துப் பார்த்தான். நிலைமை மிகவும் சிக்கல்தான். இவள் சொல்வது போல் செய்யாவிட்டால் இந்த நிலையில் ஆபத்துதான். பிடி விநாடிக்கு விநாடி இறுகி நெரிக்கிறது. விழி பிதுங்கத் தொடங்கிய மந்திரவாதி சட்டென்று பக்கத்திலிருந்த பல்லியின் உடம்பில் புகுந்து கொண்டான்.

"கேசவன், சீக்கிரம் வாருங்கள்" வசந்தசேனை அழைத்தாள்.

மந்திரவாதியின் உடலிலிருந்த கேசவன் தன்னை அழைத்த குரல் கேட்டு அறைக்குள் நுழைந்தான்.

வெளியே கால் சலங்கைகளின் சத்தம் கேட்டது.

44

கால் சலங்கைகளின் சத்தம் கேட்டவுடன் கேசவன் கட்டிலி லிருந்து திடுக்கிட்டு எழுந்தான். அவனுக்கு பயம் தோன்றியது.

வசந்தசேனை அந்த அறைக்குள்ளேயே இருந்தாள். இளவரசி அவளைப் பார்த்துவிட்டால் ஆபத்து. மறுபடியும் அவளை சங்கிற்குள் அடைக்கலாம். இம்முறை தன்னால் அவளைச் சங்கிலிருந்து மீட்க முடியுமோ. என்னவோ? ஒருவேளை அவளை இளவரசி நெருப்பில்கூட எரித்து அழிக்கலாம். மந்திரவாதியான இளவரசி கார்த்தியாயினி எதைச் செய்வாள். எப்படிச் செய்வாள் என்பதை யார் தீர்மானிக்க முடியும்? அதுமட்டுமா? இந்தமுறை தன்னையும் அவள் ஏதாவது செய்யலாம்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

பல்லியின் உடம்பில் புகுந்துகொண்ட மந்திரவாதி வேறு என்னென்னவோ புலம்பிக் கொண்டிருந்தார். ஒருவேளை மந்திரம் எதையாவது உச்சரிக்கிறாரோ என்னவோ? இதுவும் இளவரசிக்குப் புரிந்துவிடுமே. மொத்தத்தில் இந்தச் சூழ்நிலையில் என்ன செய்வ தென்று அவனுக்குப் புரியவில்லை.

அந்த அறைக்குள் என்னென்னவோ தகிடுதத்தங்கள் நடப்பதை இளவரசி தெரிந்து கொள்ளாமலா இருப்பாள்?

வசந்தசேனை சட்டென்று உருவம் மாறினாள். மீண்டும் ஒரு பல்லியின் உருவத்தை அடைந்தாள். இம்முறை மந்திரவாதி புகுந்து கொண்ட பல்லியின் உருவத்தைவிட இரண்டு மடங்கு வடிவத்தில் அவள் தெரிந்தாள்.

இளவரசி மீண்டும் அறைக்குள் நுழைந்தாள்.

"என்ன கேசவன், இன்னும் தூங்கவில்லையா?"

"இல்லை."

"உங்களுக்குத் தளர்ச்சி ஏற்பட்டுள்ளது போல் தெரிகிறதே" அவள் கேசவனது தலையை வருடினாள். அவள் கைகள் கேசவனது மார்பில் இழைந்து அளைந்தன.

எப்படிப்பட்ட பிசாசையும் தனது இச்சைக்குகந்த ஆணாக மாற்றிக்கொள்ளும் வல்லமை அவளுக்கு இருந்தது. ஆண்களின் ரத்தத்தை விரைவில் சூடேற்றி விடக்கூடிய தன்மை பெற்றிருந்த இளவரசி, கேசவனைப் பார்த்துப் பரவசம் அடைந்தாள். அவளது கண்களில் காமப்பசி தீயாய் எரிந்தது.

சற்று நேரத்திற்கு முன்பு ஏற்பட்ட உறவின்போது கேசவனது உடல்நிலை மோசமடைந்திருப்பதை இளவரசி புரிந்து கொண் டிருந்தாள். மந்திரவாதியின் ஆவி புகுந்துகொண்ட கேசவனது உடம்பிற்கும் தள்ளாமை தோன்ற ஆரம்பித்திருந்தது. ஆகவே. உடனே மறுமுறை அவனுடன் தொடர்பு கொண்டால். அவன் தோல்வி யடைவது உறுதி என்றும், எனவே இதற்கு முன்பு தோல்வியடைந்த வர்களுக்குத் தான் வழங்கிய முடிவையே இப்பொழுது அவனுக்கும் வழங்கிவிடலாம் என்றும் அவள் நினைத்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

தான் அப்படிச் செய்துவிட்டால் துர்காதேவி கோயிலின் ரகசியம் பாதுகாக்கப்படும். எனவே அதைத் தேடிக்கொண்டு மேலும் பலர் வருவார்கள். வழக்கம்போல் அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதோ, பழிவாங்குவதோ தொடரலாம்' இளவரசி மனதிற்குள் இப்படியெல்லாம் திட்டமிட்டாள்.

கேசவனை அவள் ஏற்கெனவே வசீகரித்து ஒரு வழி செய்து விட்டிருந்தாள். ஆனால், சற்று நேரத்திலேயே அவள் உண்மையைக் கண்டறிந்து விட்டாள். 'தான் நினைத்தது போலக் கேசவன் இன்னும் தன்னுடைய இளமையை இழந்து விடவில்லை.'

உடனே இளவரசிக்குக் கோபம் தோன்றியது. அவள் திடுக்கிட்டு எழுந்து கேசவனைப் பார்த்தாள். அவளுக்குச் சந்தேகம் தோன்றியது. அதேசமயம் பல்லியின் வடிவிலிருந்த மந்திரவாதி என்னென்னவோ உளறிக் கொண்டிருந்தான். இளவரசியும் அதைக் கவனித்தாள்.

"இதுவரை அந்த உடம்புக்குள் இருந்தது நான்தான்!" என்று சொல்லிவிட்டு அந்தப் பல்லி சுவரின் இடுக்கில் நுழைந்து மறைந்தது.

"இவ்வளவு நேரமும் நீங்கள் என்னை ஏமாற்றிக் கொண் டிருந்தீர்கள் இல்லையா?" இளவரசி கோபத்துடன் கேட்டாள்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை இளவரசி. இத்தனை நேரம் எனது உடம்பில் அந்த மந்திரவாதி புகுந்து கொண்டிருந்தான்" கேசவன் கூறினான்.

"யாரது, மந்திரவாதியா? இந்த அரண்மனைக்குள், அவனால் எப்படி வர முடிந்தது? அந்த அளவுக்குத் தைரியம் உள்ளவனா அந்த மந்திரவாதி? யாரோ இதற்கெல்லாம் பின்னணியில் இருந்து உதவுகிறார்கள்" இளவரசி பல்லை நறநறத்தபடியே பேசினாள்.

"நீங்கள் நினைப்பது தவறு. யாரும் எனக்கு உதவவில்லை" கேசவன் உறுதியளித்தான்.

இளவரசி சந்தேகத்துடன் அவனைப் பார்த்தாள்.

"உண்மையாகவா சொல்கிறீர்கள்?"

"உண்மைதான்."

"ஒரு விஷயத்தை எச்சரிக்கை செய்து வைக்கிறேன். எனக்கு வஞ்சகம் செய்ய நினைத்தால், அதன் பலனை நீங்கள் நிச்சயம்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அனுபவிக்க வேண்டி இருக்கும்" கோபத்துடன் பேசிய இளவரசி சட்டென்று அங்கிருந்து அகன்றாள்.

சற்று நேரத்தில் வசந்தசேனை சுய வடிவத்தை அடைந்தாள்.

"இளவரசி சொன்னதையெல்லாம் கேட்டாயா?" கேசவன் கேட்டான்.

"ஒன்று விடாமல் கேட்டேன்."

"இளவரசி மறுபடியும் வருவாளோ என்னவோ?"

"யாரால் இதற்கு பதில் சொல்ல முடியும்? என்னைப் பார்த்து விட்டாரோ என்னவோ?" வசந்தசேனை தனது சந்தேகத்தை வெளியிட்டாள்.

"இல்லை, கவனிக்கவில்லை என்றே நினைக்கிறேன். கண்டு பிடித்திருந்தால் நிச்சயம் உன்னை ஏதாவது செய்திருப்பாள்."

"என்னால் அப்படி நினைக்க முடியவில்லை. பயமாக இருக்கிறது?"

இளவரசி நடந்துவரும் சத்தம் கேட்கிறதா என்று இருவரும் வெகு கவனமாக காதைத் தீட்டிக்கொண்டு கட்டிலில் உட்கார்ந்திருந்தார்கள்.

பிரம்மதத்தன் நம்பூதிரி ஒரு பிரம்மாண்டமான ஹோமத்திற்குத் தன்னைத் தயார் செய்துகொண்டிருந்தார். இந்தத் தடவை தான் வெற்றி பெற்றுவிடுவோம் என்று அவருக்கு திடமான நம்பிக்கை இருந்தது.

ராவுண்ணியார் எங்கிருந்தோ ஒரு பதினாறு வயதுப் பெண்ணைக் கொண்டு வந்திருந்தார். பாவம், ஏதோ ஒரு ஏழைக் குடும்பப் பெண். நம்பூதிரியின் வீட்டில் வேலை உள்ளது என்று சொல்லித்தான் அவர் அவளை அழைத்து வந்திருந்தார்.

மேலக்காவு மனையின் பைசாசக் கதைகளை அந்த வீட்டார் அவ்வளவாகத் தெரிந்து கொண்டிருக்கவில்லை என்றே தோன்றியது. அதனால்தான் நம்பூதிரி கொடுத்து விட்டிருந்த பொருள்களை வாங்கிக்கொண்டு மகளை அனுப்பி வைத்தனர். இந்தத் தடவை பொருளைவிட அவர் அதிகம் கொடுத்தனுப்பியது தங்கத்தைத்தான்.

ஒன்றும் தெரியாத அந்த அப்பாவிப் பெண்ணை ராவுண்ணியார், நம்பூதிரியின் ரகசியமான பூஜை மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

கண்டாகர்ணனின் சிலைக்கு முன்னால் ஹோமம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. நம்பூதிரி மந்திரங்களை கவனத்துடன் உச்சாடனம் செய்து கொண்டிருந்தார். ஒவ்வொரு மந்திர உச்சரிப் பிற்குப் பிறகும் ஹோம குண்டத்தில் எதையோ தூவினார்.

மந்திரம் முடிந்தபோது கண்டாகர்ணனின் சிலையிலிருந்து புறப்பட்ட ஒரு கருமையான நிழல் போன்ற வடிவம், நம்பூதிரியின் உடலுக்குள் புகுந்து கொண்டது.

பிரம்மதத்தனின் முகமே மாறியது. அந்த உருவம் பைசாசிகமாக விளங்கியது. அந்தப் பெண்ணைப் படுக்க வைத்திருந்த அறைக்குள் நம்பூதிரி நுழைந்தார்.

ராவுண்ணியார், ஹோமத்திற்குப் பயன்படுத்தியது போக மீதமிருந்த சாராயத்தை உள்ளே இறக்கிவிட்டு, ஓர் ஓரமாய்ப் படுத்துக் குறட்டை விடத் தொடங்கினார்.

சட்டென்று கேட்ட ஓர் அலறலில் அவர், திடுக்கிட்டுக் கண் விழித்தார். விஷயம் இன்னதென்று விளங்கியவுடன் தனக்கும் அதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாத மாதிரி மறுபடியும் படுத்துத் தூங்கினார்.

விடிவதற்கு முன்னால் நம்பூதிரி அவரை எழுப்பினார்.

"ஓய், எல்லாமே நல்லபடியாக முடிந்துவிட்டது. உடனே போய் அதை ஏதாவது செய்யும். சீக்கிரம் இடத்தைச் சுத்தம் பண்ணச் சொல்லும்" நம்பூதிரி கூறினார்.

வழக்கமான வேலையைப் போல் ராவுண்ணியாரும் எதுவும் பேசாமல் புறப்பட்டார்.

அந்தக் கிராமத்தின் ஓரமாய் ஓடிக்கொண்டிருந்த ஆற்றின் நீர் தேங்கி நிற்கும் ஆழமான பகுதியில் அந்தப் பெண்ணின் உடம்பு, இனிமேல் ஒருபோதும் பார்க்க முடியாதபடி அமிழ்ந்துபோனது. அதன் உடலில் கட்டியிருந்த கனமான கல், அதை விர்ரென்று உட்புறமாக இழுத்துச் சென்றது.

அன்று பகல் முழுவதும் பிரம்மதத்தன் நம்பூதிரி மேலக்காவு மனையின் ரகசிய அறையில் இருந்தபடியே என்னென்னவோ செய்து

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

கொண்டிருந்தார். அவரருகே ஒரு செப்புத்தகட்டில் தேவநாகரி மொழியில் எழுதிய ஓலைச்சுவடிகளும், அவற்றுக்குத் தேவையான இயந்திரங்களின் படங்களும் இருந்தன.

அதில் இருந்த ஓர் இயந்திரத்தை அவர் தரையில் வரைந்தார். பின்பு அதற்குத் தேவையான மந்திரத்தை உச்சரித்தார். தனக்கு முன்புறம் வைத்திருந்த மண்ணால் செய்த ஒரு சிலையை கையில் எடுத்து ஆவாஹம் செய்து வீசியெறிந்தார். உடனே அங்கே ஒரு கரும் புகைப்படலம் எழுந்தது.

என்ன ஆச்சரியம்! புகை மறைந்தபோது அந்த மண் பொம் மையும் மறைந்து விட்டிருந்தது.

மாந்திரீக வித்தையில் வல்லவனாகி விட்டோம் என்று நம்பூதிரிக்குப் புரிந்துவிட்டது. இனிமேல் இந்த உலகத்தில் தன்னை யாரும் எதிர்க்க முடியாது என்கிற ஆணவமும் அத்துடன் தோன்றியது. பிறகு அங்கிருந்து எழுந்து தனது ஓய்வு அறைக்குச் சென்றார்.

தான் இதுவரை செய்த அக்கிரமங்கள் எதுவும் வெளியில் தெரியாதபடி அந்தத் தடயங்களுடன் சேர்த்து அந்த இடத்தையே தீக்கு இரையாக்கினார். அது முழுவதும் எரிந்து சாம்பலாகிய பிறகு நம்பூதிரி திருப்தியுடன் அங்கிருந்து புறப்பட்டார்.

மனையை அடைந்தபோது ராவுண்ணியார் அங்கு காத்திருந்தார்.

"எஜமான், எல்லாம் நல்லபடியாக முடிந்துவிட்டதா?"

"நான் மகத்தான வெற்றி பெற்று விட்டேன். இனிமேல் யாராலும் என்னை எதுவும் செய்ய முடியாது. உமக்கு வேண்டுமானால் அதை நிரூபித்துக் காட்டுகிறேன் பாரும்."

வராந்தாவில் சுண்டு விரலால் ஓர் இயந்திரம் வரைந்தார். சூனியமான வெற்றுவெளி அந்தரத்திலிருந்து எதையோ ஆவாஹம் செய்து எடுத்தபடியே நம்பூதிரி கூறினார்:

"அதோ பார், அந்தப் பனைமரத்தை" வெளிப்புறமாக இருந்ததைச் சுட்டிக்காட்டினார். அத்துடன் எதையோ எறிந்தார்.

விநாடி நேரத்திற்குள் அந்தப் பிரம்மாண்டமான பனை மரத்தின் தலைப்பகுதி யாரோ வெட்டிவிட்டது போல் கீழே விழுந்தது.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ராவுண்ணியார் வியப்பினால் வாய் பிளந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தார்.

"என்னை எதிர்ப்பது எதுவாக இருந்தாலும், இதுதான் அதன் கதி."

"உங்களை எதிர்ப்பது ஒருவேளை மனிதனாக இருந்தால்...?" ராவுண்ணியார் கேட்டார்.

"எப்பேர்ப்பட்ட கொம்பனாக இருந்தாலும் இதுதான் அவனுடைய கதி" நம்பூதிரி அட்டகாசமாகச் சிரித்தபடி கூறினார்.

"இனிமேல் என்னை மந்திரம் மூலம் யாராலுமே ஜெயிக்க முடியாது!"

முதல் நாள் இரவு நடைபெற்ற பூஜையின்போது மூர்த்தியை வரவழைத்து, அருளுடன் அத்தனையும் பெற்றுவிட்டார் தன் எஜமான் என்பது ராவுண்ணியாருக்குப் புரிந்தது.

"இனிமேல் ஒவ்வொன்றையும் நான் தகர்த்து எறிவேன். முதலில் கிழக்குக்கோட்டை இளவரசி கார்த்தியாயினி. அதன் பிறகு அந்தப் பொடிப்பயல்... யாரது கேசவன்... ஹா... ஹா... சுண்டைக்காய்."

கதவுக்கு அந்தப்புறமிருந்து ஊர்மிளா இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

45

மாமா மந்திர வித்தையில் எல்லா வகையான ஸித்திகளையும் பெற்றுவிட்டார் என்பதை அறிந்த ஊர்மிளா ஒருகணம் பயந்தாள். அவரது இரண்டாம் குறி தன்னுடைய காதலன்தான். அவன் வெறும் காதலன் மட்டுமல்ல; தன் வயிற்றில் வளரும் குழந்தையின் தந்தையும்கூட. அவனுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் தான் அவமானத்திற்கு ஆளாவது மட்டுமின்றி, அப்பன் இல்லாமல் பிறந்தவன் என்ற பெயரைத் தன் குழந்தையும் காலாகாலத்திற்கும் சுமக்க நேரிடும். எனவே எப்படியும் இந்த விவரத்தை அவனிடம் தெரிவிக்க வேண்டுமென்று அவள் விரும்பினாள்.

ஆனால், எப்படி இங்கிருந்து வெளியேறுவது? யாராவது பார்த்துவிட்டால் மொத்தக் காரியமும் கெட்டு விடும். போதாக்குறைக்கு

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அழகு வேறு நமக்கு இந்த நேரத்தில் ஒரு தொல்லை. எனவே, வெளியே போவதென்பது சிக்கலான விஷயம். ஆனால், எப்படியாவது உடனே விஷயத்தைத் தெரியப்படுத்துவதும் அவசியம்.

மறுநாள் பகல் வேளையில் அவளால் எங்கும் நகரக்கூட முடியாமல் இருந்தது. மாமா ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். அன்றும் ஒரு பெரிய பலிக்கு ஏற்பாடு செய்திருந்தார். தனக்கு உதவிய, உதவுகின்ற வழக்கமான தேவதைகளுக்கும், பைசாசிக சக்திகளுக்கும் நன்றி தெரிவிப்பதற்காகவே அந்த விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒரு மன்னன் அசுவமேத யாகம் நடத்துவது போல் பிரமாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஏராளமானவர்கள் விருந்தில் கலந்து கொண்டனர். எல்லாரும் விருந்து முடிந்து வெளியேறுவதற்குள் மாலை நேரமாகி விட்டது.

மாமாவும் ராவுண்ணியாரும் முன்னறையில் உட்கார்ந்திருந்தனர். அதன் தெற்குப்புறம் இருந்த அறையில் ஒண்டியிருந்தபடியே அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கவனிக்க விரும்பினாள் ஊர்மிளா.

பேச்சின் நடுநடுவே இளவரசி என்றும், கேசவன் என்றும் பெயர்கள் அடிக்கடி அடிபட்டன. அத்துடன் அவளுக்கு இருந்த கொஞ்சநஞ்ச சந்தேகமும் தீர்ந்துவிட்டது. ஆனால் கேசவனை எப்படி எச்சரிப்பது? இதுதான் பெரிய பிரச்சினை.

வழி எதுவும் புலப்படாமல் தவித்தாள் ஊர்மிளா.

பிரம்மதத்தன் தன்னுடைய பழிவாங்கும் வேலையைத் தொடங்கினார். அந்த அறையின் சுவரில் சாத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு சூலத்தைக் கையில் எடுத்தார். மந்திரம் சொல்லி அதை வெளியே ஏவிவிட்டார். அது ஏதோ மூச்சுத் திணறலிலிருந்து விடுபட்டதுபோல் மிக விரைவாக ஆகாயத்தில் விர்ரென்று பறந்து போனது. ஒரு நெருப்பு ஜ்வாலை நகர்வதுபோல் இருந்தது அதன் பயணம். அதன் பயணத்தில் குறுக்கிட்ட பச்சையான மரக்கிளைகளும், இலைகளும் சடசடவென்று தீய்ந்து தரையில் விழும் ஓசை கேட்டது.

விரைந்த அந்த சூலம் கிழக்குக் கோட்டை வாசலுக்கு உட்புற மிருந்த துளசி மாடத்தின் மேற்புறமாக வந்து நின்றது.

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

இளவரசி அப்பொழுது அந்த அரண்மனையின் வடக்குப் பகுதியில், நிலவறைக்குள் படுத்துக் கொண்டிருந்தாள். சூலம் துளசி மாடத்திற்கு நேராக வந்ததும், இளவரசி திடுக்கிட்டு எழுந்தாள். ஏதோ ஒரு துர்சகுனம் போல் அவள் மனம் பதைத்தது. உடனே தன்னுடைய மாந்திரீக சக்தியால் அந்தச் சூலம் எந்த திசையில் யாரை நோக்கிக் குறி வைக்கப்பட்டுள்ளது என்பதையும், அது தற்பொழுது எங்கு உள்ளது என்பதையும் அறிந்து கொண்டாள். பரபரப்புத் தோன்றியது.

தன்னை மிஞ்சிய ஏதோ ஒரு சக்தி எங்கேயோ தோன்றிவிட்டிருப்பதை உணர்ந்தாள். எந்த விநாடியிலும் அந்தச் சூலம் தன்னை நெருங்கக் கூடுமென்று அவள் எதிர்பார்த்தாள். அந்தத் துளசி மாடத்திற்கு அருகே தேவியையும் ஆவாஹம் செய்து வைத்திருப்பதால் தான் சூலம் தயங்கி நிற்கிறது என்பதும் புரிந்தது. தேவி எப்பொழுதும் சத்தியத்தின் பக்கமே இருப்பாள்.

ஒருதடவை நான் கேசவனைத் தொல்லைப்படுத்த நினைத்த போது, தேவி தனக்கு எதிராகத்தான் செயல்பட்டாள். அதனால் விளக்கின் திரி வெளிச்சம் தன் பக்கமாக வளைந்து வந்தது நினைவில் எழுந்தது.

உடனே அவள் அங்கிருந்து வெளியேறி மேலே வந்தாள். வராந்தாவிலிருந்த விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு கதவைத் திறந்தாள். பாய்ந்து வந்த சூலம் விளக்கின் அருகே வந்ததும் அதில் மோதி இரண்டு துண்டாக உடைந்து விழுந்தது.

இந்தச் சம்பவத்தால் தான் காப்பாற்றப்பட்டு விட்டாலும், ஒருவகையில் தன்னைச் சூழ்ந்துள்ள அபாயம் அதிகமாகியுள்ளது என்பதும் தெரிந்தது. எப்பொழுதும் தேவியின் விளக் குடனே நடமாட முடியுமா என்ன? இருப்பினும் வேறு வழியில்லாத தால் அதை எடுத்துக்கொண்டு மீண்டும் தனது அறைக்குள் சென்றாள்.

'தான் எதிர்பார்த்ததுபோல் சூலம் இளவரசியைக் கொன்றுவிட்டு, ரத்தம் தோயத் திரும்பி வரவில்லை. எனவே சூலத்திற்கு எங்கோ, ஏதோ அபாயம் நேர்ந்துள்ளது' பிரம்மதத்தன் யோசித்தார். உடனே சக்தி வாய்ந்த தன்னுடைய புதிய மந்திர ஓலைச்சுவடியைப் பார்த்தார். ஒரு கண்ணாடிபோல் காட்சிகள் அதில் தெளிவாகத் தெரிந்தன.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

கிழக்குக் கோட்டை அரண்மனை முதலில் தெரிந்தது. பின்பு வாசலருகே சூலம் உடைந்து கிடப்பதும் தெரிந்தது.

"எங்கே அந்த இளவரசி?" பிரம்மதத்தன் அலறினார்.

ஒரு நிலவிளக்கின் ஒளி தெளிவாகத் தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் இளவரசி பயத்துடன் ஒண்டியிருப்பதும் தெரிந்தது. பயத்திலும் அவள் மிக அழகாக இருந்தாள்.

'எவ்வளவு அழகான பெண்? இவ்வளவு நாளும் எப்படி இவளுடன் உறவு கொள்ளாமலிருந்தேன்? இன்று என்ன ஆனாலும் அவளை விடுவதில்லை' என்று முடிவு செய்தார்.

"ராவுண்ணியாரே, இன்று இரவு இங்கேயே படுத்திரும். நான் போய் வருகிறேன். மருமகள் தனியாக இருக்கிறாள் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளும். நடுநடுவே கொஞ்சம் எச்சரிக்கையாய் எட்டிப் பார்த்துக்கொள்ளுங்கள்."

"அப்படியே எஜமான்."

பிரம்மதத்தன் அங்கிருந்து வெளியேறினார். நேராக கிழக்குக் கோட்டை அரண்மனையை அடைந்தார்.

சுற்றிலும் இருட்டு சாம்ராஜ்யம் அமைத்திருந்தது. பிரம்ம தத்தனுக்கு அது ஒரு பொருட்டாக இருக்கவில்லை. வழியிலிருந்த சரளைக் கற்களும், பாறாங்கற்களும் அவரது கால்களை வேதனைப் படுத்தவில்லை.

மோகினி கோயிலை நெருங்கியபோது, யாரோ அங்கு நிற்பதுபோல் தெரிந்தது. பிரம்மதத்தனைப் பார்த்தவுடன் வசந்தசேனை சட்டென்று பயந்து ஒதுங்கினாள்.

நம்பூதிரி அந்தக் கோயிலின் அருகே சென்று சுற்றுமுற்றும் பார்த்தார். "என்ன, மாயமாக மறைந்து விட்டாயா?" என்று உரத்த குரலில் கேட்டார் நம்பூதிரி.

வசந்தசேனை நடுங்கினாள். பிரம்மதத்தனை எதிர்ப்பது முடிகிற விஷயமா என்ன? அவரது சக்தி கொஞ்சமானதா? தேவதைகளைத் தவிர வேறு யாருமே அவரை எதிர்க்க முடியாது. மோகினிகளும், பிசாசுகளும் அவரைப் பொறுத்தவரை வெகு சாதாரணமான

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

விஷயங்கள். வெறும் தலைமுடியாலேயே அவர்களைப் பிணைத்து விட அவரால் முடியும்.

"நல்ல வேலை செய்தாய்! என் வழியில் குறுக்கிட்டிருந்தால் நானும் வேடிக்கை காட்டியிருப்பேன்" சொல்லியபடியே மேலும் நடக்கத் தொடங்கினார்.

நம்பூதிரி அரண்மனையை அடுத்துள்ள ஒற்றையடிப் பாதையை அடைந்தார். அங்கிருந்து பார்த்தபோதே அரண்மனை கம்பீரமாகத் தெரிந்தது. வாசலை நெருங்கியவர் ஒருகணம் தயங்கி நின்றார். இந்த வேடத்தில் சென்றால் ஒருவேளை தன்னை இளவரசிக்குப் பிடிக்காமல் போகலாம். வேடம் மாறுவதுதான் நல்லது.

உடனே தான் விரும்பிய ஒரு வேடத்திற்கு மாறினார். அழகும், இளமையும் நிறைந்த ஒரு க்ஷத்திரிய குல இளவரசனாகத் தோற்ற மளித்தார். இளவரசியின் மந்திர தந்திர வித்தைகள் தன்னிடம் செல்லு படியாகாது. அதனால் தன்னை அவள் அடையாளம் கண்டுகொள்ள முடியாதென்று அவருக்குத் தெரிந்தது. இதற்கு முன்பு இங்கு வந்துள்ள இளைஞர்கள் பரிதாபமாக மரணத்தைச் சந்திக்க நேர்ந்ததையும் அவர் நினைவு கூர்ந்தார். இளவரசியைப் பழிவாங்குவது அவளுடைய வழிமுறைப்படியே அமையட்டுமே என்றும் தீர்மானித்தார்.

"யாரும் இல்லையா?" நம்பூதிரி குரல் கொடுத்தார்.

யாரோ அழைக்கிறார்கள் என்று தெரிந்தபோது இளவரசிக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. இப்பொழுதைய சூழ்நிலையில் யாராவது உதவிக்கு வந்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்த போதுதான். யாரோ அதற்கென்றே வந்திருக்கிறார்கள்!

சட்டென்று துள்ளியெழுந்தாள். என்றாலும், அவளது உள்மனம் எச்சரிக்கை செய்ததால் மீண்டும் திரும்பி வந்து நிலவிளக்கைக் கையில் எடுத்துக் கொண்டாள். 'வெளிச்சத்திற்காக விளக்கை எடுத்து வந்திருப்பதாக நினைத்துக் கொள்ளட்டுமே' என்றும் கருதினாள்.

"யாரது. இளவரசி கார்த்தியாயினி தேவியா?" நம்பூதிரி கேட்டார்.

தன்னுடைய முழுப்யெரையும் சொல்லி அழைத்த மனிதனைக் கண்டதும் இளவரசி வியப்படைந்தாள். இதுவரை யாரோ ஒன்றிரண்டு பேர் மட்டுமே அப்படி அழைத்துள்ளனர். அவர்களும் ஏதேதோ நாட்டின் இளவரசர்களாக இருந்தனர்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"யாரது? ஞாபகம் வரவில்லையே?"

"நமக்கு வடக்குத்திசை. மேற்குக் கோட்டை என்பது எங்கள் அரண்மனையின் பெயர்."

"உள்ளே வாருங்கள்" விளக்குடன் அவள் உட்புறம் நடந்தாள். நம்பூதிரியும் அவளைப் பின்தொடர்ந்தார்.

இளவரசி நேராகப் படுக்கை அறைக்குச் சென்றாள். விளக்கை மேஜை மீது வைத்துவிட்டு அவரைக் கட்டிலில் உட்காரும்படி கூறினாள்.

இதற்கு முன்னால் இளவரசியைப் பார்த்திருந்தாலும் தோற்றத்தில் எந்தவித மாற்றமும் இல்லை. அந்த அழகு கூடியிருப்பது போலத்தான் அவருக்குத் தோன்றியது. இன்னும் அந்தக் கண்களில் காமம் கனன்று கொண்டிருந்தது.

"உங்கள் பெயரைத் தெரிந்து கொள்ளலாமா?"

"ரவிவர்மா."

"என்னை உங்களுக்கு முன்பே தெரியுமா?"

"சமீபத்தில் ஓர் ஓலைச்சுவடியைப் புரட்டியபோது உங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள முடிந்தது."

"அப்படியானால் என்னைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டுதான் வந்திருக்கிறீர்கள், இல்லையா?"

"அப்படியும் வைத்துக் கொள்ளலாம்."

"ஏதாவது சாப்பிடுகிறீர்களா?"

"வேண்டாம், நிறையச் சாப்பிட்டு விட்டுத்தான் வருகிறேன்."

நடுவே ஒருமுறை நம்பூதிரி அந்த விளக்கைப் பார்த்தார். அதில் தேவி குடியிருக்கிறாள் என்பது தெரிந்தது. ஆனால், அந்த விளக்கு அவர்களுக்கு நடுவே தடையாக இருக்கவில்லை.

"நான் ஓலையில் படித்ததைவிட நீங்கள் நேரில் மிகவும் அழகாக இருக்கிறீர்கள்."

"இன்னும் என்னைப்பற்றி என்னவெல்லாம் படித்துத் தெரிந்து வைத்திருக்கிறீர்களோ?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"மாந்திரீக சக்தியுடன் நீங்கள் சகல கலைகளிலும் தேர்ந்தவர் என்பதையும் புரிந்து கொண்டேன்."

"நன்றாகப் பேசுகிறீர்கள்."

பதிலுக்குச் சிரித்தபடியே நம்பூதிரியின் கைகள் இளவரசியின் தோள்மீது பதிந்தன. பின்பு, அவள் உடலின் கீழ்ப்புறமாக இறங்கின. அடுத்து அவள் உடலில் ஒவ்வொரு பகுதியாக ஊர்ந்தன.

இளவரசி கார்த்தியாயினி ஏதோ தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தாள். 'இந்த மனிதரின் பேச்சும், இயல்பும், அவசரமும்....' அவள் மனம் ஏனோ அதைச் சுற்றியே வட்டமிட்டது.

46

இளவரசிக்கு ஏனோ சட்டென்று ஒருவித பயம் தோன்றியது. இப்படிப்பட்ட முதிர்ந்த வார்த்தைப் பிரயோகங்கள் என்னதான் படித்தவனாக இருந்தாலும் ஓர் இளைஞனிடமிருந்து வெளிப்பட முடியாது என்று அவள் தீர்மானித்தாள்.

'உண்மையில் இது யார்?' சற்று நேரத்திற்குள் அவள் நம்பூதிரியை அடையாளம் கண்டுகொண்டாள்.

பிரம்மதத்தனின் வலிமையான கரங்கள் இளவரசியை இறுக்கி அணைத்தன. உடனே அவள் தனது மந்திர சக்தியைப் பிரயோகித்து அந்தக் கைகளைத் தவிர்க்க முற்பட்டாள். ஆனால், முடியவில்லை. நம்பூதிரியின் சூறைக்காற்று போன்ற வெப்ப மூச்சு அவளின் இடது கன்னத்தில் பதிந்து கொண்டிருந்தது.

தன்னை வெற்றி கொள்ள வந்திருக்கும் மனிதன் ரவிவர்மா என்பவன் அல்ல: மகாமாந்திரீகனான பிரம்மதத்தன்தான் அது என்பது புரிந்த அடுத்த கணமே இளவரசியின் தனம் தளர்ந்து போனது.

"இளவரசி, என்ன ஆகிவிட்டது உங்களுக்கு? ஏன் என்னவோ போல் இருக்கிறீர்கள்?"

தனது அருகில் படுத்திருக்கும் அழகான இளைஞனை படுத்தபடியே அவள் பார்த்தாள்.

பிரம்மாண்டமான உடலமைப்பு இல்லாத சாதாரணமான, வெளுத்த, அழகான ஓர் இளைஞன். ஆனால், அந்தக் கண்களில்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஒருவித ஒளி உறைந்திருப்பதை அவள் கண்டாள். இப்பொழுது சந்தேகம் முழுவதுமே தீர்ந்து போனது. இது மேலக்காவு மனை நம்பூதிரியேதான்.

"நான் இதோ வந்துவிடுகிறேன்" இளவரசி எழுந்து வாசல் பக்கமாக நடந்தாள்.

"வரும்பொழுது எனக்குக் குடிப்பதற்கு எதையாவது கொண்டு வாருங்கள். துளசித் தீர்த்தம் இருந்தாலும் போதும். கொஞ்சம் சில்லென்று இருந்தால் நல்லது."

"கொண்டு வருகிறேன்" இளவரசியின் கண்களில் குரூரத்தன்மை குடியேறியது.

நேராகச் சமையல்கட்டிற்குச் சென்றாள். அங்கு கேசவனுக்காகச் சமையல் செய்யும் பாத்திரங்கள் இருந்தன. எல்லாம் சுத்தமாகவே வைக்கப்பட்டிருந்தன.

ஒரு வெண்கலச் சொம்பையும், தம்ளரையும் எடுத்தாள். கிணற்றடிக்குச் சென்று கையை உயர்த்திக் காட்டினாள். வாளி தானாகவே கிணற்றுக்குள் இறங்கி நீருடன் மேலே வந்தது.

சொம்பில் நீர் மொண்டு கொண்டு நேராகப் பாம்புப்புற்றை நோக்கிப் போனாள். செம்பைக் கீழே வைத்தவுடன் பாம்பு அந்தத் தண்ணீரை ஓங்கிக் கொத்தியது. பாம்பு மறுபடி தலையை உயர்த்திய போது தண்ணீரில் விஷம் கலந்துவிட்டது என்பது தெரிந்தது. துளசிச் செடியிலிருந்து கொத்தாகக் கொஞ்சம் பறித்து அதில் போட்டாள். பின்பு யோசித்தாள். விஷம் ரத்தத்தில் கலந்த பிறகுதானே மரணம் ஏற்படும்?

முற்காலங்களில் ராஜாக்களும் அவர்களது அந்தப்புரப் பெண்களும் எதிரியின் கையில் சிக்காமல் இருப்பதற்காக. மோதிரத் திலுள்ள வைரத்தைப்பொடி செய்து விழுங்குவார்கள் என்று கேள்விப் பட்டிருந்தாள்.

தன்னுடைய சுய உருவத்தையே விருப்பம்போல் மாற்றிக் கொள்ள முடிந்த நம்பூதிரி. முழுமையான மந்திர ஸித்திகளைப் பெற்றுவிட்டார் என்பதில் சந்தேகமே இல்லை. இப்படிப்பட்ட நிலையில் அவரைக் கொல்லாமல் இருந்தால் அவர் தன்னைக் கொன்றுவிடுவது நிச்சயம். இந்த அரண்மனையிலிருந்து அவரைத் திருப்பி உயிருடன்

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

அனுப்பி விட்டால், அதன்பிறகு தன்னை அவர் பூண்டோடு அழிப்பது நிச்சயம். உடனே தன் கையிலிருந்த வைர மோதிரத்தைக் கழற்றிக் கிணற்றடிக்குச் சென்றாள். வைரத்தைத் தூளாக்கினாள். அதை நீரில் போட்டுக் கலக்கியபோது வைரத்துகள்கள் துளசி இலைகளில் ஒட்டிக்கொண்டன. தண்ணீர் போகிற வழியெல்லாம் வைரக்கல் துகள்கள் காயமேற்படுத்த வேண்டும். விஷம் அந்த வழியாக குடலை ஊடுருவ வேண்டும். கதை முடிந்தது. நம்பூதிரி என்கிற மனிதர் இனிமேல் இந்தப் பூலோகத்திலேயே இருக்க மாட்டார்!

பிரம்மதத்தன் உடலை மேற்குப் புறத்திலுள்ள குளத்திற்குள் வீசியெறிந்து விட்டால் தீர்ந்தது. அதன்பிறகு அங்கிருந்து பிரம்ம தத்தனின் உடம்பில் குடியிருக்கும் ஒவ்வொரு தேவதையும் நீரில் மேலேறி வரவேண்டியதுதான். நம்பூதிரியே ஆவி வடிவத்தில் மேலேறி வந்தாலும் எட்டி மரத்தில் ஆணி அறைந்து சமாதி கட்டிவிட்டால் எல்லாம் சுபம்!

இப்படியெல்லாம் மனதில் திட்டமிட்ட இளவரசி சொம்பை எடுத்துக்கொண்டு உட்புறமாக வந்தாள்.

"இதற்கா இவ்வளவு தாமதம்?"

"பாத்திரங்கள் கழுவாமல் இருந்தன. அதைச் சுத்தம் செய்து எடுத்து வருவதற்குள் நேரமானது."

"நான் சொன்னதெல்லாம் செய்தாகிவிட்டதா?"

"நீங்கள் கேட்டபடி எல்லாமே இதில் உண்டு."

இளவரசி கட்டிலில் அமர்ந்தாள்.

"இப்படிப்பட்ட சூழ்நிலையில் இளவரசியைப் பார்ப்பது மிகவும் சுவாரசியமானது. என்ன ஓர் அழகு. கோயில் சிலையைச் செதுக்கி வைத்த மாதிரி."

நம்பூதிரியின் வார்த்தைகளைக் கேட்ட இளவரசி பொய்யாக வெட்கப்பட்டாள்.

"தாகம் என்கிறீர்களே, குடியுங்கள்."

"குடிக்கலாம், அது அப்படியே கொஞ்ச நேரம் இருக்கட்டும்."

நம்பூதிரி சற்றுநேரம் கண்ணை மூடியபடியே அமர்ந்திருந்தார். சட்டென்று எங்கிருந்தோ ஒரு சிறிய அசைவு கேட்டடது. ஒரு பாம்பு

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

படம் உயர்த்தியபடியே அந்த அறைக்குள் நுழைந்தது. அது நிதானமாக வந்து மேஜையின் கால்களில் சுற்றி மேஜையின் மேல்புறத்தை அடைந்து, சொம்பில் வாய் வைத்தது. இளவரசி வியப்புடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களையே அவளால் நம்ப முடியவில்லை. சற்று நேரத்திற்கு முன்பு தான் வரவழைத்து விஷம் கக்கச் சொன்ன அதே பாம்பு. அது தனக்கு முன்பாகவே வந்து இப்பொழுது சொம்பிலுள்ள நீரில் வாய் வைத்துள்ளது. சற்று நேரத்தில் அது தரையில் இறங்கி ஊர்ந்து அசைவற்று நின்று போனது. அதன் உடம்பிலிருந்து ரத்தம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

"போ, இனிமேல் இப்படிச் செய்யாதே" நம்பூதிரி பாம்பிடம் கூறினார். உடனே அது ஊர்ந்து மறையவும் செய்தது.

பின்பு எதுவுமே நடக்காதது போல் நம்பூதிரி அந்தச் சொம்பி லிருந்த நீரை எடுத்துக் குடித்தார்.

"நல்ல ருசியான தண்ணீர். சில்லென்று துளசி மணத்துடன் கமகமவென்றிருக்கிறது. இளவரசி, உங்களது கைத்திறனே அலாதியானது."

இளவரசி மிரண்டு போனாள்.

இன்றுவரை அவளது வாழ்நாளில் இப்படி ஓர் அற்புதம் நிகழ்ந்ததே இல்லை. இந்த அளவு திட சித்தமும், சாதுரியமும் உள்ளவனை ஒருபோதும் சந்தித்ததுமில்லை.

"துளசி தீர்த்தம் சாப்பிட்டவுடன் உடம்புக்கே ஒரு புத்துணர்ச்சி தோன்றுகிறது" படுக்கையிலிருந்து எழுந்து இளவரசியை நெருங்கி னார். இம்முறை நம்பூதிரியின் கை தோள் மேல் பட்டவுடன் எலும்புகள் நொறுங்கி விடுமோ என்று அவள் பயந்தாள். அந்தப் பிடியில் அத்தனை வலுவிருந்தது. ஏற்கெனவே பயந்து போயிருந்த இளவரசி, அந்தக் கையைத் தட்டி ஒதுக்க முயன்றாள். ஆனால், அது முடியாமல் போனது.

அவரது பிடி இறுக்கமடைந்தது. இளவரசி படுக்கையில் சரிந்தாள்.

"என்ன இளவரசி, அந்தப் பாம்பு வந்து விஷத்தை எடுத்தது அற்புதமாக உள்ளதா? இதுவரை இதையெல்லாம் பார்த்தே இருக்க மாட்டீர்கள் இல்லையா?"

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இளவரசி பதில் பேசாமல் மௌனமாக இருந்தாள். வாயைத் திறப்பதற்குள் அவள். அவரது உடலுடன் ஒன்றிவிட்டிருந்தாள். அந்த உருவம் சட்டென்று மாறிவிட்டதுபோல் தோன்றியது. ஆஜானு பாகுவான பிரம்மதத்தன் நம்பூதிரி, இளவரசியை ஆவாஹம் செய்து கைக்குள் வைத்துக்கொண்டது போல் இருந்தது. இனிமேல் தப்பிக்க ஒரே ஒரு வழிதான் உள்ளது. தீர்மானித்த இளவரசி தன்னுடைய வடிவத்தையும் மாற்றினாள். அறுபது வயதைக் கடந்த ஒரு மூதாட்டியின் உருவமானாள் இளவரசி. விநாடிக்கு விநாடி அந்த உருவத்தின் முதுமை எழுபது வயது, எண்பது வயது என்று அதிகரித்துக் கொண்டே வந்தது.

அவளது அழகிய தலைமுடி எண்ணெய் வறண்டு பரட்டையாய் மாறியது. கண்கள் குழிவிழுந்திருந்தன. உடலின் எலும்புகள் துருத்தியபடி நீண்டு நின்றன. ஒரு நிமிடத்திற்குள் எலும்பை கனமற்ற தோலால் மூடியது போல் சுருக்கங்களுடன் காட்சியளித்தாள். அவளது தோற்றமே பயங்கரமாக மாறிவிட்டிருந்தது. இருப்பினும் பிரம்மதத்தன் அவளை விடவில்லை.

அவரிடம் தன்னுடைய எந்த வித்தையும் செல்லுபடியாகாதென்று அவளுக்குத் தோன்றியது.

"என்ன உருவத்தில் திடீரென்று ஒரு மாற்றம்?" நம்பூதிரி கேட்டார்.

"இதுதான் என்னுடைய உண்மையான வடிவம்."

"அது எனக்கு ஏற்கெனவே தெரியும். இருந்தாலும், எதற்கு அவலட்சணமான வடிவம்? நான் வரும்போது இருந்தது போன்ற உருவத்திலேயே இருக்கலாமே."

"உங்களுக்கு அதுதான் தேவையென்றால், அப்படியே மாறி விடுகிறேன்" இளவரசி தோல்வியை ஒப்புக்கொண்டாள்.

பழைய உருவம் பெற்றாள் இளவரசி.

ஆனால், பிரம்மதத்தனின் வலது கை அவள் கழுத்தில் பதிந்திருந்தது. அத்துடன் அவரது உதடு அவளை அழிப்பதற்கான மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தது. விநாடி நேரத்திற்குள் அந்த உடல் வெறும் எலும்புக்கூடாக மாறியது.

நம்பூதிரி அவளைச் சுமந்துகொண்டு அந்த அரண்மனையின் மேற்குப்புறமிருந்த குளத்தை நோக்கி நடந்தார். குளத்தை

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

நெருங்கிதும், இளவரசியின் உடலை வீசியெறிந்தார். பயங்கரமான ஒரு சத்தத்துடன் அது நீருக்குள் பொத்தென்று விழுந்தது.

குளத்திலிருந்த நீரின் மேற்பரப்பு ஒரு தூண் போல் மேற்புறமாக எழுந்தது. பிறகு குளத்து நீர்கொதிக்கத் தொடங்கியது.

அப்பொழுதுதான் கேசவன், அரண்மனையின் வாசல் தாண்டி உட்புறமாகக் காலடி எடுத்து வைத்தான்.

முன்னறையில் விளக்கு இல்லை.

"நீங்கள் இப்பொழுது வந்ததும் நல்லதற்குத்தான்" வழிமறித்த வசந்தசேனை கூறினாள்.

"ஏன்? என்ன நடந்தது?"

"இளவரசியின் சகாப்தம் முடிந்து விட்டது!"

"உண்மையாகவா? எங்கே அவர்?" என்று திடுக்கிட்டான் கேசவன்.

"வாருங்கள், காட்டுகிறேன்."

வசந்தசேனை கேசவனை அரண்மனை யின் உட்புறமாகவே மேற்குப்புற உப்பரிகைக்குக் கூட்டிப் போனாள். ஒரு ஜன்னலுக்கு முன் நின்றுகொண்டு அதைத் திறந்து பார்க்குமாறு கேசவனிடம் கூறினாள்.

கேசவன் கதவைத் திறந்தான்.

அவன் கண்ட காட்சி பயங்கரமாக இருந்தது.

ஒரு சாதாரண மனிதன் அந்தக் காட்சியைக் கண்டிருந்தால் நடுநடுங்கிப் போயிருப்பான். ஓர் எரிமலையின் வாய்ப்பகுதி வெடித்துத் தெறிப்பது போலக் குளத்து நீர் கொதித்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து மேற்புறமாகத் தெறித்துச் சிதறிய மண்டையோடுகளும், எலும்புத் துண்டுகளும் மீண்டும் குளத்திற்குள்ளேயே விழுந்து கொண்டிருந்தன.

"இத்துடன் இளவரசியின் கதை முடிந்துவிட்டது" வசந்தசேனை தாழ்ந்த குரலில் கேசவனின் காதில் கிசுகிசுத்தாள். அதுமட்டுமல்ல, பிரம்மதத்தன் நம்பூதிரி தன்னுடைய லட்சியத்திலும் வெற்றி பெற்று ஸித்தியடைந்து விட்டார் என்பதும் தெரிந்தது.

If You Want More Free E-books
https://t.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

இனியும் தயங்கிக் கொண்டிருந்தால், அதற்குள் நம்பூதிரி முந்திவிடுவார். தன்னையும் அவர் பழிவாங்கத் தயங்க மாட்டார் என்பதும் விளங்கியது.

"வாருங்கள், நாம் அதிக நேரம் இங்கே தங்கியிருப்பது நல்லது அல்ல. நாம் சீக்கிரமாக வெளியேற வேண்டும்" வசந்தசேனை எச்சரித்தாள்.

"அப்படிச் சட்டென்று புறப்பட்டுவிட முடியாது. நம்பூதிரி இனிமேல் இங்கு இருக்க வேண்டிய அவசியமேயில்லை. அவரைப் பொறுத்தவரை இனிமேல் அவர் எதற்காகவும் இங்கு தங்க வேண்டிய தில்லை. முதலில் அவர் கிளம்பி விட்டாரா என்று பார்க்கலாம் வா" வசந்தசேனையை அழைத்தபடி கேசவன் எழுந்தான்.

"நீங்கள் இருங்கள். நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். என்னை அவரால் கண்டுகொள்ள முடியாது" வசந்தசேனை அரூபமாய் மறைந்தாள்.

கீழறையை அடைந்து ஒவ்வோர் அறையாய்ப் பார்த்துக் கொண்டே வந்தாள். முற்றத்தை நெருங்கியபோது நம்பூதிரி வெளி வாயிலைக் கடந்து செல்வதைப் பார்த்தாள்.

"நம்பூதிரி போய்விட்டார். வாருங்கள், நாம் கீழே போகலாம்" வசந்தசேனை வந்து கேசவனை அழைத்தாள்.

வராந்தாவைக் கடந்து முற்றத்தை அடைந்த கேசவன் ஒருகணம் தயங்கினான்.

"என்ன?" வசந்தசேனை கேட்டாள்.

"ஒரு தடவை நிலவறை வரை சென்று வருகிறேனே."

"இருங்கள், நானும் வருகிறேன்."

இருவரும் நிலவறையை நோக்கி நடந்தனர். நிலவறைக் கதவைக் கேசவன் மேல்புறமாக உயர்த்தினான். பிறகு, "பிரபு" என்று அழைத்தான்.

நிலவறைக்குள் யாரோ நடந்துவரும் ஓசை கேட்டது. ஓர் உருவம் மேலேறி வந்தது. சாட்சாத் உதயவர்ம ராஜா அங்கு காட்சியளித்தார்.

"பிரபு, எல்லாவற்றையும் அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்" கேசவன் பணிவுடன் கூறினான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"ஆமாம்... எப்பொழுதோ நடந்திருக்க வேண்டிய விஷயங்கள். காலதாமதமாகி விட்டது. எல்லாமே அவளது தவறுகளால் நிகழ்ந்தவை!" மன்னரின் குரல் கம்பீரமாக ஒலித்தது. அவர் முகத்தில் கம்பீரம் ஒளிவிட்டது.

"ஒரு பெண் காமாந்தகாரியாக இருந்தால், வாழ்க்கையில் ஒருபோதும் அவளுக்குப் பாதுகாப்பு இருக்க முடியாது. இளவரசி மந்திரம் கற்றதே ஆண்களை வேட்டையாடுவதற்குத்தான். ஆனால், அவர்களில்கூட யாரையும் அவள் நேசிக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல ஒவ்வொருவரும் அவளுக்கு அலுப்பை ஏற்படுத்தினர். அப்பொழுதெல்லாம் அவள் புதிய ஆடவனைத் தேடினாள். அதற்காகவே அலுப்பேற்படுத்தியவர்களை வரிசையாகக் கொன்றாள். துர்த்தேவதைகளை மகிழ்வித்துப் பல ஸித்திகளைப் பெற்றாள்."

"அடியேனுக்கு ஒரு சந்தேகம். கேட்கலாமா பிரபு?"

"கேளுங்கள்."

"இங்கே வந்தவர்கள் எதற்காக வந்தனர் பிரபு?"

"எல்லாருமே துர்கா தேவி கோயிலிலிருக்கிற ஓலைச்சுவடிக் காகத்தான் வந்தனர். அவர்களையெல்லாம் கார்த்தியாயினி வேட்டை யாடினாள். ஆனால் அவளாலும் அந்தச்சுவடியை அடைய முடியவில்லை."

"அப்படியானால் அந்த ஓலைச்சுவடியைப் பற்றி அடியேன் அறிந்துகொண்ட விவரம் உண்மை என்றாகிறது பிரபு."

"உனக்கு என்ன தெரியும் என்பதை முதலில் கூறு."

"திருமணமாகாத ஆனால் கர்ப்பமடைந்த ஒரு பிராமணப் பெண் நினைத்தால் அது முடியும் என்பதைத்தான் தெரிந்து கொண்டேன்."

"நீ தெரிந்து கொண்டது உண்மைதான்."

"அதற்கேற்ற ஒரு பெண்ணைத் தயாராக வைத்துள்ளேன்."

"ஆள் யாரென்று முதலில் கூறு."

"பிரம்மதத்தனது மருமகள் ஊர்மிளா."

"கம்சனை கிருஷ்ணன் கொன்றதுபோல் பிரம்மதத்தனைக் கொல்ல ஊர்மிளாவே போதும். ஆனால் பிரம்மதத்தனுக்கு இந்த விஷயத்தில் எந்தவிதமான சந்தேகமும் ஏற்பட்டு விடக்கூடாது."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"அதற்கு நான் வேறு என்னவெல்லாம் செய்ய வேண்டும் பிரபு" கேசவன் கேட்டான்.

"நாகமோகினியின் கையிலிருந்து உனக்குக் கிடைத்த சூலத்தை எப்பொழுதுமே கைவசம் வைத்திரு. காரணம் துர்கா கோயிலை நெருங்கும்போது சில பூதகணங்கள் எதிர்த்து வரலாம். அந்த சூலம் உன் கைவசமிருந்தால், அவை எதுவும் உன்னை நெருங்காது. அதுமட்டுமல்ல; நீ அபூர்வ ஸித்தி பெற்றவன் என்று புரிந்து கொள்ளவும் செய்யும்."

"எனக்கு கோயிலுக்கான வழி ஓரளவு அனுமானம்தான்... தெளிவாகத் தெரியாதே பிரபு."

"அதைக் குறித்து நீ கவலைப்படாதே. நான் எப்பொழுதும் உன்னுடன் இருப்பேன்."

"அப்படியென்றால் நான் வெற்றி பெறுவதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நான் உடனடியாக என்ன செய்ய வேண்டு மென்று கூறுங்கள்."

"நாளைக்கு அமாவாசை. தேவி கோயிலிலேயே இருக்கும் நாள். நீயும். ஊர்மிளாவும் கோயிலுக்குச் செல்லும் குகை வழியாக கோயில் வாசலை அடைய வேண்டும். அதற்குள் நீ நுழையக்கூடாது. ஊர்மிளா மட்டும் உள்ளே சென்று தேவியின் கையிலிருக்கும் ஓலைச்சுவடியை எடுக்க வேண்டும். பிறகு திரும்பாமல் பின்னோக்கி நடந்து வரவேண்டும். வெளிவாசல் வரை ஊர்மிளா அப்படியே வரட்டும்."

"அப்படியே பிரபு. நாளைக்கு நான் ஊர்மிளாவுடன் கோயிலுக்குச் செல்கிறேன்" கேசவன் கூறினான்.

"இன்று நீ எங்கும் செல்ல வேண்டாம். இந்த அரண்மனையி லேயே தங்கலாம். இளவரசி கார்த்தியாயினி மறைந்து விட்டதால் இனிமேல் பிரம்மதத்தன் இங்கு வரமாட்டார்."

கேசவன் தனது வழக்கமான படுக்கை அறைக்குச் சென்றான். உதயவர்மன் நிலவறைக்குள் புகுந்து மறைந்தார். வசந்தசேனையும் கேசவனைப் பின்தொடர்ந்து சென்றாள்.

"உங்களால்தான் எனக்கு விமோசனம் கிடைத்தது. இனி நான் என்னுடைய பழைய இடத்திற்குச் செல்கிறேன்."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நீ திரும்பிச் சென்றால் தேவி கோபப்பட மாட்டாரா?"

"இல்லை, கோபிக்க மாட்டார். வஞ்சனையால்தானே நான் சங்கில் அடைத்து வைக்கப்பட்டேன்."

"நீ எப்பொழுது போக வேண்டும்?"

"உங்கள் கையில் அந்த ஓலைச்சுவடி கிடைத்தவுடன் நான் விடைபெற்றுக் கொள்வேன்."

47

அன்று வசந்தசேனை, கேசவனுடன் அங்கேயே தங்கினாள். மறுநாள் நிலவு தோன்றவில்லை. எங்கும் காரிருள் சூழ்ந்திருந்தது.

கேசவன் மேலக்காவு மனையை நோக்கி நடந்தான். வசந்தசேனை அரூபமாகவே அவனைத் தொடர்ந்தாள். மனையை அடைந்த கேசவன் வழக்கம்போல் ஊர்மிளா தங்கியிருந்த அறைக் கதவைத் தட்டினான். கதவைத் திறந்தாள்.

"இத்தனை நாட்களாக எங்கே போயிருந்தீர்கள்?" என்று அவனிடம் கேட்டாள்.

"உன்னுடைய மாமா எல்லாவற்றிலும் வெற்றி பெற்று விட்டாரல்லவா? இனிமேல் அவரை எதிர்க்க முடியுமா?"

"உண்மையாகவா? அதைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாதே" ஊர்மிளா கூறினாள்.

"இனி ஒரே ஒரு வழிதான் உள்ளது."

"சொல்லுங்கள்."

"நீ மட்டும்தான் அதைச் செய்ய முடியும்."

"உங்களுக்காகச் செய்கிறேன். சொல்லுங்கள்."

"துர்காதேவி கோயிலுக்குள் இருக்கும் ஓலைச்சுவடியை எடுக்க வேண்டும். அதிலுள்ள அற்புதமான மந்திரங்களால் மட்டுமே இனிமேல் உன் மாமாவைத் தோற்கடிக்க முடியும். அவர் தோல்வி அடையாவிட்டால் நம் இருவருக்கும் வேறு வழியே இல்லை."

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் மாமா இப்பொழுது ஒரு பிசாசாகவே மாறியிருப்பார். என்னால் செய்ய முடிந்த எதையும் நான் செய்யத் தயாராக இருக்கிறேன்."

"அப்படியானால் உடனே புறப்படு."

"இந்த நேரத்திலா?"

"ஆமாம். இந்த விநாடியே, புறப்படு."

"ஒரு நிமிடம் இருங்கள். கோயிலுக்குப் போக வேண்டி இருப்பதால் உடனே குளித்துவிட்டு வருகிறேன்."

"வேண்டாம். இப்பொழுது நீ குளித்தால் உன் மாமா அந்தச் சத்தத்தைத் தெரிந்துகொள்வார். கோயிலுக்குப் போகும் வழியிலேயே ஆறு இருக்கிறது. அங்கே நீ குளித்துக் கொள்ளலாம்."

இருவரும் வீட்டைவிட்டு வெளியேறினர்.

"என் கைகளைப் பிடித்துக் கொள்ளுங்கள்" வசந்தசேனை கூறினாள்.

பிடித்துக் கொண்டனர். மூவருமாகப் பறந்தனர். மலையடி வாரத்தை அடைந்தனர். பாறையில் சிதறி விழும் அருவி நீரின் ஓசை கேட்டது. சற்று தூரம் சென்றபோது நட்சத்திர வெளிச்சத்தில் ஆறு தெரிந்தது. ஆற்றின் வெள்ளமும் மெதுவாக ஓடிக்கொண்டிருந்தது.

"நான் இந்தக் கல்லில் உட்கார்ந்திருக்கிறேன். நீ சீக்கிரம் குளித்துவிட்டு வா. ஊர்மிளா."

"ஊர்மிளாவைத் தனியே அனுப்பாதீர்கள். ஏதாவது நிகழலாம்" வசந்தசேனை எச்சரித்தாள்.

உடனே கேசவனும் அவளுடன் நடந்தான்.

ஆற்று நீர் இளஞ்சூடாக இருந்தது. அந்த ஆற்று நீருக்கு வெட்டிவேரின் வாசனை இருந்தது. குளித்துவிட்டு ஈர உடையுடன் ஊர்மிளா கரையேறினாள். கேசவனும் குளித்து எழுந்தான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

'கோயிலுக்கு வழி எது'வென்று கேசவன் யோசித்துக் கொண் டிருந்தபோது, அங்கு உதயவர்ம ராஜா தோன்றினார். "வாருங்கள், நான் வழி காட்டுகிறேன்" என்றார்.

எல்லாரும் அவருடன் நடந்தனர். நடக்க நடக்க மலை பெரிதாகி அவர்களை உள்வாங்கத் தயாராக இருப்பதுபோல் தெரிந்தது.

நள்ளிரவானது. மூன்றாம் ஜாமத்தை அறிவிக்கும் ராக்கோழியின் கூவல் தூரத்தில் கேட்டது. பிரம்மதத்தன் திடுமென்று கண்விழித்துத் துள்ளியெழுந்தார். எழுந்தவுடன் சுக்கு கலந்த வெந்நீர் குடிப்பது அவர் வழக்கம். ஊர்மிளாதான் அதை வழக்கமாக அவரது அறையில் கொண்டு வந்து வைப்பாள்.

எழுந்தவர் வெண்கலச் சொம்பைக் கையில் எடுத்தார். அது கனமற்றுக் காலியாக இருந்தது. ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அதில் இல்லை. அவர் எழுந்து ஊர்மிளா படுத்திருக்கும் அறையை நோக்கி விரைந்தார்.

"ஊர்மிளா... ஊர்மிளா..." அழைத்தார்.

யாரும் பதில் குரல் தரவில்லை. கதவைத் தட்டுவதற்காகக் கையை வைத்தார். அது திறந்து கொண்டது. விளக்கை எடுத்துக் கொண்டு அதற்குள் நுழைந்தார். ஆனால், ஊர்மிளாவை அங்கு காணவில்லை. ஊர்மிளா எங்கே போயிருப்பாள் என்று யோசித்தார். எந்த பதிலும் கிடைக்கவில்லை. தன் மருமகளைக் காணவில்லை என்றவுடன் மகா மாந்திரீகனான பிரம்மதத்தன் ஒரு கணம் பதறினார்.

'அவள் எங்கே போயிருக்கிறாள்' என்பதைக் கண்டறிவதற்காக பூஜை அறையை அடைந்தார்.

தன்னுடைய மாந்திரீகக் கண்ணாடியை எடுத்துப் பார்த்தார். இந்த உலகத்தின் எந்த மூலையிலிருந்தாலும் எவ்வளவு தொலைவிலிருந் தாலும் அந்த இடத்தைக் காட்டித் தரும் வல்லமை அதற்கு இருந்தது.

நம்பூதிரி அதற்கான இயந்திரத்தை வரைந்தார். பின்பு மந்திரம் சொல்லியபடியே அதன்மீது விபூதியை வீசினார். பிறகு அதைப்

If You Want More Free E-books
https://telegram.me/tamilbooksworld
Click & Join -> https://t.me/tamilbooksworld

பார்த்துக் கூறினார். "என் மருமகள் ஊர்மிளா எங்கே இருக்கிறாள். உடனடியாகக் காட்டு!."

இயந்திரத்தின் மீது விபூதியை வீசியபோது அங்கு வெளிச்சக் கீற்றுகள் தென்பட்டன. பின்பு அந்தக் கீற்றுகள் ஒன்று சேர்ந்து பெரியதாக மாறின. அந்த இயந்திரம் முழுவதும் ஒளியால் நிறைந்த பிறகு அதில் ஊர்மிளாவின் உருவம் தெரிந்தது. அவள் ஒரு குகைக்கு முன்பாக நிற்பது தெரிந்தது.

மலையடிவாரத்தை கேசவனும், ஊர்மிளாவும், உதயவர்மனும், வசந்தசேனையும் வந்தடைந்திருந்தனர். உதயவர்மன் அங்கிருந்த ஒரு பாறையைப் பரிசோதித்தார். அதில் ஓர் அடையாளம் இருந்தது. ஒரு சக்கரம் போன்ற அடையாளம். "இதுதான் வாசல், இதைத் திறந்து விட்டால் நீங்கள் உள்ளே போகலாம்" மன்னர் கூறினார்.

"அதற்கு என்ன செய்யவேண்டும் பிரபு?"

"அதற்கான மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். க்ரண மோசன இயந்திரம் வரைந்து வருண சடாட்சர் மந்திரம் ஜபித்தால் பாறை நகர்ந்துவிடும்."

கேசவன் அதன்படியே செய்தான். மந்திரம் உச்சரித்து முடிந்த போது அந்தப் பாறை அசைவது போன்ற ஓசை கேட்டது. வரவரச் சத்தமும் பெரிதாகியது. பாறை ஒருபுறமாக ஒதுங்கி நின்று வழிவிட்டது.

அப்பொழுது மேல்புறத்திலிருந்து நீர்வீழ்ச்சி ஒன்று கொட்டத் தொடங்கியது. அவர்களது தலையைத் தாண்டி அந்த நீர்வீழ்ச்சி கொட்டிக் கொண்டிருந்தது. ஆனால், அவர்களது உடம்பில் ஒரு துளி நீர்கூடப் படவில்லை.

"உள்ளே போங்கள்" மன்னர் கூறினார்.

கேசவன் உள்ளே நுழைய முயன்றபோது மன்னர் தடுத்தார்: "இதற்குள் நீ போகக்கூடாது. இதற்குள் நுழைந்த எந்த ஆண் மகனும் இதுவரை திரும்பியதில்லை. அதனால் ஊர்மிளா உள்ளே செல்வதுதான் நல்லது. இத்துடன் என் வேலை முடிந்துவிட்டது. நான் விடைபெற்றுக் கொள்கிறேன்" மன்னர் சட்டென்று மறைந்தார். கேசவனும் ஊர்மிளாவும் மெலிதாக ஒரு முறை திடுக்கிட்டனர்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

இதுவரையில் மன்னர் ஒரு வழிகாட்டியாக இருந்தார். ஆனால், நடுவழியில் திடுமென்று மறைந்துவிட்டாரே. "ஒருவேளை இதிலும் ஏதாவது ரகசியம் இருக்கலாமோ?" கேசவன் கூறினான்.

"இனிமேல் நேரம் கடத்தாதீர்கள். நம்பூதிரி விழித்துக் கொண்டால் நிலைமை விபரீதமாகிவிடும். அதுவும் அவர் இங்கே வந்துவிட்டார் என்றால் கதை முடிந்துவிட்டது என்று அர்த்தம்!" வசந்தசேனை கூறினாள்.

ஊர்மிளா உட்புறம் செல்வதற்குக் காலை எடுத்து வைத்தாள். சட்டென்று ஓர் இரைச்சலுடன் ஒரு பூதம் குகைக்குள்ளிருந்து பாய்ந்து வந்தது. கேசவன் தன் கையில் வைத்திருந்த சூலத்தை அதன்மீது வீசி எறிந்தான். அந்தச் சூலம் அந்த உருவத்தை ஊடுருவி மறுபுறம் சென்று மறைந்தே போனது.

"இனித் தயங்காதே ஊர்மிளா" கேசவன் அவளை அவசரப்படுத்தினான்.

"உள்ளே ஒரே இருட்டாக இருக்கிறதே" ஊர்மிளா தயங்கியபடி கூறினாள்.

"பரவாயில்லை. தைரியமாக உள்ளே செல்" வசந்தசேனை தைரியமூட்டினாள்.

ஊர்மிளா உள்ளே நுழைந்தாள். தரைப்பகுதி ஈரமாக இருந்தது. ஒருவர் மட்டுமே நடந்து செல்லக்கூடிய இடுங்கிய அளவிலிருந் திருந்தது அந்தப் பாதை.

கனமான இருட்டில் ஊர்மிளா நடந்தாள். கால் வழுக்கி விடாதிருப்பதற்காக மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்தாள். ஒரு முப்பது தப்படிகள் இப்படி நடந்தபிறகு தெய்வீகமான மணத்துடன், சாம்பிராணி மணமும் ஒன்று சேர்ந்து அவள் மூக்கைத் தாக்கியது. அந்த மணம் அவளுக்குப் புதிய உற்சாகத்தைத் தந்தது. ஒரு தெய்வ சன்னி தானத்திற்குள் நுழையும் புனிதம் அவளுக்குத் தட்டுப்பட்டது.

அந்த இடத்துடன் வழி முடிவடைந்து பாதை வலது புறமாகத் திரும்புவதைக் கையின் தொடு உணர்ச்சியால் அவள் உணர்ந்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

மீண்டும் நடந்தாள். சற்று தூரத்தில் பாதை இடது புறமாகத் திரும்பியது. அத்துடன் தூரத்தில் எங்கேயோ சன்னமான வெளிச்சம் தட்டுப்பட்டது. ஒரே ஒரு திரி எரிவது அவளுக்குத் தோன்றியது. ஒளியைக் கண்டவுடன் தைரியம் அதிகமாகியது. அதை நோக்கி நடந்தாள். அந்த வெளிச்சம் அதிகரிக்கவோ, குறையவோ செய்யாமல் அப்படியே இருந்தது. இறுதியாக வாசல்படி போன்ற ஒன்று, அவள் காலுக்குத் தட்டுப்பட்டது. கல்லாலான வாசல்படி.

ஊர்மிளா உட்புறம் பார்த்தாள். ஒரு விநாடி திடுக்கிட்டுப் பின்னுக்கு நகர்ந்தாள். பயங்கரமான காட்சியாகத் தெரிந்தது அங்கு.

48

ஊர்மிளா ஒருகணம் நடுநடுங்கினாள்.

இரண்டு ஆள் உயரமுள்ள துர்காதேவியின் கல்லாலான பயங்கர உருவச்சிலை ஒன்று தெரிந்தது. அதற்கு முன்புறம் ஹோம குண்டத்தில் அக்கினி கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. ஹோம குண்டத்தின் நெருப்பில் தேவி தகதகத்தாள்.

ஊர்மிளாவுக்கு காளிமந்திரம் நினைவிற்கு வந்தது.

அப்பொழுதே வெட்டியெடுத்த தலையுடன் வாளும் கையுமாக, வரதாபய முத்திரைகளைக் கையில் தரித்து, பயங்கரமான முகத்துடன் தலைகளால் கோத்த மாலையணிந்து, அவிழ்த்துவிட்ட தலை முடியுடன் வாயின் இருபுறமும் ரத்தம் ஒழுகியபடி நிற்கும் காளி சிலை. அதன் ஒரு கையில் ஓர் ஓலைச்சுவடி.

ஊர்மிளா அதை வியப்புடன் பார்த்தாள்.

தேவியை மனதிற்குள் நினைத்தவாறு உள்ளே நுழைந்தாள். மறுபடியும் அவள் திடுக்கிட்டாள். ஐந்து பேர் உள்ளே தேவியைப் பார்த்தபடி நின்றிருந்தனர். உற்றுக் கவனித்தாள். நல்லவேளை எல்லாருமே கற்சிலைகளாக இருந்தனர். தேவியை மீண்டும் மனதிற்குள் நினைத்தபடி மெதுவாக தேவியை நெருங்கினாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

முன்புறம் நெருங்கி நின்றாள். அங்கிருந்த படியே கையை உயர்த்தி. தேவியின் கையிலிருந்த ஓலைச்சுவடியை எடுத்தாள். வந்தது போலவே பின்புறமாகத் திரும்பாமல் நடக்கத் தொடங்கினாள்.

தேவி சிலையின் கண்கள் சட்டென்று திறந்தன.

ஊர்மிளா ஒருகணம் துணுக்குற்றாள்.

தேவி அவளைப் பார்த்தார். அந்தப் பார்வை அவளது வயிற்றை நோக்கியே இருந்தது.

"மகளே, அருகில் வா" தேவியின் குரல்.

அவள் நெருங்கினாள்.

"இந்த ஓலைச்சுவடியை தொலைத்து விடக்கூடாது. தேவை முடிந்தவுடன் மறுபடியும் இதை இங்கு கொண்டு வந்து வைக்க வேண்டும்" தேவி ஆணையிட்டார்.

"சரி தாயே" ஊர்மிளாவின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன. நிம்மதியுடனும், ஆனந்தத்துடனும் அவள் ஓலைச்சுவடியுடன் திரும்ப நடந்தாள். இப்பொழுது அவளுக்கு வழி துல்லியமாகத் தெரிந்தது.

ஓலைச்சுவடியுடன் அவள் மலையின் வயிற்றிலிருந்து வெளிப்புறம் வரும் வாசலை அடைந்தபோது. தொலைவிலிருந்து நெருப்புப்போல் கனிந்து தகதகக்கும் அம்பு ஒன்று பாய்ந்து வந்தது. அது அவளை நோக்கி வருவதை உணர்ந்ததும் வேகமாக ஓடிப் பக்கத்திலிருந்த கேசவனிடம் அந்த ஓலைச்சுவடியைக் கொடுத்தாள்.

கேசவன் அதை அவளிடமிருந்து பெற்றுக்கொண்டதும். அந்த அம்பு அவர்களை நெருங்கியதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தது. கேசவன் ஓலைச்சுவடியை அந்த அம்புக்கு நேராகப் பிடித்தான்.

வாயு வேகத்தில் பறந்து வந்த அம்பு. ஓலைச்சுவடியை நெருங்கியதும் பின்வாங்கித் திரும்பியது. வந்த வேகத்திலேயே விரைந்து திரும்பியது.

அந்த நெருப்பு அம்பு பாய்ந்துவந்து பிரம்மதத்தனை நெருங்கிய போது அவர் சந்தேகப்பட்டார். என்ன நடந்தது என்பதே அவருக்குப் புரியவில்லை. மறுபடியும் அவர் வேறொரு ஆயுதத்தை ஏவினார். அது

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

ஒரு சக்கரம். போகின்ற வழியிலிருந்த எல்லாவற்றையும் தகர்த்தபடி விரைந்த சக்கரம், விரைவாகச் சுழன்றபடியே பறந்தது.

தனக்கு நேராக ஏதோ ஒன்று விர்ரென்று பறந்து வருவதைக் கேசவன் பார்த்தான். அது தன்னை நெருங்கியதும் மீண்டும் ஓலைச் சுவடியைக் காட்டினான். அதுவும் திரும்பிப் போனது.

பிரம்மதத்தனின் சந்தேகம் மேலும் வலுவடைந்தது. தனது மாந்திரீகத்தகட்டை எடுத்துத் தியானித்த பிறகு சொன்னார். "அந்தத் தடை எங்கு உள்ளதோ, நான் கண்மூடித் திறப்பதற்குள் அங்கே செல்லவேண்டும்."

அவர் கண் மூடித் திறந்தார்.

அதோ நின்றுகொண்டிருக்கிறான் கேசவன். அருகில் ஊர்மிளா.

"அடி சண்டாளி. உன்னை இப்பொழுதே கொன்று விடுகிறேன் நான்" அலறியபடியே நம்பூதிரி அவளை நெருங்கினார்.

கேசவன் அவரைத் தடுத்தான். "அங்கேயே நில்லுங்கள்."

என்னது. யார் அவரைக் கட்டிப்போட்டது? அவரது கை கால்கள் கட்டப்பட்டுள்ளதே?

அந்த ஓலைச்சுவடி அவன் கைக்கு வந்தவுடனே கேசவன் மகாமாந்திரீகனாகிவிட்டான். பிரம்மதத்தன் தன்னையே ஒருமுறை பார்த்தார். உண்மைதான். தன் உடல் கட்டப்பட்டிருந்தது. பந்தன விடுதலை மந்திரம் ஜபித்தார். பயன்படவில்லை.

"நம்பூதிரி. அந்தத் தகட்டை என்னிடம் தாருங்கள்" கேசவன் கை நீட்டினான்.

பதில் பேசாமல் தகட்டை அவனிடம் கொடுத்தார் பிரம்மதத்தன்.

"இப்பொழுது நீங்கள் ஒரு சாதாரண மனிதர்! மாந்திரீகன் அல்ல. நீங்கள் நாற்பத்தெரு பெண்களைப் பலி கொடுத்திருக்கிறீர்கள். அதற்கான பிராயச்சித்தத்தை அனுபவித்தே தீரவேண்டும். அதற்காக நான் உங்களை ஆகாயத்திற்கு அனுப்புகிறேன்" கேசவன் கையை மேலே உயர்த்தினான்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

பிரம்மதத்தன் ஆகாயத்தில் உயர்ந்தார். எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்க நம்பூதிரி மேகங்களுக்கிடையில் மறைந்தார். ஆனால் மறுவிநாடியே அவர் தரையில் பொத்தென்று விழுந்தார். ஓர் அலறலுடன் அவர் சிதைந்தார். அதன்பிறகு அவர் எழுந்திருக்கவே இல்லை.

பிரம்மதத்தனின் சகாப்தமும் அத்துடன் முடிவடைந்தது.

"இனிமேல் நாம் போகலாமல்லவா?" ஊர்மிளா கேட்டாள்.

"அதற்கு முன்பாக ஒரு சின்ன வேலை உள்ளது. தேவி தந்த இந்த ஓலைச்சுவடி இனி நமக்குத் தேவையில்லை. இதை மறுபடியும் தேவியிடமே ஒப்படைப்பதுதான் முறை. அதனால் நீயே மறுபடியும் உள்ளே சென்று இதை எடுத்த இடத்திலேயே வைத்து விட்டு வந்துவிடு!" என்று கேசவன் கூறினான்.

இந்தத் தடவை அவள் பயப்படவில்லை. தைரியத்துடன் உள்ளே நுழைந்தாள். அற்புதமான அந்த ஓலைச்சுவடியைத் தேவியின் கையில் வைத்தபிறகு, திரும்பாமல் பின்புறமாக நடக்கத் தொடங்கினாள். அப்பொழுது தேவியின் கழுத்திலிருந்து ஒரு வைர மாலை காற்றில் மிதந்து வந்து ஊர்மிளாவின் கழுத்தில் பதிந்தது.

"இந்த மாலை உனக்கு எல்லாவித சௌபாக்கியங்களையும் தரும்!" தேவி அவளை ஆசீர்வதித்தார்.

ஊர்மிளா கோயில் கருவறையிலிருந்து வெளியே வந்தாள். அத்துடன் அந்தப் பெரிய பாறை மீண்டும் நகர்ந்து பழையபடியே கோயிலை மூடிக்கொண்டது.

"நான் போய்வரட்டுமா?" வசந்தசேனை கேட்டாள்.

"நீங்கள் போகக்கூடாது!" ஊர்மிளா வசந்தசேனையின் கைகளைப் பிடித்துக்கொண்டாள். "என்னுடன் இருங்கள். எப்பொழுதும் என்னுட னேயே இருக்க வேண்டும்.

"உனது வாழ்க்கையில் நான் குறுக்கிடுவது சரியில்லை. நான் தேவி கோயிலின் காவல்காரி. நான் கோயிலுக்குச் செல்ல வேண்டும்" ஊர்மிளாவின் பதிலை எதிர்பார்க்காமல் வசந்தசேனை மறைந்தாள்.

If You Want More Free E-books
Click & Join -> https://t.me/tamilbooksworld

If You Want More Free E-books

மறுநாள் மேலக்காவு மனை நம்பூதிரியின் மருமகள், கேசவனது வீட்டின் மருமகளாகக் கேசவனது வீட்டை அடைந்தாள்.

யாராலும் நம்பமுடியாத விஷயங்களை கேசவன் விவரித்தபோது, கேட்டுக்கொண்டிருந்த எல்லாரும் 'ஆ' வென்று வாயைப் பிளந்தனர்.

"அப்படியானால் அந்த ஓலைச்சுவடி இப்பொழுதும் அதே கோயிலுக்குள்தான் இருக்கிறது, இல்லையா?" கிட்டு ஆசான் கேட்டார்.

"ஆமாம். அங்குதான் பத்திரமாக தேவியின் பாதுகாப்பில் இருக்கிறது" ஊர்மிளா பதிலளித்தாள்.

○○○

ebook by

TAMIL NESAN

Click & Join -> https://t.me/tamilbooksworld